முரசொலி

அண்ணா மலர் 1971

விலை ரூ 2.

Criterion CO 2490

சேலம் கூட்டுறவு மத்திய வங்கி, எண். 151.

சேலம்-1,

தொலைபேசி எண்: 2402

கிளைகள்: நாமக்கல், திருச்செங்கோடு, ஆத்தூர், மோகனூர், இராசிபுரம், ஓமலூர், தாரமங்கலம், வேலூர், சங்ககிரி, சேந்தமங்கலம், கொங்கணாபுரம், சிறப்பு அங்காடி, சேலம் கடைவீதி, எடப்பாடி, பி.கொமாரபாளையம், பள்ளிபாளையம், தம்மம்பட்டி.

வட்டி விகித அட்டவணை 1-2-1971 முதல்

கால் டெப்பாசிட்டுகள்:	
ரூ. 5,000—க்கும் அதற்குமேற்ப்பட்ட தொகைக்கும் (முன் அறிவிப்பு இல்லாமல்)	$3\frac{1}{4}$%
ரூ. 10,000—க்கும் அதற்கு மேற்பட்ட தொகைக்கும் (3நாள் முன் அறிவிப்பின் பேரில்)	$3\frac{1}{2}$%
சீசன் டெபாசிட்டுகள்:	
ரூ. 1,000—க்கும் அதற்கு மேலும்	
15 நாட்களுக்கும் அதற்குமேல் 30 நாட்களுக்கும்	4 %
31 நாட்களுக்கும் அதற்குமேல் 90 நாட்களுக்கும்	$4\frac{1}{2}$%
பிக்சட் டெபாசிட்டுகள்:	
ரூ. 50—ம் அதற்கு மேற்பட்ட பிக்சட் டெபாசிட்டுகளுக்கு:	
91 நாட்களுக்கும் அதற்கு மேல் 6 மாதத்திற்குள்	$5\frac{1}{2}$%
6 மாதத்திற்கும் அதற்கு மேல் 12 மாதத்திற்குள்	6%
12 மாதத்திற்கும் அதற்கு மேல் 24 மாதத்திற்குள்	$6\frac{3}{4}$%
24 மாதத்திற்கும் அதற்கு மேல் 36 மாதத்திற்குள்	$7\frac{1}{4}$%
36 மாதத்திற்கும் அதற்கு மேல் 60 மாதத்திற்குள்	$7\frac{1}{2}$%
5 வருடத்திற்கும் அதற்குமேல் 6 வருடத்திற்குள்	$7\frac{3}{4}$%
6 வருடங்களுக்கும் அதற்கு மேலும்	8 %
நடப்பு கணக்கு $\frac{1}{2}$% — சேமிப்பு கணக்கு	$4\frac{1}{2}$%

அறநிலையங்களுக்கு பிக்சட் டெபாசிட்டுகளின் பேரில் மேலே காணப்பட்ட வட்டி விகிதங்களுக்கு மேற்கொண்டு $\frac{1}{2}$% கூடுதலாகக் கொடுக்கப்படும். ரூ. 5000—க்கு மேற்கொண்டு பிக்சட் டெபாசிட் போடுபவர்களுக்கு இலவச பாதுகாப்புப் பெட்டக வசதியுண்டு.

பிக்சட் டெபாசிட்டுகளின் மீது மாதாந்திர வட்டி உண்டு.

ரெகரிங், பிராவிடெண்ட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. இதர விவரங்களுக்கு செயலாளரிடம் தொடர்பு கொள்க.

எஸ். ஆறுமுகம், எம்.எல்.ஏ.
தலைவர்.

வை. இராமலிங்கம்,
செயலாளர்.

தி. இராஜமாணிக்கம்,
நிர்வாக அலுவலர்.

மறவன்மடல்

3-10-71 இதழில்

"சோவியத் நாட்டில் கண்டதும் கேட்டதும்"

புதுமை விரும்பி
புரட்சித் துறவி

தவத்திரு அடிகளார் எழுதும்
தொடர் கட்டுரை ஆரம்பம்

விற்பனையாளர்
இல்லாத ஊர்களுக்கு
விற்பனையாளர் தேவை

விவரங்கட்கு—
"மறவன்மடல்"
சென்னை-6.

கோயமுத்தூர் மத்திய கூட்டுறவு வங்கி லிமிடெட்

**தலைமையகம்
கோயமுத்தூர்-18.**

இம்மாவட்டத்தில் உழுதுண்டு உணவினைப் பெருக்கும் உழவர்களுக்குதவும் கிராமிய கூட்டுறவு சங்கங்களுக்கும், வணிகத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டும் கூட்டுறவு சங்கங்களுக்கும், இன்னும் பிறவகை கூட்டுறவு சங்கங்களுக்கும் சலுகை வட்டியில் கடனுதவி அளித்து வருவதுடன் பொது மக்களின் நீண்ட கால சேமிப்புகளுக்கு $7\frac{3}{4}\%$ வரை வட்டி வழங்குகிறது.

எம். பழனிசாமி
பி. காம்., எச். டி. சி.
செயலாளர்.

வி. வி. இராமசாமி
துணைத்தலைவர்.

அகலாத காரிருளை விரட்டி
ஆட்சி விளக்கேற்றி வைத்தவரே அண்ணா
அயராது நின் வழியில் உழைப்போம்
அணையாது அவ் விளக்கை காப்போம்!

தம்பியணா

சந்தனமே! தென்பொதியைத்
தவழ்ந்துவரும் இளங்காற்றே!
நந்தாத சுடர்விளக்கே
நறுமணத்துப் புதுமலரே!
செந்தமிழர் வாழ்வுநலம்
செழிக்கவந்த வான்மழையே!
முந்தைத் தமிழாட்சி
முறைகண்ட திருத்தகையே!
வான்முகடு மேலுயர
வையத்தே தமிழ்ப் புகழை
மேன்மையுறச் செய்திட்ட
மேதக்க பேரறிவே!
கண்ணியத்தைக் கடமையினைக்
கட்டுப்பா டெனும்பண்பைக்
கண்போலக் காத்திடற்குக்
கற்பித்த பெருந்தகையே!
சிங்கத் தமிழர்களின்
சிந்தையெலாம் பறிகொண்டு
வங்கக் கடலோரம்
வாய்மூடிக் கண்மூடி
மோனத் தவமிருக்கும்
முத்தமிழே! தமிழ்மக்கள்
தானைப் பெருந்தலைவா!
தமிழ்த்தாயின் தலைமகனே!
பல்லவர்தம் ஆட்சிநலம்
பாங்குறவே உணர்த்துகிற



வாழ்த்திடுக!



நல்லதோர் கச்சிநகர்
நயந்தளித்த பெருந்தலைவா!
குடிசையெலாம் மேலுயர்ந்து
கோபுரமாய் விளங்கிடவும்
மடமையிருள் கொல்வறுமை
மடிந்தே கருகிடவும்
எல்லாரும் நலனெல்லாம்
எய்தி மகிழ்ந்திடவும்
நல்லதோ ராட்சியினைத்
தோற்றுவித்த நாயகமே!
எண்ணக் குறிப்பறிந்தே
ஈடேற்றும் தம்பியரின்
அண்ணாவே! எனையிங்கே
ஆளாக்கிக் காத்திட்ட
ஆருயிரே! நும் கனவு
அத்தனையும் நனவாக்கும்
சீரியநற் பணியினையே
செய்கின்றோம் நாள்தோறும்!
செய்பணிகள் அத்தனையும்
சிறந்தே நலமோங்க
உய்வகைகள் காட்டி
உள்ளத்தில் உரமூட்டி
வாழ்ந்திடுக என்றே
மணமலர்கள் தூவி சிரந்
தாழ்த்தி வணங்குகிறேன்
தம்பியரை வாழ்த்திடுக!

கலைஞர் மு.கருணாநிதி



மறக்க முடியாது அரசியல் முடிவுகள்

அமைச்சர் நாவலர் நெடுஞ்செழியன்—

1937 ஆம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் நீதிக் கட்சி பெரும்பாலான இடங்களை இழந்து படுதோல்வி அடைந்தது. அதற்குக் காரணம் நீதிக் கட்சியின் கொள்கைகளில் ஏற்பட்ட குறைபாடுகள் அல்ல; அதனை நடத்திச் சென்ற தலைவர்களிடத்திலே காணப்பட்ட குறைகள்தாம். நீதிக் கட்சித் தலைவர்கள் கட்சியை வளர்க்க மறந்து, பட்டம் பதவிகளை எப்படி எப்படியெல்லாம் பெறலாம் என்பதிலே நாட்டஞ் செலுத்தி, ஒருவர் மீது ஒருவர் பொறாமை கொண்டு, ஒருவரை ஒருவர் அழித்துவிட்டுத் தம் செல்வாக்கை மட்டும் வளர்த்துக் கொள்ள முயன்று கட்சிக்குத் தீங்கு பயக்கும் செயல்களில் இறங்கிய காரணத்தால் கட்சியும் கவிழ்ந்தது. அதோடு சேர்ந்து தலைவர்களும் கவிழ்ந்தனர்.

கட்சி தேர்தலில் தோல்விகண்டவுடன் அதன் முக்கியமான தலைவர்கள் பலர், கட்சியை விட்டு விலகினர். சிலர் தத்தம் தொழில்களைக் கவனிக்கச் சென்றனர். வேறு சிலர் மாற்றுக் கட்சியில் போய்ச் சேர்ந்து கொண்டனர். கட்சியின் தலைவராக விளங்கி வந்த பொப்பிலி அரசர் அவர்கள் பதவியிலிருந்து விலகி வாளா இருக்கத்தலைப்பட்டார். சர். ஏ.டி. பன்னீர்ச்செல்வம், சர். பி.டி. இராசன், பி. பாலசுப்பிரமணியம் போன்றவர்கள் கட்சியின் தலைமைப்

பொறுப்பை பெரியார் இராமசாமி அவர்களிடம் ஒப்படைக்க முன்வந்தனர். 1938ல் சென்னையில்நடைபெற்ற நீதிக் கட்சி மாநாட்டில் பெரியார் இராமசாமி அவர்கள் நீதிக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்கள்.

நீதிக் கட்சியின் தலைமைப் பொறுப்பை பெரியார் இராமசாமி அவர்கள் ஏற்றுக் கொண்டவுடன், பெரியார் தலைமையின் கீழ் இயங்கி வந்த சுயமரியாதை இயக்கத் தொண்டர்கள் அனைவரும் நீதிக் கட்சியோடு இணைந்து நின்று சமூகப்பணிகளோடு, அரசியல் பணிகளையும் ஆற்றி வரத் தலைப்பட்டனர். அப்பொழுது பெரியார் அவர்களின் நம்பிக்கைக்கும், மதிப்பிற்கும் உரியவராகத் திகழ்ந்து, பெரியாருக்கு உற்ற துணையாக விளங்கியவர் அறிஞர் அண்ணா அவர்கள் ஆவார்கள்.

அறிஞர் அண்ணா அவர்களின் பேச்சும் எழுத்தும் நாட்டுமக்களைப் பரவலாகக் கவரத் தொடங்கிய காலமும் அதுதான்.இயக்கத்தவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் அறிஞர் அண்ணா அவர்கள் அப்பொழுதுதான் நன்கு அறிமுகமாகத் தலைப்பட்டார்கள். 1938லிருந்து 1941வரை நடைபெற்ற இந்தி ஆதிக்க எதிர்ப்புக் கிளர்ச்சி இயக்கம் அறிஞர் அண்ணாஅவர்களின்பெருமையையும், புகழையும் மிக உயர்த்தியதோடு, அவரது அறிவுத் திறனையும், ஆற்றல் திறனையும் நாட்டிற்கு அறிமுகப்படுத்திற்று.

நீதிக்கட்சி தமிழர் இயக்கம் – சுயமரியாதை இயக்கம் ஆகியவற்றின் தொண்டர்களும், தோழர்களும் பெரியாருக்கு அடுத்தபடியாக அறிஞர் அண்ணா அவர்களைத் தான் தமக்குத் தலைவராகவும், வழிகாட்டியாகவும் மதித்தார்கள். நீதிக் கட்சியின் மற்ற தலைவர்களெல்லாம் தொண்டர்களின் உள்ளத்திலிருந்து மெல்ல மெல்ல மறையத் தலைப்பட்டார்கள்.

நீதிக்கட்சி 1937இல் தோல்வியுற்றதற்குப் பிறகு, பெரியார் அவர்கள் சுயமரியாதை இயக்கத்தை மீண்டும் தீவிரப்படுத்த முயன்றார்கள். திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த துறையூரில் சுயமரியாதை மாநாட்டைக் கூட்டினார். அந்த மாநாட்டிற்குத் ‘தோழர் சி.என். அண்ணாதுரை எம். ஏ’ தலைமை தாங்குவார் என்று விளம்பரம் செய்யப்பட்டிருந்தது. அதுவரையில் அறிஞர் அண்ணா அவர்கள் சென்னையிலிருந்த இயக்கத் தோழர்களுக்குத் தான் ஓரளவுக்கு அறிமுகமாகியிருந்தார்களேயல்லாமல் பிறமாவட்டங்களில் இருந்தவர்களுக்கு நன்கு அறிமுகமாகவில்லை. துறையூர் சுயமரியாதை மாநாடு தேர்தலுக்குப் பிறகு நடைபெற்ற முதல் மாநாடாக இருந்தபடியால், அந்த மாநாட்டில் கலந்து கொள்ள தமிழகம் எங்கனும் இருந்த தொண்டர்களும், தோழர்களும் பெருவாரியினராக வந்திருந்தனர்.

அறிஞர் அண்ணாவின் தலைமையுரையை முதன்தமுலாகப் பலர் கேட்கும் வாய்ப்பு அந்த மாநாட்டில்தான் ஏற்பட்டது. அறிஞர் அண்ணாவின் அருமையும், இனிமையும், எளிமையும் அமைந்த, ஓசைநயமும், சொல் நயமும், பொருள்நயமும் பொதிந்த,எதுகை மோனை—உவமை உருவகம் போன்ற அணிகள் நிரம்பிய பேச்சைக் கேட்ட அனைவரும் மெய்ம்மறந்தனர். அதிலிருந்து அறிஞர் அண்ணாவின் பேச்சை எல்லா ஊர்களிலும் கேட்க வேண்டும் என்ற ஆவல் எல்லோர்க்கும் ஏற்பட்டது.

அறிஞர் அண்ணா அவர்களின் அழகான ஆணித்தரமான கருத்தாழம்மிக்க பேச்சும், எழுத்தும் படித்தவர்களையும், குறிப்பாக இளைஞர்களையும், மாணவர்களையும் பெரிதும் ஈர்த்தன. முதலில் ‘விடுதலை’ இதழ் வாயிலாக அறிஞர் அண்ணாவின் எழுத்தும், கருத்தும் நாட்டு மக்களைக் கவர்ந்தன. பிறகு 1942ஆம் ஆண்டு முதல் அறிஞர் அண்ணா அவர்களே தம் சொந்தத்தில் ஆரம்பித்த ‘திராவிட நாடு’ இதழ் மூலம் நாட்டு மக்களின் உள்ளங்களைக் கவரத் தலைப்பட்டார்.

நீதிக் கட்சியின் இயற்பெயர் ‘தென் இந்திய நலவுரிமைச் சங்கம்’ என்பதாகும். அந்தக் கட்சி நீதி (JUSTICE) என்ற பெயரில் ஆங்கில நாளிதழ் ஒன்று நடத்தி வந்ததன் காரணமாகப், பொதுமக்கள் அதனை ‘நீதிக்கட்சி’ என்று அழைக்கலாயினர். அரசியல்வாதிகள் பலர் அதனை ‘பார்ப்பனரல்லாதார் கட்சி’ என்று அழைத்து வந்தனர். மேற்கூறப்பட்ட மூன்று பெயர்களும் திராவிட இனஉணர்ச்சியையோ மொழிப் பற்றையோ மக்களுக்கு ஊட்டவில்லை என்பதை அறிந்த அறிஞர் அண்ணா அவர்கள், 1942இல் காஞ்சி நகரில் ‘திராவிடக் கழகம்’ என்ற பெயரில் ஒருஅமைப்பைஉருவாக்கினார். அதனைப்பின்பற்றி அதே பெயரில் வேறு பல ஊர்களிலும் அமைப்புக்கள் தோன்றத் துவங்கின.

பெரியார் — அறிஞர் அண்ணா ஆகியோரின் தலைமையின்கீழ் இயங்கிய இயக்கம் திராவிட இனப்பற்றையும், திராவிட மொழிப் பற்றையும் மக்களிடத்தில் பரவலாக ஊட்டத் தலைப்பட்டது. பெரியார்—அறிஞர் அண்ணா ஆகியோரின் செல்வாக்கு வளருவதைப் பார்த்த நீதிக்கட்சித் தலைவர்கள் சிலர் நீதிக் கட்சியின் தலைவராக விளங்கிய பெரியாரை நீக்கிவிட்டுத் தமக்கு ஏற்ற ஒரு தலைவரைத் தேர்ந்தெடுக்க சதி செய்தனர்.

வெள்ளைக்கார அரசாங்கத்திடம் பட்டம், பதவி பெற்ற நீதிக்கட்சித் தலைவர்

கள் சிலர் நீதிக்கட்சியின் தலைமைச் செயற் குழுவில் இடம்பெற்றிருந்த தால், நீதிக்கட்சியின் மாநில மாநாட்டை 1944 ஆகஸ்டு திங்களில் சேலத்தில் கூட்ட ஏற்பாடு செய்தனர். இந்த மாநாட்டில் பெரியார் அவர்களைத் தலைமைப் பதவியிலிருந்து நீக்கிவிட்டு வேருெருவரைத் தலைவராகக்கொண்டு வரவேண்டும் என்பது அவர்களது திட்டம்,

இந்தச் சதித்திட்டம் அறிஞர் அண்ணு அவர்களின் செவிகளுக்கு எட்டிற்று. நீதிக்கட்சியைப் பிற்போக்காளரின் ஆதிக்கத்திற்கு விடக்கூடாது என்பது பெரியார் அவர்களின் எண்ணம். பெரியார் அவர்களின் எண்ணத்தை நிறைவேற்ற அறிஞர் அண்ணு அவர்கள் நீடு சிந்தித்துத் தனித்திட்டம் ஒன்று வகுத்தார்கள்.

மாநாட்டில் கலந்து கொள்ளும் பிரதிநிதிகளில் பெரும்பாலோர் தம்பக்கம் நிற்பார்கள் என்ற உறுதிப்பாடு அறிஞர் அண்ணு அவர்களுக்கு இருந்ததால், மாநாட்டைத் தம்வயப்படுத்திக் கொள்ளத் திட்டம் போட்டார்கள்.

பெரியார் அவர்களைத் தலைவர் பதவியிலிருந்து விரட்ட நினைத்த பிற்போக்காளர்களைக் கட்சியிலிருந்தே முறைப்படிவிரட்டிவிடுவது என்று அண்ணு அவர்கள் தீர்மானித்தார்கள். அதற்கேற்ப மாநாட்டில் நிறைவேற்றுவதற்கெனத் தீர்மானம் ஒன்றை உருவாக்கினுர்கள். அதற்கு 'அண்ணுதுரை தீர்மானம்' என்றே பெயரிடப்பட்டது.

அந்தத் தீர்மானத்தின் முக்கிய கருத்து (1) தென் இந்திய நலவுரிமைச்சங்கம் (நீதிக் கட்சி) என்னும் பெயர் 'திராவிடக் கழகம்' என்று மாற்றப்பட வேண்டும். (2) கழகத்தின் உறுப்பினர்கள் 'சர்' திவான்பகதூர்', 'இராவ்பகதூர்,' 'இராவ் சாகிப்' போன்ற வெள்ளையர் அரசு தந்த பட்டங்களை விட்டுவிட வேண்டும். (3) கழகத்தின் உறுப்பினர்கள் வெள்ளையரின் அரசு தந்த நியமனப் பதவிகளை விட்டுவிட வேண்டும் என்பதாகும்.

மேற்கண்ட தீர்மானத்தை அறிஞர் அண்ணு அவர்கள் சேலம் மாநாட்டில் கொண்டு வந்து பெருத்த ஆரவாரத்திற்கிடையே நிறைவேற்றினுர்கள். அந்த மாநாட்டில் கலந்து கொண்ட பிற்போக்காளர்களெல்லாம், இந்தத் தீர்மானத்திற்குக் கட்டுப்பட இசையாமல் அன்று மாலையே மாநாட்டை விட்டு வெளியேறி விட்டனர்.

சேலம் மாநாடு முடிந்த பிறகு எல்லா ஊர்களிலும் நீதிக்கட்சி அமைப்புக்கள் 'திராவிடக் கழகம்' என்று பெயர்மாற்றி அமைக்கப்பட்டன. இது தமிழக அரசியல் வரலாற்றில் ஒரு குறிப்பிடத் தகுந்த 'திருப்பம் தரும்' நிகழ்ச்சியாகும். இந்தத் திருப்பம் திராவிட இயக்கத்தின் மேலும் பல முக்கிய வளர்ச்சிகளுக்கு அடிப்படையாகவும், உறுதுணையாகவும் அமைந்தது.

அறிஞர் அண்ணு அவர்கள் உருவாக்கிய மறக்க முடியாத அரசியல் முடிவுகளில் இது தலையாயதாகும்.

1947இல் நாடு விடுதலை பெற்றபோது அந்த நாள் 'துக்கநாள்' என்று பெரியார் கூற, இல்லை அது வரவேற்பதற்குரிய 'மகிழ்ச்சிதானே' என்று கருத்தறிவித்தது.

1949இல் பெரியார் பொருந்தாத் திருமணத்தின் பேரால் ஒரு ஏற்பாடு செய்த போது, திராவிடக் கழகத்தைப் பெரியாரிடத்தில் விட்டுவிட்டுக் கடமையுணர்ச்சியோடு, கண்ணியப் பண்போடு, கட்டுப்பாட்டுத் தன்மையோடு திராவிட முன்னேற்றக் கழகத்தைக் கண்டது.

1957 பொதுத் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தை ஈடுபடுத்த முடிவு எடுத்தது.

1963இல் மாநிலத் தன்னுட்சி கோரிக்கையை முன்னிருத்தித், தனிநாடு கோரிக்கையைக் கைவிட்டது.

1967இல் தமிழக ஆட்சிப் பொறுப்பை அறிஞர் அண்ணு அவர்கள் தாமே ஏற்று நடத்த முன்வந்தது.

ஆகிய முடிவுகள் அடுத்தடுத்து நிகழ்ந்த மறக்க முடியாத அரசியல் நிகழ்ச்சிகளாகும்.

தமிழ் — தமிழர் — தமிழ்நாடு — திராவிடர் — திராவிடம் ஏற்றம்பெற அரும்பாடுபட்ட அறிஞர் அண்ணு அவர்களின் பெயரும் புகழும் நீடூழிக் காலம் வாழ்க!

1942-ம் ஆண்டு என்று நினைவு, நானும் நாவலரும் மதியும் அண்ணுமலைப் பல்கலைக் கழகத்தில் படித்துக் கொண்டிருந்த போது அண்ணு அவர்களை அங்கு கொண்டு வந்து பேச வைக்க நான் முயற்சி எடுத்துக் கொண்டேன். அண்ணு அங்கு வருவதற்கு சில எதிர்ப்புகள் இருந்தன. ஒரு மாத காலம் முயற்சி செய்து எதிர்ப்புகளைச் சமாளித்து அண்ணுவை அழைத்தேன்—அப் போது அண்ணு சொன்ஞர்கள்

''நான் அங்கு வந்து பேசித்தான்—என் கருத்தை மாணவர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்பது அவசியமல்ல. நான் வெளியில் பேசினுலும்—ஆர்வமுள்ள மாணவர்கள் வந்து கேட்டுக் கொள்ளலாம்.''

''என் கருத்தை ஆவலுடன் விரும்புவோர் அதைக் கேட்டு மனதில் பதித்துக் கொண்டால் போதும்'' என்ருர்கள். பிறகு என் வற்புறுத்தலுக்கு இணங்க அங்குவந்து ''ஆற்ருேரம்'' என்னும் தலைப்பில் அற்புதமாகப் பேசினுர்கள். அதுஒரு வரலாற்றுச் சிறப்புடைய பேச்சாக அமைந்தது குறிப்பிடத்தக்கதாகும்.

ஃஃஃ

'விடுதலை' ஆசிரியராகப் பணி புரிந்து கொண்டிருந்த அண்ணு அவர்கள் பெரியாருடன் ஏற்பட்டகருத்து வேற்றுமையின் காரணமாக 1943ல் 'விடுதலை'யைவிட்டு விலகினுர்கள். அப்போது அண்ணு அவர்களுடன் இருந்த பொன்னம்பலனுர் அவர்கள் பெரியாரை எதிர்த்துப் போராட வேண்டுமென்று வற்புறுத்தினுர்கள்—எந்தப் பிரச்சினையையும் அமைதியுடன் அணுகும் அண்ணு அவர்கள் அதற்கும் நிதானமாகவே பதில் கூறினுர்கள்.

''தந்தை பெரியார் அவர்களுடன் இருந்து பணியாற்ற என்னுல் முடியவில்லை என்பதால்தான் வெளியேறினேன். பெரியாருடன் ஒத்துழைக்கக் காரணம் இல்லை. ஒதுங்குவதைத் தவிர வேறு வழியில்லை. எதிர்த்துப் போரிட எனக்கு அவசியமும் இல்லை'' என்று கூறினுர்.

ஃஃஃ

49ல் தி.மு. கழகம் துவங்கப்பட்ட பிறகு அண்ணு அவர்களும், நானும், நடிப்பிசைப்புலவர் கே.ஆர். ராமசாமிஅவர்களும் திருச்சி மாநாட்டினை முடித்துவிட்டு காரில் சென்னை திரும்பிக்கொண்டிருந்தோம். வழியில் நமது நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ஆர். அவர்கள் காரை ஓட்டிக்கொண்டு வந்தார்கள். ஜுபீடர்பிக்சர்படக் கம்பெனிக்குச் சொந்தமான கார் அது—புவனகிரி அருகே புதியதாகப் போடப்பட்டிருந்த சிமிண்ட் பாதையைக் கடக்கும் போது கார் சாய்ந்து—ஒரு பக்கம் ஓடிக் கவிழ்ந்து விட்டது எனக்கும் — கே. ஆர். ஆருக்கும் காயங்கள் அதிகமில்லை. நல்லவேளையாக அண்ணு அவர்களுக்கு உரைச்சல் லேசான காயம்.

ஃஃஃ

முன்பெல்லாம் சென்னை வரும் அண்ணு அவர்கள் என் வீட்டில்தான் தங்குவார்கள் ஒரே குடும்பத்தைப் போன்று அனைவரிடமும் பாசத்துடன் பழகுவார்கள்—குடும்ப நலன்களை அன்புடன் விசாரிப்பார்கள். ஒரு முறை அண்ணு அவர்கள் என் வீட்டில்

இதயத்தில் உள்ள ஈர நினைவுகள்

அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன்

தங்கியிருந்த போது நகைச்சுவையான நிகழ்ச்சி ஒன்று நடந்தது.

அவர்களே சொந்தமாக முகம் வழித்துக் கொண்ட பிறகு—மீசையை ஒழுங்குபடுத்த கத்தரிக்கோல் கேட்டார்கள்—கொடுத்தேன்—அதுபெரிய கத்தரிக்கோல் ஆனதால் மீசையை ஒருபக்கம் பெரிதாகவும் மறு பக்கம் சிறிதாகவும் ஆக்கிவிட்டது. முடிவில் மீசையையே எடுக்க நேரிட்டுவிட்டது. அன்று பேசிய பொதுக் கூட்டத்திலும் அதை நகைச்சுவையாகவே குறிப்பிட்டார்கள்.

ஃ

கடுமையான பிரச்சினைகளையும், கருத்துக்களையும் மக்களிடம் எடுத்துக் கூறும் போது பிரச்சினைகளின் கடுமை பேச்சில் தெரியா வண்ணம் கனிவோடு கூற வேண்டும் என்று அடிக்கடி கூறுவார்கள்.

நமது லட்சியமாக இருப்பினும் பொது மக்கள் விரும்பாத ஒன்றை அவர்களிடம் அழுத்தமாகக் கூறுவதன் மூலம் அவர்கள் நம்மைவிட்டு விலகிச் சென்றுவிடக்கூடாது—அந்த நிலை ஏற்படாவண்ணம் கவனத்துடன் செயல்பட வேண்டும் என்பார்.

கழகம் சமுதாய சீர்திருத்தப் பிரச்சாரத்தில் தீவிரமாக ஈடுபட்டிருந்த போது நாவலர் அவர்கள் புராண இதிகாசங்களைக் கடுமையாகத் தாக்கிப் பேசுவார். கடவுள் நம்பிக்கை பொய் என்பதற்கு இன்றைய பெரியார் அவர்களைப் போன்று கடுமையாக வாதிடுவார் நாவலர்.

அண்ணா அவர்கள் நாவலரிடம் கூறுவார்கள். ''கடவுள் உண்டு என்பதற்கு எவ்வாறு ஆதாரம் இல்லையோ அதே போன்று இல்லை என்பதற்கும் ஆதாரம் அவரவர் அறிவே தவிர வேறு இல்லை.

மக்கள் நன்மைதான் நமக்குத் தேவை. அவர்கள் மனம் விரும்புகிற வழியில் சென்றுதான் திருத்த வேண்டும். எப்படிச் சொன்னால் திருந்துவார்களோ அப்படிச் சொல்லவேண்டும். நாட்டில் பெரும்பாலோர் ஆஸ்திகக் கருத்துடையவர்கள். அதே சமயம் ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற நமது கருத்தையும் பக்தர்கள் மனதில் பதியும் வண்ணம்—கடவுள் ஒருவர்தான்— பல பெயர்களில் நாம்தான் உற்பத்தி செய்து கொண்டுள்ளோம் என்பதை தன்வயப் படுத்தும் வகையில் எடுத்துக்கூற வேண்டும் என்று விளக்கர் தருவார்கள்.

ஃஃஃ

ஆலயப் பிரவேச நிகழ்ச்சி நடைபெற்ற போது அண்ணா அவர்கள் கூறிய கருத்தும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும். ''ஆலயத்தில் சிலை வடிவில் உள்ள தெய்வங்களின் மீது நம்பிக்கையில்லாதவர்கள் ஆலயப் பிரவேசத்தில் அக்கறை காட்டுவானேன்?'' என்று ஒரு கேள்வி அன்று எழுந்தது,

''இது பக்திப் பிரச்சினையல்ல—உரிமைப் பிரச்சினை. தீண்டாப்படாதவர்கள் என ஒதுக்கி வைக்கப்பட்டிருப்போரின் உணர்வுப் பிரச்சினை — சமூக உரிமை—சமத்துவ உரிமை ஆகியவைகளின் உள்ளார்ந்த தத்துவத்தின் விளைவு இது. எந்த வாதத் திறமையாலும் ஒரு சமூகத்தின் உரிமையை மறைத்துவிட இயலாது. ஆகையால் ஆதி திராவிடர்க்கும் கோயிலைத் திறந்து விடுவது

என்பதுதான் நியாயம்'' நடைபெறவும் வேண்டியது என்று கூறினார்கள்.

ஃஃஃ

அண்ணா அவர்களின் அன்புள்ளத்திற்குச் சான்றாக ஆயிரம் நிகழ்ச்சிகளைக் கூறலாம். உற்ற நண்பர்கள் துன்பத்தில் வாடுவதை அவர் இதயம் தாங்கிக் கொண்டதில்லை.

பட்டுக்கோட்டை அழகிரிஅவர்கள்உடல் நிலைகாசநோயால்பாதிக்கப்பட்டு படுக்கையில் இருந்த நேரத்தில் அவரும் அவரது குடும்பமும் வறுமையால் வாடாதிருக்க நிதி

சேர்த்துக் கொடுக்கும் முயற்சியில் ஈடுபட்டார். நிதி சேர்ப்பதில் பெரியார் அவர்கள் கருத்து மாறுபட்டிருந்தார்கள். பெரியார் ஒத்துழைக்கவில்லை என்பதற்காக அண்ணு அவர்கள் ஓய்ந்துவிடவில்லை.

தன்னைக் கூட்டங்களுக்கு அழைக்கும் தோழர்கள் பட்டுக்கோட்டை அழகிரிஅவர்களுக்கு ரூபாய் நூறு அனுப்பிவிட்டு அதற்கானரசீதைத்தனக்குஅனுப்பிவைத்தால்தான் நான் கூட்டங்களில் கலந்து கொள்ளுவேன் என்று அறிக்கை விடுத்து அதன் மூலம் கடுமையான இருதய நோயால் பாதிக்கப்பட்டிருந்த அழகிரி அவர்களுக்கு உதவிய பாங்கு அவர் இதயத்தில் இயக்கத் தோழர்க்கு இருந்த இடத்தைக் காட்டுவதாகும்.

ஃஃஃ

பெரியார் மணியம்மை திருமணத்தின் போது பெரும்பாலான தோழர்கள் அத்திருமணத்தை ஆட்சேபிக்க வேண்டுமென ஆவேசமாகப் பேசினார்கள் — எழுதினார்கள். மற்றவர்கள் எதிர்ப்புக்குக் கொஞ்சமும் குறையாத அளவு புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் அவர்களும் எதிர்ப்புப் பாசறையை உருவாக்க முனைந்தார். 'விடுதலை' அலுவலகத்தைப் பூட்டி நம் வசம் ஆக்கிக் கொள்ள வேண்டும் — பெரியாருக்கு அதில் உரிமையில்லை'' எனக் கூற வேண்டும் எனப் போர்க்குரல் கொடுத்தார். புயலடித்த நேரத்திலும் அண்ணு அவர்கள் புத்தனைப் போல் அமைதியாகப் பதிலளித்தார்.

''நம்முடைய லட்சியம் மக்களுக்குத் தொண்டாற்றுவதுதான். பெரியாருடன் போராடுவது அல்ல. அந்த வழிக்கு நான் என்றும் தயாராகஇல்லை''எனக்கூறி கொதிப்படைந்த உள்ளங்களையெல்லாம் ஆறச்செய்தார். கண்டனக்கணை தொடுக்க நினைத்தவர்களை 'கண்ணீர்த்துளி' சிந்துபவர்களாகமாற்றிய பெருமை அந்த மாபெரும் உள்ளத்தாலேயே முடிந்ததாகும்! அது அண்ணுவால் தான் முடியும் என்பதற்கு இந்நிகழ்ச்சி ஒரு சாட்சி.

ஃஃஃ

அண்ணுவிடம் இருந்த நற்பண்புகளில் தலையாயது திறமையுள்ளவர்களைப் பாராட்டுவார். பிறருடைய வளர்ச்சிகண்டு மகிழ்ச்சியடையும் பரந்த — சிறந்த உள்ளம் அண்ணுவுக்கு இருந்தது. ஆரம்ப காலத்தில் மேடையில் யார் பேசினுலும் பாராட்டுவார். என்னுடைய பேச்சையும், நாவலர் அவர்களின் சொற்பொழிவையும் வரவேற்றுப் பொதுக் கூட்டத்திலேயே மனம் விட்டுப் பாராட்டுவார். அந்தக்காலத்திலேயே கலைஞர் அவர்களின் எழுத்துக்களை புகழ்ந்து பேசுவார்.

ஃஃஃ

அண்ணு அவர்கள் மனச்சோர்வடைந்த ஒருசில வேளைகளில் நான் அவர்களிடம் என் கருத்துக்களை அழுத்தமாகக்கூறி அவரது மனச் சோர்வை மாற்றிய பேற்றினைப் பெற்றிருக்கிறேன்.

1967ல் நடைபெற்ற மாணவர் இந்தி எதிர்ப்புக் கிளர்ச்சி செய்த நேரத்தில் அண்ணு அவர்கள் தெளிவான அறிக்கை விடுத்த பின்னரும் சில இடங்களில் போராட்டத்தை மாணவர்கள் கைவிடாது நடத்திய போது ''நான் முதலலமச்சர் பொறுப்பிலிருந்து ராஜினுமா செய்து விடுவது நல்லதென நினைக்கிறேன்'' என்றார் அண்ணு. அதுபற்றி என் கருத்தையும் கேட்டார்.

அது மிகத் தவறுன முடிவு என்று நான் வாதிட்டேன். பொதுமக்கள் உங்களை நம்பித்தான் இந்த ஆட்சியை ஒப்படைத்திருக்கிறுர்கள். மக்களுக்கு மறுவாழ்வு தருவீர்கள் என்ற மகிழ்ச்சியிலே இருக்கிறுர்கள். இந்த நேரத்தில் தாங்கள் இவ்வாறு முடிவெடுப்பதை என்னுல் ஒப்புக் கொள்ள முடியவில்லை. என்றேன்.

''அரசியல் காழ்ப்புணர்ச்சியைத் தீர்த்துக் கொள்ள சில எதிரிகள் இந்திப் போராட்டத்தைப் பயன்படுத்திக் கொள்ளுகிறுர்கள் என்பதற்காகப்பொது மக்களின் நம்பிக்கைக்குரிய தாங்கள் ராஜினுமாச்செய்வது ஜனநாயகத்தில் மக்களுக்கிருக்கின்ற நம்பிக்கையை அழித்துவிடும். ஆகையால் ராஜினுமாவைப் பற்றி யோசிப்பதே சரியானதல்ல. நிலைமையை மீண்டும் எடுத்துக் கூறி மாணவர்களுக்கு இன்னெரு அறிக்கை தாருங்கள். இந்தியின் நுழைவைத் தடுக்க தமிழகஅரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்று தாங்கள் மீண்டும் உறுதி கூறினுல் மாணவர்கள் நிச்சயம் போராட்டத்தை நிறுத்திக் கொள்வர்'' எனக் கூறினேன். அண்ணு அவர்களிடம் இருந்த உரிமையில் நான் அவ்வாறு கூறியதை அவர்கள் ஏற்றுக் கொண்டார்கள்.

ஃஃஃ

அண்ணு அவர்களுக்கு பெருச்சாளி என்றுல் பெரும்பயம். ஒருமுறை தேவாரஜமுதலியார் வீட்டில் அவர்களும்நானும் நண்பர்களும் தங்கியிருந்த போது, அவர் படுத்திருந்த அறையில் பெருச்சாளி புகுந்துவிட்டது. இரவு நெடுநேரம் படித்துக் கொண்டிருக்கும் அண்ணு அவர்கட்கு, பெருச்சாளி அடிக்கடி வட்டமிட்டவுடன் படிக்கவும் முடியவில்லை. தூங்கவும் முடியவில்லை —

வேறு இடத்துக்குப் போய்விடலாமா என்று கேட்கலானார். அதன்பின் — நான் அதை, அடித்துவிட்டால் போகிறது என்றேன். முடியுமா? நீயா? என்றார் கேலி யாக.

ஒரு கம்பு எடுத்து ஓங்கி அடித்தபோது— அது தலையில்பட்டு மயங்கி விழுந்தது. அவ ருக்கு அதுவே பெரிய ஆச்சரியமாகப் போய்விட்டது. அப்படிப்பட்ட பயந்த உள் ளம் அவருக்கு!

அதற்குப்பிறகு யாரைப் பார்த்தாலும்— ''அன்பழகன் நல்ல தைரியசாலி பெருச் சாளியைக்கூட சிறிதும் பயப்படாமல் அடிக் கிறான்'' என்று என்னைப் பெரிய வீரனாகக் காட்டிக் கொண்டிருப்பார்.

ஃஃ

62 தேர்தலில் நான் தோற்ற போது வீடு தேடி வந்து ஆறுதல் கூறினார். அப் போது அவரும் காஞ்சியில் வெற்றிவாய்ப்பை இழந்திருந்த நேரம். ''நீயாவது ஜெயித் திருக்கலாம் — ஜனநாயகத்தில் இது இரவு பகல் மாதிரி; வருந்தாதே'' என்று அவர் தோற்று விட்டாரே என்ற கவலை கொண் டிருந்த எனக்கு அவரே ஆறுதல் கூறினார்.

ஃஃ

அண்ணா அவர்கட்கு மனநிறைவு தரும் ஒய்வு என்பது திரைப்படமும் நாடகம் பார்த்தலும், புத்தகங்கள் படித்துக் கொண் டிருப்பதுமேயாகும். அவர் வீட்டை விட்டு வெளியே செல்ல முடியாத நேரமெல்லாம் படித்துக் கொண்டோ எழுதிக் கொண்டோ தான் இருப்பார்.

உடல் நலங் குறைந்து மருத்துவ மனை யில் சேர்ந்திருந்த ஒரு சமயம், அவர் நன் றாகத் தூங்க வேண்டும், படித்துக் கொண் டிருப்பதால் அவர் தூக்கம் கெடுகிறது என்று டாக்டர்கள் கூறியதால் நான் அண்ணாவைப் பார்த்து, ஏனண்ணா; ஓய் வாகத் தூங்காமல், இப்பொழுதும் படித் துக் கொண்டே இருக்கிறீர்கள்? என்று கேட்டேன். அவர் சொன்னார். எனக்கு ஓய்வே இப்படிப் படிப்பதிலேதான். இதில் கவனம் போவதில் வேறு கவலை வருவ தில்லை. படிக்காமல் கண்ணை மூடிக் கொண் டாலும் — எத்தனை பிரச்சினைகள் நினைவுக்கு வருகின்றன அதை மறக்கத்தான் படிக் கிறேன்'' என்றார். இது சில ஆண்டுகட்கு முன்.

அமெரிக்காவுக்குச் சென்று அறுவைச் சிகிச்சை முடித்து வந்தபின் அவரை நான் காணச் சென்ற போது மிகவும் களைத்துப் படுத்திருந்தார். அவருக்குப் பக்கத்தில் 10 12 புத்தகங்கள் இருந்தன. அவற்றை அவர் எடுத்துப் பார்க்கவில்லை. அவரிடம் உரையாடுவதற்காக ''ஏன் அண்ணா இத் தனை புத்தகங்களையும் படித்து விட்டீர்களா? உங்களுக்குப் பிடித்த புத்தகம் இதுதானே என்று ஒன்றைச் சுட்டிக்காட்டிக் கேட் டேன். அண்ணா அவர்கள் எனக்குப் பிடித் ததா? எனக்குப் பிடித்து என்ன பயன்? இதைப் படித்து நான் யாருக்குப் பயன் படுத்தப் போகிறேன்'' என்றார் குரல் தழு தழுக்க. அதைக் கேட்ட போது ஏற்பட்ட

மனக்கலக்கம் நீண்ட நேரம் என்னைவிட்டு நீங்கவில்லை.

ஃஃ

அடையாறு மருத்துவ மனையில் சேர்ப்ப தற்கு ஒருசில நாட்களுக்கு முன்பு அண்ணா இரவெல்லாம்விழித்து ஃபைல்களைப் படித்துக் கையெழுத்துப் போட்டுக் கொண்டிருந் தார்—'' ஏன் அண்ணா ஓய்வெடுத்துக் கொள் ளக் கூடாதா — இப்போதுமா ஃபைல் பார்க்க வேண்டும் என்றேன்.

''ஃபைல்களில் இப்போது கையெழுத் துப் போடவில்லை என்றால் இனி எப்போது போடப் போகிறேன்'' என்றார். என் விழி களில் அன்றைக்கே அருவி தொடங்கிவிட் டது.

அரசியலில் நடக்கவிருக்கும்நிகழ்ச்சிகளைச் சூசகமாகச் சொல்லுவார் அதையே நம் பிக்கையில்லாதது போலச் சுட்டுவார். அது நடந்தே தீரும். ஆனால் அவர் வாழ் கையிலும் அது நடைபெற்று விடும் என்று நான் அப்போது எண்ணவே முடியவில்லை.

தனது முடிவு நாள் நெருங்கிவிட்டது என்பதை உணர்ந்து, அதனை மறைமுக மாகக் குறிப்பிட்டதைக் கேட்ட எனக்கு ஏற்பட்ட அதிர்ச்சி பின்னர் நீங்கவே வழி யில்லாமற் போயிற்று.

அண்ணனின் உருவில் அமைதி கண்டனர்!

மண்ணிலிருந்து விண்ணைநான் பார்க்கிறேன்!
கண்ணைக் கவரும் வெள்ளிமுத்துக்கள்!
எண்ணற் றிலங்கும் விண்மீன் துருப்புக்கள்!
கணவனில்லாத கால தேவதை
மணமில்லாத கோடிப் பூக்களை
மேகக் கூந்தலில் மேலே மேலே
ஏனோ இறைத்தாள் என்று திகைக்கிறேன்!
விண்ணில்பறந்து மண்ணை நான் பார்க்கிறேன்!
எத்தனை தாஜ்மகால் இருந்தபோதுமென்
சித்தம் கவர்ந்தது சென்னைக் கடற்கரை!
அங்குதான் எங்கள் அன்பு நாயகன்
புதிய புத்தன் புவித்துயில் கொள்கிறான்!
அண்ணனுக்காக ஆவியும் நல்கும்
சின்ன இளங்கோவின் சிந்தனைக் கரத்திலே
செங்கோல் சேர்த்தவன் அங்குதான் துயில்கிறான்
அண்ணன் துயிலும் அந்தக் கடற்கரை
எண்ணற்ற மக்களின் அன்புக் கண்ணீரில்
புதிய தாஜ்மகால் பூத்துச்சிரிக்கும்
இதயக்கரையாய் இருப்பதைக் கண்டேன்!
காலயானையின் இரட்டைத் தந்தமாய்க்
கருநீல வானின் பிறைக்கீற்று வடிவில்
கல்லறை வாசலில் கரம்கூப்புதல்போல்
வரவேற்று நிற்கும் வெள்ளைக் கொம்புகளின்
வேதனை நிழல்கள் வருவோர்க் கெல்லாம்
இயம்ப நினைக்கும் எழுதாத சொற்கள்:
''உலக மக்களின் உள்ளம் கவர்ந்த
காதல் நாயகன் காவிய நாயகன்
உறங்கும் கடற்கரை உலகில் இதுவே''
என்பதைக் கண்டஎன் இதயம் கூறிடும்
''இங்குதான் ஆப்ரகாம் லிங்கனும் காந்தியும்
இரும்புத் துப்பாக்கியால் இறப்படை யாமல்
நெருங்கிய சாவை நிலத்தில் ஏற்றே
அண்ணனின் உருவில் அமைதி கண்டனர்''

குருவிக்கரம்பை சண்முகம்
எம்.ஏ.

ஒரு நாள் இரவு ஒரு மணிக்கு...

அமைச்சர் என்.வி.நடராசன்

1942-ல் நான்சென்னைமாவட்டஜஸ்டிஸ் கட்சி—சுயமரியாதைச் சங்கம் ஆகிய இரண் டிற்கும் செயலாளராக இருந்தேன். திரு வொற்றியூர் சண்முகம் இரண்டுக்கும் தலைவ ராக இருந்தார். அப்போது கூட் டங்கள் நடத்துவதற்கும், வேறு விளம்ப ரச் செலவுகளுக்கும் இந் நாளில் கிடைப்பது போன்று ஏழை நடுத்தர மக்க ளிடமிருந்து நிதி கிடைக்காது. ஒரு சில பணக்காரர்கள்தான் அதற்காகும் தொகை யை 'மான்யமாக' வழங்கி வருவார்கள். அவர்கள் ஆதிக்கம் தான் கட்சியில் மேலோங்கி நிற்கும்.

திருவொற்றியூர் சண்முகம் மிகுந்தவசதி படைத்தவர். அவர்தான் கட்சிப் பிரச்சாரச் செலவுகள் அனைத்திற்கும் பணம் தருவார்.

1945-ல் இந்திய சட்டசபைக்குத் தேர்தல் நடைபெற்றது–இப்போதைய பார்லிமெண்ட் தேர்தலைப்போன்றது அது. அத் தேர்தலுக்கு ஜஸ்டிஸ் கட்சியிலிருந்து யாரும்போட்டியிடக் கூடாதென பெரியார் அறிக்கை விடுத்திருந் தார். சண்டே அப்சர்வர் பாலசுப்பிர மணியம் சுயேச்சையாக நின்றார். ''எந்தச் சுயேச்சையையும் ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த வர்கள் ஆதரித்து வேலைசெய்யக் கூடா தென

'காமராசரிடம் பணம் இருந்தால் எங்களிடம் கருணாநிதி இருக்கிறார்' இதை ஏன்-யாரிடம் - எதற்காகச் சொன்னார் அண்ணா? என்.வி. என்.விளக்குகிறார்



கடுமையாக எச்சரித்திருந்தார் பெரியார்.

பெரியாரின் அறிக்கையை மீறி ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த — திருவொற்றியூர் சண்முகத்திற்கு மிகநெருங்கிய நண்பரான, பத்மநாபன் என்பவர் பால சுப்பிரமணியத்தை ஆதரித்து வேலை செய்தார். தேர்தல் முடிவடைந்தது. பாலசுப்பிரமணியம் தோல்வியடைந்தார். காங்கிரஸ் ஆதரவு பெற்ற அம்முசாமிநாதன் என்பார் வெற்றிபெற்றார்.

சென்னை மாவட்ட ஜஸ்டிஸ் கட்சி நிர்வாகக் குழு தேர்தல் முடிந்த அன்று மாலையே கூடியது. கட்சிக் கட்டுப்பாட்டை மீறி தேர்தலில் வேலை செய்தவர்களை கட்சியை விட்டு நீக்க வேண்டும் என விவாதித்தது! நான் அவர்கள் மன்னிப்புக் கடிதம் தந்தால் மன்னிக்கலாம் என்றேன். சண்முகத்தின் நண்பர் பத்மநாபன் மன்னிப்புக் கடிதம் தர மறுத்து விட்டார். சண்முகம் அந்த நேரத்தில் ஊரில் இல்லை. நான் நிர்வாகக் குழுவின் தீர்ப்பின்படி மன்னிப்புக் கேட்கமறுத்த பத்மநாபனை கட்சியை விட்டு நீக்கி வைத்து அறிக்கை விடுத்திருந்தேன்.

இதைக் கேள்விப்பட்ட அண்ணா அவர்கள் எனக்கு நீண்ட பாராட்டுக் கடிதம் எழுதியிருந்தார்கள். ''நான் ஜஸ்டிஸ்கட்சி எப்படி நடத்த வேண்டுமென்று விரும்பினேனோ, அது நடைபெற்றிருக்கிறது. செல்வந்தர்கள் ஆதிக்கம் கட்சியில் இருப்பதால் கட்டுப்பாடும்ஒழுக்கமும் இருக்குமா என ஐயப்பட்டேன். ஆனால் அந்தக் கட்டுப்பாட்டை தாங்கள் நாட்டியிருக்கிறீர்கள். நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்'' என்று பாராட்டியிருந்தார்கள். ''திராவிடநாடு'' இதழிலும் அ பற்றி விரிவாக எழுதியிருந்தார்.

வெளியூரிலிருந்து திரும்பியிருந்த சண்முகம் என்னைச் சந்தித்து தன் நண்பர் பத்மநாபன் மீது நடவடிக்கை எடுத்துக் கொண்டதற்காக மிகவும் வருந்தினார். அவரை மீண்டும் சேர்த்துக் கொள்ளும்படி வாதாடினார்.

கட்சியின் வேண்டுகோளை மதிக்காதவரை மீண்டும் சேர்த்துக் கொள்ள இயலாதென நான் கூறினேன்.

அவர் மீண்டும் அதிகக் கோபமாக ''பெரியாரும் அண்ணாத்துரையும் தான் கட்சியை நடத்துகிறார்களா?'' என்றார். ''நான் அப்படிச் சொல்லவில்லையே!'' என்றேன்.

''நான் பணம் தரவில்லை என்றால் உங்களால் கட்சி நடத்த முடியுமா? அண்ணாத்துரை பேசுவதால் மட்டும் கட்சி வளர்ந்து விடுமா? என் உதவியின்றி மாதம் ஒரு கூட்டம் நடத்த உங்களுக்கு யோக்யதை உண்டா?'' என்றார்.

''அப்படியெல்லாம் பேசாதீர்கள். யாரும் அவர்கள் வீட்டுச் செலவுக்கு உங்களிடம் பணம் வாங்கவில்லை — கட்சிக்காகத் தருகிறீர்கள். அதனால் கட்சியை உங்களுக்கு அடகு வைக்க வேண்டுமென்கிற அவசியம் இல்லை. உதவியைத் தாங்கள் சுட்டிக் காட்டுகிற முறையும் சரியில்லை எனக் கூறினேன்.

மறுநாள் சண்முகம்அவர்கள் 'நான் ஒழுங்காக நடக்க எனக்கு புத்தி கூறுமாறு' அண்ணாவுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள்.

அதற்கு அண்ணா அவர்கள் எழுதிய நீண்ட பதில் கடிதம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்ததாகும்.

''நான் பொதுவாகப் பணம் படைத்தவர்கள் என்பதற்காக யாரையுமே பெரிதாகக் கருதுபவன் அல்லன். சர், ஆர்.கே. சண்முகம் அவர்கள் உங்களைவிட பெரும் பணக்காரர். ஆனால் உங்களிடம் உள்ள மரியாதையும் பற்றும் எனக்கு அவரிடம் வருவதில்லை. உங்களுக்கு அடுத்தபடியாகத்தான் நான் அவரை மதிக்கிறேன். காரணம் உங்களிடம் உள்ள கொள்கை உறுதியினால்தான்— உங்களைத் தலைவர்களில் ஒருவராகவும் கருதுகிறேன்.

''சென்னை மாவட்ட ஜஸ்டிஸ் கட்சியில் எடுக்கப்பட்ட ஒழுங்கு நடவடிக்கைகளுக்காக நான் எவ்வளவு மகிழ்ச்சியும் பெருமையும் அடைந்தேன் என்பதை ''திராவிட நாடு'' இதழைப் படித்தால் உங்களுக்குத் தெரியும். அவ்விதச் செயலை நிறைவேற்றிய அந்த நடராசனைப் பாராட்டுவதற்குப் பதிலாக நீங்கள் உங்கள் விருப்பத்துக்கு மாறாக நடக்கிறார் என்று குறை கூறி எழுதியிருப்பது

சொன்னார்- நடந்தது!

''காங்கிரஸ்காரர்கள் மக்கள்— ஏமாந்த நேரத்தில் ஓட்டு பெற்று ஆட்சி பீடத்திலே அமர்ந்திருக்கிறார்களென்று நான் தைரியமாகக் கூறுகிறேன். திராவிட முன்னேற்றக் கழகம் தேர்தலிலே நின்றால் இன்றுள்ள மந்திரிகளில் பலர் முக்காட்டுடன் தான் உலவவேண்டி வரும்.''

—1950-மஆண்டு வங்கக் கவிஞர் ஹரீந்திரநாத் சட்டோபாத்தியாய கலந்துக் கொண்ட தி.மு.க. மே தின விழாவில் அறிஞர் அண்ணா இவ்வாறு குறிப்பிட்டார்.

என்னை ஏளனப்படுத்துவதாக இருக்கிறது. ஆகவே உங்களைப் போன்றவர்கள் கட்சிப் பொறுப்பில் இருந்து விலகி விடுவது உங்களுக்கும் நல்லது—கட்சிக்கும் நல்லது என்று நினைக்கிறேன்.'' என்பதாக அண்ணா அவருக்கு 15 பக்கக் கடிதம் எழுதியிருக்கிறார்.

மறுநாள் சண்முகம் டிரைவரை அனுப்பி என்னை அழைத்து வரச் சொன்னார். நான் வேலையிருப்பதாகக் கூறி டிரைவரை அனுப்பி விட்டேன். மறுநாள் அவரே என்னை அவரது இல்லத்திற்கு வற்புறுத்தி அழைத்துச் சென்றார். அவரது குடும்பத்தில் நான் உரிமையோடுபழகுவேன். ஆகையால்மனைவியிடம்கூறி எனக்கு முதலில் சிற்றுண்டி வழங்கினார். பின்னர் அண்ணா எழுதிய கடிதத்தை என்னிடம் தந்து இதைப் படித்துப்பார் என்றார்.

''என்னய்யா இந்த அண்ணாத்துரை பெரிய மனுஷன்—உனக்கு புத்தி சொல்லும்படி கூறி கடிதம் எழுதினால் — என்னையே கட்சியை விட்டுப் போகும்படி எழுதியிருக்கிறார். அது நியாயமா? என்றார். நீங்கள் வருந்தாதீர்கள் நான் அண்ணாவிடம் கேட்கிறேன் என்றேன். ''நீ என்னய்யா கேட்பது அவர் இங்கு வரட்டும் நானே கேட்கிறேன்'' என்றார்.

மறுநாள் அண்ணா அவர்கள் சென்னை தம்புச் செட்டித் தெருவிலுள்ள கார்னர் எஸ்டேட்டில் வந்து தங்கியிருந்தார். அங்கே போய் நான் அவர்களைச் சந்தித்து—சண்முகம் பற்றிக்கூறி அவரைக் கட்சியை விட்டே போகும்படி தாங்கள் எழுதியிருப்பது எனக்குக் கூட வருத்தமாக இருக்கிறது என்றேன்.

''அவர் எப்படி ஐயா உன் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி எனக்கு எழுதலாம்? நீ எடுத்த ஒழுங்கு நடவடிக்கையைப் பாராட்டி நான் காஞ்சிபுரம் முழுதும்பேசிக் கொண்டிருக்கிறேன். இவர் கட்சிக்குப் பணம்தந்து உதவுகிறார் என்பதற்காக கட்டுப்பாட்டை உடைத்தெறிய முடியுமா?'' என்று கூறிவிட்டு இனி அவரிடம் கூட்டம் நடத்துவதற்குப் பணம் கேட்காதே — அவரிடம் உதவி பெற்று முன்பு மாதம் ஒரு கூட்டம் நடத்தினால் — இனிஅவர் உதவி இல்லாமல் மாதம் ஒரு கூட்டம் நடத்த வேண்டும்'' என்றார்.

அண்ணாவின் வேண்டுகோளுக்கிணங்க நான் பி அண்டு சி மில் வாசலில் போய் தினசரி வண்பர்களுடன் மாலை உண்டியல் நந்தியபடி நின்று வேலை முடிந்து ஏரும் தொழிலாளர்களிடம் கூட்டத்திற்கும் போஸ்டர் செலவுகளுக்கும் பணம் வசூலிப்பேன். அண்ணா கூறிய வண்ணம் சண்முகத்திடம் பணம் வாங்காமல் மாதத்தில் நான்கு கூட்டங்கள் நடத்தினோம்.

இதைப் பார்த்துச் சினமடைந்த சண்முகம் பெரியாருக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார் பெரியார் சண்முகத்தை நேரடியாகச் சந்தித்து சமாதானம் செய்திருக்கிறார்.

''நான்தான்கூட்டம்நடத்துதவற்கு மாதாமாதம் பணம் கொடுப்பேன். இந்த முறை அதற்குக் கூட என்னிடம் பணம் கேட்காதீர்கள். இது என்னை அவமானப் படுத்தியது போல் இருக்கிறது'' என வருந்தியிருக்கிறார்.

''வருந்தாதீர்கள்''என்று சண்முகத்திற்கு ஆறுதல் கூறிய பெரியார் உங்களிடம் பணம் வாங்காமல் எத்தனைக் கூட்டம் போட்டு விட்டார்கள்?'' என்று கேட்க — சண்முகம் — ''நான்கு கூட்டம்'' என்று பதிலளித்திருக்கிறார்.

''நீங்கள் செல்வந்தர். உங்கள் மனம் புண்படக் கூடாது. ஆகையால் அந்தப் பணத்தை என்னிடம் கொடுத்து விடுங்கள். நான் வாங்கிக் கொள்கிறேன்'' என்று கூறி பெரியார் அவர்கள் நான்கு கூட்டத்திற்கான செலவுத் தொகையைப்பெற்று கட்சி நிதியில் சேர்த்துவிட்டார்கள்.

ஃ

முதலில் நான் கூறியது அண்ணா அவர்கள் அந்தக் காலத்திலேயே கட்சியில் கட்டுப்பாட்டையும் ஒழுங்கையும் விரும்பினார் என்பதற்கு எடுத்துக் காட்டு. இனிக் கூறப் போவது அவர் தொண்டுக்கு இலக்கணம் வகுப்பதாகும்.

1938-ல் இந்தி எதிர்ப்புப் போராட்டக் குழு அமைக்கப்பட்டது. சுவாமி அருணகிரி நாதர் தலைவராகவும், நான் செயலாளராகவும் அண்ணா அவர்கள் மாநிலக் குழுவின் செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டோம்.

போராட்டம்நடத்துவதற்கும் அதற்காகப் பிரச்சாரம் செய்வதற்கும் — இந்திஎதிர்ப்பு முழக்கங்கள் நிறைந்த போஸ்டர் போடுவதற்கும் அப்போது கையில் காலணா இல்லை. அன்று நூறு போஸ்டர்அடிக்க ஆகும் செலவு ரூபாய் 1.50 தான். (இப்போது 30 ரூபாய்க்கு மேல் ஆகிறது) நூறு போஸ்டர் ஒட்டக் கூலி 75காசு. இதற்குக் கூட எங்களிடம் அப்போதுவசதி

யில்லை. இன்னும் மவுண்ட் ரோடிலுள்ள ஒர்க்மென் பிரசில் கடன் சொல்லி அடிப்போம்.

நானும், நம்நாடு சிவஞானமும், டி. வி. முருகேசனும், தேவநேசன் சங்கரய்யாவும் அண்ணா ஆகியோரும், போஸ்டர் ஒட்டுவதற்குக் கொடுக்கும் 75 காசை மீதிப்படுத்தி வேறு காரியங்களுக்குச் செலவு செய்வதற்காக — நான் போஸ்டரை எடுத்துக் கொள்ளுவேன். சிவஞானம் பசை வாளியைத் தூக்குவார், தேவநேசன் ஏணி எடுத்துக் கொள்ளுவார், அண்ணா போஸ்டர் ஒட்டுவார். கொத்தவால் சாவடியில் உள்ள லோன்ஸ் கொயர் டீ ஹோட்டலில் டீ சாப்பிடுவோம். யார் ஜோபியில் பணம் இருக்கிறதோ அவர்கள் கொடுப்போம் — இதில் வேடிக்கை என்னவென்றால் இந்தி எதிர்ப்புக் கூட்டத்தின் முக்கியப் பேச்சாளர் அண்ணா — அவர்தான் போஸ்டரும் ஒட்டுவார். அந்த அளவு தொண்டில் ஏற்றத் தாழ்வு பார்க்காமல் பிறருக்கு வழிகாட்டியாக வாழ்ந்தவர் அண்ணா.

ஃ

அண்ணா ஏற்றத்தாழ்வுபார்க்காமல்உழைத்தது 38-ல் மட்டுமல்ல — அவர் வளர்ந்து மிகப் பெரும் தலைவராகக் காட்சியளித்த நரத்திலும்அதேபோன்றுதான்உழைத்தார்.

1952-ம் ஆண்டு சென்னையில் தி. மு. கழக முதல் மாநில மாநாடு நடைபெற்ற போது ஒரு மாத காலம் மாநாட்டுத் திடலிலேயே தங்கி, தலையில் தலைப்பாகை கட்டி, வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு பந்தல் அமைப்பிலிருந்து மாநாட்டு வேலைகள் அனைத்தையும் ஒரு சாதாரணத் தொண்டனைப் போன்று செய்தார். அதேபோல் திருச்சியில் நடைபெற்ற மாநில மாநாட்டிலும் உழைத்தார்.

ஃ

ராமாயணப் பிரச்சாரம் நாடு முழுதும் தொடரும் வகையில் — தெ. பொ. மீனாட்சி சுந்தரம், டி. என். செங்கல்வராயன், சர். பி. டி. ராசன், பண்டிதமணி கதிரேசன், கல்கி, எவரஸ்ட் ஓட்டல் உரிமையாளர் டி. எம். சுந்தரம் நாராயணசாமிபிள்ளைபோன்ற முக்கியஸ்தர்கள் கம்பர் மாநாடு என்று ஒன்றைக் கூட்டினார்கள். கம்பர் மாநாடு கூட்டுவதற்கு முன்னர் பெரியார் அவர்களையும், அவருடைய கொள்கைகளையும் கடுமையாகத் தாக்கி இவர்களில் பத்துப் பேர் பிரச்சாரம் செய்வதிலும் பத்திரிகைகளில் எழுதுவதிலும் ஈடுபட்டார்கள். மாநாடு சென்னை கோகலே ஹாலில் நடைபெறுவதாக இருந்தது.

இதைக் கண்ணுற்ற அண்ணா அவர்கள் என்னிடம் வந்து, ''இவர்கள் ராமாயணத்திற்காக மாநாடு கூட்டட்டும், கம்பர் புகழ் பாடட்டும், வேண்டாம் என்று கூறவில்லை. எதற்காகப் பெரியாரைத் தாக்கிப் பேசும் வண்ணம்ஊரெல்லாம்கூட்டம்போடுகிறார்கள் பெரியாரைத் தாக்கிப் பேசுவதைக் கேட்டு நாம் எப்படி வாளா இருப்பது? நாமும் இதற்குப் பதில் கூட்டம் போட வேண்டும். அதற்கு ஏற்பாடு செய்யுங்கள்'' என்று கூறிவிட்டு ஈரோட்டில் நடைபெறும் மாநாட்டிற்குச் சென்றுவிட்டார்கள்.

கம்பர் மாநாடு நடைபெற இரண்டு நாட்களே இருந்தன. இந்த இடை வெளிக்குள் போஸ்டர் அடித்து விளம்பரம் செய்து கூட்டம் நடத்த வசதியில்லாததால் — நான் வேறு ஒரு முடிவு செய்தேன் — கம்பர் மாநாட்டில் கேள்வி கேட்பது என்று.

நானும், புலவர் செல்வராஜ், சிவஞானம் மூன்று பேரும் கேள்விகள் தயாரித்து அதை அச்சிட்டோம். அதற்குக் கூட எங்க

ளிடம் அப்போது பணம் இல்லை — வில்லிவாக்கத்தில் உள்ள டி. எம். பார்த்தசாரதிக்குச் சொந்தமான அச்சகத்திற்குச்சென்றோம். அங்கு அவர் இல்லை. எனக்கு அச்சுக் கோக்கத் தெரியுமாதலால் நான் அதைச் செய்தேன். சிவஞானம் அதை அச்சடித்தார். அதை எடுத்துக் கொண்டு நாங்கள் மாநாட்டிற்குச் சென்றோம்.

மாநாடு தொடங்கிய சிறிது நேரத்தில் கேள்வித்தாளை ஒருவர் மூலம் மேடைக்கு அனுப்பினேன். மேடைக்குச் சென்ற அவரை செங்கல்வராயன் வரவிடாமல் கீழே தள்ளி விட்டார். எனக்குக்கோபம் வந்து விட்டது. கேள்வித்தாளை எடுத்துக் கொண்டு நானே மேடைக்குச் சென்றேன். என்னையும் மேடைக்கு வரவிடாமல் தடுத்து என் சட்டையைக் கிழித்தனர். நான் அதையும் மீறி மேடைக்குப்போனேன். இந்த நேரத்தில் பார்வையாளர் பகுதியிலிருந்த நமது தோழர்கள் ஆவேசத்துடன் ''நடராசனைத் தடுக்காதே! அவர் கேள்விக்குப் பதில் சொல்!'' என்று குரல் எழுப்பினர். இதை ஒட்டி அங்கு சிறு கலவரம் ஏற்பட்டது.

ராமாயணப் பிரச்சாரத்தை பதிவு செய்து ரேடியோவில் ஒலிபரப்ப அதற்கான கருவிகளை மேடையில் வைத்திருந்தார்கள். நடந்த கலவரத்தில் அது நொறுங்கி விட்டது. மேடையிலிருந்த அனைவரும் ஓடத் தொடங்கினர் பி. டி. ராசன் மட்டும் இருந்தார். நான் மைக்கைப் பிடித்துக் கொண்டு கேள்வியைப் படிக்க முயற்சித்தேன். பி. டி. ராசன் கையைப் பிடித்துத் தடுத்து அதைப் படிக்காதே என்றார். கீழே நின்ற மக்கள் கூட்டம் நடராசனை பேசவிடு! பேசவிடு!'' என்று குரல் கொடுத்தது. பி. டி. ராசன் ''யார் உன்னை இந்தக் கேள்விகளைக் கேட்கச் சொன்னது?'' என்றார். ''நீங்கள்தான் — பெரியாரைத் தனிப்பட்ட முறையில் தாக்கி நீங்கள் செய்த பிரச்சாரம் தான்'' என்று பதில் கூறினேன்.

இதே நேரத்தில் ஈரோட்டில் நடைபெற்ற மாநாட்டில் கம்பர் மாநாட்டின் செயல்முறைகளை கண்டித்து அண்ணா பேசியிருக்கிறார்கள்.

''கம்பர் மாநாடாம் — வம்பர்கள் கூடுகிறார்களாம். நான் வம்பர்கள் என்று ஏன் குறிப்பிடுகிறேன் என்றால் ஆணவத்தால் அல்ல — ராமாயணத்தை — வைதீகத்தோடும் பக்தியோடும் தொடர்பு படுத்திப் பேசுபவர்களைப்பற்றி நான் ஒன்றும் சொல்வதற்கில்லை. ஆனால் தங்களின் அறியாமையை உணராமல் சுயமரியாதை இயக்கத்தையும், தலைவர் பெரியார் அவர்களையும் நையாண்டி செய்து பேசிக் கொண்டிருக்கும் கூட்டத்தைச் சார்ந்தவர்கள் இந்நேரம் வம்பு பேசிக்கொண்டிருப்பர். நம் தோழர்கள் அங்கு கேள்வி கேட்பார்களோ, தன்மானத்தைக் காக்க அறிவின் துணை கொண்டு வாதம் செய்வார்களோ மாநாடு எப்படி முடியுமோ'' என்று தான் அவர்கள் ஈரோட்டு மாநாட்டில் கலந்து கொண்ட போது இங்கு என்ன நடைபெற்றதோ அதை தீர்க்கதரிசனமாகப் பேசியிருந்தார்கள்.

கம்பர் மாநாட்டில் வானொலிக் கருவிகள் சேதமடைந்ததை வைத்து என்மீது வழக்குத் தொடர கம்பர் மாநாட்டுக் குழு முயற்சி செய்தது. இதை அறிந்த அண்ணா அவர்கள். ''பணம் எவ்வளவு செலவு ஆனாலும் பரவாயில்லை. வழக்கை எதிர்த்து நடத்தும்படிக்

கூறுங்கள்என்றுட பிள்யூபி சௌந்தரபாண்டியன் மூலம் எனக்குச் சொல்லி அனுப்பி உற்சாகமூட்டினார்கள். ஆனால் அதே சமயம் கம்பர் மாநாட்டுக்குழுவில் பங்கு பெற்றிருந்த ஜஸ்டிஸ் கட்சியைச் சார்ந்த பணக்காரர்கள் பெரியார் அவர்களைச் சந்தித்து மாநாட்டில் நான் குழப்பம் விளைவித்ததாகக் கூறியிருக்கிறார்கள். பெரியார் நடந்த நிகழ்ச்சிக்காகப் பெரிதும் வருந்தி என்னிடம் விவரம் கேட்பதாகவும் நடைபெற்ற நிகழ்ச்சிக்கு 'விடுதலை'யில் வருத்தம் தெரிவிப்பதாகவும் கூறி அவர்களைஅனுதாபத்துடன் அனுப்பிவிட்டார்கள்.

இதனை அறிந்த அண்ணா அவர்கள் ''திராவிட நாடு'' ஏட்டில் கம்பர் மாநாட்டுக்காரர்கள் நடந்து கொண்ட முறையைக் கண்டித்தும் என் செயல்களுக்கு நியாயமான ஆதரவு காட்டியும் பத்துப் பக்கங்கள் எழுதியிருந்தார்கள். பெரியார் அதைப் படித்ததும் — அவர்களே மனம் மாறி ''கம்பர் மாநாட்டில் என். வி. என். நடந்து கொண்டது சரிதான். இவர்கள் என்ன பெரிய மனுஷன்கள்என்னைக் கண்டிக்க'' என்று தலையங்கம் எழுதினார்கள்.

ஃ

1935-ல் நான் பெத்துநாயக்கன் பேட்டை காங்கிரஸ் கமிட்டிச் செயலாளராக இருந்தேன். இந்த நேரம் சென்னை வர இருந்த நேருவுக்கு வரவேற்புக் கொடுக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டேன். அப்போது நானும் அண்ணாவும்நல்ல நண்பர்கள். நான், செங்கல்வராயன், அண்ணா மூவரும் பெத்துநாயக்கன்பேட்டையில் தான் சந்திப்போம். நான் அண்ணாவுடன் பழகுவதை பல காங்கிரஸ் நண்பர்கள் கண்டிப்பார்கள். ''அண்ணா பழகுவதற்கு இனிய நண்பர் — அவர் நட்பை என்னால் இழக்க இயலாது. அதைத் தவறான கண்ணோட்டத்தில் பார்க்காதீர்கள்'' என்று கூறுவேன்.

ஒருநாள் காலை அண்ணா அவர்கள் என் வீட்டிற்கு வந்து ''என்ன உங்களைப் பார்க்கவே முடியவில்லை. நேருவுக்கு வரவேற்புக் கொடுக்கும் வேலையா? எங்கே வரவேற்பு?'' என்றார். ''பிராட்வே டாக்கீசில் வரவேற்பு'' என்றேன்.

''கட்டணமா — இனமாகவா?'' என்றார்.

''கட்டணம்'' என்றேன்.

''எனக்கு இலவசச் சீட்டு வேண்டுமே'' என்றார்.

''எத்தனை வேண்டும்?'' என்றேன்.

''நாலைந்து'' என்றார். எனக்கு உள்ளூர ஒரு ஆசை. அண்ணா அவர்களே விரும்பி நேரு கூட்டம் கேட்க வருவதாகக் கூறுகிறாரே, ஒருவேளை அவர் மனம் மாறி காங்கிரசுக்கு வரப் போகிறாரோ என்று எண்ணி ''நாலைந்து என்ன பத்துத் தருகிறேன்'' என்று கொடுத்தேன்.

மறுநாள் காலை ஒரு நண்பரை அனுப்பி இன்னும் பத்துப் பதினைந்து பாஸ் கேட்டிருந்தார். ''ஒரு கூட்டமாகவே வந்து காங்கிரசில் சேரப் போகிறார்கள் போலிருக்கிறது என்ற மகிழ்ச்சியில் நான் இருபது பாஸ் கொடுத்தனுப்பினேன்.

பிராட்வே டாக்கீசில் நேரு பேசிய போது அண்ணா முன் வரிசையில் அமர்ந்திருந்தார். அது எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கூட்டம் முடியும் நேரத்தில் — அண்ணா அவர்கள் அச்சடித்த கேள்வித் தாள் ஒன்றை நேருவிடம் கொடுக்க முயன்ற போது மேடையிலிருந்த சத்தியமூர்த்தி அதைப் பிரித்துப் படித்துவிட்டு ''இதற்கெல்லாம் நேரு பதில் சொல்லமாட்டார்'' என்று கூறினார்.

உடனே நேரு சத்தியமூர்த்தியின் கையிலிருந்த கேள்வித்தாளை வாங்கிப் படித்துவிட்டு — ''இதற்கு நான் பதில் சொல்ல மாட்டேன் என்று சத்தியமூர்த்தி சொன்னது தவறு. ஆரம்பத்தில் தந்திருந்தால் நிச்சயம் பதில் சொல்லியிருப்பேன். இப்போது நேரமாகி விட்டதால் இக்கேள்விகளுக்கு இன்று மாலை நடக்கும் பொதுக் கூட்டத்தில் பதில் சொல்கிறேன்'' என்றார்.

கூட்டம்முடிந்ததும் பலர் அண்ணா கேள்வி எப்படியிருக்கும் என்று பேசிக் கொண்டே சென்றதால் நேருவின் கூட்டச் சிறப்புகெட்டு விட்டதாக காங்கிரஸ் தோழர்கள் ஆத்திரமடைந்தார்கள்.

எல்லோருக்கும்என்மீது கோபம். ''எப்படி அண்ணாத்துரைக்கு அத்தனை இலவசச் சீட்டுக் கொடுக்கலாம். அவரை ஏன் அழைத்தாய்?'' என்று கண்டித்தார்கள்—நான்,''அவர் காங்கிரசில் சேர வரப் போகிறாரோ என்ற மகிழ்ச்சியில்தான் அண்ணாவை அழைத்தேன். இப்படி நடக்குமென்று உண்மையில் எனக்குத் தெரியாது'' என்று அவர்களைச் சமாதானப் படுத்தினேன்.

மாலையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நேரு அண்ணாவின் கேள்விகள் அனைத்திற்கும் பதில் கூறிவிட்டு, ''இந்தக் கேள்வி எப்படி இருந்தாலும் — கேள்வி கேட்டவரின் சிந்தனையை — அறிவை ஆற்றலை நான் பாராட்டுகிறேன்'' என்றார். இது காங்கிரஸ் தோழர்களுக்கு மேலும் எரிச்சலை ஏற்படுத்தி விட்டது. இவ்வளவுக்கும் நீதாம் காரணம் என்று அன்று இரவு முழுதும் என்னைத் தூங்க விடாமல் ஒருவர் இருவராக வந்து கடிந்து கொண்டார்கள்.

மறுநாள் நான்அண்ணாவைச் சந்தித்து ''என்ன அண்ணா இப்படிச் செய்து விட்

டீர்களே'' என்று கேட்டதற்கு—''இது தானா—இன்னும் என்னென்ன செய்யப் போகிறேன்'' பார் என்று சிரித்துக் கொண்டே பதில் கூறினார்கள்.

1956ல் மும்முனைப் போராட்டத்தின் போது நானும் அண்ணாவும் சிறையில் அருகருகே இருந்தோம். ஒரு நாள் என் குடும்பத்தார் அனைவரும் என்னைப் பார்க்க வருவதற்கு அனுமதி பெற்றிருப்பதாகச் செய்தி வந்தது.

''என்னய்யா உன் மனைவி, குழந்தைகள் யாவரும் உன்னைப் பார்க்க வருகிறார்களாமே—நீ முகம் வழித்துக் கொண்டு மாப்பிள்ளை மாதிரி இரு ஐயா என்றார். நான் முகம் வழத்துக் கொள்ளத் தொடங்கிய போது ''உனக்குத் தெரியுமா—நான் வழித்துவிடட்டுமா?'' என்றார்—நானே செய்து கொள்ளுகிறேன் என்று வழித்தேன். சரியாக வரவில்லை. இதைப் பார்த்த அவர்கள் ''கொண்டாய்யா இங்கே'' என்று சரி செய்தார்கள். அவர்கள் மீசையை ஒழுங்கு படுத்திய போது ஒருபக்கம் சிறியதாகவும் மறுபக்கம் பெரியதாகவும் ஆகிவிட்டது. அதைச் சரி செய்கிறேன் என்று கூறி இப்படியும் அப்படியும் குறைத்துக் குறைத்து முடிவில் ''நன்றாக வரவில்லை ஐயா''என்று மீசையைஒரேயடியாக வழித்துவிட்டார்கள்.

மீசையில்லாமல் என் முகத்தைக் கண்ணாடியில் பார்த்த போது எனக்கே சங்கடமாக இருந்தது.

என் மனைவியும் குழந்தைகளும் என்னைப் பார்க்க வந்தபோது நான் கைக்குட்டையால் வாயை மூடிக் கொண்டே அவர்களுடன் பேசினேன்.

''ஏன் வாயைப் பொத்திக் கொண்டே பேசுகிறீர்கள்?'' என்றாள் என் மனைவி.

அண்ணா பண்ணிய வேலையை அவளிடம் கூறிய போது அவளும், அப்போது சிறுவனாக இருந்த சோமுவும், சிறை அதி

கட்டுப்பாட்டு ரகசியம்!

வேலூரில் முல்லை சத்தியின் திருமணம் அண்ணா தலைமையில் நடைபெறுகிறது. விழாவில் மணமக்களை வாழ்த்திப் பேசும் போது இன்றைய தொழிலாளர் நல அமைச்சர் என்.வி.என். அவர்கள் குடும்பக்கட்டுப்பாட்டினால் நமது தமிழகத்துக்குரிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் எண்ணிக்கை குறைவதைக் குறிப்பிட்டு குடும்பக்கட்டுப்பாட்டுத் திட்டத்தைக் கண்டித்து உரை நிகழ்த்தினார்கள்.

அடுத்துப்பேசிய அண்ணா, என்.வி.என். அவர்கள் பேசியதை நகைச்சுவையுணர்வோடு மறுத்தார்கள். ''என்.வி.என். அவர்கள் குடும்பக்கட்டுப்பாடு திட்டத்தைக் கண்டித்தார்கள் என்பதன் உண்மையை உங்களுக்குக் கூறுகிறேன். ஒருமுறை என்.வி.என். என்னிடம் வந்து, அண்ணா என் மகளுக்கு குழந்தை பிறந்துள்ளது. நீங்கள் வந்து பார்க்க வேண்டும் என்றார். அப்படியா.. ரொம்ப மகிழ்ச்சி. வருகிறேன் என்று கூறி குழந்தையைப் பார்க்க என் வி.என்.னுடன் சென்றேன். வீட்டில் நுழைந்து தொட்டிலில் கிடந்த குழந்தையைப் பார்த்து ''அடடே.. குழந்தையின் முகம் தாத்தாவின் (என். வி. என்.னின்) முகம் போலவே இருக்கிறதே''—என்றேன்.

உடனே என்.வி.என்., ''அது என் குழந்தை அண்ணா, பக்கத்துத் தொட்டிலில் இருப்பதுதான் பேரக் குழந்தை'' என்றார்! இப்போது உங்கள் எல்லோருக்கும் என்.வி.என். ஏன் குடும்பக்கட்டுப்பாட்டைக் கண்டித்தார் என்பதன் உள்நோக்கம் புரியும் எனக் கருதுகிறேன்—என அண்ணா கூறி முடித்ததும் திருமண மண்டபமே பலநிமிட நேரங்கள் சிரிப்பொலியிலும் கைத்தட்டலிலும் மூழ்கி விட்டது.

தபால்பெட்டி எண்: 3. | தொலைபேசி எண்: 214.

தோற்றம்: 1910.

ஸ்ரீ கமலாம்பிகா கூட்டுறவு அர்பன்பாங்கு லிமிடெட், நெ. 378,

திருவாரூர், தஞ்சைமாவட்டம்.

தலைவர்

திரு. எம். ராம்தாஸ் முதலியார்,
பி.ஏ., பி.எல்.,

(தமிழ்நாட்டில் சிறந்த கூட்டுறவு அர்பன் பாங்கெனப் பாராட்டுதல் தெரிவித்து இப் பாங்குக்குச் சென்னை மாநில அரசு 1964-லும் தமிக அரசு 1970-லும் கேடயங்கள் வழங்கியுள்ளன)

புள்ளிவிவரங்கள்: 30-6-'71-ல் உள்ளபடி
(SUBJECT TO AIDUT)

மெம்பர்கள்		12,090
பங்குத் தொகை	ரூ.	8,52,414
டெப்பாசிட்டுகள்	ரூ.	52,57,581
கடன்கள்	ரூ.	43,58,634
30-6-'71உடன் முடிந்த வருஷ நிகர லாபம்	ரூ.	1,48,358

5 முதல் 8 சதவிகிதம் வரை பிக்சட் டெபாசிட்டுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

ரூ. 5,000-க்கும் அதற்கு மேற்பட்ட தொகைகளுக்கும் டெப்பாசிட்டர்கள் விரும்பினுல் மாதாந்திர வட்டி வழங்கப்படும்.

விபரங்களுக்கு

காரியதரிசிக்கு எழுதவும்.

TI/652

Life is a Cycle

To the majority of India's millions, life is a cycle... of honest effort and gratifying fulfilment. The cycle - strong, durable, reliable, economical transport on two wheels. Bringing them the priceless gift of mobility. Giving them a means to better their lives with. Indeed, the cycle is part of their very life.

TI is in the cycle world — in fact, the leader of it. Just as TI leads in the manufacture of cycle accessories, ERW steel tubes, roller chains and metal sections.

What we make now: The world-famous HERCULES, PHILLIPS and BSA cycles which have set standards of unequalled quality in over 135 countries.

TRU-WEL ERW steel tubes, Brampton cycle fittings, Olympic, Brooks and Hector saddles, Hercules and TI cycle chains and Miller dynamo lighting sets for the cycle industry and trade.

TRU-WEL ERW steel tubing, cold-rolled steel strips, Diamond roller chains for heavy and light engineering industries and METSEC cold roll-formed metal sections.

TUBE INVESTMENTS OF INDIA LTD.,
Madras 1

Proprietors of:
TI Cycles of India — Tube Products of India—The Wright Saddles of India — TI Metal Sections
Subsidiaries:
TI Diamond Chain Limited — TI Miller Limited

காரிகளும் வாய்விட்டுச் சிரித்தனர்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

மும்முனைப் போராட்ட காலத்தில், நாங்கள் சிறையிலிருந்த போது கலைஞர் கருணாநிதி அவர்கள் ரயில் முன் மறியல் நடத்தச் சென்றிருந்தார். அண்ணா அவர்கள் ஒரு தந்தை நிலையிலிருந்து அன்றைக்கு வருந்தினார்கள். ''கருணாநிதி தீவிரமானவன். நீங்கள் எல்லாம் கட்சிப் பணியில் ஒரு எல்லையோடு நில்லுங்கள் என்றால் நிற்பீர்கள். கருணாநிதி மட்டும் அந்தக் கோடு வரையிலும் போய் வருவான்'' என்று சொல்லி வருந்திக் கொண்டிருந்த போது ''கருணாநிதி போராட்டக் களத்தில் சுடப்பட்டார்'' என்ற ஒரு தவறான செய்தி வந்ததும் கதறித் துடித்தார். சிறை அதிகாரிகளிடம் உடனடியாகத் தகவல் தெரிந்து தரும்படி துரிதப்படுத்தி அது உண்மையில்லை என்று அறிந்ததும் தான் அமைதியானார்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

திருச்சியில் இரண்டாவது மாநில மாநாடு நடைபெற்ற போது கலைஞரின் மீது அண்ணாவுக்கு ஏதோ ஒரு கோபம். அண்ணாவுக்குக் கோபம் வந்தால்—பக்கத்தில் இருப்பவர்களுடன் கலகலப்பாகப் பேசுவார். கோபத்திற்கு ஆளானவர்களுடன் பேச மாட்டார். இது வேறெந்தத் தண்டனையையும் விடக் கொடுமையாக இருக்கும்.

அப்போது திருச்சி மாநாட்டிற்குக் கலைஞர் வரவில்லை. நான் தொலைபேசி மூலம் சமாதானம் செய்து கலைஞரை வரவழைத்தேன். அண்ணா அவருடன் பேசவில்லை. மதிய உணவு நடைபெற்றபோது ''பாருங்கள் இங்கேயும் அண்ணா எனக்கு கவலை ஏற்படும்படி ஏதாவது செய்யப் போகிறார்'' என்று கலைஞர் என்னிடம் கூறினார். அதைப் போலவே விருந்து நடைபெற்ற போது அண்ணாவின் அருகே நானும் கலைஞரும் அமர்ந்திருந்தோம்—அண்ணா உடன் இருந்த அனைவருக்கும் 'என்ன வேண்டும் ஏது வேண்டும்' என விசாரித்தவர் கலைஞரை மட்டும் ஒன்றும் கேட்காமல் விட்டுவிட்டார்.

''பார்த்தீர்களா என்.வி.என்'' என்று கலைஞர் கோபமாக எ ழு ந் து போய்விட்டார். உணவு முடிந்து ஓய்வெடுத்த போது—அண்ணா நடந்துகொண்ட விதம் பற்றிக் கூறி கலைஞர் மிகவும் வருந்துகிறார் என்றேன்.

''என்ன என்.வி.என். நீங்களும் இப்படிப் பேசுகிறீர்கள். நான் எல்லோர் மீதும் கோபப்படுவதில்லை. என் கோபத்திற்கென்று சிலரைத் தேர்ந்தெடுத்து வைத்திருக்கிறேன். அதில் முதலிடம் கருணாநிதிக்குத்தான், நான் யார் மீதாவது கோபமாக இருக்கிறேன் என்றால் அவர்கள் என் உள்ளத்தில் இருக்கிறார் என்று பொருள். இதைக் கருணாநிதியிடம் கூறுங்கள்'' என்றார்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

அண்ணா அவர்கள் மனம் மிகவும் வேதனைப்படும்படியான சம்பவம் கழகத்திலிருந்து வெளியேறியவர்களால் ஒருமுறை ஏற்பட்டது. யார் யாரோ ஆறுதல் கூறியும் அண்ணாவுக்கு அமைதி ஏற்படவில்லை. இரவுப் பகலாக உணவு ஏதும் அருந்தாமல் அந்தப் பிரச்சினை பற்றியே நினைத்து நொந்து கொண்டிருந்தார்கள். ஒரு இரவு ஷெணாய் நகரில் உள்ள டபிள்யூபி சௌந்தரபாண்டியன் வீட்டில் தங்கியிருந்தோம் — கட்சி

தம்பியும், அண்ணனும்!

சட்டமன்றத்தில் ஒருமுறை நடந்த நிகழ்ச்சி இது—

''திருத்தணி சுப்பிரமணியர் கோயில் ஆடிக்கிருத்திகை சமயத்தில் பெரிய திருவிழா நடைபெறும்; மக்கள் ஏராளமாக வருவார்கள். 30-ஆம் தேதிக்கு முன்னதாக அங்கு அமைந்து வரும் குடிநீர்த் திட்டத்தை முதலமைச்சர் வந்து துவக்கி வைப்பாரா? தேதி கொடுப்பாரா?'' என்று திருத்தணித் தொகுதி காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விநாயகம் கேட்டார்.

''தம்பியின் (முருகன்) கோயிலுக்கு அண்ணன் (விநாயகம்) இவ்வளவு அக்கறை காட்டுவதுகுறித்து மகிழ்ச்சி அடைகிறேன்'' என்று முதலமைச்சர் அறிஞர் அண்ணா அவர்கள் கூறியதும் சட்டமன்றம் பெருஞ் சிரிப்பிலாழ்ந்தது.

ஈஸ்வரா!

திட்டங்களுக்காக வடக்கே அதிகத் தொகை ஒதுக்கப்படுவதையும்-தெற்கே அதில் பாதி கூட மறுக்கப்படுவதையும் சுட்டிக் காட்டிய அண்ணா-புள்ளி விவரங்களைச் சாதாரண மக்களும் அறிந்து கொள்ளும் வகையில் கீழ்க்கண்டவாறு நகைச் சுவையுடன் விளக்கினார்:

''தெற்கே பத்துக் கோடி என்றால் வடக்கே இருநூறு கோடிக்கு மேல் ஒதுக்கப்படுகிறது. கோடி ரூபாய் வைத்திருப்பவனை கோடீஸ்வரன் என்று அழைக்கிறார்கள். அந்த முறையில் — நமக்கு 10 ஈஸ்வரன்களுக்கு வழியில்லை. வடக்கேயோ இருநூறு ஈஸ்வரன்களுக்கு பஞ்சமில்லை.''

-பேரறிஞர் அண்ணா

முக்கியஸ்தர்களும் அதற்கு அப்பாற்பட்டவர்களும் அண்ணாவுடன் பேசி கவலையடையாதீர்கள். போனால்போகட்டும்—விட்டு விடுங்கள்'' என்று ஆறுதல் கூறிச் சென்றார்கள். எல்லோரும் சென்ற பிறகு நானும் அண்ணாவும் படுத்திருந்தோம்.

ஏதோ ஒரு அரவம் கேட்டு நான் கண் விழித்த போது அருகில் படுத்திருந்த அண்ணாவைக் காணவில்லை. நான் வேகமாக எழுந்து வெளியே வந்து பார்த்தேன். நான் கண்ட காட்சி என்னை அதிர்ச்சி அடையச் செய்தது. அண்ணா அவர்கள் மேல்சட்டையில்லாமல் துண்டு இல்லாமல்—பனியன்கூட இல்லாமல் தனியாக நடந்து போய்க் கொண்டிருந்தார். அப்போது நானும் சட்டை பனியன் இல்லாமல் இருந்தேன்—கையில் அகப்பட்ட துண்டை எடுத்துப் போர்த்துக் கொண்டு அண்ணாவை நோக்கி ஓடினேன்.

''என்னண்ணா சட்டை ஏதும் இல்லாமல் எங்கு போகிறீர்கள்?'' என்றேன்.

''பேசாமல் வா என்னுடன்'' என்றார். இருவரும் அமைதியாக நீண்ட தூரம் நடந்து வந்தோம். அண்ணா ஷெனாய் நகர் அருகில் உள்ள பாலத்தில் வந்து அமர்ந்தார். நானும் அருகில் அமர்ந்தேன்.

''எனக்கு டீ வேண்டும்'' என்றார். மேல்சட்டை இல்லாத காரணத்தால் நான் கடைக்குச் செல்லாமல் அங்கிருந்தபடியே அருகில் டீக்கடையில் இருந்த பையனைக் கைதட்டி அழைத்து இரண்டு டீ கொண்டு வரும்படி கூறினேன்.

'டீ'க்குக் கொடுப்பதற்கு எங்கள் இருவரிடமும் காசு இல்லை. பையனிடம் பிறகு அனுப்பி வைக்கிறேன் என்று கூறினேன். எங்களைப் புரிந்து கொண்டதாலோ என்னவோ அவன் பேசாது போய்விட்டான்.

நான் அண்ணாவிடம் கேட்டேன். ''ஏன் அண்ணா இப்படிப் புறப்பட்டு வந்தீர்கள்?''

''ஒன்றுமில்லையய்யா. தூக்கம் வரவில்லை. அதை விரவிடாதபடி மனவேதனை அதிகரித்தது. அதனால் கொஞ்சம் நடந்து வரலாம் எனப் புறப்பட்டேன். என்றவர் நாதழுதழுக்கக் கூறினார்:

''என்.வி.என். எனக்கு என்ன சொத்திருக்கிறது? நான் என்ன சேமித்து வைத்திருக்கிறேன். என்பது எனக்குத் தெரியாது. நான் அதைப் பற்றிச் சிந்தித்ததுமில்லை. நான் மனப்பூர்வமாகச் சேர்த்து வைத்ததெல்லாம் தம்பிகள் என்ற பாசஉணர்வு இருக்கிறதே அதைத்தான்—நான் கட்டிக் காப்பாற்ற நினைப்பதெல்லாம்—ஒரேகுடும்பத்தில் இருப்பவர்களாகக் கூட்டமாகச் செயல்படுகிறோமே அதைத்தான். அது உடைந்து சீர்குலைந்து விடுமோ என்பதுதான் உள்ளத்தில் தீயாக எரிகிறது.

''நாம் பெரியாரை விட்டுப் பிரிந்த போது நமக்கு என்னய்யா சக்தி இருந்தது? நாம் பெரியாரை எதிர்த்து வந்து இவ்வளவு தூரம் வளர்திருக்கிறோம் என்றால் நம்மிடமிருந்த தூய்மையான எண்ணங்களும்—கூட்டு உணர்வுகளும் தான் காரணம். அதைப் பாவி உடைத்துவிடுவான் போல் இருக்கிறதே—கருணாநிதியை அவனுக்குப் பிடிக்கவில்லை. அதற்காக இந்தக் குழப்பம் செய்கிறான்.

''கருணாநிதி உயிரைத் துச்சமாக எண்ணி உழைக்கிறான்—இவன் சும்மாஇருந்து கொண்டே குழப்பம் விளைவிக்கிறானய்யா. நான் இவனுக்காகக் கருணாநிதியை ஒதுக்கி விடமுடியுமா? அதுதானய்யா கவலை'' என்று கண்ணீர் வடியக் கூறினார். நானும் தேம்பித் தேம்பி அழுதுவிட்டு ''வாருங்கள் அண்ணா போகலாம்,'' என்றேன்.

அவர் மனம் அதற்குப் பிறகும் நிம்மதி அடையாததால் பாலத்தைவிட்டு இறங்கி நேராக நடந்து கொண்டே இருந்தார். ''எங்கே அண்ணா,'' என்றேன்—''வா போகலாம்'' என்று நடந்தார். நல்ல வேளையாக எதிரே ஒரு காரில் வந்து கொண்டிருந்த கழகத் தோழர்கள் எங்களைப் பார்த்ததும் நிறுத்தி இறங்கினார்கள். இருவரும் காற்று வாங்க வந்ததாகக் கூறி

அண்ணா அவர்களை அந்தக் காரில் ஏறச் செய்து வீடு போய்ச் சேர்ந்தோம். அதற்குப் பிறகு கழகத்தைவிட்டு வெளியேறிய தோழரின் பிரச்சினை முடியும் வரை நான் அண்ணாஅருகிலேயே இருந்தேன்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

முதன் முதலில் மாநகராட்சித் தேர்தலில் வெற்றி பெற்றதற்கும்—நாம் இனித் தேர்தலில் எல்லா இடங்களிலும் அபேட்சகர்களை நிறுத்தினால் வெற்றி பெறலாம் என்ற எண்ணம் வந்ததற்கும் கருணாநிதி தான் காரணம் என்று அடிக்கடி கூறி முதல் மாநகராட்சித் தேர்தலை அதற்கு உதாரணமாகக் கூறுவார்.

சில நேரங்களில் மனம் திறந்து உரையாடும் போது ''தேர்தல் வெற்றிக்கு காரமராஜரிடம் பணம் இருந்தால்—நம்மிடம் கருணாநிதி இருக்கிறார்'' என்பார்.

''கழகத்தில் சிலர் உரிமை கேட்கிறார்களே தவிர உழைப்பது குறைவு—கருணாநிதி மாதிரி உழைக்க வேண்டும்—அந்த எண்ணிக்கை அதிகமாக வேண்டும்'' என்பார்.

ஃஃஃ ஃஃஃ ஃஃஃ

கட்சிக்குள் சில இடங்களில் கழகத் தோழர்களே செயலாளர்களின் அனுமதியில்லாமல் சொந்த செல்வாக்கில் கலைஞரை அழைத்தால்—அவர் என்னையோ அண்ணாவையோ கலந்து கொண்டுதான் புறப்படுவார். கலைஞரின் இந்த நல்ல குணத்தைப் பாராட்டி அண்ணா கூறுவார்—''பாருய்யா நீ அமைப்பு—அவன் பொருளாளர். நினைத்தால் மீறிப்போகலாம்—ஆனால் போகிறானா?'' என்று இதயம் திறந்து பேசுவார்—அந்த இதயம் தான்இன்று வங்கக் கடலின் மென்காற்றில் உறங்கிக் கொண்டிருக்கிறது.

அகமும்-புறமும்!

''ஒருமுறை எனது தம்பிமார்கள் சிலருடன் காரில் பயணம் செய்து கொண்டிருந்தேன். காரின் முன் சீட்டில் நான் அமர்ந்து கொள்ள பின் சீட்டில் தம்பியர் (கழக முன்னணியினர் சிலரது பெயர்களை அண்ணா குறிப்பிட்டார்) அமர்ந்து இலக்கிய சம்பந்தமான விவாதங்களில் ஈடுபட்டவாறு வந்தனர். அவர்கள் உரையாடலைக் கவனிக்காமல் வேறு ஏதோ சிந்தனையிலிருந்த என்னை, உரத்த குரலில் வாதம் சூடு பிடித்தவுடன் ''அண்ணா'' என்று அழைத்தார்கள். ''என்ன விஷயம்'' என்று கேட்டதும் ''அகம் என்பதன் இலக்கணம் என்ன? புறம் என்பதன் முழுப் பொருள் என்ன? என்பது பற்றி விவாதம் எழுந்தது. ஒவ்வொருவர் கருத்தும் ஒவ்வொரு விதமாக இருந்ததால் ஒரு முடிவும் மேற்காள்ள இயலவில்லை, நீங்கள் இதனை முடித்து வையுங்கள்'' என்றார்கள்.

''இதற்குத்தானா இவ்வளவு சப்தம். சுருக்கமாகக் கூறுகிறேன். அகம் என்பது உணர்ந்து மகிழத்தக்கது; புறம் என்பது பகிர்ந்து மகிழ வேண்டியது'' என்று சொல்லி முடித்து வைத்தேன்.''

[சுமார் பத்து ஆண்டுகளுக்கு முன் நெல்லை நகர் பாப்புலர் திரையரங்கில் ''அகமும் புறமும்'' என்ற தலைப்பில் பேசிய போது அறிஞர் அண்ணா குறிப்பிட்டது.]

அண்ணா வழியில்

அயராது பாடுபடுவோம்!

- ஃ பசுமைப்புரட்சியில் முன்னணியில் நிற்பது — தமிழ்நாடு
- ஃ மாநிலத் திட்டக்குழு அமைத்திருப்பது — தமிழ்நாடு
- ஃ குடிநீர் வடிகால் வாரியம் குடிசை மாற்று வாரியம் அமைத்திருப்பது — தமிழ்நாடு
- ஃ எல்லா ஊர்களுக்கும் மின்வசதி அளிக்க திட்டம் வகுத்து செயல்படுத்துவது — தமிழ்நாடு
- ஃ ஏழையின் சிரிப்பில் இறைவனை காண எல்லா திட்டங்களிலும் வழிவகை செய்வது — தமிழ்நாடு
- ஃ ஏழை எளியவர்க்கு இலவச நிலப்பட்டா விட்டுமனைப் பட்டா வழங்குவது — தமிழ்நாடு
- ஃ மக்களாட்சியின் மாண்புக்கு உறுதியான
- ஃ அடித்தளம் அமைப்பது. — தமிழ்நாடு.

அமைதி தவழும் தமிழ்நாடு
அனைத்து இந்தியாவுக்கு வழிகாட்டியாக
ஒவ்வொரு துறையிலும் முன்னேற்றத்தின்
சின்னமாக திகழ்கிறது.
இந்நிலையின் மேம்பாட்டை மேலும் வளர்க்க
அரசின் ஆக்கப்பணிகள்
அனைத்திலும் ஒத்துழைப்போம்.

அண்ணா வழியில் அயராது பாடுபடுவோம்.

செய்தி விளம்பரத்துறை.

தமிழ்நாடு அரசு.

என் இதயம் இரும்பு இதயமா?

அமைச்சர் சாதிக்பாட்சா

1944ல் கனியூரில் நான் முதன் முதலாக அண்ணாவைச்சந்தித்தேன். நண்பர் மதி அவர்கள் மூலம் இயக்கத்தில் பற்றும் இயக்கத் தலைவர்களுடன் நெருங்கிய தொடர்பும் ஏற்பட்டது.

நான் சென்னையில் ஆர்ட்ஸ் காலேஜில் பயின்ற போது கல்லூரியில் ''சீதக்காதி தமிழ் மன்றம்'' என்ற பெயரில் ஒன்றைத் தொடங்கினேன். அதற்கு நானே செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

சீதக்காதி தமிழ் மன்றத்தின் ஆரம்ப விழாவில் பேசுவதற்கு அண்ணா அவர்களை அழைத்தோம். அதற்கு பிரின்ஸ்பால் அவர்கள் ஒப்புதல் தரவில்லை. பிறகு நானும் எனது நண்பர்களும் வற்புறுத்தியதற்கு இணங்க அண்ணாவை அழைக்க சம்மதம் தெரிவித்தார்கள்.

ஏராளமான கூட்டம் அறை நிரம்பி வழிந்தது. வெளியிலும் ஆர்வமுள்ள தோழர்கள் காத்துக் கொண்டு நின்றனர்.

அண்ணா ஒன்றரை மணி நேரம் தேன் மாரி பொழிந்தார். இடியோசை இன்றி இலக்கிய மழை பொழிந்தார். பிரின்ஸ்பால் அப்துல்அஹ அவர்கள் அண்ணா அவர்களின் நாதஸ்வரக் குழலோசைப் பேச்சுக் கவர்ச்சியில் மயங்கிப் போனார். ''இப்படி ஒரு பேச்சா? அதுவும் ஒண்ணரை மணி நேரமா? இவ்வளவுதிறமைசாலியான ஒரு மனிதரை நான் தவருகப் புரிந்து கொண்டு விட்டேன்'' என்று வருந்தினர்.

ஃஃஃ

கல்லூரியில் படித்துக் கொண்டிருந்தபோது அண்ணா அவர்கள் எங்கு பேசினலும் தவருது போய்வரும்—பாரதிதாசன் அவர்களுக்குப் பொற்கிழி வழங்கிய போது—விழாவிற்குச் சென்று இரவு வாகன வசதி கிடைக்காமல் இரவு 12 மணிக்கு மேல் லா காலேஜிலிருந்து ஆர்ட்ஸ் காலேஜ் வரை நடந்தே வந்தேன்—சில சமயங்கள் 10, 15 மைலுக்கு அப்பால் அண்ணா பேசினுலும் சென்று வரவேண்டும் என்ற வெறி ஏற்பட்டதுண்டு.

ஃஃஃ

சென்னை மாவட்ட முதல் மாநாட்டிற்கு என்னைத் தலைவராகப் போகும்படி அண்ணா அவர்களே கூறினர்கள். அந்த அளவு அவர்கள் மனதில் நான் இடம் பெற்றதை நான் வகிக்கும் பதவியைவிட மிக மிகச் சிறந்ததாகக் கருதுகிறேன்.

மாநாட்டில் அண்ணா பேசுகின்ற போது ''சாதிக்பாட்சா, நல்ல குடும்பத்தைச் சார்ந்தவர், இளைஞர், தன்னலம் கருதாமல் பாடுபடக்கூடியவர். அதனுல்தான் அவரைத் தலைவராகத் தேர்ந்தெடுத்திருக்கிறேன்'' என்றார்

ஃஃஃ

62 தேர்தலில் நான்தோல்வியுற்ற போது ''கோவை மாவட்டத்தில் நீதான் வெற்றிபெறுவாய் என்று எதிர்பார்த்தேன். ஒரு சீட் நிச்சயம் கிடைக்கும் அது சாதிக் பாட்சாவாகஇருக்கும் என நம்பினேன். நீ வெற்றி வாய்ப்பைஇழந்து விட்டாயே'' என வருந்தினர்.

ஃஃஃ

தீவிர வாதத்

தில் அண்ணாவுக்கு எப்போதும் நம்பிக்கை இருந்ததில்லை. அதில் மனிதாபிமானத்திற்கு மதிப்பில்லை என்பதால் அதை நான் ஏற்றுக் கொள்வதில்லை என்பார். சம்பத் உண்ணாவிரதம் இருந்த போது இதைச் சுட்டிக் காட்டினார்.

''தீவிரமாகச் செயல்படுவதை நான் வரவேற்கிறேன். அது ஒன்றிலிருந்து ஒன்று பிறப்பதாக இருக்க வேண்டும்—ஒன்றை அழித்து ஒன்று தோன்றுவதை நான் விரும்பவில்லை'' என்பார். சம்பத் நம்மோடு நீண்ட நாட்கள் இருந்தாலும் செல்லப் பிள்ளையாக வளர்ந்தவன்—அதனால் தான் தீவிரத்தின் விளைவுகளை அறியாமல் கட்சியைவிட்டு வெளியேறி அதைச் செயல்படுத்துவதாகக் கூறுகிறான். அதை உள்ளிருந்தபடியே ஒரு தலைமைக்குக் கட்டுப்பட்டுச் செய்தால்தான் சுகப்பிரசவம் நடக்கும் என்பார்.

தோழர் சம்பத்தின் தீவிரம் என்னாயிற்று என்பதையும்—அவருடைய இன்றைய நிலையையும் கவனிக்கும் போது 'தீவிரவாதத்திற்கு' அவர் அளித்த விளக்கங்கள் திருக்குறள் வரிகளாகக் காட்சியளிப்பதை உணர்கிறேன்.

ஃஃஃ

கழகம் தேர்தலில் ஈடுபட்ட பிறகு மெல்ல மெல்ல சிறு வெற்றிகளைப் பெற்றாலும் முழுமையான ஒரு நகராட்சியைக் கைப்பற்றியது முதன் முதலில் உடுமலைப்பேட்டையில்தான். கழகத்தின் முதல் நகராட்சித் தலைவர் நான்தான்—அதுவும் எதிர்பாராத விதமாக ராஜ தந்திரத்தால் கிடைத்ததாகும்.

காங்கிரஸ்காரரான உடுமலை நகராட்சித் தலைவர் மூன்று முறை சேர்ந்தாற்போல் கூட்டத்திற்கு வராததால் அவர் பதவியிழந்ததாகத் தீர்மானம் கொண்டு, வந்தனர். நான் தலைவர் பதவி ஏற்கும் வாய்ப்புக் கிட்டியது. — அதைக் கேள்விப்பட்ட போது அண்ணா மிகவும் பாராட்டினார்.

ஃஃஃ

என்னைச் சுகாதார அமைச்சராக அவர் பணித்த போது அவர் கூறிய வாசகங்கள் இன்னும் என் மனத்தில் பசுமையாக உள்ளன. ''இந்த இலாகாவை உன்னிடம் ஏன் தந்திருக்கிறேன் என்றால் நீ இதில் தூய்மையாகச் செயல்படுவாய் என்பதால்தான். அந்த நம்பிக்கையைக் காப்பாற்றும் வகையில் நடந்துகொள்'' என்றார். நான் திடீர் திடீரென மருத்துவமனைகளில் சோதனை நடத்துவதையும்—என் பணி பற்றி பிறர் சொல்வதையும் கேட்டு என்னை மனம் திறந்து பாராட்டுவார் அண்ணா.

ஃஃஃ

மாணவர்கள் பஸ் தொழிலாளர்கள் மோதலில் ஏற்பட்ட நிகழ்ச்சிக்குப் பிறகு சென்னை தலைமை மருத்துவமனையில் நடைபெற்ற கூட்டத்திற்கு என்னைத்தான் போகும்படி முதலில் கூறினார். மறுநாள் தொலைபேசி மூலம் ''நீ வேண்டாம்; நானே போய் வருகிறேன்'' என்று கூறி, அவர் சென்று வந்தார்.

நடைபெற இருக்கும் விளைவுகளை முன் கூட்டியே தெரிந்து செயல்படுகின்ற ஆற்றல் அவரிடமிருந்த திறமைகளில் தலையாயது எனக் கூறலாம்.

ஃஃஃ

திருமணமே செய்து கொள்வதில்லை என்ற முடிவில் இருந்தவன் நான். என் உறவினர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் கூட நான் அதைத் தள்ளிப் போட்டுக் கொண்டேவந்தேன். ஆனால் அண்ணா அவர்களின் அன்புக் கட்டளையை என்னால் மீற முடியவில்லை.

''மணவாழ்க்கையின்றி வாழ்கின்ற வாழ்க்கை ''மண'' வாழ்க்கை அல்ல—அதாவது 'மணம்' உடைய வாழ்க்கை ஆகாது. திருமணம் ஆனால்தான் மனிதன் முழுமை அடைகிறான். இதுவரை காலம் கடத்தியதே தவறு'' என்று எனக்கு மணவாழ்க்கை எண்ணத்தை ஏற்படுத்தியவரும் — பெண் தேர்ந்தெடுப்பதில் கூட உரிமையுடன் ஈடுபட்டு எனக்கு மணவாழ்க்கையை — முழு வாழ்க்கையைத் தந்தார் அண்ணா.

கழகத்தில் அண்ணா அவர்கள் குடும்பப் பாச உணர்வை ஏற்படுத்தினார்கள் என்பதற்கு என்னுடைய மண நிகழ்ச்சி ஒரு சான்றாகும்.

ஃஃஃ

கல்லூரி வாழ்க்கையிலிருந்து அரசியல் வாழ்க்கை ஈறாக எனது மணவாழ்க்கை வரை எனக்கு ஆசானாய் இருந்து ஒளி ஏற்றி வைத்த அண்ணா அவர்கள் மருத்துவ மனையில் இருந்தபோது என் இதயம் ஏற்றுக் கொள்ள முடியாத ஒரு பொறுப்பு என்னிடம் தரப்பட்டிருந்தது.

அடையாறு மருத்துவமனையில் இரண்டாம் முறையாக கதிரியக்க சிகிச்சை பெற்று அவர்கள் அங்கு இருந்தபோது, அவ்வப்போது அவர் உடல்நலம் பற்றிய செய்திகளை பத்திரிகைகளுக்கும், மருத்துவமனைக்கு வெளியே கூடி நிற்கும் பல்லாயிரக்கணக்கான மக்களுக்கும் அளிக்கக்கூடிய பொறுப்பினை அப்போதுநான்சுகாதாரத்துறைஅமைச்

சரானதால் அதை அமைச்சரவை எனக்கு அளித்திருந்தது.

அந்தப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள என் இதயம் ஒப்பவில்லை என்றாலும் அமைச்சரவை முடிவு என்பதால் ஏற்றுக் கொண்டேன்.

அண்ணா மூச்சடங்கும் நேரத்தில்கூட மனிதாபிமானத்தோடு நடந்து கொண்ட ஒரு நிகழ்ச்சியை இன்று நினைத்தாலும் என் மேனி புல்லரிக்கிறது.

அண்ணா தன் உணர்வற்ற நிலையில் இருக்கிறார். பார்வையாளர்கள் யாரும் கூட்டமாக வந்து அமர்ந்து அவருக்குத் தொல்லை தரக்கூடாது என்பதற்காக அவர் அருகில் நாற்காலிகள் ஏதும் போடவேண்டாம் என்று டாக்டர்கள் கூறியிருந்தனர். அதைக் கவனமாகச் செயல்படுத்தி வந்தோம்.

ஒருநாள் அண்ணாஅவர்களைப் பரிசோதிப்பதற்காக வந்தடாக்டர்கள் சிலர் அண்ணாவின் கட்டிலுக்கு எதிரே தரையில் அமர்ந்ததை அண்ணா மெல்ல விழித்துப் பார்த்து பேச இயலாத நிலையில்—''டாக்டர்கள் கீழே அமரக் கூடாது. நாற்காலி கொண்டு வந்து போடுங்கள்—அதில் அமரட்டும்'' என்பதை கை சாடை மூலம் தெரிவித்தார்கள். டாக்டர்கள் எவ்வளவோ வற்புறுத்தியும் இருக்கைகள் கொண்டு வந்து போட்ட பின்னரே அண்ணா அவர்கள் அமைதியானார்கள்.

அந்த நேரத்தில் அண்ணாவின் மனிதாபிமானத்தின் மாண்பு கண்டு கண்ணீர் சிந்தியது அருகிலிருந்த நாங்கள் மட்டுமல்ல—எதற்கும் கலங்காத மருத்துவர்களின் விழிகளும் கண்ணீரைப் பொழிந்தன.

அந்தப் பெருமானின் கடைசி நேரப் பயணத்தை அறிவிக்கும் கல்நெஞ்சக்காரனாக நான் இருந்தேன் என்பதை இன்றைக்கு நினைத்தாலும் வேதனை என் இதயத்தை வேலாகத் தாக்குகிறது.

பரபரப்போடு அலைந்து கொண்டிருந்த பத்திரிகை நிருபர்களிடமும் அண்ணா நலம் பெறவேண்டுமென அன்பு சுரக்க 'அண்ணா அண்ணா' என்று அவர் நாமம் ஜெபித்துக் கொண்டிருந்த பல்லாயிரக் கணக்கான மக்களிடமும்—மணித் துளிக்கு மணித்துளி பனித்துளியென உருளும் கண்ணீரைத் துடைத்துக் கொண்டு அண்ணாவின் உடல் நலம்பற்றிய மருத்துவர்கள் அறிக்கையை அறிவித்துக் கொண்டிருந்தேன்.

ஒருநாள் அவசரக்கார செய்தியாளர் ஒருவர் அண்ணாவின் உடல்நிலை பற்றித் தந்த தகவலால் உலகம் அதிர்ச்சியடைந்த போது—''அந்தச் செய்தி தவறு. அண்ணா அவர்களுக்கு ஆபத்தில்லை'' என்று நான் அறிவித்தேன்—அந்த நிலை தொடர்ந்திருக்கக் கூடாதா?

அதற்கு மறுநாள் அண்ணா தன் நீண்ட பயணத்தை முடித்து நீங்காத் துயில் கொண்டு விட்டார். சரித்திரத்தின் இறுதி அத்தியாயத்தில் இடம் பெற்று விட்டார் என்ற செய்தியை இதயத்தை இரும்பாக்கிக் கொண்டு தெரிவித்தேன்.

''எதையும் தாங்கும் இதயம் வேண்டும்'' என அண்ணா இதற்குத்தான் சொன்னாரோ?

'முரசொலி' - முத்தாரம்!

''முரசொலி'' தமிழரின் வீரத்தை , வெற்றியை, ஏற்றத்தைக் காட்டி நின்றது போலவே தம்பி கருணாநிதியின் கைவண்ணம் நிரம்பிய கருத்துக் கோட்டம் எனத்தகும் இதழ் வடிவு, தமிழகச் சிறப்பினை — நாம் உணரச் செய்திடும் சொல்லினைச் செம்மையாகச் செய்து வருகிறது.

''முரசொலி'' மலர் ஆண்டுதோறும் நமக்குக் கிடைத்திடும் அணிகலன்.

''முரசொலி'' வடிவத்தால் சொக்க வைத்து, கருத்துக் குவியலால் எவரையும் ஈர்த்து, இனிமை பயப்பதில் தென்றலையும், மணம் பரப்புவதில் முல்லையையும், ஒளி அமைப்பதில் முத்தாரத்தையும் வென்றிடும் வகையாக உளது என்று ஒவ்வொரு ஆண்டும் பல்லாயிரக் கணக்கான இல்லங்களிலே பரிவுடன் கூறுகின்றனர்.

நீடித்து நிற்கும் உறுதிக்கு:

செட்டிநாடு சிமெண்ட்

தயாரிப்பாளர்கள்:

செட்டிநாடு சிமெண்ட் கார்ப்பரேஷன் லிட்.,

6, அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

தந்தி: "BFSTCEMENT" போன்: 27256.

தொழிற்சாலை: புலியூர் (கரூர்)
திருச்சி மாவட்டம்.

தந்தி: 'CEMENT'
போன்: 144,

அன்று ஒர் நாள்..

அமைச்சர் ப.உ. சண்முகம்

காஞ்சீபுரத்தில் எனக்குக் கழகப் பொதுக் கூட்டம். சட்டமன்றத் தொடர் நடந்து கொண்டிருந்ததால் சென்னையிலிருந்தும் என்காரில் புறப்பட்டேன். கூட்டத்திற்கு நேரமாகி விட்டதால் கூட்ட மேடைக்கே போய் விட்டேன். கூட்டம் நடந்து கொண்டிருந்தது. மேடையில் அன்றைய மாவட்டச் செயலாளர் நண்பர் அண்ணாமலை வீற்றிருந்தார். மற்றைய கழகத் தோழர்களும் வீற்றிருந்தனர். நண்பர்சி.வி.எம். அண்ணாமலையிடம் நான் கேட்ட முதல் கேள்வி ''அண்ணா ஊரில் இருக்கின்றாரா?'' என்பதுதான். நகரச் செயலாளரை அவர் விசாரித்தார். அவர் ''மாலைதான் பொள்ளாச்சிக்குப் பயணமாகிப் புறப்பட்டு விட்டார்'' என்றார்.

'நீ பார்த்தாயா என்றேன் நான்?'

''நான்இருந்துஅண்ணாபுறப்பட்டதும் வந்தேன். நாளைகாலை பொள்ளாச்சியில் சிறப்புக் கூட்டம்உள்ளது. அதனால்தான் மாலையே புறப்பட்டு விட்டார்'' என்றார் அவர். நான் நம்பி விட்டேன். நான் பேசி முடிக்க இரவு சுமார் பத்தரை மணி ஆயிற்று. பிறகு அங்கேயே சாப்பிட்டு விட்டு நண்பர்களிடம் விடை பெற்றுக் கொண்டு சென்னைக்குப் புறப்பட்டு விட்டேன்.

ஆனால் உண்மையில் அண்ணா வீட்டில்தான் இருந்திருக்கின்றார். நண்பர் சி. வி. ஆரும் அண்ணாவும் பந்தயம் கட்டிக்கொண்டு திண்ணையில் உட்கார்ந்திருக்கின்றார்கள்.

''ப.உ.ச. கூட்டத்துக்கு வருவான். ஆனால் வீட்டிற்கு வர மாட்டான், பார்'' என்று அண்ணா அவர்களும் ''நிச்சயம் கூட்டத்தை முடித்துக் கொண்டு வருவாரென்று'' சி.வி. ஆரும் பந்தயம் கட்டி இருந்தனர் போலும். கழகத் தோழர்கள் கூட்டம் முடிந்து அவ்வழியே சென்று கொண்டிருந்தனர்போலும். அவர்களை அழைத்து அண்ணா அவர்கள் விசாரித்திருக்கிறார். நான் வந்ததையும், பேசி விட்டு புறப்பட்டு சென்று விட்டதையும் கூறி உள்ளனர். அண்ணா அவர்கள் அவர்களை அனுப்பி விட்டு சி. வி. ஆரிடம் தன் ஆரூடம் பலித்ததைப் பற்றிப் பேசினாராம்.

ஓர் நாள் காலை நான் ஊரில்இருந்தேன். நண்பர் தர்மலிங்கம் (இன்றைய திருவண்ணாமலை நகராட்சித் தலைவர்) வீட்டிற்கு வந்து ''அண்ணா வந்திருக்கிறார்'' என்றார். எனக்

தமிழ்நாடு தொழில் வணிகத்துறை, சென்னை-5

கைவினைப் பொருட்கள்

நேர்த்தியான கவர்ச்சிமிக்க கைவினைப் பொருட்களுக்கு தமிழ்நாடு தொழில் வணிகத்துறையினரால் கீழ்க்கண்ட இடங்களில் நடத்தப்படும் விற்பனை நிலையங்களுக்கு வருகை தருக.

1. நிர். 166—ஏ, அண்ணாசாலை, சென்னை—2.
2. மகாபலிபுரம், செங்கல்பட்டு மாவட்டம்.
3. நெய்வேலி, தென்னாற்காடு மாவட்டம்.
4. திருச்சிராப்பள்ளி.
5. தஞ்சாவூர்.
6. திருநெல்வேலி.
7. கோயம்புத்தூர்.
8. திண்டுக்கல், மதுரை மாவட்டம்.
9. சேலம்.

விற்பனை செய்யப்படும் சில முக்கிய பொருட்கள்

வெண்கல சாமான்கள், பித்தளை சாமான்கள், வேலைப்பாடமைந்த உலோகப் பொருள்கள், துணி பொம்மைகள், களிமண் விளையாட்டுப் பொருள்கள், நவீன பனையோலைப் பொருள்கள், பீங்கான் சாமான்கள், இசைக் கருவிகள், நெட்டி உருவகங்கள், தரை விரிப்புகள், பத்தமடை பாய்கள், தஞ்சாவூர் வேலைப்பாடமைந்த தட்டுகள் முதலியன.

இயக்குநர்,

தொழில் வணிகத்துறை, சென்னை-5

மறைந்த மாமேதை தமிழக முதலமைச்சர் மாண்புமிகு
திரு. சி. என். அண்ணாதுரை அவர்களின்
63-வது பிறந்ததின விழாவிற்கு எமது அஞ்சலி!

SUGUNA

சுகுணா



இண்டஸ்ட்ரீஸ்,

ஒற்றைஃபேஸ் மற்றும் மூன்றுஃபேஸ் மின்சார மோட்டார் உற்பத்தியாளர்கள். வீட்டு உபயோகத்திற்கான பம்பு செட்டுகளில் ஸ்பெஷலிஸ்டுகள்.

தொழிற்சாலை:
148.படேல்ரோடு,
கோவை 9. போன்: 25117.

தலைமை அலுவலகம்:
316,லிங்கிச்செட்டி தெரு,
சென்னை-1. போன்: 22273.

குத் தூக்கி வாரிப் போட்டது. ''எங்கே?'' என்றேன்.

''பயணியர் விடுதியில் தூங்குகிறார்'' என்று கேள்விப்பட்டதும் திகைத்தேன். துக்கம் என் நெஞ்சை அடைத்தது. எந்த நேரத்திலும், நான் இருந்தாலும் இல்லா விட்டாலும் உரிமையோடு வீட்டிற்கு வந்து தங்குபவர் பயணியர்விடுதியில் தங்கியதைக் கேட்டதும் எப்படித் தாங்குவேன்?

நான் காஞ்சீபுரம் கூட்டத்திற்குப் போய் வீட்டிற்குப் போகாமல் வந்து விட்டதை அண்ணா அவர்கள் சொல்லியதாக தர்ம லிங்கம் சொன்னார்.

பயணியர் விடுதி சென்றேன். அண்ணா உறங்கிக் கொண்டிருந்தார்கள். பார்த்ததும் துக்கம் தாங்காமல் அழுதேன். அண்ணாவை தர்மலிங்கம் எழுப்பினார். எழுந்த அண்ணா அவர்கள் அழுது கொண்டிருந்த என்னைப் பார்த்ததும் ''என்ன சண்முகம்?'' என்றார்.

''நான் தவறுதலாக நடந்து கொண் டேன். மன்னித்துக் கொள்ளுங்கள் அண்ணா'' என்றேன்.

''அன்றைய தினமும் என் மனம் இப் படித்தான் வருந்திற்று. உன் சினேகிதனாக (கலைஞரைக் குறித்து) இருந்திருந்தால் வரா மல் போயிருப்பானா?'' என்றார்.

கண்ணீரைத்தான் பதிலாகத் தந்தேன்.

''சரி, புறப்படு வீட்டிற்குப் போகலாம்'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு புறப்பட்டார்!

அந்த ஒருநாள் எனக்குக் கிடைத்த தண் டனையை இன்று நினைத்தாலும் தண்டிப்பதி லும் அவர் காட்டிய அன்பை நினைக்கின் றேன். அத்தகைய அன்பை அவர் சொரிந்த சில தம்பிகளில் நானும் ஒருவன் என்று எண்ணுவதிலே தனிப் பெருமை கொள்கின் றேன்.

அப்பெருந் தலைவன் புகழ் பாடுவதில் என் வாழ்நாள் முழுவதையும் செலவிட்டாலும் நன்றிக் கடன் முடியாதம்மா, முடியாது.

✻

சிறிய உதாரணம்!

''வாஷிங்டன் நகரில் அமெரிக்காவின் ஐக்கியத்திற்குப் போராடிய ஆப்ரகாம் லிங்கனுக்கு ஒரு அழகான மணிமாடம் அமைத்திருப்பது போலவே — அமெரிக்கா பிளவுபட வேண் டும் எனக் கூறிப் போராடிய ஜெனரல் லீ வாழ்ந்த வீட்டை யும் தேசியச் சின்னமாக வைத்திருக்கிறார்கள்.

''இங்கிலாந்தை அழிக்க வேண்டும் என்று கருதி அதை இலட்சியம் என்று கூறினான் நெப்போலியன். உலகம் அதைப் பேராசை என்றது. ஆனால் அந்த நெப்போலியனைப் பற்றி அவனது பிரான்சு நாட்டைச் சார்ந்தவர்கள் அறிந்திருப் பதைவிட அதிகமாக ஆங்கிலேயர்கள் அறிந்திருக்கிறார்கள்.

''எதிர் தரப்பாருக்கும் உரிய மரியாதை காட்ட வேண் டும் என்ற பண்புக்கு உதாரணமாக ''பெரிய'' உதாரணங் கள் கிடைக்கவில்லை என்பதால் இந்தச் சிறிய உதாரணங் களைக் கூறினேன்.

''மாற்றுக் கட்சியினரை மதிக்கும் பண்பும் தோழமை யும் கட்சித் தலைவர்களுக்கு மட்டுமல்லாமல் கட்சித் தொண் டர்களுக்கும் ஏற்பட வேண்டும்.''

—பேரறிஞர் அண்ணா

அமெரிக்காவில் அண்ணா

அமைச்சர் க. இராசாராம்

67-ல் அண்ணா ஆட்சிக்கு வந்தஉடன் முதல் வேலையாக ஏழை நடுத்தர மக்களின் தேவைகள் என்னென்ன என்று தேடி ஆராய்ந்து அதை உடனடியாக நிறைவு செய்யும் பணியில் இரவு பகல் பாராது உழைத்தார்கள். சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு தனி மனிதனின் துன்பங்களை துயரங்களை முடிந்தவரை துடைக்க வேண்டும் என்கிற உணர்வு ஆட்சிக்கு வந்த பிறகு அல்ல — அதற்கு முன்பே இருந்தது. இதற்கு உதாரணமாக ஒன்றைச் சொல்லலாம்.

அந்தக் காலத்தில் நடைபெற்று வந்த தேவி நாடக சபா எனும் நாடகக் கம்பெனி வசூல் இன்றி வறுமையால் தவிக்கும்போதெல்லாம் அண்ணா அவர்களை அழைத்து தலைமை தாங்கச் செய்து அவ்வப்போது ஏற்படும் தேவைகளை நிறைவு செய்து கொள்ளும் — ஒருமுறை அக் கம்பெனி நீலகிரி மலையின் அடிவாரத்தில் உள்ள மேட்டுப்பாளையத்தில் முகாம் செய்திருந்தது. நாடகத்திற்கு வசூல் குறைந்த போது வழக்கம்போல் அண்ணா அவர்களை அழைத்திருந்தார்கள்.

சென்னையிலிருந்து அண்ணா அவர்களும்ம் நானும், நண்பர் சி. வி. ராஜகோபாலுத் இலட்சிய நடிகர் அவர்களின் பிளைமவும் காரில் மேட்டுப்பாளையத்துக்குச் சென்றோம். பெரிய கார் ஆனதால் பெட்ரோல் அதிக குடித்தது. நாடகக் கம்பெனியிலிருந்து வழிச் செலவுக்குப் பணம் அனுப்பவில்லை. அண்ணா அவர்களே சொந்தச் செலவில் சென்றார்கள். ஏறக்குறைய பெட்ரோலுக்கு மட்டும் 200 ரூபாய்க்கு மேல் ஆனது.

''ராஜூவிடம் இந்தக் காரை வாங்கிக் கொண்டு வந்தது தவறு. இதற்குப் பெட்ரோல் போடும் பணத்தை நாடகக் கம்பெனிக்குக் கொடுத்தால் உதவியாக இருக்கும்'' என்று வருந்தினார் அண்ணா.

அந்த நேரத்தில் அண்ணா அவர்களுக்கு உடல் நலக்குறைவு வேறு. அதோடு அவர்கள் பயணம் செய்து நாடகத்திற்குத் தலைமை தாங்கினார். நல்ல வசூல்-ரூபாய் இரண்டாயிரத்துக்கு மேல்! இந்தத் தொகை அந்நாளில் நாடகத்திற்குப் பெரிய வசூலாகக் கருதப்பட்டது.

அறுவைச் சிகிச்சைக்காக அண்ணா அவர்கள் அமெரிக்கா சென்றிருந்த போது அங்கு ஒரு காட்சி கண்டு வியந்து இதைப் போல் தமிழ் நாட்டிலும் செயல்படுத்த வேண்டுமென வலியுறுத்திக் கூறினாராம்-அண்ணாவின் எண்ணத்தை கலைஞர் உதவியுடன் நிறைவேற்றுவேன் என்கிறார், அமைச்சர் ராசாராம் - என்ன அது?

திரும்பும்போது நான் கேட்டேன் ''ஏன் அண்ணா இவ்வளவு சிரமப்பட்டு இத்தனை தூரம் நாடகத்திற்குத் தலைமை வகிக்கஒப்புக்கொண்டீர்கள்?'' என்று.

''முடிந்தவரை இதுமாதிரி சின்னஞ்சிறு நாடகங்களுக்கு உதவவேண்டும். இதுபோன்ற கம்பெனிகளுக்கு நாம் உதவவில்லையென்றால் நாடகக் கலை அழிந்து போகும்—முத்தமிழும் இருக்காது'' என்றார்

ஃ

அந்தக்காலத்தில் நாவலர் வரிசையாகக் கூட்டத்திற்குஏற்பாடு செய்து கொண்டு மாதக்கணக்கில் சுற்றுப் பயணம் செய்துதிரும்புவார். வந்ததும் அண்ணாவைப் பார்க்க வருவார். ''நெடுஞ்செழியன் சுற்றுப் பயணம் முடித்துத் திரும்பியிருக்கிறார். கையில் நிறைய வைத்திருப்பார்'' என்று நண்பர்களுடன் அவரை ஹோட்டலுக்கு அழைத்துச் சென்று ஸ்பெஷல் உணவு கொண்டு வரச் சொல்லி சாப்பிட்டு விட்டு 'பில்லை' நாவலர் கையில் கொடுத்து விட்டு வந்து விடுவார் அண்ணா. இதுதான் நாவலரிடம் அவர் செய்யும் வேடிக்கை

ஃ

இன்றைய நமது மேடைகளிலும், சிறப்பு விழாக்களிலும், பிறந்தநாள் விழாவிலும் நடைபெறும் ''கவியரங்கம்'' என்ற நிகழ்ச்சியை முதன் முதலில் கழக மேடையில் அறிமுகப்படுத்தியவர் அண்ணா அவர்கள் தான்.

1956-ல்காரைக்காலில்கழகமாநாடுநடத்த ஏற்பாடு செய்தார்கள். அது கழக மாநாடு என்ற பெயரில் வேண்டாம். ''முத்தமிழ் மாநாடு'' என மாற்றி அமையுங்கள் என்றார் அண்ணா. அந்த மாநாட்டின் தலைவராக மா. கி. தசரதனும் திறப்பாளராக நானும் பணியாற்றினோம்.

அண்ணா அவர்களின் யோசனையின் பேரில் கவியரங்கிற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. கவிஞர் கண்ணதாசன் தலைமையில் நடைபெற இருந்த கவியரங்கம் அவர் வராததால் கவிஞர் ஆனந்தம் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது.

ஃ

அண்ணா அவர்கள் வாழ்க்கையில் அவருக்கு முன்பாகவே அவருடைய உருவப்படம் திறந்து வைக்கப்பட்டநிகழ்ச்சி நடைபெற்றது. இது மாதிரி திறப்புவிழா நிகழ்ச்சிகளில் விழாவுக்கு உரியவரே கலந்து கொள்ளுதல் தவறில்லை என்பதற்கும் அந்நிகழ்ச்சிஉதாரணமாக அமைந்தது.

சேலத்திற்கு அருகில் உள்ள தாரமங்கலத்தில் அண்ணாவின் திரு உருவப் படத்தை கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் திறந்து வைத்தார். எப்படி கலைவாணர் சிலையைத் திறந்துவைத்ததுதான் அண்ணா அவர்களுக்குக் கடைசிப் பொதுநிகழ்ச்சியோ அதுபோலவே அண்ணா அவர்களின் படத்தைத் திறந்து வைத்ததுதான் கலைவாணர் அவர்களுக்கும் கடைசிப் பொது நிகழ்ச்சி.

தாரமங்கலத்தில் அண்ணா படத்தைத் திறந்து வைத்து கலைவாணர் பேசுகையில்— ''அண்ணாவுக்கு நான் இரு கடமைகள் செய்ய வேண்டும். அதை நான் இன்னும் நிறைவேற்றாது இருக்கிறேன். எப்படியும் இனிவிரைவில் நிறைவேற்றி விடுவேன்'' என்றார்.

கூட்டம் முடிந்து அண்ணா ஓய்வாக இருந்த போது கேட்டேன். ''ஏனண்ணா, கலைவாணர் உங்களுக்கு இரு கடமைகள் செய்ய வேண்டும் என்கிறாரே; அதுஎன்ன?'' என்று.

''நல்லதம்பி'' படத்திற்கு நான் கதை வசனம் எழுதியதற்குப் பணம் தரவில்லை. அடுத்து அவர் வாங்கித் தந்த காரை நான் திரும்பக் கொடுத்து விட்டேன். அதைவிட நல்ல கார் வாங்கித் தருவதாக அடிக்கடி

நூறு ரூபாய் நோட்டும் கழுதையும்!

"இன்றைய தினம் நமது தோழன் மாவீரன் கே. வி. கே. சாமியை இழந்த வேதனையில் கண்ணீரும் கம்பலையுமாக நாம் கதறிக் கொண்டிருக்கிறோம். ஆனால்நாமெல்லாம் பதறக்கூடிய அளவுக்கு இந்தப் படுகொலையைச் செய்தவர்கள் அடையப் போகும் லாபம் என்ன?

"நமதுமடியிலிருந்த நூறு ரூபாய் நோட்டு கீழே விழுந்து, தெருவிலே போகின்ற கழுதை அதனை மென்று விழுங்கி விட்டால் நமக்கு நூறு ரூபாய் நஷ்டம்; ஆனால் கழுதைக்கு என்ன லாபம்?"

[மாவீரன் கே. வி. கே. சாமி மறைந்த வாரத்தில் தூத்துக்குடியில் நடைபெற்ற இரங்கல் கூட்டத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் பேசியது.]

கூறுவார். அதுவாகத்தான் இருக்கும்" என்றார் அண்ணா.

"அப்படியானால் இது இரண்டும் நிறைவேறாது அண்ணா" என்றேன் நான்.

"என்ன அப்படிச் சொல்லுகிறாய்?" என்று வியப்போடு கேட்டார் அண்ணா.

"காரில் வரும்போது அவர் பட்ட வேதனையை நான்தான் அண்ணா கவனித்தேன். அவர் வயிறு வீங்கியிருந்தது. உணவே செரிப்பதில்லையாம். வலி தாங்காமல் காரில் துடித்துக் கொண்டு வந்தார். உங்கள் படத்தைத் திறக்க வேண்டும் என்கிற ஆவலினால்தான் அவர் சென்னையிலிருந்து வேதனையையும் பொருட்படுத்தாது வந்ததாகக் கூறினார்" என்றேன்.

அண்ணா கண்களிலிருந்து கண்ணீர் பன்னீர் முத்துக்களாக உதிர்ந்தது.

"நான் அவரைக் கவனித்ததிலிருந்து சொல்லுகிறேன், இன்னும் ஒரு இருபது நாட்களுக்குத்தான் தாங்குவார் என்று நினைக்கிறேன்" என்றேன்.

"சொல்லாதே! அப்படிசொல்லதே!' என்று என்னைக் கண்டித்தார்அண்ணா. ஆனால் இயற்கையின் கொடுமையை யாரால் தடுக்க முடியும்? 15-ந்தே நாட்களில் கலைவாணர் காலமானார்.

காலம் சில நேரங்களில் ஆச்சரியமான —இப்படியும் நடக்குமா? என்னும்படியான காரியங்களைச் செய்து விடும். அண்ணா அவர்களின் இறுதிக் கட்டத்திலும் — கலைவாணரின் முடிவு நேரத்திலும் அப்படிப் பட்ட நிலைதான் ஏற்பட்டது.

அண்ணாவின் திருவுருவப் படத்தை கலைவாணர் நோயின் வேதனையோடு தான் திறந்து வைத்தார் — பின் சில நாட்களில் மறைந்தார். அதேபோன்று கலைவாணர் சிலையைத் திறக்குமுன் அண்ணா வாந்தியெடுத்தார் — மயங்கிய நிலையில் இருந்தார். அந்த நிலையிலும் டாக்டர்கள் சொன்னதையும் மீறி கலைவாணர் சிலையைத் திறந்தார் — பின் சில நாட்களில் மறைந்தார்.

ஃ

எத்தனை பெரிய பிடிவாதக்காரர்களையும்— மாறுபட்ட கருத்துக்களையும் அண்ணாவின் அமைதியான நடவடிக்கைகளால் வழிக்குக் கொண்டு வந்துவிடுவார்.

ஒருமுறை அண்ணா, இரா. செழியன் எம்.பி., நான், வி.பி. ராமன் ஆகியோரும் நாகர்கோயிலில் நடைபெறும் கழக மாநாட்டிற்கு காரில் சென்று கொண்டிருந்தோம். அப்போது பண்டித நேருவுக்குக் கறுப்புக் கொடி பிடிப்பது பற்றிய விவாதம் ஏற்பட்டது. பிடிக்க வேண்டும் என்பது என்னுடைய வாதம். அண்ணாவும் என்னை ஆதரித்துப் பேசினார்.

கூடாது என்பதற்காக செழியனும், வி. பி. ராமனும் கடுமையான வாதங்களைக் கூறி மறுத்து வந்தார்கள். அண்ணா அதற்கான மறுப்புரைகளைக் கூறியும் அவர்கள் இருவரும் — அவர்களின் கருத்திலிருந்து கொஞ்சமும் பின் வாங்கவில்லை — சென்னையிலிருந்து நாகர்கோயில் வரை பிடிக்கக் கூடாது என்ற முடிவையே வற்புறுத்தி வந்தார்கள்.

மறுநாள் நாகர்கோயில் மாநாட்டில்

கறுப்புக் கொடி பிடிக்கும் தீர்மானம் நிறைவேறியது.

''கறுப்புக் கொடி பிடிக்க வேண்டும்'' என்ற தீர்மானத்தை முன்மொழிந்தவர் இரா. செழியன் எம். பி., வழிமொழிந்தவர் வி. பி. ராமன். எதிர்த்தவர்களையே ஏற்றுக் கொள்ளச் செய்வது தான் —— அண்ணாவின் ராஜதந்திரம்.

ஃ

அண்ணாவுக்கு தமிழும் ஆங்கிலமும் தான் தெரியும் என்று எல்லோரும் நினைத்துக் கொண்டிருப்பார்கள். அவருக்குத் தெலுங்கிலும் சொற்பொழிவாற்றத் தெரியும். அதை கேட்டு மகிழும் வாய்ப்பினையும் ஒருமுறை நான் பெற்றேன்.

ஆந்திராவில் உள்ள தெனாலி என்ற பகுதிக்கு அண்ணா அழைக்கப்பட்டிருந்தார்கள். தெனாலி சுதந்திராக் கட்சியைச் சார்ந்த ரங்காவினுடைய ஊர். தெனாலிக்கு அண்ணா அவர்களுடன் நானும், சி. வி. ஆரும், தர்மலிங்கம் எம். பி.யும் சென்றிருந்தோம்.

தெனாலியிலும் அண்ணாவின் பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் தெலுங்கர்களும் தமிழர்களும் குழுமியிருந்தனர். அண்ணா ஒரு அரை மணி நேரம் ஆந்திரர்கள் கை தட்டி மகிழும் வண்ணம் தெலுங்கில் பேசி விட்டுப் பின்னர் ஆங்கிலத்தில் பேசினார்.

ஃ

ஒருமுறை அண்ணா அவர்கள் ஜெய்ப்பூர் யூனிவர்சிட்டி நடத்திய வட்ட மேஜை மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்தார்கள். நானும் உடன் சென்றிருந்தேன். நாட்டில் உள்ள எல்லாக் கட்சிகளின் தன்மை பற்றியும் ஆராய்ச்சி செய்வதே அந்த மாநாட்டின் நோக்கம்.

அந்த மாநாட்டில் ஆங்கிலத்தில் புலமை பெற்றவர்களும் இலக்கிய ஆராய்ச்சி செய்தவர்களும், மொழி முதிர்ச்சியாளர்களும் நிறைந்திருந்தனர்.

அங்கு போய் அமர்ந்ததும் முதலில் அண்ணாவைப் பேச அழைத்தார்கள். அண்ணா பேச ஆரம்பித்த முதல் வார்த்தையிலேயே மண்டபமே அதிரும்படியான கையொலி எழுந்தது. மிகக் குறைந்த நேரமே பேசினார் அண்ணா — ஆனால் பேசி முடிந்ததும் அனைவரும் வந்து அண்ணாவின் கையை குலுக்கிப் பாராட்டுத் தெரிவித்தார்கள். தன் பேச்சாற்றலால் சில மணித் துளிகளிலேயே அனைவரையும் கவர்ந்து விட்டார் அண்ணா. கூட்டம் முடிந்த பின்னர் சொற்பொழிவை ரசித்த மாணவர்கள் கூட்டமாக வந்து ராஜஸ்தானில் தி. மு. கழகம் ஆரம்பிக்கிறோம் உதவுவீர்களா? என்றார்கள்.

பெரியார் தந்த பயிற்சி!

''பெரியார் நம்மைத் திட்டுவதைப் பற்றியோ எழுதுவதைப் பற்றியோ, நாம் சிறிதும் வருத்தம் கொள்ளக் கூடாது.

''காட்டில் யானை தன் குட்டிகளுக்கு — இடையூறுகளிலிருந்து தங்களைக் காப்பாற்றிக் கொள்வதற்குப் பயிற்சி அளிக்கும். எப்படிப்பட்ட பயிற்சி தெரியுமா? குட்டிகளை தன் துதிக்கையால் அடித்து, கீழே தள்ளி, பள்ளத்திலும், மேட்டிலும் உருட்டிப்புரட்டி எடுக்கும். அந்த யானையைப் போன்ற நிலையில், பெரியார் நமக்குப் பயிற்சி அளித்துக் கொண்டிருக்கிறார். அந்தப் பயிற்சி வீண் போகப் போவதில்லை.'

-பேரறிஞர் அண்ணா

''தி. மு. கழகம் வேண்டாம் — ராஜஸ்தான் முன்னேற்றக் கழகம் ஆரம்பியுங்கள் — அதுதான் நல்லது'' என்று கூறினார்.

அன்று இரவு எம். ஏ. பட்டதாரி மாணவர்கள் 500 பேருக்கு தி. மு. கழகம் என்றால் என்ன என்று விளக்குவதற்காக ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அண்ணா ஆங்கிலத்தில் கட்சி வரலாற்றை சுவைபடச் சொல்லிக் கொண்டு வந்தார். திடீரென மின்விளக்கு அணைந்து விட்டது. விளக்கு அணைந்து விட்டதே; மாணவர்கள் இனி அமைதியாக இருந்து கருத்துரை கேட்பார்களா? என்று எண்ணிய போது மாணவர்களில் ஒருவரே மெழுகு வர்த்திகொண்டு

வந்து ஏற்றி வைத்துப் பேசுமாறு கேட்டுக் கொண்டார்.

மின்விளக்கு நின்ற பின்னர் மெழுகுத்திரி வெளிச்சத்தில் ஏறத்தாழ இரவு பத்து மணிக்கு மேல் — மீண்டும் ஒன்றரை மணி நேரம் பேசினார் அண்ணா. அதுவும் தி.மு. கழகத்தின் வளர்ச்சி பற்றி மட்டுமேபேசினார். அதனை மாணவர்கள் அத்தனை அமைதியாக இருந்து விரும்பி ரசித்துக் கேட்டனர். அந்தச் சொற்பொழிவு என் வாழ்நாளில் நான்கேட்ட மறக்க முடியாத சொற்பொழிவுகளில் ஒன்றாகும்.

ஃ

அண்ணா அறுவைச் சிகிச்சைக்காக அமெரிக்கா சென்றிருந்த போது ஒருநாள் அங்குள்ள மிகப்பெரிய மியூசியம் ஒன்றுக்குப் போனோம். அங்கு இத்தாலியில் 700 ஆண்டுகட்கு முன்னர் ஏசு பற்றி எழுதப்பெற்ற சுவர் ஓவியங்கள் பலவற்றை நேப்பிள்ஸ் நாட்டிலிருந்து கொண்டு வந்து வைத்திருந்தார்கள். அது பல வீடுகளில் எழுதப்பட்ட சித்திரங்கள். ஒருசமயம் புயல் வெள்ளத்தில் வீடுகள் பாதிக்கப்பட்ட போது சித்திரங்கள் கெடாமல் காப்பாற்றி அப்படியே எடுத்து பல நாட்டு மியூசியங்களுக்கும் அதை அனுப்பி இத்தாலி நாட்டுக் கலைப் பெருமையையும், அதே சமயம் கிறித்துவ மதத்தின்சிறப்பையும் சித்தரித்திருந்தார்கள்.

அந்தச் சித்திரங்களைப் பார்ப்பதற்கு மட்டும் ஆளுக்கு ஒருடாலர்(ரூ.7.50) கொடுத்தோம். கலைஆர்வ உணர்ச்சியால் ஏறக்குறைய நூறு படிக்கட்டுகள் ஏறி அக் காட்சியை ரசித்து ரசித்துப் பார்த்தார் அண்ணா. பிறகு சொன்னார்:

''நம் நாட்டிலும் எவ்வளவோ சித்திரங்கள் வரலாற்றை நினைவூட்டும் ஓவியங்கள் இருக்கின்றன. அதையெல்லாம் எடுத்து பெரிய ஏற்பாடுகளைச் செய்து நமது பழைய நாகரீகமும், பண்பாடும் உலகறியச் செய்ய வேண்டும்'' என்றார்.

மியூசியத்தை விட்டு வெளியேறும்போது அச்சித்திரங்கள் பற்றிய விரிவான தகவலுடைய புத்தகம் அங்கு விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது. அதனை இரண்டு டாலர் கொடுத்து வாங்கினார் அண்ணா.

''அமெரிக்கா ஒரு புது நாடு, அதனால் பழைமையை விரும்புகிறது. நமது பழைமைகளையும் இத்தாலி நாட்டுக்காரர்கள் செய்துள்ளது போன்று செய்தால் அந்நியச் செலாவணியும் கிடைக்கும். அதோடு நம் நாட்டின் பெருமையும் உயரும். நாம் திரும்பியதும் அதற்கான காரியங்களில் ஈடுபட வேண்டும் என்றார். அந்த மியூசியத்திலுள்ள ஒரு தனி இடத்தில் இதுபற்றியே ஒண்ணேகால் மணி நேரம் உரையாடிக் கொண்டிருந்தோம்.

இங்கே திரும்பியதும் அவர் அதனை நினைத்துப் பார்க்கக் கூட முடியாவண்ணம்இயற்கை அவரை எடுத்துக் கொண்டது.

சுற்றுலாத்துறை என்னிடம் இருப்பதால் டாக்டர் முதல்வர் கலைஞர் அவர்களின் ஆலோசனையுடன் அமெரிக்க மியூசியத்தில் அண்ணா விரும்பிக் கூறியதை இங்கு செயல் படுத்தலாம் என இருக்கிறேன்.

*

மரம் போல வாழ்வோம்!

“மரத்தை வெட்டுகின்றவன் கூட களைத்துப் போனால் ஓய்வெடுப்பதற்கு இன்னொரு மரத்தின் நிழலில்தான் அமருகிறான். நம்மையும் இவன் வெட்டுவானே என்று நினையாமல் அந்த மரம் அவனுக்கு நிழல் தருகிறது.

“அதுபோல அரசியலில் நேர்மைத் தாக்குவோரிடத்திலும் நிழல் தரும் மரம் போல அன்பு காட்டவேண்டும்.”

-அறிஞர் அண்ணா

அகத்தில் பதிந்துவிட்ட அந்த நாள்...

அமைச்சர் ஆதித்தனார்

அண்ணா மனிதத் தன்மையின் முழு உருவமாகத் திகழ்ந்தார் — ஏன் அதற்கு இலக்கணமாகக்கூட வாழ்ந்தார் என்று கூறலாம். கோடிக் கணக்கான மக்கள் வாழும் சமுதாயத்தில் தனிச் சிறப்புடன் — மேம்பட்டு நின்றார் என்றால் அவரிடம் இருந்த அந்த உயர் குணச் சிறப்புத்தான் காரணம்.

அவர் உடல் மிகவும் பாதிக்கப்பட்டு அறுவைச் சிச்சைக்காக அமெரிக்காவில் இருந்த போது ஒரு தண்டனை பெற்ற குற்றவாளியின் உயிரைக் காப்பாற்ற அவர் அங்கிருந்தே எடுத்துக் கொண்ட முயற்சி அவரை மனிதருக்கு அப்பால் நிறுத்தி வணங்கத்தக்க ஒருவராக உயர்த்தி விட்டது.

தமிழ்நாட்டில் தூக்குத் தண்டனை பெற்ற குற்றவாளி ஒருவர் தூக்குத் தண்டனையிலிருந்து தன்னை விடுவிக்குமாறு அமெரிக்காவிலிருந்த அண்ணா அவர்களுக்குக் கருணை மனு எழுதியிருக்கிறார்—அவருக்கு அறுவைச் சிகிச்சைநடைபெறுவதற்கு முதல் நாள் இந்தக் கடிதம் கிடைத்திருக்கிறது. அண்ணா இங்குவந்து அதற்கு உத்தரவு போட வேண்டுமெனில் அதற்குள் அவருக்கு அளித்த தண்டனை நிறைவேற்றப்பட்டுவிடும். ஆகையால் அவர் உயிரை எப்படியும் காப்பாற்ற வேண்டும் என அண்ணாவின் இதயம் ஆயிரக் கணக்கான மைல் தொலைவுகளுக்கு அப்பாலிருந்தும் கூடத் துடித்திருக்கிறது.

இந்த நேரத்தில் அண்ணா அவர்களின் நலம்பற்றி விசாரிக்க நான் அமெரிக்காவில் அவர்கள் இருந்த மருத்துவமனைக்குத் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டிருந்தேன்.

தொலைபேசியில் என்னிடம் அண்ணா அவர்கள் முதலில் பேசியதே அந்தக் குற்றவாளியின் கருணை மனு பற்றித்தான் ''சட்ட அமைச்சரிடம் கூறி இந்தக் குற்றவாளிக்கு அளிக்க இருக்கும் தண்டனையை நிறுத்தி வைக்கச் சொல்லுங்கள்!'' என்றார்.

மருத்துவமனையில் அண்ணாவே உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் நேரத்தில் — இங்கே உயிருக்கு ஏங்கிக் கொண்டிருக்கும் குற்றவாளியின் மனுவைக் கவனத்தில் கொண்டு அவ்வளவு அக்கறையுடன்



கூறினர் என்றால் அந்தக் கருணை உள்ளத்தின் பெருமையைக் கூற தமிழில் வார்த்தை கிடைக்காமல் தவிக்கிறேன்.

''நான் அவர் உடல்நலத்தின் மீது கவலை கொண்டு நலம் விசாரிக்கிறேன். அவரோ அறிமுகமில்லாத ஒரு குற்றவாளி உயிரின் மீது அக்கறை கொண்டு, பரிந்துரை செய்கிறார்.

67க்கு முன்பு மக்களின் குறைகள் அமைச்சர்களின் வீட்டுக் கதவைத் தட்டின போது கதவு திறக்கப்படவில்லை—கண்ணீர் துடைக்கப்படவில்லை. ஆனால் கழக ஆட்சியில்—ஒரு பிரஜையின் விண்ணப்பக்குரல் கேட்டு ஆயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பால் உயிருக்கு மன்றாடிக் கொண்டிருக்கும் அண்ணாவின் இதயக் கதவு திறக்கிறது—அன்பு சுரக்கிறது.

முல்லைக் கொடிக்குத் தேரீந்த பாரியும்— புறுவின் பசிக்குத் தன் சரீரத்தையே தந்த சிபிச் சக்கரவர்த்தியும் சரித்திரத்தில் அண்ணாவுக்கு முதலிடம் தந்து அவர்கள் ஒதுங்கிக் கொள்ளுகிற நிகழ்ச்சியல்லவா இது.

அதற்குப் பிறகு நான் சட்ட அமைச்சர் மாதவன் அவர்களிடம் அண்ணா கூறியதைச் சொன்னேன். அவர் நடவடிக்கை எடுத்ததன் பேரில் தூக்குத்தண்டனை நிறுத்தி வைக்கப்பட்டது. பின்னர் காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தண்டனைகள் குறைக்கப்பட்ட போது—அந்தக் கைதிக்குரிய தூக்குத் தண்டனை ஆயுள் தண்டனையாக மாற்றப்பட்டடது. அண்ணா அவர்கள் அன்று அத்தகைய நடவடிக்கை எடுக்காதிருந்திருந்தால் அந்தக் குற்றவாளிக்குரிய தூக்குத் தண்டனை நிறைவேற்றப்பட்டிருக்கும்.

ஃஃ

67 தேர்தலின் போது அண்ணா அவர்கள் என் தொகுதிக்கு வந்து இரவு பகலாக உழைத்ததை என்னால் எந்தக்காலத்திலும் மறக்க இயலாது.

அண்ணா என் தொகுதிக்குப் பிரச்சாரம் செய்ய வந்திருந்த போது நெல்லை லாட்ஜில் தங்கியிருந்தார்கள். தொடர்ச்சியாக மூன்று நாள் தொகுதி முழுதும் பிரச்சாரம் செய்தார்கள்.

ஒவ்வொரு நாளும் பகல் ஒரு மணிக்குத் தொடங்கும் கூட்டம் இரவு ஓய்வின்றி மறுநாள் ஆறுமணிவரை நடக்கும். அதற்குப் பிறகு தான் அண்ணா உறங்கச் செல்வார்கள்.

ஓய்வெடுத்துக் கொள்ளலாம் என்றாலும் கேட்க மாட்டார்கள்—அதற்குரிய சூழ்நிலையும் கிடைப்பதில்லை. மாலை ஆறு மணிக்கு ஒரு இடத்தில் பொதுக் கூட்டம் என்று திட்டமிட்டிருந்தால் மறுநாள் காலை நான்கு மணிக்குத்தான் நாங்கள் அங்கு போய்ச் சேரமுடியும். அண்ணா வருகிறார் என்றதும் ஒப்புதல் பெருமலே தோழர்கள் ஆங்காங்கே கூட்டங்களுக்கு ஏற்பாடு செய்து உரிமையாடு ''இங்கே கொஞ்சம் வந்துவிட்டுப் போங்கள்'' என அழைப்பர். அண்ணா முகமலர்ச்சியோடு அந்த அழைப்பினை ஏற்று அழைக்கும்இடத்திற்குச் சென்று சில இடங்களில் மேடையிலும் — சில பகுதியில் ஜீப்பிலிருந்தபடியும் பிரச்சாரம் செய்வார்கள்.

இடையில் உணவு எதுவும் அருந்த மாட்டார். குரல் கணீர் என்று இருக்க சூடாக நீர் மட்டும் அருந்துவார். தண்ணீர் கொதிக்க கொதிக்க இருக்கும். நான் வென்னீர்க் குவளையை கனமான துண்டு பிடித்துத்தான் கொடுப்பேன். கொதிக்கும் அந்நீரை குடித்துவிட்டு பிரச்சாரத்தில் ஈடுபடுவார். மூன்று நாட்கள் சுற்றுப் பயணத்திலும் இதுதான் அவரது ஆகாரம்.

காரில் பயணம் செய்யும் அவரிடம் களைப்பே காண முடியாது. உடனிருக்கும் சி.வி. ராஜகோபாலுடன் நகைச்சுவையாகப் பேசிக்கொண்டு வருவார்.

மூன்று நாள் சுற்றுப்பயணத்தில் 2 நாட்கள் இரவு பகல் தூங்காமல் ஓய்வு கொள்ளாமல் தொகுதி முழுவதும் பேசினார்கள். மூன்றும் நாள் காலை எட்டரை மணி அளவில் அண்ணா அவர்களை நெல்லையிலிருந்து திருச்சிக்கு அனுப்பி வைத்தேன். அவர்கள் மதுரையில் மதியம் இரண்டு மணி நேரம் ஓய்வெடுத்துக்கொண்டு அன்று மாலையே திருச்சியில் தேர்தல் பிரச்சாரத்துச் சென்றிருக்கிறார்கள்.

திருச்சியில் இரவு இரண்டு மணிவரை ஏற்பாடு செய்திருந்த கூட்டங்களை முடித்துக் கொண்டு—''நிகழ்ச்சிகள் இவ்வளவு தானா? நீங்கள் என்னைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. நெல்லை மாவட்டத்தில் தான் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டார்கள்'' என்று அண்ணா கூறியதாக எனக்குத் தொலைபேசி மூலம் நண்பர்கள் தெரிவித்தார்கள்.

நெல்லையில் மூன்று நாட்களாக இமை மூடாத—ஓய்வில்லாத கூட்டம்—தொடர்ந்து திருச்சியிலும் பிரச்சாரம்—இரண்டு மணி வரை. இத்துடன் ஓய்வு கிடைத்ததே என்று அண்ணா மகிழ்ச்சி கொள்ளவில்லை—உடல் நலம் பேண முடியவில்லை—இப்படி என்னை வாட்டுகிறீர்களே என்று கூற வேண்டியதிருக்க—மாறாக அண்ணா அவர்கள் என்னை நெல்லை மாதிரிப் பயன்படுத்திக் கொள்ளவில்லையே என்று கடிந்து கொண்டிருக்கிறார்கள். இத்தகைய உழைப்பின்

திருவுருவை — தன்னலம் கருதாத் தலைமையை இந்தியத் துணைக் கண்டத்திலேயே வேறு எந்த அரசியல் கட்சியும் பெற்றிருக்க முடியாது.

ஃ ஃ ஃ

68–ம் ஆண்டு ஜனவரி 23–ம் தேதி இந்தி எதிர்ப்புத் தீர்மானம் சட்ட மன்றத்தில் நிறைவேற வேண்டும். அதற்காக அண்ணா அவர்கள் இரவு முழுவதும் விழித்து பல நூல்களிலிருந்து ஆதாரங்கள் திரட்டி தீர்மானத்தை எழுதுகிறார். அவர்களுக்குத் துணையாக என்னையும் அழைத்திருந்தார்கள். இரவு இரண்டு மணிவரை நான் உடனிருந்துவிட்டுத் திரும்பினேன்.

காலை சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்படுவதற்கு முன்பாக அண்ணா அவர்களைச் சந்தித்து, ''ஏன் அண்ணா இரவு கொஞ்சமாவது தூங்கினீர்களா?'' என்றேன்.

''அதற்கு எங்கே நேரம் இருந்தது? எழுதிய தீர்மானங்களை நானே காப்பி எடுத்தேன். பொழுது விடிந்து விட்டது'' என்றார் அண்ணா அவர்கள்.

நான் சட்ட மன்றத் தலைவராகஇருந்தபோது வழக்கமாக சட்டமன்றம் துவங்குவதற்கு முன்பாக ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்கிற குறளினைக் கூறித்தான் மன்றக் கூட்டத்தைத் துவங்குவேன்.

அன்றைக்கு அண்ணா அவர்கள் இரவு முழுவதும் தூங்காமல் தீர்மானம் எழுதி வந்ததை மனதில் வைத்துக் கொண்டு ''தூங்காமை, கல்வி, துணிவுடைமை இம்மூன்றும் நீங்காமை நிலனாள்பவர்க்கு'' என்ற குறளைக் கூறி மன்றக் கூட்டத்தைத் துவங்கினேன்.

தூங்காது உழைத்த அந்த விழிகள் இன்று நீங்காத் துயில் கொண்டு—''தூங்காது தொண்டாற்றுங்கள்'' என்ற தத்துவத்தை நமக்குப் போதித்துக் கொண்டிருக்கின்றன.

யாரை, யார் ஏமாற்றுவது ?

''தமிழில் என்ன இருக்கிறது என்று சிலர் கேட்கக் கூடும். ஒன்றை மட்டும் எடுத்துக்காட்டாகச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலே உள்ள பெரும் பெரும் தலைவர்கள்—சமூக சீர்திருத்தவாதிகளெல்லாம் தெளிவாகச் சொல்லுகிறார்கள், ஜாதி பேதம் நீக்கப்பட வேண்டுமென்று.

''சமூகத்தில் ஒற்றுமையும், சமூக ஒழுக்கமும் நிலைக்க வேண்டும், ஒருவரை மற்றவர் வஞ்சிக்கின்ற கொடுமை அகல வேண்டுமென்று சொல்லுகிறார்கள். ஆனால் சாதிகளுக்கு வித்தூன்றும் கருத்துக்கள் தமிழிலக்கியத்திலே இல்லை.

'ஜாதி' என்ற சொல்லே தமிழில் இல்லை. அதன் முதல் எழுத்தான 'ஜ' தமிழ் எழுத்தில்லை. சாதியை ஏற்றுக் கொண்டது போலவே 'ஜ'வுக்குப் பதில் சொல்லுக்குச் சாதியையும் ஏற்று நம்மை நாமே ஏமாற்றிக் கொண்டிருக்கிறோம்.''

-பேரறிஞர் அண்ணா

பகைவர்க்கும் அருள்செய் பண்பாளர்

அமைச்சர் மாதவன்

அண்ணா அவர்கள் எந்தப் பிரச்னை யானாலும் சட்டத்தை மட்டும் பார்த்துக் கொண்டிருக்க மாட்டார்கள் — மனிதாபிமானத்தோடு செயல்பட அதில் ஏதாகிலும் வழி இருக்கிறதா என்று ஆராய்வார்கள்.

ஒரு சமயம் விம்கோ தொழிற்சாலையில் முதலாளிகளுக்கும் — தொழிலாளர்களுக்கும் சில கோரிக்கைகளில் உடன்பாடு ஏற்படாததால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்தார்கள். அங்குள்ள தொழிற் சங்கத்தைச் சார்ந்த தலைவர், தொழிலாளி—முதலாளி இருவருக்கும் இடையே சுமுகமான உடன்பாடு காண்பவர் போல் நடித்தாரே தவிர — உடன்பாட்டை முறியடித்து வேலை நிறுத்தத்தை ஏற்படுத்தும் பாணியிலேயே நடந்து வந்தார். உண்மை அறிந்த நான் அவருடன் உரையாடுவதைத் தவிர்த்து — தொழிலாளர்களிடத்திலும் — நிர்வாகத்தினரிடத்திலும் பேசி ஒற்றுமைக்கு வழி காண முயற்சித்து வந்தேன்.

அந்தத் தொழிலாளர் தலைவர் அண்ணாவைச் சந்தித்து முறையிட்டிருக்கிறார். ஒரு நாள் இரவு பன்னிரண்டு மணிக்கு அண்ணா அவர்களிடமிருந்து எனக்கு 'போன்' வந்தது. 'உடனே புறப்பட்டுவா' என்றார்கள்.

நான் அண்ணா அவர்களின் இல்லத்துக்குச் சென்றபோது நான் எந்தத் தொழிலாளர் தலைவரிடம் பேசுவதால் உடன்பாடு காண இயலாது என்று எண்ணிக் கொண்டிருந்தேனோ அவர் அங்கே அண்ணா அவர்களிடம் உரையாடிக் கொண்டிருந்தார். சில அதிகாரிகள் உடனிருந்தனர்.

பிறகு அனைவரும் அமர்ந்து பேசி தொழிலாளர்களுக்குச் சாதகமான ஒரு முடிவுக்கு வந்தோம் — மறுநாள் தொழிலாளர் அனைவரும் 'ஸ்டிரைக்' செய்யாமல் வேலைக்குச் செல்ல வேண்டும் என்றும் — இதை உடனடியாக அவர்களுக்குத் தெரிவித்து விடுவது என்றும் முடிவு செய்யப்பட்டது. இதற்கு அந்தத் தொழிலாளர் தலைவரும் முழுச் சம்மதம் தெரிவித்தார். ஆனால் மறுநாள் காலை வேலைக்குச் சென்ற தொழிலாளர்களை சிலர் தடுத்திருக்கின்றனர். அது கலவரமாக மாறி போலீஸ் துப்பாக்கிப் பிரயோகம் செய்கிற அளவுக்கு வளர்ந்து விட்டது. அந்தத் தொழிற்சங்கத் தலைவர் எதெல்லாம் எதிர்பார்த்தாரோ அதில் ஒன்று நடந்துவிட்டது. காரணம் அண்ணாவின் இல்லத்தில் ஏற்றுக் கொண்ட முடிவை அவர் தூய இதயத்துடன் செயல்படுத்தாததுதான்.

இது நடந்து முடிந்த பிறகு நான் அண்ணாவிடம் பேசினேன். அவர் நடைபெற்ற நிகழ்ச்சிக்குப் பெரிதும் வருந்தினார். இதில் குறிப்பிடத்தக்க அம்சம் அண்ணா அவர்கள் எதையும் விட்டுக் கொடுக்கும் தன்மையில் — தாய்மை உணர்வோடு செயல்பட்டார்கள். அண்ணாவின் பெருந்தன்மையை 'நக்சல்பாரிக் குணமுடையோர்' உணரவில்லை என்பதுதான்.

ஃ ஃ ஃ

இதேபோன்று 'இந்து' பத்திரிகை தொழிலாளர்களுக்கும் — நிர்வாகிகளுக்கும் — பிணக்கு வந்தபோது உடல்நிலை மிகவும் குன்றியிருந்த அண்ணா அவர்கள் அதைப்

பொருட்படுத்தாது— தொழிலாளர் தலை வரையும் — 'இந்து' உரிமையாளர்கள் கஸ்தூரி, நரசிம்மன் ஆகியோரையும் அழைத்துப் பேசினர்.

அண்ணுவுக்கு வயிற்று வலி அதிகமாக இருந்த நிலையிலும் — வயிற்றைத் தடவிக் கொண்டே விடிய விடிய விவாதித்தார்.

இரு பகுதியினரும் ஒரு முடிவுக்கு வந்து உடனே உடன்பாடு ஏற்பட்டு கையெழுத் தான பிறகுதான் காலை 5 மணிக்கு மேல் உறங்குவதற்குச் சென்றார்.

இதற்கு முன்னிருந்த வேறு எந்த முத லமைச்சரும் தொழிலாளர் நலனில் இத் தனை அக்கறையுடன் செயல்பட்டார்கள் என்பதற்கு ஆதாரமே இல்லை!

ஃ ஃ ஃ

அவர்கள் நோயுற்றிருந்த காலத்திலும் அதனை வெளிக்காட்டாது அரசுப் பணி யையும், கட்சி வேலையையும் செய்து வந் தார்கள்.

சோர்வாக இருந்த அண்ணு அவர்களி டம் ஒருநாள் ''உங்கள் உடம்புக்கு என் னண்ணு?'' என்று கேட்டேன்.

''ஒன்றுமில்லை. பசிக்கிறது சாப்பிடு கிறேன். நெஞ்சுக்குக் கீழே அடைத்துக் கொள்கிறது, அவ்வளவுதான்.'' என்றார்.

ஃ ஃ ஃ

மாணவர் சமுதாயத்தின் மீது அண்ணு அவர்கள் மிகுந்த அன்பும் அக்கறையும் கொண்டிருந்தார்.

இந்தி எதிர்ப்புப் போராட்டத்தின்போது மாணவர்கள் மீது தொடுக்கப்பட்டிருந்த எல்லா வழக்குகளையும் வாபஸ் வாங்க வேண்டுமென்று அண்ணு கடுமையாக முயற்சி எடுத்துக் கொண்டார். நான் சட்ட நூல்களைக் காட்டி சில வழக்குகளை ரத்து செய்ய இயலாத சூழல் இருக்கிறது என் றேன்.

''அந்தச் சட்டத்திலேயே ஏதாவது பரி காரம் இருக்கிறதா என்று பார்'' என் றார். ஒரு வார காலமாக அவர் வீட்டி லேயே தங்கி ஆந்திரா, கேரளா இன் னும் பல மாநில சட்ட நூல்களை வர வழைத்து அதை முழுதும் இரவு பகலாகப் படித்தோம். நான் சட்டத்தில் உள்ள முறைகளைக் கூறுவேன். ''இது மாணவர் களின் எதிர்காலப் பிரச்னை — வாழ்வுப் பிரச்னை. இதில் சட்டத்தை மட்டும் பார்க் காதே'' என்று அண்ணு என்னிடம் அன் புடன் வாதிடுவார்.

எல்லாச் சட்ட நூல்களையும் படித்து மாணவர்கள் மீதுள்ள வழக்குகள் அனைத் தையும் திரும்பப் பெறுவது என்ற முடி வுக்கு வந்தோம். அண்ணு அவர்கள் அதற்கு எடுத்துக் கொண்ட முயற்சி தாயுள்ளத்தையும் விட மேம்பட்டதாகும்.

ஃ ஃ ஃ

ஒரு சமயம் நாங்கள் இருவரும் அமர்ந்து

THIRU AROORAN SUGARS LIMITED

VADAPATHIMANGALAM

TANJORE DT. TAMIL NADU.

MANUFACTURERS OF:

WHITE CRYSTAL SUGAR

REGISTERED OFFICE:
17-4. Nungambakkam High Road,
2nd Floor, P.Box 3328,
MADRAS-34.

TELEGRAMS: "FINESUGAR", MADRAS. TELEPHONE: 810383.

பேரறிஞர் அண்ணு அவர்களுக்கு அஞ்சலி?

சுவையான முதல்தர உணவுகளுக்கும் இனிமை மிகு ஐஸ்கிரீம் வகைகளுக்கும் புகழ்பெற்ற இடம்.

பிரியாணி வகைகள், புஹாரிஸ் No. 65 சிக்கன் தந்தூரி சிக்கன், மேலைநாட்டு உணவுகள், வட இந்திய உணவுகள், பரவசமூட்டும் ஐஸ்கிரீம் வகைகள், பீச்மெல்பா டுட்டி புருட்டி, கஸாட்டா, மற்றும் மில்க்ஷேக் வகைகள் சுவைத்து மகிழுங்கள்.

புஹாரி ஹோட்டல்ஸ்

சென்னை.

உரையாடிக் கொண்டிருந்தபோது தூக்குத் தண்டனை பற்றிய பிரச்னை எழுந்தது.

அண்ணு, ''தூக்குத் தண்டனையை ஆதரிக்கக் கூடாது, அதை ஆயுள் தண்டனையாகக் குறைக்க வேண்டும்'' என்ருர்.

நான் சட்டத்தையும், நீதிபதிகளின் தீர்ப்புகளையும் காட்டி, ''சில குற்றங்களுக்கு தூக்குத் தண்டனை விதிப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்றேன்.

''நீ சட்டத்தையும் தீர்ப்புகளையும் மட்டும் வைத்துக் கொண்டு வாதிடாதே—அதற்குப் பின்னுல் உள்ள பாதிக்கப்பட்டவனின் வாழ்க்கையைப் பார்—அவன் குடும்பங்களைக் கொஞ்சம் கருணையோடு கவனி'' என்ருர்.

அண்ணுவுக்கிருந்தது புத்தனின் இதயம். அதனுல் எந்த உயிரும் அழிந்துபடுவதை அவர் விரும்பவில்லை.

ஃ ஃ ஃ

அண்ணு அவர்கள் அறுவைச் சிகிச்சை முடிந்து அமெரிக்காவிலிருந்து திரும்பிய நாலைந்து நாட்களில் எனக்கு வெளியூர்ச் சுற்று பயணம் இருந்தது. அதைச் சொல்லி விடைபெற நான் அண்ணு அவர்களின் இல்லத்திற்குச் சென்றிருந்தேன்.

அண்ணு அவர்களின் உடல் நிலையை டாக்டர் சதாசிவம் சோதித்துக் கொண்டிருந்தார். சோதனை முடிந்து டாக்டர் சதாசிவம் விடை பெற்றதும்—அருகிலிருந்த கலைஞரிடம் அண்ணு அவர்கள் ''என் உடல்நிலை எப்படி இருக்கிறது? என சதாசிவத்திடம் கேட்டு வா'' என்று அனுப்பினுர்.

''உடல்நிலை நன்ருக இருக்கிறதாம்—கவலை வேண்டாம் என்கிருர் அண்ணு'' என்ருர்.

''அதெல்லாம் சும்மாய்யா! இன்னும் கொஞ்ச நாள்தான் நான் இருப்பேன்!'' எரிமலை வெடித்தது போன்ற அந்த வார்த்தையைக் கேட்டதும் கலைஞர் அலறிக் கொண்டு டாக்டரிடம் ஓடினுர். நான் பிரயாணத்தை ரத்து செய்தேன். அன்று ஒரு விஞடி எங்கள் இதயத்தை நிறுத்திவைத்து வேடிக்கை பார்த்த அண்ணு அந்த வேடிக்கையை நிரந்தரமாக்குவார் என்று அப்போது நான் கருதவே இல்லை.

ஃ ஃ ஃ

பகைவருக்கும் அருளாளர் என்பது

சரவணபவ கூட்டுறவு சிறப்பு அங்காடி,

கடலூர்-1.

அன்ருடம் உடுத்த அனைத்து ஜவுளிகள்.
ஆரோக்கியம் தர அதிரச இனிப்புகள்.
இன்பமாய் அணிய எழில்மிகு ஆடைகள்.
ஈடில்லாத அழகு சாதனங்கள்.
உணவுப் பொருள்கள், உளபல மளிகை.
ஊக்கம்தர ஏற்ற பானங்கள்.
எளிதில் கிடைக்கும் எவர்சில்வர் வகைகள்.
ஏதும் பேரம் இல்லாத விற்பனை.
ஐயம் இன்றி அனைத்தும் வாங்கலாம்.
ஒருதரம் வாங்கினுல் மறுதரம் வருவீர்.
ஓயாது எரிய மின் சாதனங்கள்.
ஔடதம் அனைத்தும் மலிவாய் கிடைக்கும்.
இன்றே வருவீர்! பெறுவீர்! அனைத்தும்!!

சிறப்பங்காடியின் விற்பனை நேரம்: காலை 9 மணி முதல் 1 மணிவரை.
மாலை 4 மணி முதல் 8 மணி வரை.
செவ்வாய்தோறும் விடுமுறை. மாதத்தின் முதல் (செவ்வாய் தவிர)

டி.டீ.முத்துக்குமாரசாமி நாயுடு, தலைவர்.

வி.ஜெயராமன் பி.ஏ. துணைப்பதிவாளர் (பொதுமேலாளர்.)

அண்ணுவுக்கு முழுமையாகப் பொருந்தும். மாற்றுக் கட்சியைச் சார்ந்த எம். எல். ஏ. ஒருவர் கூட்டுறவு அமைப்பொன்றில் கை யாடல் செய்திருந்தார் — அவரைக் கைது செய்ய வேண்டுமென்று கழகத் தோழர்கள் முயற்சி எடுத்தனர். அவர் அண்ணு காலில் வந்து விழுந்து குற்றத்தை ஒப்புக் கொண்டு தன்னைக் காப்பாற்றும்படி முறை யிட்டிருக்கிருர். டில்லிக்கு அவசரமாகப் புறப்பட்டுக் கொண்டிருந்த அண்ணு அவர் கள் அவருக்கு உறுதியளித்து விட்டு, என் னைத் தொலைபேசி மூலம் அழைத்து ''நான் டெல்லி செல்கிறேன். நீ விமான நிலையத் திற்கு வா'' என்ருர்கள்.

நான் விமான நிலையம் சென்றேன். அந்த எம். எல். ஏ.யின் பெயரைக் கூறி அவரை எப்படியாவது காப்பாற்று என் ருர். ''என்னிடம் முதலில் வந்தார். நான் மறுத்து விட்டேன்'' என்றேன். ''தெரியும். மாற்றுக் கட்சி எம். எல். ஏ. என்று பார்க்காதே — அவருக்குத் தொல்லை ஏற்படாமல் இருக்க உடனே ஆக வேண்டி யதைச் செய்'' என்று கூறினர். வேறு ஆட்சியாக இருந்து மற்றவருக்கு இந்த நிலை ஏற்பட்டிருந்தால் வாய்ப்புக் கிடைத் தது என்று பழி வாங்கியிருப்பார்கள். அண்ணு அவருக்கு மன்னிப்பு வழங்கியதன் மூலம் தான் தென்னுட்டுக்காந்தி என்பதை நிலைநிறுத்திவிட்டார்.

ஃ ஃ ஃ

அண்ணு முதலமைச்சராகத் தேர்ந் தெடுக்கப்பட்டதும் ஒரு நாள் கோட்டை அறைக்கு வரும்படி என்னை அழைத்தார். நான் சென்று அவர் மேஜைக்கு எதிரே அமர்ந்தேன். அவர் என்னை கவனிக்காமல் 10 நிமிடம் ஏதோ சிந்தனையில் ஆழ்ந்த வராக ஜன்னலின் வழியாக கோட்டை யின் வெளிப்புறத்தையே பார்த்துக் கொண் டிருந்தார்.

''வரச் சொன்னீர்களே என்னண்ணு?'' என்றேன்.

''மக்கள் நம்மைப் பெரிதாக நம்பி இங்கே அனுப்பி வைத்திருக்கிருர்கள். அந்த மக்களுக்கு நாம் என்ன செய்யப் போகிருேம் — அதற்கு உரிய அதிகாரம் நம்மிடம் இல்லை. மத்திய அரசிடம்தான் எல்லா அதிகாரங்களும் குவிந்து கிடக் கிறது. இந்த நிலையில் நம்மீது நம்பிக்கை வைத்து அனுப்பிய மக்களுக்கு நாம் என்ன செய்யப் போகிருேம்? இதைத்தான் சிந் தித்துக் கொண்டிருக்கிறேன்'' என்ருர்.

காலப் போக்கில் அந்தச் சிந்தனைதான் திட்டங்களாக உருவெடுத்தது.

ஃ ஃ ஃ

ஒரு முக்கியஸ்தரின் வீட்டுத் திருமணத் தில் விருந்து அருந்திக் கொண்டிருந்த போது — அருகில் அமர்ந்திருந்த ஒரு நண்பர் அண்ணுவிடம் ''என்னண்ணு சில பத்திரிகைகள் நீங்கள் செய்யும் நல்ல காரி யங்களைக் குறை கூறி எழுதுகிறதே இதற்கு நீங்கள் மறுப்புச் சொல்லக் கூடாதா?'' என்ருர்.

''எதிர்ப்பு நியாயமாக இருந்தால் பதில் சொல்லலாம். என்னையும் கருணுநிதியை யும் அந்தப் பத்திரிகைகளுக்குப் பிடிக்க வில்லை. அது ஏன் என்றும் எனக்குப்புரிய வில்லை. ஒருவேளை நாங்கள் கீழ் மட்டத் திலிருந்து உயர் பதவிக்கு வந்திருக்கிருேம் என்பது அவர்களுக்குக் கசப்பாக இருக்கி றதோ என்னவோ?'' என்ருர்.

அந்தக் கசப்புணர்ச்சிதான் 71 தேர்த லில் வெளிப்படையாக வெடித்து — வீழ்ந் தது என்று நான் கருதுகிறேன்.

ஃ

இல்லறத் தொடர்பு!

''செங்கல்வராயன் காங்கிரஸ் கட்சியில் இருந்தாலும் அவரது மைத்துனர் எனக்கு வேலை செய்த வர். அவரது துணைவியாரின் ஓட்டுக்கூட எனக்கே கிடைத் திருக்குமென நம்புகிறேன்.''

(அருகிலிருந்த செங்கல்வரா யன் இல்லை என்று கூறினர்.)

''நண்பர் அவர்கள் தனது துணைவியாரின் ஓட்டு எனக்குக் கிடைக்கவில்லை என்று கூறுவதன் மூலம் தனது இல்லறத் தொடர்பை உறுதிப்படுத்திக் கொள்கிருர்.''

—செங்கல்வராயன் பிறந்தநாள் விழாவில் அறிஞர் அண்ணு.

அண்ணா இட்ட கட்டளையும்

அன்று வந்த கடிதமும்



மா. கி. தசரதன் எம். ஏ.

மறந்தால்தான் நினைக்க முடியும் என்பது ஒரு சிறந்த தத்துவம்தான். ஆனால் தொடர்ந்து நெஞ்சிலே நிலைப்பது எல்லாமே நினைவுகளாகத்தானே இருக்க முடியும்? அப்படித்தான் அறிஞர் அண்ணா அவர்களின் நினைவுகள் நெஞ்சத்தை விட்டு நீங்க மறுக்கின்றன. எங்கோ ஒரு நாள் ஒரு கணம், ஒரு பேச்சு என்று சந்திப்பு இருந்தால் தான் ஒருவேளை மறதி இயற்கையாகி யிருக்கலாம். ஆனால் சில ஆண்டுகள் — சில ஆண்டுகள் தான் என்றாலும்— நெருக்கமாகப் பழகிய வாய்ப்பு இன்று நெஞ்சைத் தொடர்ந்து பிளந்து கொண்டிருக்கிறது.

எப்பொருளைப் பார்த்தாலும் எந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டாலும் அண்ணாவின் நினைவு தோன்றாமல் இல்லை. கலங்கும் நெஞ்சம் கண்களைக் குளமாக்குகிறது. ஆனாலும் வாழ்வு தொடர்ந்து கொண்டுதான் இருக்கிறது, கடமை கயிறாகிப் பிணைக்கின்ற நிலைஇருக்கிறதினால்.

ஃ ஃ ஃ

அவர் ஒரு தலைவர்; பெருந்தலைவர் என்ற அச்சத்தோடு நாம் நெருங்குவோம் — அன்பு, உள்ளத்தின் அடித்தளத்திலே இருக்கிறது என்றாலும் அச்சமே மேலோங்கி நிற்கும். ஆனால் அவரோ தொண்டன் என எண்ணாமல் தோழன் என எண்ணிடும் — நடத்திடும் பாங்கு நெஞ்சத்தை நெகிழ வைக்கும். ''நீ சாப்பிட்டாயிற்றா?''—கேட்கும் போதே உள்ளம் குளிர்ந்து குதூகளிக்கும் பயணத்தில் உடன் வந்தவர்களை மறக்காமல் உரிய இடதில் வைப்பதில் மேற்கொண்டமுறை—இன்றுநினைத்தாலும் இனிக்கிறது.

ஃ ஃ ஃ

1961-ஆம் ஆண்டு இறுதியில் ஒரு நாள், கல்லூரியிலிருந்து எனக்கு வந்த ஒருகடிதத்தைக் கொண்டு வந்து காட்டுகிறேன். ''அரசியலில் ஈடுபடக் கூடாது. ஈடுபட்டால்....'' என்று அதில் எச்சரிக்கை இருக்கிறது. அதை வாங்கிப் பார்க்கிறார் அண்ணா. ஒருகணம் என்னமோ யோசனை — ஒருகணம் தான்! ''அரசியலில் ஈடுபடுவது என்றால் என்ன—கூட்டத்தில் பேசுவது தானே?'' குறும்பாகக் கேட்கிறார். ''ஆமாம்?'' என்று வாயில் பாதியும் வெளியில்பாதியுமாகப் பதில் சொல்கிறேன். ''சரி — இனிமேல் நீ அரசியல் கூட்டங்களில் பேச வேண்டாம்'' என்று ஆணை பிறக்கிறது. ''என்னண்ணாஇது?'' என்று திகைக்கிறேன் நான். சில கூட்டங்களில்பேசி, அதிலே ஒரு சுவையைக்கண்டநிலை எனக்கு அப்போது. ஆனால் அண்ணாவோ கூட்டத்திலே பேசாதே என்கிறார். திகைக்காமல் என்னசெய்வது? அண்ணா தொடர்ந்து சொல்கிறார் — ''கூட்டத்திலே பேசி

னால்தானே அரசியல் — நீ என் கூடவே வா, கார் ஓட்டு, சுவரொட்டிகள் ஒட்டு; ஒலிப்பதிவு செய், இப்படி எவ்வளவோ வேலைகள் இருக்கின்றனவே'' என்று ஆறுதல் அளிக்கிறார். அன்றிலிருந்து அதுதான் எனக்கு 'அரசியல்' ஆகிவிட்டது!

ஃ ஃ ஃ

அண்ணாவோடு பழகத் தொடங்கிய முதல் சில நாட்கள்: ஒரு நாள் பகல் உணவு அண்ணாவின் வீட்டில் — நண்பர் சிலருக்கு. சாப்பாடு முடிந்தது. ''வருகிறேன்'' என்று விடை கேட்கிறேன். ''என்னய்யா வந்த வேலை முடிந்தது என்று உடனே புறப்படுகிறாயா?'' — உடன் இருக்கிறவர்கள் கேலியாகச் சிரிக்கிறார்கள் — ''இல்லை அண்ணா...'' என்று இழுக்கிறேன். ''சொல்'' என்கிறார். ''உத்திரமேரூரில் பள்ளி இலக்கிய மன்றக் கூட்டம் இருக்கிறது. இப்போதே போனால்தான் உரிய நேரத்தில் போக முடியும். அதனால்தான்...'' என்று சொல்கிறேன் நான். ''அதற்கென்னய்யா அவசரம்; நம்ம வண்டியிலே போய் விட்டு வா'' என்கிறார். எனக்குத் திகைப்பு நீங்கவே சில நேரம் ஆகிறது. கோபுரக் கலசம் எனக்கு எட்டும் இடத்தில் இருக்கிறது! பொது வாழ்வின் தொடக்கநிலையில் இருக்கிறேன். பொது நிகழ்ச்சி ஒன்றுக்கு அண்ணாவின் கார் எடுத்துக் கொண்டு போகும் வாய்ப்பு — எப்படி மறக்க முடியும் இதனை?

ஃ ஃ ஃ

ஒரு நிகழ்ச்சிக்காகப்போய்க் கொண்டிருக்கிறோம்: அண்ணாவுடன் பயணம் செய்தவர்கள் அறிவார்கள் — பயணம் முழுவதும் சுவையும் பயனும் மிகுந்த பேச்சுத்தான் என்பது அன்று நடந்தது அன்றைய அரசியல் நிலையைப் பற்றிப் பேச்சு. சாதியால் அமைப்புக்கள் உருவாகி ஒன்றிணைந்து தேர்தலில் ஈடுபடும் நிலை உருவாகிக் கொண்டிருக்கிறது நாட்டில். தி. மு. க. தனித்து விடப்படுமோ என்ற நிலை. நான் கேட்கிறேன் அண்ணாவிடம், ''இது ஆபத்தாக அல்லவா முடியும்'' என்று. ஆனால் அண்ணா ''அப்படி ஒரு நெருக்கடி வந்தால் வந்து விட்டுப் போகட்டும் — முப்பது ஆண்டுகளாகத் தமிழ் நாட்டில் ஜாதியை எதிர்த்துப் பேசியும் எழுதியும்வருகிறோம். இப்போது புதிதாகச் சிலர் சாதி உணர்ச்சியை எழுப்பி வெற்றி பெற்று விடுகிறார்கள் என்றால் — நாம் ஒதுங்கிக் கொள்ள வேண்டியதுதான். வேறு எவ்வளவோ வேலை இல்லையா — அதிலே எல்லாம் பாடுபடுகிறது'' என்றார். என்ன துணிவு? என்ன தெளிவு! கலக்கம் இல்லாத தெளிவு!

ஃ ஃ ஃ

முதலமைச்சர் ஆனதற்குப் பின் ஒருநாள்: காஞ்சிபுரத்தில் இருந்து நள்ளிரவுக்குப் பின் திரும்பிக் கொண்டிருக்கிறோம். வெளியூர்ப் பயணம் என்றால் முன்னாலே ஒருகாவல் துறை வண்டி (பைலட்) செல்வதும், பின்னால் ஒரு காவல்துறை வண்டி (எஸ்கார்ட்) வருவதும் வழக்கம். அன்று என்னவோ பைலட் வண்டி பழுதாகி விட்டது. முன்னாலே எந்த வண்டியும் இல்லாமல் முதலமைச்சர் வண்டி போகிறது. நான் சொன்னேன். ''என்னமோ போல் இருக்கிறது அண்ணா'' என்று. ''எது அய்யா?'', ''முன்னாலே வண்டி எதுவும் இல்லமால் நம்ம வண்டி மட்டும் போவது என்னவோ போல் இருக்கிறது அண்ணா — பயணம் செய்வது போலவே இல்லை'' என்கிறேன். ''அப்படியா? எத்தனை நாளாகய்யா இந்த வாழ்வு? இன்னும் எத்தனை நாளைக்கு என்று நினைக்கிறாய்?'' என்று மடக்குகிறார்.

ஆமாம்! முன்னாலே பின்னாலே கார்களுடன் பயணம் எத்தனை நாட்களாக! எத்தனையோ நாள் எப்படிப்பட்ட கார்களில் பயணம் செய்திருக்கிறோம்! வண்டி ஓடிக் கொண்டிருக்கும் போதே ஒரு சக்கரம் தானே கழன்று முன்னாலே ஓடிய நாட்கள் பல; ஒருமுறை அப்படி ஒரு இரவில் ஓடிவிட்ட சக்கரத்தை மறுநாள் காலை தான் கண்டு பிடிக்க முடிந்தது. காஞ்சிபுரத்தில் புறப்பட்டு வேலூர் போவதற்கு முன் இரண்டு மூன்று இடங்களில் பழுதாகி செப்பனிடும் நிலையில் இருந்த கார்களில் பயணம் செய்தது எல்லாம் எனக்கு மறந்து விடுகிறது —ஆனால் அவர்க்கோ நினைவில் நிற்பதினால் — ''எத்தனை நாளாக'' என்றும், எத்தனை நாட்களுக்கு?'' என்றும் கேட்க முடிகிறது.

ஃ ஃ ஃ

பல நாட்களாக ஒரு ஆசை. அண்ணா பாராளு மன்றத்தில் பேசுவதைக் கேட்க வேண்டும் என்று. ஒருமுறை டெல்லிக்கு அழைத்துப் போனார். நண்பர் செழியன் வீட்டில் தங்கியிருந்தோம். அந்த முறை ஒரு வாரம் தங்கியிருக்கும் வாய்ப்புக் கிட்டியது. கடைத்தெருவுக்கும் காணத் தக்க இடங்களுக்கும் தானே அழைத்துச் சென்று காட்டினார். தந்தையை இழந்த எனக்குத் தந்தையின் அரவணைப்பு அண்ணாவின்கருணையில்கிடைத்தது. அங்கிருந்த நாட்களில் ஒருநாள் ''போய் தாஜ் மகாலைப் பார்த்து விட்டு வா'' என்றார். முதல்நாளே 'டிக்கட்' வாங்கி வைத்துக் கொண்டேன். மறுநாள்காலை ஐந்து மணிக்கு செழியன் வீட்டிலிருந்துபுறப்படுகிறேன். அண்ணாவிடம் சொல்லிக் கொண்டு புறப்படலாம்என்று எண்ணி ''அண்ணா'' என்று குரல் கொடுக்கிறேன். ''உம்''

என்று ஒரு முனகலுடன் எழுந்தவர் ''என்ன தசரதன், புறப்படுகிறாயா? இரு'' என்று சொல்லிவிட்டுப் படுக்கையின் கீழே கைவிட்டுத்துழாவுகிறார். பணப்பையை எடுத்து ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளை எடுத்து ''டிக்கட் வாங்கி விட்டாய் அல்லவா? இது போதும் செலவுக்கு'' என்று நோட்டுகளை என் கையில் திணிக்கிறார். ''பணம் இருக்கிறது அண்ணா என்னிடம்'' என்கிறேன். ''இருக்கட்டும் இதையும் வைத்துக் கொள்'' என்கிறார் — எப்படி மறப்பேன் இதனை.

தாஜ்மகாலைப் பற்றி நினைக்கும் போதெல்லாம் எனக்கு ஐந்து பத்து ரூபாய் நோட்டுகளும் அல்லவா சேர்ந்து நினைவுக்கு வருகின்றன? அது மட்டுமா? ஐந்து பத்து ரூபாய் நோட்டுகள் தேவைப்படும் போதும் அண்ணா நினைவுவராமல் போகுமா?

ஃ ஃ ஃ

அப்போது நண்பர் கவிஞர் ஆனந்தம் அவர்கள் தபால் துறையின் பணியில் இருக்கிறார். தம் துறை நண்பர்கள் சிலருடன் முதலமைச்சர் அண்ணா, பொதுப் பணித் துறை அமைச்சர் கலைஞர் ஆகியோருடன் கலந்துரை

யாட விழைந்து ஒரு சின்ன இடமாக — நமக்கு வேண்டியவர்கள் வீடாக இருக்க வேண்டும் என்றார் என்னிடம். சேத்துப்பட்டில் ஒரு சின்ன சந்தில் ஒரு சின்ன வீட்டில் குடியிருந்தேன் நான். அந்த வீட்டின் மொட்டை மாடியில் சிறு விருந்தும் கலந்துரையாடலும் ஏற்பாடுசெய்யப்பட்டது. முதலமைச்சரும் பொதுப்பணி அமைச்சரும் அந்தச் சின்னத் தெருவில் இருக்கும் ஒரு சின்ன வீட்டிற்கு வந்ததைத் தெருவே வியப்பாக வேடிக்கை பார்த்தது. அன்பு, நெஞ்சத்தில் நிறைந்திருக்கும் போது, தெரு, வீடு இதெல்லாம் தெரியாத நெஞ்சங்கள் அவை என்பது அவர்களுக்குத் தெரியாதா என்ன — இருந்தும் பதவி, நெஞ்சப் பக்குவத்தை மாற்றவில்லை என்ற வியப்பு — அதுவே பொதுத் தொண்டில் இருப்போர்க்குக் கிடைக்கும் தலைசிறந்த பாராட்டு.

ஃ ஃ ஃ

திருவண்ணாமலை நண்பர் தருமலிங்கம் அவர்களிடம் விளையாட்டாகப் புகார் செய்கிறார் அண்ணா ஒருநாள்: ''எனக்கு வயிற்று வலியே இந்தத் தசரதனால் வருவதுதான் அய்யா, தெரியுமா உனக்கு?'' ''அப்படியா, அண்ணா?'' என்று அவரும் அப்பாவித்தனமாய்க் கேட்கிறார். ''ஆமாம் அய்யா — தினம் தினம் பாராட்டு விருந்து அது இது என்று ஏதாவது தேதி வாங்கிக் கொண்டு போய் விருந்துகளில் கலந்து கொள்ளச் சொல்வது — இப்படி தினம் விருந்து என்றால் வயிறு கெடாமல் இருக்குமா?'' கேலிக்குத்தான் சொல்கிறார். தன் துன்பத்தை மறைத்துப் பிறரை மகிழ வைக்கும் பெருமனம் அந்தப் பெருமகனிடம் இருந்த அருங்குணங்களில் ஒன்று அன்றோ?

ஃ ஃ ஃ

''நீயும், ராஜகோபாலும் இன்னும் மந்திரிசபைக் கூட்டம் நடக்கும் இடத்திற்குத்தான் அய்யா வரவில்லை. மற்ற எல்லா இடங்களிலும் எந்த விருந்திலும், எந்தக் கூட்டத்திலும் வந்து சேர்ந்து கொள்கிறீர்களே!'' என்றார் ஒருநாள். ''நாங்கள் அவ்வளவு சிறப்புக்குரியவர்கள் அண்ணா?'' என்கிறேன் நான். இது கொஞ்சம் உரிமையோடு-'செல்லம்' கொண்டும்.

ஃ ஃ ஃ

கல்லூரியிலிருந்து அண்ணா இல்லம் சென்றேன் ஒருநாள். அதற்குள் அண்ணா புறப்பட்டு விட்டிருந்தார். வேறு ஒரு நிகழ்ச்சியில் கலந்து கொண்டு இராஜாஜி மண்டபத்தில் இரண்டாவது நிகழ்ச்சிக்கு

வர வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரல் தெரியும் எனக்கு. முதல் நிகழ்ச்சி நடக்கும் இடத்திற்குச் செல்ல நேரம் இல்லை என்று நுங்கம்பாக்கத்திலிருந்து நேரே ராஜாஜி மண்டபம் செல்கிறேன். மண்டபத்தை நெருங்கும் போது அண்ணாவின் காரும் வந்து சேருகிறது. அணியில் நானும் கலந்து கொண்டு திரும்புகிறேன். வரும் வழியில் அண்ணா கேட்கிறார். ''என்னய்யா, மாலை ஆனால் எங்கே விருந்து, சாப்பாடு என்று தேடிக் கொண்டிருப்பாயா? சரியான நேரத்தில் சரியான இடத்திற்குவந்துவிட்டாயே!'' என்கிறார். கேலிக்குத்தான்! கேட்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டாமோ?

ஃ ஃ ஃ

ஆண்டுகள் உருளுகின்றன; ஆனால் நினைவுகள் மறைய மறுக்கின்றன; மறக்கவும் இயலவில்லை. நெஞ்சமே! பழைய நினைவுகள் என்ற தீனியைத் தின்று அசைபோட்டு உன் பசியை ஆற்றிக் கொள் — என்றுதான் நெஞ்சத்திற்கு உபதேசம் செய்கிறேன் — கேட்குமா? தெரியவில்லை!

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)

உற்பத்தி செய்யும் உயர்ந்த ரக சிமெண்ட்

மிகச் சிறந்த மூலப் பொருள்களையும் நவீன தொழில் நுட்பத் திறனையும் கொண்டு உற்பத்தி செய்யப் பெறும்

அரசு போர்ட்லண்ட் சிமெண்ட்

ஐ.எஸ்.ஐ. நிர்ணயித்துள்ள தரத்தைக் காட்டிலும் சிறப்பானது

வலிவும் வனப்பும்
வாய்ந்தது
எளிதில் கிடைப்பது,
சிக்கனமானது.
முழு திருப்தியும்
உங்களுக்கு
அளிக்கவல்லது.

TIDCO

தமிழ்நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம் (வ.து.)
(தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமானது)
150-A, 3-வது மாடி, எல்.எல்.ஏ. கட்டிடம், த.பெ.எண் : 5205, மவுண்ட் ரோடு, சென்னை-2
தொழிற்சாலை, தமிழ்நாடு சிமெண்ட்ஸ், ஆலங்குளம், இராமநாதபுரம் மாவட்டம்

AC-8

எங்களின் மனம் கனிந்த நல்வாழ்த்துக்கள்!

தி இந்தியன் இன்சினியரிங் அண்டு டிரேடிங் கம்பெனி,

15 வாலர்ஸ் சாலை, :-: சென்னை-2.

தொழிற்சாலை: G-3, தொழிற்பேட்டை, சென்னை-2.
தொலைபேசிகள்: 88761 - 88762.
தொழிற்சாலை: 37963.
தந்தி: பியூல் பம்ப்.
உற்பத்தியாளர்கள்: "DVD" டெல்ட் காயில்கள் & பிரஷ்கள்.
பியூல் இன்ஜக்ஷன் பைப்புகள்.
கவர்னர் டயாபார்ம்ஸ் மற்றும் பியூல்
இன்ஜக்ஷன் காம்பனென்ட் பார்ட்ஸ்.

எழுந்திடுவீர் அண்ணா

கவிஞர் கபிலவாணன்

கலியோசைக் கடலலையில் விருப்பங் கொண்டு
கடலோர மணற்காட்டில் துயிலும் அண்ணா!
வலியோரை எளியோரைச் சமமாய் ஆக்க
வாழ்நாளில் தூங்காமல் உழைத்த மன்னா
புலிவீரம் படைத்தவரே! கொள்கைக் குன்றே
புதுப்பேச்சு மழையாலே கருத்தாம் செந்நெல்
பொலிவுடனே விளைத்தவரே! நெஞ்ச மென்னும்
பொற்றவிசில் இருப்பவரே! என்ன சொல்வேன்?

கடற்காற்றும் உமையெழுப்ப அஞ்சிக் கொண்டு
கன்னியரின் நடைபோலத் தென்ற லானாள்;
அடடா! நான் என்னசெய்வேன்? வானில் உள்ள
அருஞ்சுடரும் துயில்பார்த்து எழுப்பா விட்டால்
தொடப்பயந்த தொண்டன்நான் செய்வ தென்ன?
தொடங்கிவைத்த கழகத்தின் பெருமை காண
இடத்தைவிட்டு எழுந்திடுவீர் அண்ணா மாற்றார்
இதயத்தும் கொலுவிருக்கும்அண்ணா வாரீர்!

மலர்களுக்குள் மல்லிகைப்பூப் போன்ற மேன்மை
மனம்படைத்த தனித்தலைவ! என்றன் நெஞ்சப்
புலமையினால் கவிபாடி எழுப்பு தற்குப்
புதுயுகத்து நாவரசன் அல்லன் அண்ணா
நிலவொளிபோல் ஒளிவீசும் கிளிஞ்சல் உம்மை
நினைத்தந்தக் கடற்கரையில் கிடத்தல் கண்டு
புலம்பாமல் நானென்ன செய்வேன்? உங்கள்
பொதுத்தொண்டை எண்ணியிங்கே ஏங்கு கின்றேன்!

பதர்ச்சொல்லைச் சொல்லாத வாயை மூடிப்
படுத்திருக்கும் அன்பரசே! வெண்பாப் பாட்டே!
விதவிதமாம் கட்சிகளை ஒன்றாய்ச் சேர்த்து
வியப்பான சம்பந்தம் செய்து வைத்த
மதமில்லாச் சம்பந்தா! தமிழ்நா டென்று
மாநிலத்தை ஆக்கிவைத்தீர்; சிறப்புச் செய்தீர்
முதன்முதலாய்த் தமிழ்மகனாய் அமைச்சர் ஆன
மூத்தவரே! எழுந்திடுவீர் நாட்டை நோக்கி.

திருக்குறளில், கருத்துக்குப் பஞ்சம் இல்லை;
தேன்துளியில் இனிப்பிற்குக் குறைவே இல்லை;
மருக்கொழுந்தில் மணமென்றும் குறைந்த தில்லை;
மன்னனுங்கள் மனக்குகையில் நல்ல எண்ணம்
ஒருக்காலும் குறைவில்லை, கங்கை யைப்போல்
ஊற்றெடுத்துக் கொண்டிருக்கும் நிலையே கண்டோம்;
திருப்பத்தை அரசியலிற் செய்த நீங்கள்
திரும்பாமல் தூங்கலாமா? விழிப்பீர் அண்ணா!

1938-ம் ஆண்டு தஞ்சையை அடுத்த பள்ளி அக்கிரகாரத்தில் தான் முதன் முதலில் அண்ணா அவர்கள் சுயமரியாதை மாநாட்டில் கலந்துகொண்டார்கள். வெண்ணாற்றின் வடக்குக் கரையில் அமைந்திருக்கும் ஊர் பள்ளி அக்கிரகாரம். அதற்கு நேரே ஆற்றின் தென் புறத்தில் அமைந்திருப்பது என்னுடைய சொந்த ஊராகிய சுங்கம் தவிர்த்தான் திடல். என்றாலும் அந்த மாநாடு நடைபெற்ற போது நான் 7-ம் வகுப்புப் படித்துக் கொண்டிருந்தபடியால் அந்த நிகழ்ச்சிகள் எல்லாம் எனக்குக் கனவுபோல் நினைவில் நிழலாடுகின்றன. பட்டுக்கோட்டை அழகிரி அண்ணன் தான் அந்த மாநாட்டில் அண்ணாவை அறிமுகப்படுத்திப் பேசியவர். அதற்குப் பிறகு பல மேடைகளில் அண்ணா அவர்களின் நீண்ட சொற்பொழிவுகளைத் தொலைவிலிருந்து கேட்டிருக்கிறேன், 1940-ம் ஆண்டு, திருவாரூரில் நீதிக்கட்சி மாநாடு நடைபெற்ற போது நான் கலந்து கொள்ளவில்லை. கலைஞர் அவர்கள் திருவாரூர் மாநாட்டின் போதே (ஏறத்தாழ அவருக்கு 15 வயது இருக்கலாம்) முக்கியப் பணியாற்றி இருக்கிறார். நான் அப்போதெல்லாம் ''ஒழுங்கான'' மாணவன்!

பிறகு 1942-ம்ஆண்டில் காந்தியடிகள் ''வெள்ளையனே வெளியேறு'' என்ற அறப் போராட்டம் தொடங்கி பின்னர் அது பல வன்முறைகளுக்கு இடமளிக்கும் நிலைமைக்கு மாறிய போது, நானும் கதர்அணிந்த தேசிய மாணவனாகக் கல்லூரியில் வேலை நிறுத்தம் போன்ற பல போராட்டங்களில் பங்கு பெற்றேன். என்னதான் காந்தியடிகள் அறநெறியைப் போதித்தாலும், 1942-ம் ஆண்டு, இந்திய நாடெங்கும் நடைபெற்ற அமளிகள் நம் நடுநிலையாளர்களால் அறப் போர் என்று ஒத்துக் கொள்ளக் கூடியவை அல்ல. தஞ்சைப் பகுதியில் மன்னார்குடி, கும்பகோணம் போன்ற நகரங்களில் தீஇடல் போன்ற புதுப் போராட்டங்கள் நடைபெற்றன. இவைகளையெல்லாம் கண்டு, மனம் வெதும்பி, தேசிய முகாமில் இருந்து பல மாணவர்கள் அன்றைய தினம் அதை விட்டு விட்டுவெளியேற நேர்ந்தது.

தந்தை பெரியார் அவர்களின் தளராத முயற்சியாலும், பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவு சார்ந்த விளக்கங்களாலும் தென்னகத்து மக்களிடையே ஒரு புத்துணர்ச்சி உருவாகியது. கல்லூரி மாணவர்கள், திராவிட இயக்கத்தின் பால் ஈர்க்கப்பட்டார்கள். அதே ஆண்டில்தான் அண்ணா அவர்கள் ஈரோட்டில் இருந்த ''குடியரசு'' அலுவல

அண்ணா மறையவும் இல்லை

கத்தின் எழுத்துப் பணியிலிருந்து விடுபட்டுக் காஞ்சி நகருக்கு வந்து 'திராவிடநாடு'' வார இதழைத் துவக்கினார்கள். அண்ணாவின் சொல்லாற்றலால் மட்டுமின்றி, எழுத் ஆற்றலாலும், இளைஞர் பட்டாளம் அவரை மொய்க்க ஆரம்பித்தது.

''திராவிட நாடு'' இதழ் மிகுந்த நெருக்கடியில் தான் துவங்கப்பட்டது. பட்டுக்கோட்டையில் ஒருமுறை ''திராவிட நாடு'' இதழ் வளர்ச்சிக்காக இயக்க நண்பர்களால் ஒரு பொதுக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அந்தக் கூட்டத்தில் முதன் முதலாக நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் (அப்போது அவர் இளந்தாடி நாராயணசாமி) சொற்பொழிவாற்றினார்கள். அந்தக் கூட்டத்தில் ''திராவிட நாடு'' வளர்ச்சி நிதியாக ரூ. 750— தரப்பட்டது. அப்போது அது பெரும் நிதியாகக் கருதப்பட்டது. அண்ணா அவர்கள் முதன் முதலாகத் தரப்பட்ட அந்த நிதியைப் பெற்றுக் கொண்டு மனம் உருகிப் பேசினார்கள்.

அப்போதெல்லாம் கூட அண்ணா அவர்கள் இடத்தில் எனக்கு நெருங்கிய பழக்கம் ஏற்பட்டதில்லை. ஆனால் அடுத்த ஆண்டு; நான் கும்பகோணத்தில் அரசினர் கல்லூரி மாணவனாக இருந்த போது; அங்கு நடந்த ஒரு தண்ணீர்ப் பானை சம்பவம் திராவிட மாணவர் கழகம் தோன்றுவதற்கு வித்திட்டது. குடந்தைக் கல்லூரி மாணவர்கள் விடுதியில் உணவு அருந்துவதற்கு இருந்த பகுதியில் இரண்டு தண்ணீர்ப் பானைகள்

இருந்தன. 1943-லும் இந்த அதிசயம்! அவைகளில் ஒன்று பார்ப்பனருக்கு மட்டும்; மற்றொன்று பார்ப்பனர் அல்லாதவர்க்கு! பார்ப்பதற்குப் பார்ப்பனரைப் போல்தோற்றமளிக்கும் என்னுடைய நண்பர் சம்பந்தம் அவர்கள் பார்ப்பனருக்கு என்று வைக்கப்பட்டிருந்த தண்ணீர்ப் பானையில் ஒரு குவளைத் தண்ணீர் மொண்டு குடித்த குற்றத்திற்காக விடுதிக் காவலர் (அவரும் ஒரு ஐயர்) அவர்களால் தண்டிக்கப்பட்டார்.

இந்த நிகழ்ச்சிதான் அங்கிருந்த பார்ப்பனர் அல்லாத மாணவர்கள் உள்ளத்தில் பெரும் கொதிப்பையும், கொந்தளிப்பையும் உருவாக்கியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு, என்னுடைய நண்பர் தவமணிராஜன், என்னைப் போன்ற சிலரைச்சேர்த்துக் கொண்டு, தமிழ் நாட்டிலேயே முதன் முதலாகத் திராவிட மாணவர் கழகத்தைக் கும்பகோணத்தில் தொடங்கினார்.

இந்தத் தண்ணீர்ப் பானை சம்பவம் அண்ணா அவர்களுக்கும் பெரியார் அவர்களுக்கும் தெரிவிக்கப்பட்டது. ''சண்டே அப்சர்வர்'' பால சுப்பிரமணியம் அவர்கள் தனது பத்திரிகை வாயிலாக இதைப் பெரும் பிரச்சினையாக்கிக் கல்லூரி மாணவரிடையே ஒரு புத்துணர்ச்சியை உண்டாக்கினார். குடந்தையிலே 'விமலா அல்லது விதவையின் கண்ணீர்' என்ற நாடகத்தை நடத்திய குழுவில் நடித்துக் கொண்டிருந்த எம். ஆர். இராதா அவர்கள் அந்த நாடகத்தில் ஒரு வேலைக்காரன் வேடம் பூண்டு, பல சுய மரியாதைக் கருத்துக்களை நகைச்சுவையோடு பரப்பி வந்ததால் அவரைப் பாராட்டுவதற்குத் திராவிட மாணவர் கழகத்தினரான நாங்கள், அண்ணா அவர்களை அழைத்து வந்து, அவர் மூலமாக ஒரு வெள்ளிக் கேடயம் இராதா அவர்களுக்குப்பரிசளித்தோம்.

எங்களுடைய திராவிட மாணவர் கழகத் துவக்கவிழாவில் அண்ணா அவர்களோடு மூவலூர் ராமாமிர்தம் அம்மையார், திருப்பூர் மொகைதீன் ஆகியோரும் கலந்து கொண்டார்கள். அண்மையில் மறைந்த பாவலர் பாலசுந்தரம் அவர்களின் மகன் சிறுவன் தமிழரசன் பாடல்கள் பாடினான். வெளியில் திராவிட மாணவர் கழகம் துவங்கிய அன்று, மிகுந்த சிரமப்பட்டு, கும்பகோணம் அரசினர் கல்லூரிப் பேரவை சார்பில், அண்ணா அவர்கள் அங்கே சொற்பொழிவாற்ற ஏற்பாடு செய்தோம். கல்லூரி முதல்வரும், பேராசிரியர்களும் சுலபத்திற்கு அதற்கு ஒத்துக்கொள்ளவில்லை. வெளியில் இருந்த நீதிக்கட்சி முக்கியப் பிரமுகர்களான கே.கே. நீலமேகம், பி. சின்னத்தம்பி, வழக்கறிஞர் முத்து தனபால்,

நாம் மறக்கவும் இல்லை

கவிஞர் ஆனந்தம்

பேரறிஞர் பெருந்தகைக்கு எமது

நினைவு அஞ்சலிகள்

ரேணுகா கன்பெக்ஷனரி

14, ஆதியப்பன் தெரு, சென்னை-21.

போன்: 34576.

பேரறிஞர் அண்ணு அவர்களின் 63-வது பிறந்தநாளில்

எங்களின் நினைவு அஞ்சலி மலர்களை

சமர்ப்பிக்கின்றோம்!

ராயர் கன்பெக்ஷனரி

11-2, ஜவான்முல் சவுகர் வீதி,

சென்னை-21. போன்: 51901,

எஸ். கே. சாமி போன்றவர்களின் ஒத்துழைப்பால் எப்படியோ அண்ணா அவர்கள் பேசுவதற்குக் கல்லூரி நிர்வாகத்தினர் ஒருவாறு சம்மதம் தெரிவித்தனர். அந்தக் காலத்தில் எங்களுக்கு அது மிகப் பெரிய சாதனையாகத் தென்பட்டது. அன்று காலையில் அவர்கள் கும்பகோணத்துக்கு ரயிலில் வந்து இறங்கி, வழக்கம் போல் திரு. வி. சின்னத்தம்பி அவர்கள் இல்லத்தில் தங்கி இருந்தார்கள். கல்லூரி முதல்வர் டாக்டர் சாக்கோ அவர்கள், அண்ணாஅவர்களைப் பற்றி அச்சம் கொண்டிருந்தார்களே தவிர, அவர்களுடைய அறிவாற்றலைப்பற்றி முழுதும் தெரிந்தவர் அல்லர்.

அவர் என்னை நச்சரித்து என்ன தலைப்பில், என்ன பொருள் பற்றி, எந்த மொழியில் பேசுவார் என்று முன்கூட்டியே தெரிய வேண்டுமென்று, தெரிந்து வரச் சொன்னார். அண்ணா அவர்களிடம் நான்தான் சென்று கேட்டேன். சிறிது கூட யோசிக்காமல், ''தி நியூ லைஃப்'' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பேசுகிறேன்'' என்று அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள். குடந்தை கல்லூரி மாணவர்களுக்கு எல்லாம் ஒரு குதூகலம்; அண்ணா அவர்களை மாலையில் கல்லூரிக்கு அழைத்துச்சென்றோம்.

அண்ணா பழங்கால அண்ணாதான். சாதாரண வேட்டி, முழுக்கை ஜிப்பா, மேல் துண்டு, காவி படிந்த பற்கள், கலைந்த முடி. அப்படிப்பட்ட அண்ணாவைக் கல்லூரி முதல்வர் அறைக்கு அழைத்துச் செல்கிறோம். முதல்வர்எழுந்து நின்று ''ஹூ இஸ் மிஸ்டர் அண்ணாதுரை? ஹாஸ் ஹி நாட் கம்?'' என்று கேட்கிறார். எதிரில் நிற்பவர்களில்யாருமே 'பாண்டு' அணிந்திருக்கவில்லை. எம். ஏ. படித்ததற்குரிய அடையாளம் யாரிடத்திலும் காணப்படவில்லை! ''இவர் தான் எங்கள் அண்ணா'' என்று ஆங்கிலத்தில் சொல்கிறோம் அண்ணாவைச் சுட்டிக் காட்டி. கல்லூரி முதல்வரின் விழிகள் வியப்பினால்விரிவடைகின்றன— ''யு ஆர் மிஸ்டர் அண்ணாதுரை எம். ஏ.?'' எம். ஏ. என்ற எழுத்துக்களை அழுத்தமாக உச்சரித்துத் தம் ஆச்சரியத்தை வெளிப்படுத்தி, அண்ணாவின் கரங்களைப் பற்றி குலுக்குகிறார்.

கூட்டம் தொடங்குகிறது; வெண்கல மணியோசை போன்ற அண்ணாவின் கிண்கிணிக் குரல், மடைதிறந்த வெள்ளம் எனப் பாய்ந்து வந்த ஆங்கிலச் சொற்பொழிவு, கல்லூரிப் பேராசிரியர்களைத் திகைக்க வைக்கின்றது. ''தி நியூ லைஃப்'' என்ற தலைப்பினால் உண்மையிலேயே அவர்கள் புத்துயிரும் புதுவாழ்வும் எய்தினார்கள் என்பதைக் கண்டோம். அதன் பிறகு அண்ணா அவர்களை வெளியில் அழைத்து வந்து, திராவிட மாணவர்கள் கழகத்தைத் துவக்கினோம். கழகத்தைத் துவக்கி வைக்குமுன் தனியாகப் பேசிக் கொண்டிருந்த போது அண்ணா அவர்கள் குறிப்பிட்டார்கள்: ''இங்கே மட்டும் மாணவர் கழகம் துவக்கினால் போதாது. திருவாரூரில் நம்முடைய கருணாநிதி 'தமிழ்நாடு மாணவர் மன்றம்' என்ற பெயரால் ஒரு அமைப்பினை நடத்தி வருகிறார். சிதம்பரத்தில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் நெடுஞ்செழியன், அன்பழகன், மதியழகன், இளம்வழுதி, பூ. கணேசன், நன்னன், இளங்கோ போன்ற பல மாணவர்கள் இருக்கிறார்கள். இன்னும் தமிழ்நாட்டில்

சோதனை வாழ்க்கை!

அண்ணாவின் பாதை கடுமையாக இருந்தது. சோதனைமிக்க நாட்களை அவர் கடந்து வந்தார். எல்லாவற்றையும்விட்டுத் தனிமையில் அவர் ஒதுங்கிட எண்ணியதுண்டு. ஆனாலும் தனது விடாமுயற்சியின் காரணமாக இன்றைய உயர் நிலையை அடைந்துள்ளார். ஆப்ரகாம் லிங்கன் வாழ்க்கையைப் பற்றிச் சொல்லும்போது அவர் மரக்குடிலிலிருந்து வெள்ளை மாளிகைக்கு சென்றார் என்பர். அதுபோல அண்ணா வாழ்க்கையும் அமைந்துள்ளது.

தமிழகத்துக்குப் பெருமையும் மதிப்பும் தேடியுள்ள அவர் இதன் மூலம் இதரத் தென் மாநிலங்களும் மதிப்பைப் பெறச் செய்தார்.

—அண்ணா சிலை திறப்பு விழாவின்போது
ஏ. ஆர். முதலியார்

கரந்தையில், மதுரையில், திருச்சியில் பல மாணவர்களும் ஆசிரியர்களும் நம்முடைய இயக்கத்தில் ஒருவகை அச்சத்துடன் ஈடுபட்டிருக்கிறார்கள். அவர்களை எல்லாம் வரவழைத்து ஒரு மாணவர் மாநாடு நடத்துங்கள். முதலில் இதற்கு அரசியல் வர்ணம் பூசாமல் இருப்பதற்குப் பெரியார் அவர்களைக்கூட அழைக்க வேண்டாமென்றும் சொன்னார்கள்.

எனக்கும் தவமணிக்கும் வேறு என்ன வேலை? உடனே துவக்கினோம் மாநாட்டுவேலைகளை. அடுத்த இரண்டே மாதங்களில் தமிழ் நாட்டிலேயே முதன் முதலாகத் திராவிட மாணவர் மாநாட்டைக் கும்பகோணத்தில்மிகச் சிறப்பாக நடத்திக் காட்டினோம். மாநாட்டிலே அண்ணா அவர்களின் பேருரை திராவிட இன உணர்வு பரவிடக் கருவூலமாக விளங்கியது.

அந்தமாணவர் எழுச்சியைப் பயன்படுத்தித்தான் பின்னர் தந்தை பெரியார் அவர்கள் பல மாணவர்கள் பயிற்சிப் பாசறைகளை நடத்தி, மாவட்டந்தோறும் மாணவர்கள் பிரச்சாரப் படையினை அனுப்பி வந்தார்கள். அதே சமயத்தில் திருவாரூரில் தமது ''தமிழ்நாடு தமிழ் மாணவர் மன்றத்தின்'' ஆண்டு விழா நடத்திய கலைஞர் அவர்கள், பின்னர் அதனையும் திராவிட மாணவர் கழகமாக மாற்றிக் கொண்டார்கள்.

அப்போதெல்லாம் பெரியார் அவர்களிடத்திலும் கார் கிடையாது; அண்ணா அவர்களிடத்திலும் கார் இல்லை. எங்கு சென்றாலும் ரயிலில் செல்வது தான் வழக்கம். நான் தஞ்சையிலே இருப்பேன். அந்த வழியாக அண்ணா செல்கிறார் என்பது முன் தகவல் இல்லாமலே எனக்குத் தெரிந்திருக்கும். எந்த நேரமானாலும் ரயிலடியில் போய் நிற்பேன். இறங்கினால் வரவேற்று அவர்களுடன் தங்குவேன். நேரே செல்வதானால் நானும் உடன் ஏறிக் கொள்வேன். எப்படி நான் இந்த வண்டியில் வருகிறேன் என்பது தெரியும் என்பார் அண்ணா. வேடிக்கையாக, எனக்கு ஜோசியம் தெரியும் என்பேன். ரயில் வண்டிப் பயணங்களின்போது நேரம் போவது தெரியாமல் அண்ணா அவர்கள் நகைச்சுவை விருந்தளிப்பார்கள். பின்னர் நான் ஈரோட்டில் இருக்கும் போது கூட, ரயில்வேபிளாட் பாரத்தில் பிரியாணி சாப்பிட்டு விட்டு, பிளாட்பாரத்தின் ஒரு ஓரத்தில் அமர்ந்து இரவெல்லாம் பேசிக்கொண்டிருப்போம். அப்போதெல்லாம் நண்பர் சம்பத் அவர்களும் உடன் இருப்பார்கள்.

அண்ணா சொல்லி நான் எதையும் மீறியது இல்லை. ஆனால் அப்போதெல்லாம் அண்ணாவின் எதிரில் ஓயாமல் புகை பிடிப்பதுண்டு. அண்ணா வன்மையாகக் கண்டிப்பார் ''அது என்னபழக்கம்'' என்று. ''விட்டுத் தொலை'' என்று கோபிப்பார். அவர் தடுத்தாரே என்று அவர் எதிரில் புகை பிடிப்பதைத்தான் நிறுத்தினேனே தவிர அந்தப் பழக்கத்தை அப்போதெல்லாம் என்னால் நிறுத்த முடியவில்லை. 1969 பெப்ரவரி 2-ம் நாள் இரவு அழுது அழுது கண்ணீர் வற்றிப் போன நிலைமையில், அண்ணா சொன்னது என் நினைவுக்கு வந்தது. இன்று முதல் புகை பிடிப்பதைவிட்டு விடலாமென்று நினைத்தேன். அன்று முடியா விட்டாலும் பிறகு எப்படியோ அப்பழக்கத்தை விட்டுவிட்டேன்.

என்னிடத்தில் எப்போதும் 'டைகர் பாம்' (தலைவலி மருந்து) வைத்திருப்பேன். பொடி போடும் பழக்கம் உள்ளவர்கள் மற்றவர்களைக் கண்டதும் பொடி கேட்பது போல் என்னைக் கண்டதும் அண்ணா அவர்கள் கையை நீட்டுவார்கள். நான்உடனே டைகர் பாமை எடுத்துக் கொடுப்பேன்; அல்லது நீயே தேய்த்துவிடு என்று கழுத்துப் பக்கத்திலோ, நெற்றிப் பக்கத்திலோ காட்டுவார்கள். ஒருமுறை அண்ணா அவர்கள் காலிலே ஒரு சிராய்ப்பு ஏற்பட்டிருந்தது. அதை என்னிடத்தில் காட்டி, சொல்லிக் கொண்டிருந்த போது, நான் டைகர் பாமை எடுத்து வந்து, அதன் மேல் தடவப் போனேன். அண்ணா அவர்கள் துள்ளிக் குதித்துச் சிறு குழந்தையைப் போல் எழுந்து ஓடினார்கள். சிராய்ப்பின்மேல் போட்டால் எரியும் என்று அவர்களுக்குப் பயம். நானும் விடாமல் அவர்கள் பின்னால் சென்று ''அண்ணா ஒன்றும் செய்யாது பயப்படாதீர்கள்'' என்று சொன்னேன். அதை இப்போது நினைத்தாலும் அவர்களுடைய குழந்தை உள்ளம் என் மனக்கண் முன் தெரிகிறது.

அண்ணா அவர்களைப் பற்றி நினைவில் உள்ள சில நிகழ்ச்சிகளை எழுதுங்கள் என்று 'முரசொலி'யில் கேட்டார்கள். நினைவு என்பது ஏது? மறந்தால் அல்லவா நினைப்பதற்கு? அவர் நம்மைப் பிரிந்தால் அல்லவா மறப்பதற்கு?

தாயை இழந்து தவிக்கிறேன்

அமைச்சர் சத்தியவாணிமுத்து

அறிஞர் அண்ணா அவர்கள் எனக்குத் தாயாகவும், தந்தையாகவும், வணங்கத் தக்க ஆசானாகவும் விளங்கினார்கள் என்பதற்கு நூற்றுக் கணக்கான சம்பவங்களைக் கூற முடியும்.

கழகம் வளர்ந்து வந்த அந்த நாளில் வெளியூர் கூட்டங்களுக்குச் செல்ல இன்றைக்குள்ளது போன்று நல்ல வாகன வசதியோ, நிம்மதியாகப் பயணம் செய்வதற்குரிய பொருளாதார வசதியோ இல்லாத நேரம் — சில கிராமங்களுக்குக் கட்டை வண்டியில் கூடச் சென்று கட்சிப் பணி புரிந்ததுண்டு.

அந்த நிலையில் ஒரு சமயம் தூத்துக்குடியில் நடைபெற்ற மாநாட்டிற்காக காஞ்சிபுரத்திலிருந்து அறிஞர் அண்ணா அவர்களும், நானும் இன்னும் நான்கைந்து தோழர்களும் சிறிய 'வில்லிஸ் வானி'ல் பிரயாணம் செய்தோம்.

நான் அந்த 'வானில்' இரண்டடி அளவே உள்ள இருக்கையில் அமர்ந்திருந்தேன் மற்ற தோழர்கள் கீழே அமர்ந்து உரையாற்றிக் கொண்டிருந்தனர் — அண்ணா அவர்கள் முன் சீட்டில் டிரைவருக்கு அருகே அமர்ந்து வந்தார்கள். இரவு நேரப் பயணமானதால் நான் உட்காருவதற்குக்கூட சரியான வசதியற்ற அந்த இருக்கையில் எப்படியோ சுருண்டு படுத்துத் தூங்கிவிட்டேன். இரவு பன்னிரண்டு மணி அளவில் 'வான்' உளூந்தூர்பேட்டையில் இரவு உணவுக்காக நிறுத்தப்பட்டிருக்கிறது. நான் நன்றாகத் தூங்கிக் கொண்டிருக்கிறேன்— அண்ணா அவர்கள் ''உனக்குப் பசி எடுக்கவில்லையா? முட்டைத் தோசை தயாராக இருக்கிறது. எழுந்து வா'' என்று எழுப்பினார்கள்.

நான் எழுந்து உணவை முடித்துக் கொண்டு திரும்ப இருக்கையில் அமர்ந்தபோது— ''உட்காருவதற்கே வழியற்ற இந்தச் சின்ன இடத்தில் எப்படிப் படுத்துத் தூங்கி விட்டாய்? ரயிலில் மூன்றும் வகுப்பிலேயே பயணம் செய்த பழக்கம் இல்லையா? பொதுப்பணி என்றால் இந்தக் கஷ்டங்களையெல்லாம் அனுபவிக்கத்தான் வேண்டும்'' என்று அனுதாபத்துடன் கூறினார்கள். இதைப்

செங்கற்பட்டு மாவட்ட கூட்டுறவு விநியோக விற்பனைச் சங்கம் லிமிடெட்

150 பிராட்வே, சென்னை-1.

இச்சங்கம் இரசாயன உர வகைகளை மொத்தமாகவும் சில்லறையாகவும் விநியோகிக்கிறது. காஞ்சீபுரத்தில் இச்சங்கத்தின் சொந்த ஆலையில் தயார் செய்த அரிசி, கடலெண்ணை, பிண்ணாக்கு ஆகியவைகளையும் மற்றும் நெல், வாழை, கரும்பு, வேர்க்கடலை முதலிய பயிர்களுக்குத் தகுந்த கலப்பு உரவகைகளையும் தயாரித்து விநியோகம் செய்கிறது. 150-க்கு மேற்பட்ட பிரதம பண்டகசாலைகளுக்கு மளிகை சாமான்கள் முதலியவைகளை விநியோகம் செய்கிறது. சென்னை புரசவாக்கத்திலும், செங்கற்பற்ட்டு வேதாசலம் நகரிலும், மதுராந்தகத்திலும் சிறிய சிறப்பங்காடிகள் நடத்துகிறது. திருக்கழுக்குன்றம் செய்யூர், வெண்ணுங்குப்பட்டு, ஆகிய ஊர்களில் சில்லறை விற்பனை நிலையங்கள் நடத்தப்படுகின்றன. பெரிய. சிறப்பங்காடி ஒன்று காஞ்சிபுரத்தில் விரைவில் துவக்கப்பட இருக்கிறது.

ஹ. சுந்தரராஜன்
காரியதரிசி
துணைப்பதிவாளர்

கொளத்தூர் கோதண்டம்
தலைவர்.

MANSFIELD



THE TYRE WITH MUSCLE

—for extra strength, extra safety

MRF

Manufactured by Madras Rubber Factory Ltd.
in collaboration with MANSFIELD TIRE & RUBBER COMPANY, U.S.A.

50 YEARS' TYRE-BUILDING EXPERIENCE

Lintas-MSFT. 32-130

போலவே இன்னெரு நிகழ்ச்சி, என்மீது அக்கறையுடன் கேட்டார்கள்: ''குக்கிராமங்களுக்கெல்லாம் பிரச்சாரத்திற்குப் போகிறுயே; அங்கு எங்கு தங்குகிறுய்? ரோடு வசதி, மின்சார வசதியற்ற மிகச் சிறிய கிராமமாக இருந்தால் அருகில் உள்ள தாலூகா ஹெட் குவார்ட்டர்சில் தங்கிக் கொள் — பயணம் செய்வதற்கு முன்பே எங்கு போகிறேம் — அங்குள்ள வசதிகள் என்ன என்பதையெல்லாம் முன் கூட்டியே திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். நீ பெண் என்பதற்காக இதைக் கூறுகிறேன்.'' என்ருர்கள். பெற்றெடுத்த தந்தையைத் தவிர வேறு யார் இவ்வளவு கவலையுடனும், அன்புடனும் விசாரிக்க இயலும்?

ஃ ஃ ஃ

நான் அமைச்சரான பிறகு வெளிநாடு செல்ல வேண்டிய சந்தர்ப்பம் எனக்கு ஏற்படவில்லை. ஒருநாள் அண்ணு அவர்கள் என்னை அழைத்து ''மோரீஸ் தீவுக்குப் போய் வருகிருயா?'' என்ருர்கள். அண்ணுவே அழைத்துக் கேட்டபடியால் என் உள்ளத்தில் எழுந்த மகிழ்ச்சியிலும், ஆச்சரியத்திலும் நான் ஒரு விஞடி பதில் கூற முடியாமல் தவித்த பிறகு — ''என்னண்ணு என்னை பயங்கரமான தீவுக்கு அனுப்புகிறீர்கள், அமெரிக்கா போன்ற பெரிய நாடுகளுக்கு அனுப்பக் கூடாதா?'' என்று கேட்டேன். ''முதலில் இந்தத் தீவுக்குப் போய்வா, இது அவசியம் காண வேண்டிய தீவு — அண்மையில்தான் அந்த நாட்டு மக்கள் சுதந்திரம் அடைந்துள்ளார்கள் — அவர்கள் உன்னைக் கோலாகலமாக வரவேற்பார்கள் — திரும்பும்போது சிங்கப்பூரைப் பார்த்துவா — 10 சிங்கப்பூர் கொண்டதுதான் ஒரு அமெரிக்கா— உனக்கு அமெரிக்காவைப் பார்த்த திருப்தியும் ஏற்பட்டு விடும். பிறகு அனுப்பி வைக்கிறேன்.'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்கள்.

மோரீஸ் தீவில் காண வேண்டிய இடங்கள் பற்றி ஒரு நீண்ட குறிப்பைத் தயாரித்துத் தந்தார் அண்ணு.

என்னுடைய சுற்றுப் பயணம் 15 நாட்களுக்கு அமைக்கப்பட்டிருந்தது.

''அந்தச் சின்னத் தீவில் எப்படியண்ணு 15 நாட்கள் தங்குவது? மோரீஸ் தீவில் ஒரு நாலைந்து நாட்கள் தங்கிவிட்டு, திரும்பும்போது அருகில் உள்ள ரிவ்யூனியன், மொடகாஸ்கர், தாதர் சலாம், நைரோபி ஆகிய தீவுகளுக்கும் போய் வருகிறேன்,'' என்று கூறினேன்.

சிறிது நேர ஆலோசனைக்குப் பிறகு அண்ணு கூறினர். ''உன்னுடன் செயலாளர்களோ, அதிகாரிகளோ யாரும் வர வில்லை. நீ மட்டும் தனியாகப் போகிறுய். அதுவே எனக்குக் கவலை. இந்த நிலையில் நீ மட்டும் எப்படி எல்லா இடங்களுக்கும் போய்வரப் போகிறுய்?'' என்ருர். என் வற்புறுத்தலுக்கிணங்க மற்றப் பகுதிகளுக்கும் போய்வர அண்ணு அனுமதியளித்தார். என் பிரயாணத்திற்கான எல்லாவித ஆலோசனைகளையும் எழுத்து மூலமாகத் தந்தார்.

நான் மோரீஸ் தீவு புறப்படும் அன்று அண்ணு அவர்கள் விமான நிலையத்திற்கு வந்து வழியனுப்பி வைத்தார். அது மட்டுமல்ல — நான் திரும்பி வந்த பின்னர் நண்பர்கள் சொன்ஞர்கள். விமானம் புறப்பட்டு வான வீதியில் பறந்து மறைகின்ற வரை பார்த்து, தான் பெற்ற மகளை வழியனுப்பி வைக்கும் தாயின் நிலையில் திரும்பினுர் என்பதாக.

உண்மையில் என் தாயைப் பறி

என் நெஞ்சுள் வாழும் நெஞ்சே!

மதிவானே! மொழிச்சுடரே!
வளர்மூன்றுத் தமிழுலகே!
வாய்மைக் குன்றே!

கதியோனே! கனிக்காவே!
கலையாறே! கவிநிலமே!
காலம் வென்றப்

பதியோனே! தென்காற்றே!
பரவும்முப் பாற்கடலே!
பண்பின் — அன்பின்

நிதியோனே! நிலைபுகழே!
அண்ணுவே! என்நெஞ்சுள்
வாழும் நெஞ்சே!

- முருகுவண்ணன்

கொடுத்த சோகத்தைவிட அண்ணா அவர்களின் மறைவு இன்னும் உள்ளத்தை ஈட்டி முனையெனத் துளைத்துக் கொண்டிருக்கிறது.

ஃ ஃ ஃ

சென்னையில் நடைபெற்ற இரண்டாவது உலகத் தமிழ் மாநாட்டிற்கு மோரீஸ் தீவிலிருந்து பிரதிநிதிகள் வந்திருந்தபோது தமிழ்நாட்டின் சார்பாக மோரீஸ் தீவிற்கு ஒருவரை அனுப்பிவையுங்கள் என்று அவர்கள் அண்ணா அவர்களிடம் அழைப்பு விடுத்ததற்கிணங்க என்னை அனுப்பி வைத்தார்கள். நான் தன்னந்தனியாக மோரீஸ் போய்ச் சேர்ந்தேன்.

அது சிறிய தீவாக இருந்தாலும் அழகாகவும், பண்பாடு நிறைந்த மக்களைக் கொண்ட பூமியாகவும் விளங்கியது. என் மனதை மிகவும் கவர்ந்தது. சென்னையில் பாதி அளவு கூட இல்லாத அந்த நாட்டு மக்களும் அரசும் எனக்குக் கோலாகலமாகவரவேற்புத் தந்தார்கள்.

நான் அங்கு ஒருவாரம் விருந்தினராகத் தங்கிவிட்டு அங்கிருந்து மொடகாஸ்கர் புறப்பட்டேன். அங்கிருந்து என் பிரயாணத் திட்டப்படிஅன்றுஇரவே தாதர்சலாம் செல்ல வேண்டும். தமிழகத்தைச் சார்ந்த எஞ்சினியர் ஒருவரை பம்பாயில் சந்தித்தபோது குறிப்பிட்ட நாளில் மொடகாஸ்கர் விமான நிலையம் வந்து தாதர்சலாம் அழைத்துச் செல்வதாகக் கூறியிருந்தார். அத்திட்டப்படி நான் மொடகாஸ்கர் விமான நிலையம் போய்ச் சேர்ந்தேன் - அப்போது இரவு 11 மணியிருக்கும் - விமான நிலையம் மிக மிகச் சிறியது. சாதாரணமானது - நாலைந்து பிரயாணிகளைத் தவிர அங்கு வேறு யாருமில்லை.

என்னை மொடகாஸ்கர் விமானநிலையத்தில் வரவேற்பதாகக் கூறிய எஞ்சினியர் அங்கு வரவில்லை. அங்கிருந்த நீக்ரோக் கூலிகள் நான் தமிழ்நாட்டுப் பாணியில் புடவை கட்டியிருந்ததைப் பற்றித்தான் அடிக்கடி என்னைப் பார்த்து பேசிக்கொண்டிருக்கவேண்டுமென்று கருதுகிறேன் - அங்கிருந்த அமைதிச் சூழ்நிலையும் அவர்கள் என்னை அடிக்கடி பார்த்துப் பேசிக்கொண்டிருந்ததும் எனக்குப் பயமாகவே இருந்தது.

''நீ தனியாகச் செல்லும்போது மற்ற பகுதிகளுக்குப் போக வேண்டுமா?'' என்று அண்ணா அவர்கள் கேட்டது அப்போதுதான் எனக்குச் சரியாகப்பட்டது. நல்ல பசியெடுத்தது. அங்கு சரியான உணவு வகைகள் இல்லாததால் பசியை நான் தாங்கிக் கொண்டிருந்தேன். விமான நிலையத்தில் உள்ள ஸ்டாலில் பிஸ்கட் வாங்கிச் சாப்பிடலாம் என்றாலும் உடன் எடுத்துச் சென்ற பொருட்களைத் தனியாக வைத்து விட்டு சென்று வரப் பயம். வரவேற்க வருவதாகக் கூறிய எஞ்சீனியரை மனதிற்குள்ளேயே கோபித்தேன்.

நல்ல வேளையாக இந்தியாவைச் சார்ந்த பஞ்சாபிக்காரர்களான ஒரு தாயும் மகனும் என் அருகில் வந்து அமர்ந்தனர். அவர்களும் என்னைப் பார்த்து ஏதோ பேசிக் கொண்டனர். அது எனக்குப் புரியவில்லை. நான் அந்தத் தாயிடம் ஆங்கிலத்தில் பேசினேன். அவர்கள் இருவருக்கும் ஆங்கிலம் புரியவில்லை.

இந்தத் தவிப்போடு இன்னொரு பெரிய நிகழ்ச்சிதான் என்னைப் பெரும் தவிப்பிற்கு ஆளாக்கியது.

தாதர்சலாம் செல்ல மொடகாஸ்கரில் தான் விமானம் மாற வேண்டும். நான் அங்கு வந்து இறங்கியதும் விமான நிலைய அதிகாரி ஒருவர் வந்து என் பாஸ்போர்ட்டுகளையும் - விமான டிக்கட்டையும் பரிசோதனைக்காக வாங்கிச் சென்றவர் ஒரு மணி நேரமாகியும் திரும்பவில்லை.

'விமானம் சிறிது நேரத்தில் புறப்படும்' என்ற அறிவிப்பும் ஒலிக்கத் தொடங்கியது. என் தவிப்பு வேதனையாக மாறி உச்சக் கட்டத்தை அடைந்தது. விமான அலுவலக அறைக்குப் போய் விவரம் அறிந்து வரலாம் என்றால் அது பிரயாணிகள் தங்குமிடத்திலிருந்து முக்கால் பர்லாங் தூரத்தில் உள்ளது. விமான நிலைய மின்சார விளக்குகளோ நமது கிராமங்களில் எரியும் அரிக்கேன் லைட்டைப்போல் மின்னிக் கொண்டிருந்தன.

விமானத்தில் அமருவதற்காக, நிலையத்திலிருந்த ஓரிரு பயணிகளும் விமானத்தை நோக்கி நடந்து கொண்டிருந்தனர். நான் தைரியத்தை வரவழைத்துக்கொண்டு பரிசோதகரைத் தேடப் புறப்பட்டேன். என் அருகிலிருந்த பஞ்சாபிக் குடும்பத்திடம் எப்படியோ பேசிப் புரியவைத்து எனது உடைமைகளை அவர்கள் பொறுப்பில் ஒப்

படைத்துவிட்டு நான் புறப்படத் தயாரான போது - பரிசோதகர் ஓடிவந்து பாஸ் போர்ட்டையும் - டிக்கட்டுகளையும் என்னிடம் தந்து எனக்கு முதல் வகுப்பில் இடம் ஒதுக்கியிருப்பதாகக்கூறினார். ஒருவழியாக நெஞ்சுத் தவிப்புத் தீர்ந்து வயிற்றுப் பசியுடன் தாதர் சலாம் போய்ச் சேர்ந்தேன். அங்கு விமான நிலையத்திற்கு இந்திய ஹைகமிஷனர் வந்து வரவேற்றார். அங்கு ஓரிருநாள் தங்கிவிட்டு தாயகம் திரும்பினேன்.

விமான நிலையத்தில் அண்ணா அவர்களும் அமைச்சர் பெருமக்களும், புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். அவர்களும், தோழர்களும் அன்பினைப் பொழிந்து வரவேற்றனர்.

நான் வந்திறங்கிய நேரத்தில் என் தொகுதியின் ஒரு பகுதியில் குடிசைகள் தீயின் கோரத் தாண்டவத்திற்கு ஆளாகியது என்ற செய்தியும் வந்தது. விமான நிலையத்திலேயே எம். ஜி. ஆர். அவர்கள் குடிசைகளின் நிவாரண நிதிக்கு ரூபாய் 10 ஆயிரத்திற்கான செக்கை திருமதி ஜானகி அவர்களிடம் தந்து என்னிடம் சேர்க்கும்படி செய்தார். பெற்றுக் கொண்டதும் முதல் வேலையாக நிவாரண வேலையில் ஈடுபட்டேன்.

சிறைச்சாலையில் கூட அண்ணாவின் பக்கத்து அறையில் இருக்கவே நான் பெரிதும் விழைந்ததுண்டு.

நேருவுக்குக் கறுப்புக் கொடி காட்டிய போராட்டத்தின்போது சிறையில் அண்ணாவுக்கு 9-ஆம்நம்பர் கொட்டடி-நான் கேட்டுக்கொண்டதற்கிணங்க எனக்கு 10ஆம்நம்பர் கொட்டடி ஒதுக்கப்பட்டது. பிறகு நான் 65-ல் விலைவாசிப் போரில் சிறை சென்ற போதும்நான் 10ஆம்நம்பர்கொட்டடியையே விரும்பி ஏற்றுக்கொண்டேன்.

சிறையில்தான் அவர் கொட்டடிக்கு அருகில் இருந்தேனே தவிர - அவர் இதயத்தில் லட்சக்கணக்கில் வீற்றிருக்கும் தம்பியர் தங்கைகளைப் போன்று நானும் அவர் இதயத்தில் பெற்றிருக்காத மகளாக, பெருமைக்குரிய கழக முன்னோடிகளில் ஒருவராக வீற்றிருந்தேன் - அந்த இதயம் இப்போது சத்தமிடும் கடலருகில் சந்தனப் பெட்டியினுள் உறங்குகிறது.

அன்றைக்கு அந்த இதயத்தில் வீற்றிருந்த நான் எனக்குத் தாயாய், தந்தையாய், ஆசானாய், தெய்வமாய் விளங்கிய அவ்வுருவை என் இதயத்தில் வைத்து வணங்கி வருகிறேன்.

★

அங்கே செல்வோம்!

-பொன். செல்வக் கணபதி-

போர்ப்பாட்டு புறப்பாட்டு, புரட்சி ஊட்டும்
புதுப்பாட்டுப் பாவேந்தன் பாட்டு! மற்றும்
கார்ப்பாட்டு களிப்பாட்டு தமிழில் உண்டு
கனிப்பாட்டு தாலாட்டு பாசப் பாட்டு
ஊர்ப்பாட்டு இவைபோன்று பலவே ஆனால்
ஒருவருமே தம்கையால் எழுதி டாத
ஓர்பாட்டுக் காவியமாய் தமிழ கத்தில்
உதித்தவர்தான் நம்மண்ணா! உணர்ச்சிப் பாட்டு!

தூங்கியஇத் தமிழகத்தை எழுப்பி விட்டு
தூங்கிவிட்டார் நம்மண்ணா, எழுந்த மக்கள்
ஏங்குகிறார் எங்கேநம் அண்ணா என்று
எவர் தருவார் பதிலிங்கே? காற்றுத்தேவன்
தாங்கிவர அண்ணாவின் குரல்கேட் காதோ
தண்கதிராம் தேரேறி அவர்வா ராரோ?
ஈங்கவரும் நம்மிடையே வாராவிட்டால்
எதற்கிங்கே நாமிருப்போம் அங்கே செல்வோம்!

பேரறிஞர் அண்ணுவிற்கு எமது நினைவு அஞ்சலிகள்

*

நாமக்கல்
சவுத் இந்தியா டிரான்ஸ்போர்ட்ஸ்

(ரிஜி)

பிளீட் ஓனர்ஸ் அண்ட் டிரான்ஸ்போர்ட் காண்ட்ராக்டர்ஸ்,

75-76 வால்டாக்ஸ்சாலை, சென்னை-3.

போன்: 30897 — 36901.

தலைமை அலுவலகம்:

50-B, சேலம் சாலை, நாமக்கல்,

கிளைகள்:

டாக்டர் சுப்பராயன் சாலை, சேலம்-1.

7X, திருச்சி சாலை, துறையூர்.

உணவுத் தட்டுப்பாடு ஒழிந்தது மட்டுமல்ல; உபரியும் வந்தது! எப்படி?

பசுமைப் புரட்சியால்.
கரம்பு நிலங்கள் வயல்களாயின!
"கவலை" இல்லாத பாசனத்துக்கு மோட்டார் பம்பு - செட்.
நவீன உழவுக்கு டிராக்டர்கள்.
இவை எல்லாம் பசுமைப் புரட்சியின் அங்கங்கள்.
பசுமைப் புரட்சி - எங்கள் துறை,
வேளாண்மை மறுமலர்ச்சி - எங்கள் குறிக்கோள்.

விவசாயிகளுக்குரிய உதவிகளை புரிய நிலவள வங்கிகள் எப்பொழுதும் தயார்!

வெளியிடுவோர்:

தமிழ்நாடு கூட்டுறவு மாநில நிலவள வங்கி,

32, லஸ் சர்ச் சாலை, மயிலை, சென்னை-4.

மு. சண்முகம். எம். எல். ஏ., தலைவர்.

சட்டமன்றத்தில் ஒருநாள்

எம். பக்தவத்சலம் —

அரசியல் துறையில் அறிஞர் அண்ணா அவர்கள் என்னை எதிர்த்தது போல் நானும் அவரை எதிர்த்ததுண்டு, ஆனால் அவரும் நானும், ஒரே மாவட்டத்தைச் சார்ந்தவர்கள் என்று கவலையெல்லாம் அவர் பேச்சுக்கும் என் பேச்சுக்கும் முரண்பாடு ஏற்படுமோ என்பதுதான். கூடாது என்பதே என் விருப்பம். நான் தலைமை உரையாற்றிய பின்னர் அண்ணா அவர்களைப் கருத்து வேற்றுமை ஏற்பட்டதில்லை. அவர் சட்டமன்றத் தேர்தலில் வெற்றி பெற்று சட்ட மன்றத்தில் புகுந்து எதிர்க் கட்சித் தலைவராக வீற்றிருந்த போது அவருடைய வாதத் திறமையை அடிக்கடி பெருமையுடன் கூறுவார்.

நான் முதன் முதலில் அவரை ஒரே மேடையில்சந்திக்க நேர்ந்த போது அவருடைய பெருமை அப்பொழுதே எனக்கு விளங்கிற்று. நீண்ட நாட்களுக்கு முன் சென்னை ஒய்.எம்.சி. மண்டபத்தில் ஒரு கூட்டத்திற்குத் தலைமை வகிக்க நான் அழைக்கப்பட்டிருந்தேன். தயக்கமின்றி அந்த அழைப்பை ஏற்றுக் கொண்ட நான் சிறிது பரபரப்போடு தான் கூட்டத்திற்கு வந்து சேர்ந்தேன். அண்ணா இளைஞர்களைக் கவரும் பேச்சாளர் என்பது எனக்குத் தெரியும். அதற்கு ஏற்றவாறு மண்டபம் கொள்ளாத கூட்டம்கூடியிருந்தது. நான் மேடைக்குவந்ததும்— அண்ணா அவர்களும் வந்து சேர்ந்தார்கள்.

அப்பொழுது எனக்குள்ள பேசுமாறு கேட்டுக் கொண்டேன். நான் பேசியதை அவர்கள் மறுக்கவோ, அல்லது அவர்கள் பேசியதை பின்னால் நான் மறுக்கவோ சிறிதும் இடம் இல்லாமல் அமைந்தது அவர் பேச்சு. எனக்கு அதுபுதியதொரு அனுபவத்தை உண்டாக்கியது. ஒருவருக்கொருவர் கருத்து வேறுபாடுகள் எப்பொழுதும் தொடர்ந்து இருக்க வேண்டிய அவசியம் இல்லை.

அவரும் நானும் பிறகு சந்தித்த போதெல்லாம் எங்களுக்குள் அடிப்படையான ஒரு ஒற்றுமை இருந்து வந்ததைக் கண்டேன். காஞ்சி பச்சையப்பன் கட்டட நிதிக் கூட்டங்கள், வேறு கல்வி நிலையம் சம்பந்தமான கட்டடங்கள் சிலவற்றில் அறிஞர் அவர்களும் நானும், ஒரே மேடையில் பேசியிருக்கிறோம்; அந்தச் சந்தர்ப்பங்களில் எப்பொழுதும் எங்களுக்குள் யும் நாவன்மையையும் இனிய முறையையும் விட்டுக் கொடுக்கும் தன்மையையும் கண்டேன். விட்டுக் கொடுப்பதென்றால் தன் கட்சிக் கொள்கையை அல்ல— எதிர்க் கட்சி எப்பொழுதும், எதிர்ப்புக் கட்சியாக இருக்க வேண்டும் என்பது அல்ல என்ற அளவிலேதான் அந்த விட்டுக் கொடுக்கும் தன்மை அமைந்திருந்தது.

நானும் அவரும் சட்ட மன்றில் எதிர் எதிரேதான் உட்கார்ந்திருப்போம். என்னிடத்தில் ஒரு விஷயம் தனியாகப் பேச வேண்டும் என்று வெளியே அழைப்பார்; நான் உடனே பக்கத்தில் உள்ள சபாநாயகர் அறைக்கு அவரை வரச் சொல்லி இருவரும் அங்கு சந்தித்துப்பேசுவோம். அவர் கூறியதுபற்றி உடனே கவனிப்பேன்.

ஒருமுறை அவர்கள் அவ்

வாறு சந்தித்த போது, ''என் கட்சியைச் சார்ந்த பேச்சாளர்கள் சிலர் அவர் கட்சித் தலைவர்களை மிகத் தரக் குறைவாகத் தாக்கிப் பேசுவதாக தான் கேள்விப் பட்டதை என்னிடம் கூறினார். குறிப்பிட்டவர்களிடம் அது பற்றி நான் பேசி, தரக் குறைவாகப் பேசுவதைத் தவிர்க்கப் பார்க்கிறேன் என்று அவரிடம் கூறினேன். அதோடு நான் கேள்விப்பட்ட மற்றொரு விஷயத்தையும் அவரிடம் கூறினேன். அன்று சபையில் எனக்கு வந்த தகவலை வைத்து அவரிடம் பேசினேன்.

''இரண்டு நாட்களுக்கு முன்பு மதுரை மாவட்டத்தில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் தி.மு.க. பேச்சாளர் ஒருவர் பிரதம மந்திரி நேருவை மட்ட ரகமாகத் தாக்கிப் பேசியதாக நான் கூறினேன். அதற்கு அண்ணா அவர்கள் அது உண்மையாக இருந்தால் குறிப்பிட்ட பேச்சாளரை கழகத்தை விட்டே நீக்கி விடுவதாக உறுதியளித்தார்.

சட்ட மன்றத்தில் சில சமயங்களில் குறிப்பிட்ட தீர்மானத்தை அரசாங்கம் ஏற்றுக் கொள்ள வேண்டும் என ஆர்வத்துடன் கூறுவார். ஒருமுறை என்னைத் தன் தந்தை போல் பாவித்துக் கேட்டுக் கொள்வதாகக் கூறினார். அது என் மனதை உருக்கி விட்டது. அந்தப் பேச்சு அறிஞர் அவர்களின் லாவண்யத்தை எடுத்துக் காட்டியது. ஆனால் நான் அந்தத் தீர்மானத்தை ஒப்புக் கொள்ள முடியவில்லை. அதற்குக் காரணம், கட்சிப் பிடிவாதமல்ல — தீர்மானப்படி நடப்பது நாட்டுக்கு நல்லதல்ல — என்பது என் கருத்து. எனவே நான் மிக வினயமான முறையில் நிலைமையை விளக்கிக் கூறி தீர்மானத்தை ஏற்றுக் கொள்ளாததற்கு வருத்தமும் தெரிவித்தேன். ஆனால் சட்டமன்றத்தில் அவர் பணியாற்றிய விதம் — பொறுப்பு வகித்த பாங்கு ஆகியவை எப்போதுமே என்னைக் கவர்ந்ததுண்டு.

அண்ணா அவர்கள் முதலமைச்சராகப் பொறுப்பேற்ற போது, நான் அவர்களுக்கு என் வாழ்த்துக்களைத் தெரிவித்திருந்தேன். அவர் பொறுப்பேற்ற அன்றே தன் சகாக்களுடன் என் இல்லத்திற்கு வந்து என்னைச் சந்தித்தார். இந்த உயர்ந்த பண்பாட்டை நான் பெரிதும் பாராட்டுகிறேன்.

தேர்தல் முடிந்ததும் பத்திரிகைக்காரர்கள் என்னிடம் கருத்துக் கேட்டார்கள். நான் கூறியது—மக்களின் ஆதரவைப் பெற்ற கழகத்துக்குப் பாராட்டுத் தெரிவித்து மக்

அண்ணாவின் அன்பு!

1967 பொதுத் தேர்தலில் ஆரணி சட்டமன்ற வேட்பாளர் திரு. ஏ.சி.நரசிம்மன் அவர்களையும் நாடாளுமன்றவேட்பாளர் திரு. விஸ்வநாதனையும் ஆதரித்து அண்ணா பொதுக் கூட்டத்தில் ஆரணியில் பேசுகிறார். அண்ணா வழக்கம் போல் வருகின்ற கால அளவை விட அன்று பல்வேறு நிகழ்ச்சிகளில் வழி நெடுகிலும் கலந்து கொண்டதால் இரவு சுமார் 11 மணிக்கு மேடைக்கு வந்தார்.

அண்ணாவின் ஆணைப்படி — கழகக் குடும்பத்தைச் சேர்ந்த என் வீட்டில் என் மகன்கள் — வணங்காமுடி, பாண்டியன் இருவரும் தேர்தல் நிதி உண்டிவைத்து அது நிரம்பிய நிலையில், பொதுக் கூட்டத்தில் அண்ணாவிடம் கொடுக்க வேண்டும் என்ற ஆர்வத்துடன் இருந்தனர்.

இரவு 11 மணி ஆகி விட்டதால் சிறுவன் பாண்டியன் பொதுக் கூட்டத்தில் அமர்ந்திருந்த அவன் அன்னையின் மடியில் தூங்கி விட்டான். விழித்திருந்த வணங்காமுடி உண்டியலுடன் மேடை ஏறி அண்ணாவின் கையில் உண்டியை வைத்தான்.

அண்ணா எங்கோ நினைவாக இருந்திருக்கவேண்டும். தன் கையில் மண் உண்டி வைத்தவுடன் அதைப் பார்த்தார். அதற்குள் சிறுவன் மேடையை விட்டிறங்கி இருப்பிடம் சென்று கொண்டிருந்தான்.

''உண்டி கொடுத்தது யார்?'' இது அண்ணாவின் கேள்வி.

''அதோ, அந்தச்சிறுவன்'' பக்கத்தில் இருந்தவர்கள் ஏக காலத்தில் சொன்னார்கள். ''அவனை அழையுங்கள்' அண்ணாவின் ஆணை.

சிறுவனைத் தூக்கி மேடையில் விட்டனர். அண்ணா அவனைத் தன் அருகில் அழைத்தார். தன் அருகில் நிற்க வைத்துக் கொண்டு புகைப் படம் எடுப்பவர்களைப் பார்த்தார். குறிப்புணர்ந்த புகைப் படக்காரர்கள் புகைப் படம் எடுத்தனர்.

இந்த நிகழ்ச்சிகளைக் கூட்டத்தின் ஒரு மூலையில் அமர்ந்து பார்த்துக் கொண்டிருந்த என் மெய்யெல்லாம் சிலிர்த்தது. அண்ணாவின் அன்புதான் எத்தகையது?

தகவல்:
தி. வ. அண்ணாமலை

கள் தீர்ப்பை நான் ஏற்றுக் கொண்டதாகவும் கூறினேன். அதோடு நாட்டில் நம் கண்ணுக்குப் புலப்படாதநோய்க் கிருமிகள் மக்களைப் பீடிக்கிறது என்றும் குறிப்பிட்டேன். அதைத்தான் ஆங்கிலத்தில் ''வைரஸ்'' என்று சொன்னேன்.

அது தவறுதலாக —தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்களைக் குறிப்பிடுவது போல் பத்திரிகைகளில் தரப்பட்டது. அறிஞர் அவர்கள் பொதுக் கூட்டத்தில் பேசிய போது ''நான் பாராட்டுதலோடு நிறுத்திக் கொள்ளக் கூடாதா?'' என்று கண்ணியத்தோடு கேள்வி எழுப்பியிருந்தார். பின்னர் நான் பத்திரிகைகளுக்கு அளித்த விளக்கத்தைப் பார்த்தபிறகு நான் கொடுத்த விளக்கத்தை ஏற்றுக் கொண்டதாகவும் சொன்னார்.

அறிஞர் முதல்வராக இருந்த போது, சில நண்பர்கள் என் பிறந்தநாள் கூட்டத்திற்குத் தலைமை வகிக்க வேண்டுமென்று அவரைக் கேட்டுக் கொண்டுள்ளார்கள் அது பின்னால் தான் எனக்குத் தெரிந்தது. நான் அந்த நண்பர்களிடம் முதலமைச்சரை இதற்கெல்லாம் போய் தொந்தரவு செய்யக்கூடாது என்று கூறினேன். ஆனால் அவர்கள் அழைப்பை ஏற்றுக் கொண்டு விழாவிற்கு வந்து கலந்து கொண்டார்கள்.

அப்போது என்னிடம் அவருக்குள்ள பேரன்பின் காரணமாக என்னைப் பற்றிப் புகழ்ந்து பேசியதோடு, அவருடைய மூலம் காங்கிரஸ் தான் என்று குறிப்பிட்டார். நான் என்னுடைய அரசியல் அனுபவங்களைக் குறிப்பிடுவது நாட்டுக்குப் பயன்தரும் என்று கூறினார். அதற்கு முன்பு என்னுடைய நண்பர்கள் சிலர் என்னிடம் அப்படி ஆலோசனை கூறிய போது அதை நான் ஏற்றுக் கொண்டதில்லை; அத்தகைய பெருமை எனக்கு இல்லை யென்று தெரியும். ஆனால் அறிஞர் அவர்கள் கூறிய பிறகு நான் அதை ஏற்றுக் கொண்டு சிந்தித்து ஒருவாறு என் அரசியல் அனுபவங்களைதொகுத்திருக்கிறேன்.

அவர் அமெரிக்காவிலிருந்து ர்ணசிகிச்சை பெற்றுத் திரும்பி வந்ததும் அவர் இல்லத்திற்குச் சென்று அவரைப் பார்த்தேன். அவர் உடல் மிகவும் மெலிந்திருந்ததைக் கண்டு நான் மிகவும் கவலையுற்றேன். ஆனால் அவர் மிகுந்த உற்சாகமாகவே காணப்பட்டார். பின்னால் நான் ஜெனரல் ஆஸ்பத்திரியில் டைபாயிடு ஜுரத்தில் படுத்திருந்த போது அதைக் கேள்வியுற்று அவர் தன் சகாக்களான கலைஞர் அவர்களோடும், சாதிக்பாட்சா அவர்களோடும் என்னைப் பார்க்க வந்தார். அவர்களுக்குள்ள உடல் நிலையில் இவ்வாறு வந்திருக்கக்கூடாது என்று நான் அவரிடம் கூறினேன். அத்தோடு அவர்கள் காஞ்சிபுரத்திற்குப்போய் வந்தது பற்றியும் குறிப்பிட்டேன். இந்தப் பிரயாணத்தையெல்லாம் கொஞ்ச காலத்திற்குத் தவிர்க்க வேண்டும் என்றும் சொன்னேன்.

''காஞ்சிபுரம் போனாலே எனக்கொரு புதிய தெம்பு ஏற்படுகிறது,'' என்று அவர் என்னிடம் புன்முறுவல் பூத்தபடி கூறினார்.

அறிஞர் மக்களுடைய மனதை மிகவாகக் கவர்ந்துள்ளார் என்பதை அவர் மறைந்த போது நாம் கண்டோம். நிர்வாகத்தில் தான் தவறுதல் செய்துவிடக்கூடாது என்ற கவலை அவர் மனதில் எப்போதும் குடி கொண்டிருந்தது.

பிறர் மனத்தைப் புண்படுத்தக் கூடாது என்பதிலும் அவர் நிதானமாக இருந்தார். அவரிடத்தில் நிர்வாகத் திறமையைக் கண்டோம். அதோடு தம் கட்சியில் மிகுந்த பற்றும் அவரிடம் நிறைந்திருந்தது. இது தான் மறைந்த பேரறிஞர் அண்ணாவின் பெருமைகளில் குறிப்பிடத்தக்க ஒன்று. ஃ

திருத்தத்தை ஒருநாளும் தென்னகம் ஏற்காது!

மொழிக் கொள்கையில் அண்ணா உறுதியாக நிற்கிறார். இந்த உறுதி காரணமாக அவர் போரில் வெற்றி பெறுவார். தாங்கள் அறியாதவர்கள் என்பதோடு தங்கள் அறியாமையை உணராமலும் பேசித் திரியும் நெருப்புக் கோழி மனோபாவத்தினரை எதிர்த்து அண்ணா அவர்கள் போராடி வருகிறார்கள். இப்போது டெல்லி அரசு நிறைவேற்றி வைத்திருக்கும் ஆட்சி மொழிச் சட்டத் திருத்த மசோதாவையும் திருத்தத்தையும் தென்னகம் ஒருநாளும் ஏற்காது. அவர்கள் சங்கடமெல்லாம் தென்னாட்டார் அறிவிற் சிறந்தவர்களாக இருப்பதுதான். அறிவே சக்தி—அது வென்றேதீரும்.—(அண்ணாசிலை திறப்புவிழாவில்)

ஏ. ஆர். முதலியார்

நல்வாழ்த்துக்கள்

யுனைடெட் இந்தியா ரோலர் 'ப்ளவர்' மில்ஸ் பிரைவேட் லிமிடெட்

1/4 சூரியநாராயணசெட்டி தெரு, சென்னை-81.

GOPURAM BRAND MAIDA

உயர்ந்த தரமுள்ள
'கோபுரம்' மார்க்
மைதா, சூஜி மற்றும்
'கப்பல்' மார்க்
ஆட்டா, கோதுமைத்தவிடு
தயாரிப்பாளர்கள்.

GOPURAM BRAND SUJI

தொலைபேசி எண்: **52670 - 52671 - 52672 - 52673.**

தந்தி—MONARCH

—SARATH

நிறுவினது: 1927. தொலைபேசி எண்: 61068.

சென்னை கூட்டுறவு பால்வழங்கு ஒன்றியம்

அயன்புரம், சென்னை-23

திரு. டி. கே. கபாலி
தலைவர்.

திரு. என். எஸ். தேவராசன்
உப-தலைவர்;
(முன்னாள் துணைமேயர்)

சுத்தமான பால்

மாநகர மக்களின் அன்றாட தேவையைப் பூர்த்தி செய்ய நாங்கள் அதிக அளவில் பால் விற்பனை செய்ய முற்பட்டுள்ளோம். எமது வாடிக்கைக்காரர்களும், கூட்டுறவு ஆதரவாளர்களும் எப்போதும் போல் ஆதரவு தந்து கூட்டுறவு இயக்கத்தை ஊக்குவிக்க வேண்டுகிறோம்.

கிளை அலுவலகங்கள்

1. நெ. 33, உஸ்மான்ரோடு - தியாகராயநகர்.
2. நெ. 5 மத்தளநாராயணன் தெரு - மைலாப்பூர்.
3. நெ. 91, பெரிய தெரு - திருவல்லிக்கேணி.

வி. பார்வதிநாதன், B.Com., B.L
செயலாளர்.

என்னுடன் இருப்பதே உன்னுடைய வேலை

தில்லை வில்லாளன்

எம்.ஏ., எம்.பி.

பேரறிஞர் அண்ணனுடன் அவர் வாழ்நாளில், மிக நெருங்கிப் பழகும் வாய்ப்பு பெற்ற ஒன்றினையே, என் வாழ்நாளில் ஒரு பெரும் பேருகக் கருதி மகிழ்ந்து, என் வாழ்வின் கடைசி மூச்சை விட்டுவிட எண்ணியுள்ள அண்ணனின் அணுக்கத் தொண்டனில் நான் ஒருவன்.

அவருடன் நெருங்கியிருந்தபொழுது, நடந்த பல சுவை மிக்க சம்பவங்களை நினைவு கூர்வதே, நமக்கு படிப்பினை தரும் — நல்ல போதனை தரும் நூல்களை ஆராய்ந்திடுவதுபோலாகும்.

அண்ணன், உலகப் பெருந் தலைவராய், அதிகாரம் பெற்ற முதல்வராய் இருந்த காலை நான் சொல்லக் கூடிய சம்பவங்கள் மிகக் குறைவாக இருக்கும்; ஆனால், அவர் இப்படியெல்லாம் வருவார் என்று உலகமே எதிர்பாராத காலத்து சம்பவங்கள்தான் என்னிடம் உள்ளவை.

நான் அண்ணனுடன் தொடர்ந்து இரண்டு ஆண்டுகள் இருந்தேன். எனக்கு என்று வேலைகள் இல்லை; அவருடன் உண்பதும், உறங்குவதும், உரையாடுவதும், அவரை நாடி வருவாரிடம் பேசுவதும், அனுப்புவதும் இப்படி நகர்ந்து கொண்டிருந்தன நாட்கள். எனக்கு இலேசாகசலிப்புத்தட்டியது.

திடீரென்று ஒருநாள் ஒரு கடிதம் எழுதி வைத்துவிட்டு ஊருக்குப் புறப்பட்டுவிட்டேன்,

அந்தக் கடிதத்தில் நான் எழுதிய வாசகங்கள் இன்னமும் என் மனதில் நிறைந்து உள்ளன. ஆனால் நினைக்கும்பொழுது நடுக்கந் தருகின்றன.

உங்களுக்குத் தெரிந்தால் மன்னிப்பீர்கள் என்ற நம்பிக்கையில், அவைகளைக் கூறுகிறேன்.

நானும் உங்களைப்போல்
ஒரு எம். ஏ. பட்டம்
பெற்றவன்தான்.

வேலையின்றி யிருப்பதால்,
என் பட்டப் படிப்பு என்னை
பரிகசிக்கிறது.

ஆகவே, உங்களை விட்டு
ஊர்ப் போய்ச் சேர்கிறேன்.
என்னை மன்னியுங்கள்,
அண்ணா.

இந்த வகையில் எழுதி விட்டுப் போய்விட்டேன்.

பிறகு, ஒரு திங்கள் கழித்து, என் சொந்த ஊரில் அச்சகம் வைப்பது என்றும், வார ஏடு நடத்துவது என்ற முடிவோடும் சென்னை வந்தேன்.

நண்பர் பெரியண்ணன், அப்பொழுது, தண்டையார்ப்பேட்டையில் குடியிருந்தார். அவர் வீட்டில் தங்கி, அவர் மூலம் தம்பி அச்சகத்திற்கு வேண்டிய சாமான்கள் வாங்குவதற்கு ஏற்பாடு செய்தேன். தம்பி அச்சகம் என்ற பெயர்கூட; பெரியண்ணன் அவர்கள் வைத்ததுதான்.

நான் அண்ணனைப் பார்க்க, அவர் தங்கியிருந்த பேராசிரியர் வீட்டிற்குச்

சென்றேன். அவர் வழக்கமாகத் தங்கும் மாடியறையில் இருந்தார். என்னைக் கண்டதும், அவர் எந்தச் சலனமும் அவர் முகத்தில் காட்டவில்லை. மிகவும் சாதாரணமாகப் பேசிக் கொண்டிருந்தார். வழக்கம் போல், அவர் பணம் வைத்திருக்கும் கவர், மற்ற சாமான்களை கொடுத்துவிட்டார். அவருடன் இரண்டு மூன்று தினங்கள் இருந்தேன்; எனக்கு என்ன செய்வதென்றே புரியவில்லை; அவருடைய அன்பு என்னை திக்கு முக்காட வைத்தது.

ஒரு நூறு ரூபாய் நோட்டிற்குச் சில்லரை கிடைக்கவில்லை. மாற்றி வருவதற்காக வெளியில் சென்றிருந்தேன். திரும்பி வந்தேன்.

அண்ணன் என்னைப் பற்றி நகைச்சுவையோடு கூறிக் கொண்டிருந்தார்.

''வில் என்றால், வில்தான் - அவனும் என்னைப் போல் எம். ஏ.வாம். முத்திரை யொட்டாத கவரில் எழுதி வைத்து விட்டுப் போய்விட்டான். அவனுக்கு வேலையில்லையாம் - என்னுடன் இருப்பதே, அவனுக்குக் கிடைத்துள்ள பெரிய வேலை யென்று தெரியவில்லையே! - சிறுவன் - ஆனால், துடுக்கான சிறுவன்'

இந்த வார்த்தைகள் காதில் விழுந்ததும், எனக்கு இதயமே நின்று விடும் போலாகிவிட்டது.

எவ்வளவு பெரிய தவறான கடிதம் எழுதிவிட்டோம் என்று எண்ணி எண்ணி வருந்தினேன்.

அண்ணனிடம், எவ்வளவுதான் நெருங்கியிருந்தாலும், சொந்தப் பிரச்சினைகள் என்றால், நேரில் பேசுவதென்றால் கூச்சம் - அச்சம் - ஆகவே, எதுவும் கூறிடவில்லை.

உடனிருந்தேன் - அவர் காஞ்சிக்குப் புறப்படும்பொழுது, பணமிருந்த கவர் முதலியவற்றைக் கொடுத்துவிட்டு, ஊர்போய்த் திரும்பி வருவதாகக் கூறினேன்.

பிறகு, எத்தனையோ சம்பவங்கள் - நிகழ்ச்சிப் பின்னல்கள்.

உம், என் செய்வேன்?

தன்னுடன் இருப்பதையே எனக்கு வேலையாகத் தந்த அந்த அண்ணன் இப்பொழுது இல்லை. அந்த அண்ணன் என்னை விட்டு எங்கு போனார் என்று தேடுவதையே வேலையாகக் கொண்டு, திரிகிற தம்பியாக நான் உள்ளேன். ஃ

*

சருகெல்லாம் மலராகும்

புலவர் பொன்னி வளவன்

மூட்டிவைத்த தீஎரியும்; குளிர்காய் கின்றோம்!
மூத்தவன்நீ கடற்காற்று வாங்கு கின்றாய்?
தீட்டிவைத்த சித்திரம்நீ எங்கள் நெஞ்சில்!
தென்னாட்டார் எழுச்சிக்கு நீதான் வித்து!
போட்டிவைத்துப் பார்த்துவந்த மாற்றார் தோற்றார்;
போட்டியிலே வென்றவன்நீ தூங்கு கின்றாய்!
பூட்டிவைத்த பணம்எனவே உனைநி னைத்தோம்;
பொல்லாத சாவினுக்கே பறிகொ டுத்தோம்!

கம்பிக்கைச் செங்கதிரோன் உனைஎ ழுப்பக்
கல்லறையைத் தட்டுகின்றான்; எழுகின் றாயா?
நம்பிக்கை கொண்டுகடல் அலைஅ ழைக்கும்;
நாயகன்நீ ஏனென்று கேட்கின் றாயா?
தும்பிக்கை யானைநிற மேகம் உன்மேல்
துயர்க்கண்ணீர் மழைகொட்டும்; விழிக்கின் றாயா?
தம்பிக்கை குவிக்கின்றான் நம்முன் என்றே
தலைவா!நீ எழுந்துவந்து பார்க்கின் றாயா?

வாசப்பூ வசந்தப்பூ ஆயி ரம்பூ
வண்ணப்பூ பார்த்ததுண்டு! எனினும் நெஞ்சைப்
பாசப்பூ வாய்மலர வைத்து வாழ்ந்த
பண்பாளன் உனைத்தவிர யாரைக் கண்டோம்?
மோசப்பூ வுலகில்எமை வாழ வைக்க
முல்லைப்பூச் சிரிப்புதிர்த்த எங்கள் அண்ணா!
நேசப்பூ உதிர்ந்தாலும் வண்டு பாடும்;
நீயில்லை எங்கள்மனம் நித்தம் வாடும்!

உரிக்காத பலாப்பழம்போல் இருந்து வந்த
உயர்தமிழின் சுளைச்சுவையை உன்னால் கண்டோம்!
செரிக்காத சோற்றைப்போல் இருந்து வந்த
செந்தமிழின் நடைமாற்றிச்செரிக்க வைத்தாய்!
நறுக்காத செங்கரும்பாம் மேடைப் பேச்சில்
நயம் ஏற்றிச் சாறாக்கிப் பருக வைத்தாய்!
சிரிக்காத ஏழைகளைச் சிரிக்க வைத்தாய்;
சிலையாகி நிலையாக நிலைத்து விட்டாய்!

'முருகா!' என் றெவன்வாயும் முணுமு ணுத்தால்
'முறுக்கா?' என் றிடுவேன்நான் பக்கம் நின்று!
ஒருகால் 'அண்ணா! ' என்றுன் பெயரை யாரும்
உச்சரித்தால் மெய்சிலிர்ப்பேன்; வணங்கிநிற்பேன்!
உருகிவிடும் இரும்புந்தான் உன்பேர் சொன்னால்!
உருவாக்கி விட்டவனே! உனைம தித்தால்
சருகெல்லாம் மலராகும்! கூழாங் கல்லும்
சரியான ஒளிவைரம் ஆகி மின்னும்!

ஓம்! சக்தி! தெரியாது எனக்கு! ஆனால்
உன்சக்தி தெரிந்தவன்நான்! உன்வாய் சொன்ன
'நாம்' சக்தி நாங்களெல்லாம் தெரிந்து கொண்டோம்!
நற்சக்தி கொடுத்தவரே! பெருமை வாய்ந்த
தாம்சக்தி படைத்ததுவாம் இந்த நாட்டில்
தலைவா! உன் முன்னேற்றக் கழகம் என்றும்!
ஆம்! பக்தி எதற்காகக் கல்மேல்? ஆனால்
அண்ணா! உன் பக்தன்நான் வணங்கு கின்றேன்!

அண்ணா எனக்கும் தலைவரே!

62—ல் அண்ணாவை காஞ்சிபுரத்தில் தோற்கடித்தார்கள். அதற்கு அவர்கள் கையாண்ட முறைகளைச் சொல்லவும் கூசுகிறது. அதன் விளைவு அண்ணா மாநிலங்கள் அவைக்குச் சென்றார். அங்கு அவர் ஆற்றிய முதல் பேச்சே டில்லியைக் குலுக்கியது. ''தி. மு. க. கணிப்பில் கொள்ளத்தக்கதொரு சக்தி'' என்று நேரு தன் தோழர்களிடம் சொன்னார். அன்று துவங்கியது அண்ணாவின் ஏற்றம்.

இயற்கையின் அருளால் அண்ணாவின் தலைமையில் இயங்குகின்ற ஒரு நல்ல அரசாங்கத்தை இங்கே பெற்றிருக்கின்றோம். இல்லாவிட்டால் நம்மால் அழிவைத் தவிர்த்திருக்க முடியாது.

அண்ணா என்ன சொன்னபோதிலும் அது குறித்தெல்லாம் கவலைப்படாது மேல்நோக்கிச் செல்லுவோம். மத்திய அமெரிக்காவில் குமுறி அடங்கி இப்போது கூட புகை கக்கிடாத பழைய எரிமலைகள் உண்டு. அதுபோலப் பதவி இழந்தோர் இருக்கின்றனர். அவர்கள் ஏச்சுக்களைப் புறக்கணித்து உறுதியோடும் வலிவோடும் மேல்நோக்கி முன்னேறுவோம்.

காலத்தின் தேவையை நிறைவுசெய்ய வந்த தலைவர் அண்ணா அவர்கள்.

நம் தலைவர் — ஆமாம். அண்ணா அவர்கள் உங்களுக்கு மட்டுமல்ல — எனக்கும் தலைவரே. அவருக்கு விதிக்கப்பட்டுள்ள உயர்நிலையை இன்னும் அவர் அடைந்திட வேண்டும். இந்தியா முழுவதற்கும் தலைமைப் பொறுப்பினை அண்ணா ஏற்றிடும் அந்நாளைக் காண நான் ஆவலுள்ளவனாக இருக்கிறேன். —அண்ணா சிலை திறப்பு விழாவில்

ஏ. ஆர். முதலியார்

அப்பர் அடிகளும் அண்ணாவும்

தவத்திரு

குன்றக்குடி அடிகளார்

இரண்டாம் உலகத்தமிழ் மாநாட்டு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந்தன. அண்ணா அந்தப் பணியில் மூழ்கியிருந்தார். திருப்பத்தூர் தமிழ்ச் சங்கத்து அறிஞர்கள்—அப்பரடிகளுக்குச் சிலையெழுப்ப வேண்டுமென்று முடிவெடுத்தனர். அதற்கு அண்ணாவைக் கண்டு பேச நம்மையே பணித்தனர். அண்ணா முதல்வராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிறகு தொலைபேசியின் மூலம் வாழ்த்துக் கூறினோமே தவிர நேரில் பார்க்கவில்லை. பார்க்கக் கூடாது என்பதல்ல. ஒருபுறம் அண்ணாவுக்கிருந்த பணிகளின் மிகுதி. பிறிதொருபுறம் எப்பொழுதும் நமக்கு இயல்பாகவே இருக்கும் கூச்சம். ஆயினும், திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தினரின் ஆணையை ஏற்றுக் கொண்டு சென்னை சென்றோம்.

நமது சென்னைத் திருமடத்திலிருந்து அறிஞர் அண்ணாவின் வீட்டுத்தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொண்டோம். அண்ணாவின் தனது அலுவலர் பேசினார். அண்ணாவைச் சந்தித்துப் பேச விரும்பும் நோக்கத்தைத் தெரிவித்தோம். அவர் அண்ணாவைக் கலந்து காலை பத்து மணிக்கு நேரம் நிர்ணயித்தார். அது மட்டுமன்று, அப்போது ஒரு தடவை தொலைபேசியின் மூலம் அழைப்பதாகவும், அழைத்த பிறகு வரலாம் என்றும் கூறினார். இந்தக் குறிப்புச் செய்தியில் அண்ணா எவ்வளவு கவனமுடன் நடந்து கொண்டார் என்பதைப் பின்னேதான் நம்மால் உணர முடிந்தது.

குறித்தவாறுபத்து மணிக்கு அழைப்பு வந்தது. நாமும் புறப்பட்டு அறிஞர் அண்ணாவின் இல்லத்திற்குச் சென்றோம். அண்ணா சிரித்த முகத்துடன் அவர் இல்லத்தின் வாயிலில் நம்மை வரவேற்றார். வரவேற்றபின் உள்ளே அழைத்துச் சென்றார். அறிஞர் அண்ணா தமிழகத்தின் முதலமைச்சர் ஆயினும், அவருடைய எளிமையையும், அடக்கத்தை

யும் எழுதச் சொற்கள் கிடைக்கவில்லை. நாங்கள் இருவரும் உட்கார்ந்துபேசத் தொடங்கிய சில மணித் துளிகளில் அண்ணாவின் அருமைத் தம்பி — இன்றைய தமிழகத்தின் முதல்வர் கலைஞர் டாக்டர் மு. கருணாநிதியும் வந்து சேர்ந்தார்.

அண்ணா, மகிழ்ச்சி கேட்டல் — நலங் கேட்டல்— முகமன் உரைத்தல் ஆகிய உரையாடல்கள் முடிந்தவுடன்,

''அடிக்கடி சந்தியுங்கள். உங்களுடைய கருத்தைத் தைரியமாக எடுத்துக் கூறுங்கள். எங்களால் இயன்றதைச் செய்கிறோம்.''

என்று கேட்டுக் கொண்டது இருபதாண்டு காலப் பொது வாழ்க்கையில் ஓர் அரசியல் தலைவரிடம் நாம் கேட்ட முதற் செய்தி! இந்த இனிய பண்புதான் அவரைப் பலருக்கு அண்ணா ஆக்கியிருக்கிறது! தமிழகத்திற்குத் தலைவராக்கியது! இந்த உரையாடல்கள் முடிந்த பிறகு மெல்ல, திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் விருப்பத்தை எடுத்துக் கூறினோம். அண்ணா, நம்முடைய விருப்பத்தைக் கேட்ட பிறகு பதில்சொல்லவில்லை! கலைஞருக்கும் நமக்குமாக ஒரு சிறு உணர்ச்சி மிக்க சொற்பொழிவு நிகழ்த்தினார். அப்போது அவர் அப்பரடிகளைப்பற்றி—

''அப்பரடிகள் ஒரு சிறந்த தமிழ்த் தலைவர். அவருடைய எல்லைக்குள் அவர் ஒரு புரட்சிக் கனல்,'' என்றார்.

''நாமார்க்கும் குடியல்லோம்'' என்ற திருப்பாடலையும் ''சாத்திரம் பல பேசும் சழக்கர்காள்'' என்ற அடியினையும் எடுத்துக் காட்டி ''ஏழாம் நூற்றுண்டில் இத்தகு சிந்தனையை அப்பரடிகள் கொண்டதே பெருமைக்குரியது,'' என்று பாராட்டினார்.

''அப்பரடிகளுக்குச் சிலை வைப்பதில் ஆட்சேபனை இல்லை. ஆனால் அப்பரடிகள் திருமேனியை வழிபடும் திருமேனியாகத்தமிழ் நாட்டில் — திருக்கோயில்களில் அமைத்திருக்கிறார்கள் அத்தகையதொரு திருமேனியைப் பொது இடத்தில் வழிபாடின்றி வைப்பதைச் சமயத் துறையினர் அனைவரும் ஏற்றுக் கொள்வார்களா என்பது ஐயம்.'' என்று எடுத்துக் கூறி;

''ஆதலால், சிலை வைப்பதை விட சென்னை நகரில் அப்பரடிகள் பெயரால் தமிழ்ச் சிற்பக் கலை அடிப்படையில் ஒரு மண்டபம் எழுப்பி தக்க நினைவுச் சின்னம் அமைக்கலாம்''— என்றும், அதற்குத் தாமும் அரசும் துணை செய்வதாகவும் கூறினார்.

அவரை 'நாத்திகர்' என்றார்கள். ஆம்! அவர் நாத்திகர்தான்! எப்போது?சாதி வேற்றுமைகளை — வெற்றுச் சடங்கு ஆசாரங்களைஎதிர்க்கும்போது நாத்திகராகிறார். ஆனால், அப்பரடிகளைப் போன்ற சமயச் சான்றோர்களிடத்தில் அவர் கொண்டிருந்த ஈடுபாடு பாராட்டத்தக்கது. உரு வெளித் தோற்றத்தில் அண்ணா விளங்கியதை விட உள்ளத்து மாட்சியில் மிக மிக உயர்ந்து விளங்கினார்.

தமிழைப் பல் துறைகளிலும் செழுமையாக வளர்க்க ஒரு வலிமையான —தன்னாதிக்கமுடைய தமிழ் கழகம் ஒன்றை நிறுவ வேண்டுமென்று கேட்டுக் கொண்டோம். அண்ணா அதற்கு இசைந்தார். இசைந்தது மட்டுமல்ல. நாம் எடுத்துக் கூறிய அந்தக் கருத்தை வலிமைப்படுத்தி உறுதிப்படுத்த பிரெஞ்சு அகாடமியை உதாரணம் எடுத்துக் காட்டினார். நாம் பேட்டியை முடித்துக் கொண்டு வந்த பிறகு, 'கலைமகள்' பத்திரிகையின் சார்பில் நிருபர் பேட்டிக்குச் சென்றிருக்கிறார். கலைமகள்' நிருபருக்களித்தபேட்டியில் அண்ணா தமிழ்க் கழகத்தைப் பற்றி எடுத்துக் கூறியிருக்கிறார். தமதுகருத்தாக அல்ல.

''சற்று முன் சந்தித்த குன்றக்குடி அடிகளார் தமிழ்க் கழக அமைப்பைப் பற்றிய கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதை ஏற்றுச் செயல் படுத்தலாம் என்று நினைத்துக் கொண்டிருக்கின்றேன்.''

என்று பேட்டியில் கூறியுள்ளார். பிறர் பெயரை எடுத்துக் கூறினாலே அவருக்குப் பெருமை வந்துவிடுமோ என்று அஞ்சுகிற இந்த உலகத்தில் அவர் அச்சமின்றி ''குன்றக்குடி அடிகளார் கருத்து''என்றே கூறியிருக்கிறார். இதன் மூலம் அண்ணா நம்மைப் 'பொதிகை' யாக்கினார். ஆனால் அவர் இமயமென உயர்ந்து நின்றார். நம்மைப் பொதிகையாக்கியது அவர் அறிந்து திட்டமிட்டுச் செய்த பணி. அவர் இமயமென உயர்ந்தது அவரது இயல்பின் விளைவு.

அண்ணா செயற் படுத்த நினைத்த தமிழ்க் கழகத்தை அருகிலிருந்து கேட்ட அவருடைய அருமைத் தம்பி கலைஞர் செயற் படுத்துவார் என்று நம்பிக்கொண்டிருக்கிறோம்.

அஃது அவர் பொறுப் பல்லவா? நம்மைத்தனித்து விடாமல் அன்றே தமது வரலாற்றை — தமிழகத்தின் வரலாற்றைத் தொடர்ந்து எழுத இருக்கும் கலைஞரைச் சாட்சியாக வைத்து ஒப்புக் கொண்டது கலைஞர் செய்வார் என்ற நம்பிக்கை தானே! கலைஞர் செய்வார்; விரைவில் செய்வார். காத்திருந்து பயன் பெறுவோம்! ஃ

கல்லறையே! கல்லறையே!

கா. வேழவேந்தன் எம்.எல்.ஏ

கல்லறையே! கல்லறையே! காஞ்சிச் சோலைக்
 கார்மயிலை மூடிவிட்ட கதவே! நாளும்
வெல்லச் சொல் தவழ்ந்தோடும் இதழை, காணும்
 விழியெல்லாம் ஈர்க்கின்ற காந்தக் கண்ணை,
நல்லபல கருத்தெழுதும் கரத்தை, ஓடி
 நாடெல்லாம் சுழன்றுவந்த கால்கள் தம்மை
கல்லறையே! இதற்குள்ஏன் மூடிவிட்டாய்?
 காலத்தால் உன்கதவு திறந்தி டாதா?

அன்றொருநாள் முதன்முதலில் தேர்தலில்நான்
 அடியெடுத்து வைத்திட்டேன்; காஞ்சி அண்ணன்
கன்றுள்ள திசைநோக்கிப் பசுவே சென்று
 கனிவுடனே பால்தருதல் போலே வந்து
நின்றிட்டார் மேடையிலே; நிலவு மேற்கை
 நெருங்குகின்ற விடிகாலை ஆனபோதும்
குன்றாத கருத்தெடுத்து விருந்தாய் வைத்தார்;
 குவிந்ததங்கே கையொலிகள் இடியைப் போலே!

''தமிழகத்தின் வடகோடி வந்துள் ளேன்நான்;
 தமிழகத்தின் வாடையினி ஓடவேண்டும்!
இமைமூடா திருக்கின்றீர் இதுவ ரைக்கும்;
 இமைதிறந்தே இருக்கட்டும் தேர்த லன்றும்!
அமைகின்ற கீழ்வானம் வெளுக்கக் கண்டேன்;
 ஆட்சியிலும் கதிரவனைக் காண்போம் போலும்!
நமைக்காக்கத் தன்மானப் புதிய ஆட்சி
 நடப்பதற்கு வழிசெய்வீர்!'' என்றார். பின்னர்,

''நீதிமன்றக் கூடத்தில் உலாவி வந்த
 நெளிவறியா இளந்தம்பி வேழவேந்தன்
நீதியினை உங்களிடம் வேண்டு கின்றான்;
 நீங்கள்தான் சட்டமன்றம் அனுப்ப வேண்டும்!
பாதி வழி கூட்டிவந்தேன்; என்க ரத்தைப்
 பலப்படுத்தச் சட்டமன்றம் அனுப்பிவைப்பீர்
மீதிவழி கொண்டுவந்து கோட்டை சேர்ப்பீர்!
 மீண்டுமவன் 'கருப்பங்கி' தொடவிடாதீர்!''

எனச்சொல்லி எனக்காக வாக்கைக் கேட்ட
 எம்இறையை மூடிவிட்ட அறையே! கண்ணீர்ப்
புனலாற்றில் நீந்திவந்தே உன்னி டத்தில்
 புதைந்துவிட்ட எம்மண்ணன் மீண்டும் ஓர்நாள்
மனஞ்சிலிர்க்கும் வகையிலே எழுந்து வந்து,
 ''மாத்தம்பி! நலந்தானா?'' என்று கேட்கும்
இனிக்கின்ற திருநாளை எண்ணி, எண்ணி
 ஏங்குகிறோம், ஏங்குகிறோம் நடந்தி டாதா?

தேன் துளிக்கள்

ஏ. பி. ஜனார்த்தனம் M.A.M.L.C.



அண்ணாவின் நினைவுகள், பேச்சுக்கள், எழுத்துக்கள்' பண்புகள் இத்தனையும் நமக்குத் தெளிவைத் தருவன — தொல்லைகள் விரட்டுவன.

அண்ணா இல்லையே என்ற ஏக்கம் மிகும்போது அவரது உருவம் நினைவுக்கு வரும். ''தம்பி! நம் தோழமையை எண்ணிப் பார்! அந்த நாட்களை எண்ணிப் பார்! என் எழுத்துக்களில், ஒலிப்பதிவுகளில், உங்கள் நெஞ்சங்களில் நான் வாழ்கிறேன். கலங்காதே! — கடமை அழைக்கிறது!'' என்று சொல்வது போல் இருக்கும்.

அண்ணாவைப் பற்றிய நினைவுகள் ஏராளம். தூக்கம் வராதபோது, நினைவுத் திரையில் அண்ணா படங்களை ஓட்டிக் கொள்வேன். அத்தனையும் அவர் மிக விரும்பிய பொரிவிளங்காய் உருண்டைகள்! அவரது பண்பு, அன்பு, பொறுமை தொலை நோக்கு, இவைகளில் கொஞ்சமாவது நமக்குப் படிய வேண்டும் என்ற துடிப்பு!

1934–லேயே பெரியாரை நேரில் கண்டேன். அவரது ஆணித்தரமான பேச்சுக்கள், சிங்கத் தோற்றம், துடிதுடிப்பு, சுயமரியாதை ஆவேசம், இத்தனையும் என் இள நெஞ்சில் பதிந்து விட்டன. (அப்போது எனக்கு 14 வயது) படிப்பு முடிந்ததும் இயக்கத்தில் இறங்கிவிட வேண்டும் என்ற உறுதி ஏற்பட்டுவிட்டது.

1937–ல் தங்கசாலைத் தெருவில் சுயமரியாதை இளைஞர் மன்றக் கட்டிடத்தில் அண்ணாவை முதன் முதலாகச் சந்தித்தேன். வறுமை வாட்டிய நாட்கள்! ஐந்து, பத்து ரூபாய்கள் இருந்தால் கூட்டம் போட்டு காங்கிரசாருக்குச்சுடச் சுடப் பதில் தரலாம் என்று துடித்த காலம்! கேள்வித் தாள்களை நேரிலேயே கூட்டத்தில் புகுந்து அண்ணாவும் தோழர்களும் வழங்கிய நாட்கள்! வேலூர்

கூட்டங்களுக்கு வரும்போதெல்லாம் என் மீது ஆசையைப் பொழிவார். அண்ணா சுழன்று சுழன்று, குதித்துக் குதித்து பேசிய பாங்கு இளைஞர்களை முடுக்கி விட்டது!

1939—ல் சென்னை பச்சையப்பன் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் சேர்ந்தேன். அண்ணாவுக்கு நீதிக் கட்சியில் ஆர்வம் ஏற்படுத்திய பேராசிரியர்கள் வரதராசம், திருவேங்கடசாமி ஆகியோர் என்னையும் ஊக்கினர். ஆங்கிலம், தமிழ், தெலுங்கு; மூன்று மேடைகளிலும் ஆவேசமாகப் பேசுவேன். அண்ணா பூரிப்படைந்து கட்டுப்பாட்டை வற்புறுத்துவார்.

1942—ல் 'திராவிடநாடு' வெளி வந்தது. வாராவாரம் கல்லூரி மாணவர்களிடம் அண்ணாவின் எழுத்துச் சிறப்பை எடுத்துக் காட்டியபடி இருந்தேன். அண்ணா பன்முறை வற்புறுத்தியும் நான் அதற்கு ஏதும்எழுதவில்லை. அதிலேயே மாந்தி இருந்து விட்டேன். காஞ்சிக்கு அடிக்கடி செல்வேன். 'திராவிட நாடு' அலுவலகத்தில் அண்ணாவுடன் பேசிப் பொழுது கழியும். தூசு படிந்த மேசை, ஒட்டை நாற்காலி, பழைய பத்திரிகைகள், இவை மத்தியில் அண்ணா திராவிடத்தைத் தட்டி எழுப்பும் எழுத்துக்களை இரவு முழுதும் எழுதுவார். வண்டி வண்டியாக ஆங்கில நூல்களைப் படிப்பார். 'சந்திரோதயம்' நாடகத்துக்கு ஆயத்தங்கள் செய்வார். வறுமைத் தேள் கொட்டிய போதும் களத்தில் எதிரிகளைச் சந்தித்தபடி, சாய்ந்தபடி இருந்தார்.

பள்ளத்தூர் தேர்தலின் போது மாற்றார் கொடிக்கு நெருப்பிட்டதும், சேலத்தில் கம்ப இராமாயணத்தை நெருப்பிலிட வேண்டும்

என்று துடி துடித்ததும், 1948—ல் செயின்ட்மேரீஸ் மண்டபத்தில் இந்தியை எதிர்த்து 'போர்! போர்!' என்று முழங்கியதும் அண்ணாவின் ஆவேசத்துக்குச் சான்றுகள்!

1943 முதல் மாணவர்களை திரட்டும் பணியில் ஈடுபட்டார்கள். பேராசிரியரும், நாவலரும் அண்ணாவை நகருக்கு அழைத்தது கலைஞரின் மாணவர் மன்றம், குடந்தை மாணவர் கழக மாநாடு, ஈரோடு பயிற்சிப் பள்ளி, நீடாமங்கலம் மாநாடு, இப்படி பல மைல் கற்கள். அண்ணாவுக்கு நல்ல இளைஞர் அணி திரண்டது.

கடற்கரை கூட்டத்தை முடித்து விட்டு வேக வேகமாக பெத்து நாய்க்கன் பேட்டைக்கு திரும்புவது, சீனா பசாரில் பழைய புத்தகங்களை வேட்டையாடல், மூட்டை பூச்சி நிறைந்த மினர்வா கொட்டகையில் ஆங்கிலப் படங்கள் பார்த்தல், இவைகளை எப்படி மறப்பது?

1946—ல் திருச்சி மாநாடு. நாங்கள் அங்கு மாநாட்டுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பே திரண்டுவிட்டோம். திடீரென்று கரீம் கடையில் பிரியாணி சாப்பிட வேண்டும் என்று ஆசை வந்து விட்டது. என்னிடம் ஐந்து ரூபாய்கள் இருந்தன. நான் உற்சாகமுடன் அழைத்தேன். என்னை வாட்டுவதா என்ற கூச்சத்துடன் அண்ணா வந்தார். 1948—ல் ஒரே சிறையில் அடைத்து விட்டார்கள்.

1944—ல் பெரியாருடன், அண்ணாவுடன் தெலுங்கு நாட்டுக்கு சென்றிருந்தேன். அண்ணாவின் ஆங்கிலப் பேச்சை தெலுங்கில்மொழி பெயர்த்தேன். பெரியார் தெலுங்கிலேயே பேசினார்.

கல்லூரி பேச்சுப் போட்டியில் பரிசு வாங்கும் போதெல்லாம் அண்ணா மகிழ்ச்சியடைவார். ''அடுக்கில் தாங்களும், அனலில் அழகிரியும் எனக்கு மாடல்கள்'' என்று அவரிடம் தெரிவித்தேன்.

எத்தனையோ மாநாடுகளுக்கும் கூட்டங்களுக்கும் சென்றிருக்கிறோம். பெரியார் முதல் தொண்டர்கள் வரை பலரைப் பற்றி எடை போட்டுச் சொல்லுவார். பொது வாழ்வு எத்தகையது, மாற்றாரிடம் எப்படி வாதிடுவது, எப்படி நடந்து கொள்வது என்பதையெல்லாம் பாசமுடன் விளக்குவார்.

அண்ணாவின் ஆங்கில ஈடுபாடு அவருக்கு அகில



உலகப் புகழைத் தேடித் தந்தது.

வட நாட்டிலும், அயல் நாடுகளிலும் அண்ணாவின் ஆங்கிலப் புலமை நமக்குப் பெரிய செல்வாக்கை ஏற்படுத்தி உள்ளது. உலக இயக்கங்களை தெரிந்து கொள்ள மாபெரும் புரட்சி வீரர்களை அறிந்துகொள்ள, கீட்ஸ், ஷெல்லி, பைரன், விட்மன், ஷா போன்ற மேதைகளின் படைப்புக்களை ரசிக்க, பிரிட்டிஷ் பாராளு மன்ற சம்பிரதாயங்களை, ஆட்சி நெறிகளை, அறிய அண்ணாவுக்கு ஆங்கிலம் உதவியது. சட்ட மன்றத்தில் மாற்றுரை அனுயாசமாக மடக்குவதற்கு அடிகோலியது. இயக்கத் தோழர்களின் பூசல்கள், சுசப்புகளிலிருந்து விடுபட புத்தகப் படிப்பு அண்ணாவுக்குப் பெரிதும் உதவியது. வாட்டும் வறுமையிலும் நூல் நிலையங்களுக்குச் சென்று அறிவை வளர்த்துக்கொண்டார். ஆங்கிலப் படங்கள் அவரது பல கட்டுரைகளுக்கு கருவைத் தந்தன. ஆங்கில உரை நடைமுறைகளை தமிழில் கையாண்டதால் அண்ணா அடுக்குத் தொடரையும், கவர்ச்சி நடையையும் பயன்படுத்த முடிந்தது. நம்மிலே படித்தவர்கள் ஆங்கிலத்தைத் தொடர்ந்து கையாண்டால்தான் வடவரையும், அயல் நாட்டினரையும் நம் கருத்துக்களை, பெருமைகளையும் அறியச் செய்ய முடியும்.

அண்ணாவின் அபாரமான சாதனைகளை நாம் அடிக்கடி எண்ணிப் பார்க்கிறோம். அண்ணா, மாற்றாரும் செவி கொடுத்துக் கேட்கும் வகையில் முரட்டு சுயமரியாதைக் கருத்துக்களை அழகு தமிழில் குழைத்துத் தந்தார். நீதிக் கட்சியை இளைஞர்கள் ஏற்கும்படிச் செய்தார். திராவிட மாணவர் கழகத்துக்கு ஊக்கமளித்தார். நொடிந்து போன கழகத் தொண்டர்களுக்குத் துயர் துடைத்தார். பலருக்கும் வாய்ப்பளித்து வளமளித்தார். தன் ஆங்கிலப் பேச்சுக்களால் அமெரிக்கா வரை கழகத்தை உலகறியச் செய்தார்.

'மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம்உண்டு, 'எதையும் தாங்கும் இதயம் வேண்டும்', 'கடமை, கண்ணியம், கட்டுப்பாடு' 'இப்படை தோற்கின் எப்படை வெல்லும்?' போன்ற அழியாச் செல்வங்களை வடித்துத் தந்தார்.

தன் பண்பால், எளிமையால், அன்பால் எதிரிகளையும் கவர்ந்து நாம் தலை நிமிர்ந்து நடக்க வழி செய்தார். ஏழைகள் அவரை தங்கள் வாழ்வின் நம்பிக்கை நட்சத்திரமாகக் கொண்டனர். அவர் மறைந்தபோது மக்கள் துடித்த துடிப்பு, கதறிய கதறல் இன்னமும் எதிரொலிக்கின்றன. நாம் பட்ட வேதனை எழுத்தில் அடங்காது.

இனி எப்படி, எதிர் காலம் என்னாகும், இனி யார் தலைமை என்றெல்லாம் திராவிடர் தேம்பிய போது தன் உழைப்பால், துடிப்பால் கலைஞர் நமக்குத் தலைவரானார். பல வெற்றிகளைக் குவித்தவண்ணம் இருக்கிறார். கலைஞருக்குத் துணை நின்று அண்ணாவின் ஆசைகளை நிறைவேற்றுவோம்.

கடைசி திராவிடன் இருக்கிற வரை அண்ணாவின் பெயர் மறையாது. அவரது சிந்தனைக் கருவூலங்கள் நமக்குத் தெம்பூட்டும், வலுவூட்டும்!

மொழி பெயர்ப்புச் செய்வோரே........

பிற மொழிகளைக் கலந்து பேசுவதைவிட கற்றுக் கொள்வதில்தான் தெளிவிருக்கும். பேசுதல் என்ற வார்த்தைக்கே தமிழில் பல பொருள் உண்டு. 'கூச்சல், முழக்கம், கத்திப் பேசுதல்' என்று பலவாறு உள்ளது. பிற மொழிகளுக்கு இல்லாத சொல்வளம் தமிழுக்குத்தான் உண்டு.

புதிய புதிய ஏடுகளைத் தமிழில் கொண்டு வருவதன் மூலம் தமிழ் மொழி வளர்ச்சிக்கு உறுதுணை புரியலாம். பிறமொழி நூல்களைத் தமிழில் மொழி பெயர்ப்பதை வரவேற்கின்றேன். ஆனால் — மூலம் கெடுகின்ற வகையில் உயிரில்லாமல் உடல் மட்டும் வைப்பது பொதுவாக நல்லதல்ல — ஆங்கிலத்தில் உள்ளதை தமிழாக்கம் செய்வதானால் ஆங்கில நூலை நன்கு படித்து அதை மனதில் வைத்துக் கொண்டு, எந்த மொழியில் மொழி மாற்றம் செய்கிறோமோ அந்த மொழிக்காரர்கள் சுவைத்துப் படிக்கும் வண்ணம் மொழி பெயர்க்க வேண்டும்.

-அறிஞர் அண்ணா

ஒரு நாள் ஒரு பொழுது

சந்தனத் தேவன்

இருபத்திரண்டு ஆண்டுகளுக்கு முன்பு ஒரு நாள். அதுவும் மாலைப் பொழுது எப்போதுமே சோர்ந்து கிடக்கும் புதுக் கோட்டை பிரகதம்பாள் டாக்கீசுக்கு வந்த வாழ்வுதான் என்ன! கண் கவர் வண்ண விளக்குகளென்ன; காற்றோடு உறவாடிய கழகக் கொடிகள் பட்டொளி வீசிப் பறந்ததென்ன; தென்னோலைத் தோரணங்களென்ன; பனங்குலைகள் சிரித்திட்ட பாங்குதானென்ன; தங்கள் வீட்டுத் திருமணத்தில் கூட இந்தப் பரபரப்பைக் காட்டாத இளைஞர் கூட்டத்தின் ஆர்வத் துடிப்பென்ன இத்தனையும் ஒரு அரசியல் மாநாட்டிற்கா என்றால், இல்லை — நாடகத்திற்கு!

''நாடகம் மட்டும் துவங்கட்டும், கல், மழையாகப் பொழியப் போகிறதா இல்லையாவென்று பார்!''—இப்படிச் சொன்ன 'விருதுநகர்' ஜோசியம் காதில் விழத்தான் செய்தது. அவர் வரவில்லை என்று தெரிந்தும் போன ஆண்டு அவர் பேச இருந்த கூட்டம் பட்ட பாடு நமக்குத் தெரியாதா! அப்படியிருக்க நாடகமா நாடகம் — அது நடக்குமா? இப்படி மீசைமுறுக்கிகளின் சவால்களுக்கு இடையே, அண்ணா அவர்களும், ஈ. வே. கி. சம்பத்தும் நடிப்பிசைப் புலவர் கே. ஆர். ராமசாமியும் பங்கேற்ற, சந்திரமோகன் அல்லது சிவாஜி கண்ட இந்து ராஜ்யம் என்ற நாடகம் நடத்த ஏற்பாடாகி விட்டது. வசூலாகும் தொகையினை, மூன்றாகப் பிரித்து 'திராவிடநாடு' இதழின் வளர்ச்சிக்கும், தி. மு. க.வின் நிதிக்கும், உள்ளூர் கிளையின் நிர்வாகச் செலவுக்கும் தருவதெனத் திட்டம். நாடகம் நடப்பதற்கு ஒரு மாதத்திற்கு முன்பே டிக்கெட் விற்பனையைத் தொடங்கி விட்டாலும், 'வசூல்' பூரிக்கும்படி இல்லை. கையைக் கடிக்குமோ என்ற பயம்.

மேலோட்டமாகப் பார்க்கும்போது திராவிட இயக்கத்தின் சுயமரியாதைக் கருத்துகள் அந்தக் காலத்தில் செட்டி நாட்டுப் பகுதியில்வலுவாககாலூன்றுவதாகத் தெரிந்தது என்னவோ உண்மை. சொ. முருகப்பா — மரகதவல்லி, வை. சு. சண்முகம்—மஞ்சுளாபாய், ராம சுப்பிரமணியம் — லீலாவதிபோன்றவர்களின் சுய மரியாதை கலப்புத் திருமணங்களை வைத்து, செட்டி நாட்டை திராவிட இயக்கத்தில்,வரவு வைத்ததில் பின்னால் கணக்கில் 'திகட்டு' வந்தது. 'மஞ்சள் பெட்டி'யின்மீது அப்பகுதி மக்களுக்கு இருந்த அசைக்க முடியாத குருட்டு மோகமும், ஒரு காரணம் என்றாலும், பெரியார் அவர்களின் ருசிய நாட்டுப் பயணமும் அதன் பின் அவரது பேச்சில் தலை தூக்கிய கடுரமான பொதுவுடைமை சிந்தனைகளும், கடவுளார்கள் பெரியாரிடம் பட்ட பாடும் முக்கிய காரணங்களாகும்.

பக்தியை வெறும் நடிப்பாகவோ பொழுதுபோக்காகவோ கருதாமல் அன்றாட நெறி முறைகளில் அதுவும் ஒன்றாகக் கற்பித்துக் கொண்ட செட்டி நாட்டு மக்களிடம் திராவிட இயக்கம் தூவிய வித்துக்கள் அமோக விளைச்சலைத் தரா விட்டாலும், அங்கொன்றும் இங்கொன்றுமாக'முது கதிர்கொண்டை' கொண்ட பயிர்களை விளைவிக்கத் தவறவில்லை. அந்த இளந் தலைமுறையினரின் முன்னோடிகளாகத் திகழ்ந்தவர்கள்தான் 'பொன்னி' ஆசிரியர் திரு. முருகு சுப்பிரமணியமும் அதன் நிர்வாகியுமான திரு. அரு. பெரியண்ணனுமாவார். இந்த இரட்டையர் செய்த கழகப் பணி, இலக்கியப்

அண்ணாவை வெல்ல உலகில் யாருமில்லை!

''திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவராக நான் அண்ணா அவர்களை நாற்பதாண்டுகளாக அறிவேன்.

''1927முதல் அவரது வாழ்க்கையை நான்கவனித்து வருகிறேன். பல சந்தர்ப்பங்களில் அவரது ஏற்றம் கண்டு மகிழ்ந்திருக்கிறேன். வேறு சில நேரங்களில் அவரது துன்பங்களைக் கண்டு மன வேதனையும் பட்டதுண்டு.

''தமிழ்ப் பேச்சாற்றலில் அவர் எல்லோரையும் மீறியவர். ஆங்கிலத்திலும் அவருக்கிணையானவர் உலகில்இல்லை. நா நலம் வாய்ந்த பேச்சாளர் அவர். நா நலம் மட்டும் வேறு சிலரிடம் இருக்கக் கூடும். ஆனால் கருத்தாழத்தோடு கூடிய நா நலம் காண்பதரிது. அண்ணாவின் சொற்பொழிவுகளில் கருத்துக்கள் குவிந்திருக்கும். இதுவே ஒரு மனிதரை மற்றவர்களுக் கெல்லாம் தலைவராக்குகிறது.

''இன்று அண்ணா எல்லா மக்களின் உற்சாக மிக்க நல்லாதரவினையும் உயர் மதிப்பினையும் பெற்றுத்திகழ்கிறார். 'அண்ணா' என்று அழைக்கப்படுகின்றஅவர் ஓர் சர்வாதிகாரி அல்ல என்பதால் எல்லோரும் அவரை அண்ணா என்றழைக்கும்போது அவர்கள் உள்ளத்தில் எல்லாம் இழையோடுவது பிரிக்க முடியாத சகோதர பாசம்.''

—அண்ணா சிலை திறப்பு விழாவில்
ஏ.ஆர். முதலியார்

பணிக்குச் சற்றும் குறைந்ததல்ல.

நாடகத்திற்கு வெளியூர்களில் விளம்பரம் செய்வது — அத்துடன் டிக்கெட் விற்பனை செய்வது— இந்தப் பணியை என்னிடம் ஒப்படைந்திருந்தார்கள், இரட்டையர்.காரைக் கண்டதுமே கதவை மூடிக் கொண்டனர் சிலர்; ஆளைப் பார்த்ததும் அசட்டுச்சிரிப்பு சிரித்தே நகர்த்தப் பார்த்தனர் சிலர். மொத்தத்தில் விளக்கெண்ணை செலவு பிள்ளை பிழைக்காது போல் தோன்றியது. ஆனால்,இரட்டையர்களோ திடமாக இருந்தனர்.

அதுவும் மெய்த்தது. நாடகத்தன்று புதுக்கோட்டைக்குப் புதுப் பொலிவு வந்து விட்டது. ஓடிவந்த கார்கள், உருண்டு வந்த சைக்கிள்கள், நாடி வந்த நபர்கள் — எங்கும் எதிலும் அண்ணாவைப் பற்றியும் அவர் நடிக்கவிருந்த நாடகம்பற்றியுமே பேச்சு. இத்தனை ஆர்வமும் பற்றும் எங்குதான் ஒண்டியிருந்ததோ!

அண்ணா தம் நண்பர்களுடன் திருச்சியிலிருந்து புதுக் கோட்டை வந்து விட்டார் என்றும், அதுவும் சாந்தநாதபுரத்திலுள்ள முருகு சுப்பிரமணியத்தின் வீட்டில் ஓய்வெடுக்கிறார் என்று கேள்விப்பட்டதும், கடமை, பொறுப்புகளை கை கழுவிட்டு, அவரை தரிசிக்க கால்கள் நிலைகொள்ளவில்லை.

சம்பத்திற்கு உண்ட மயக்கம்; நடிப்பிசைப் புலவருக்கு பயணக் களைப்பு; பூவாளூர் பொன்னம்பலனாருக்கு வசூல் கவலை; இவைகளில் எதுவும் அண்ணா அவர்களைத் தொடப் பயந்தனவோ என்னவோ அவர் முகத்தில் சோர்வோ, களைப்போயின்றி ஆற்றிலே ஆசை தீர குளித்தவரைப் போல 'நிர்மல'மாக இருந்தார். அவரது பேச்சோ, செட்டி நாட்டினர் 'கொண்டுவிற்க' போன இடத்திலேயே சொத்துக்களை வாங்கியதற்குப் பதில் தமிழகத்திலே சொத்துக்களை வாங்கியிருந்தால், பர்மாயுத்தம் இவ்வளவு தூரம் பாதித்திருக்காது என்ற தோரணையில் இருந்தது.

என் வணக்கம் அவரது சிந்தனையை கலைக்கிறது.

அருகே இருந்த முருகு அவர்கள், ''அண்ணா! இவர் தான் 'வாழ்வு' ஆசிரியர் நாராயணன். நகரக் கழகத்தின் துணைச் செயலாளர்.'' என்று அறிமுகம் செய்கிறார்.

''அப்படியா? ஒன்றிரண்டு இதழ்கள் பார்த்தேன். தாக்குதல்கள் கண்மூக்குத் தெரியாமல் இருந்தது. தினசரி ஆசிரியர் டி. எஸ். சொக்கலிங்கத்தைக் கூடக் கடுமையாகத் தாக்கி கட்டுரை இருந்தது. அப்படியெல்லாம் எழுதுவது நல்ல துவக்கமல்ல; தாக்குதல் இருக்க வேண்டியதுதான் ஆனால் அது தாங்கும்படியாக இருக்க வேண்டுமே தவிர, தகிக்கும் படியாக இருக்கக் கூடாது.

திருச்சி 'நகர தூதன்' ஆசிரியர் திருமலை சாமி கூட என்னை என்ன பிடி பிடிக்கிறார். அந்தப் பேனா நர்த்தனத்தை எனக்கே 'ஒன்ஸ்மோர்' கேட்கத் தோன்றுகிறது!''

உபதேசத்தை அப்படியே ஏற்கும் சீடனாக மாறுகிறேன் நான்.

அடுத்து அண்ணா கேட்ட கேள்வி: ''எவ்வளவு முதல் போட்டீர்கள்?''

நான் ஒரு தொகையைச் சொல்கிறேன்.

''பெட்டிக் கடை வைக்கவே போதாதே. சொந்த 'பிரஸ்' வைத்து, ஒழுங்காக வாங்கிப் படிக்கவாசகர்கள் இருந்தாலும் நமக்கு கிடைக்கும் விற்பனையாளர்கள் 'சிசுஹத்தி' செய்யத்

தயங்க மாட்டார்களே!''

அண்ணா ஏதோ யோசித்து விட்டு, ''ஆமாம்! துணையாசிரியர் எஸ். கஜேந்திரன் என்று போட்டிருக்கிறீர்களே; கோவையில் இருப்பவர் எப்படி உதவுகிறார்?'' என்றார்.

ஈ. வே. கி. சம்பத்தின் தங்கை திருமதி மிராண்டா அவர்களின் கணவரே திரு. எஸ். கஜேந்திரன். தற்சமயம் தமிழக அரசில் உதவிச் செயலாளர் பதவியில் இருக்கும் அவர், முன்பு கோவை விஞ்ஞானி ஜி. டி. நாயுடுவிடம் பணியாற்றியது ஒரு காலம்.

''கஜேந்திரன் அவர்களுக்கும் எனக்கும் கடிதப் பழக்கமே தவிர, நேரில் சந்தித்ததே இல்லை'' என்கிறேன் நான்.

''அப்படியா! பிசிராந்தையார் — கோப்பெருஞ் சோழன் நட்பா!''

அண்ணாவின் நகைச்சுவையால் எழுந்த சிரிப்பில், சம்பத் அவர்களின் நீண்ட துயில் கலைகிறது. எழுந்தவர், ''அண்ணா! நானும் பேராசிரியரும் சேர்ந்து 'புதுவாழ்வு' என்ற மாதமிருமுறை இதழ் நடத்தப் போகிறோம்,'' என்றார்.

''தூங்கி விழித்தால் வாழ்வுதானே!'' என்று அண்ணா சொன்னதும்சிரிப்பு அலைமோதுகிறது.

இதையெல்லாம் ரசித்துக் கொண்டிருந்த சமையல்காரரின்கால்களுக் கிடையே தவளையொன்று சிக்க — அவரோ குதியோ குதியென்று குதித்ததோடல்லாமல், 'தவக்களை' 'தவக்களை' என்று ஒரே அலறல். இந்த நிகழ்ச்சி அண்ணாவுக்கு ஒரு அபூர்வமான வசனத்திற்கு அடி எடுத்துக் கொடுத்தது. உடனே அண்ணா பக்கத்தில் நின்று கொண்டிருந்த எம். எம். கிருஷ்ணனை அழைத்து, ''இதைக் கவனித்தாயா! காகபட்டராக நான் நிஷ்டையில் அமர்ந்திருக்கும் போது, என்ன குருவே, தங்கள் முகத்தில் 'தவக்களை' தாண்டவமாடுகிறது என்பாயே, அதை நாடகத்தில் உச்சரிக்கும்போது, 'தவக்களை' என்று இந்தப் பணியாள் சொன்னதுபோல் நீ உச்சரித்தால் நல்ல 'எபக்ட்' இருக்காதா?'' என்றார் அண்ணா.

அண்ணா சொன்னது போலவே அன்று நாடகத்தில் அந்தக் கட்டம் பலத்த கைத் தட்டலைப் பெற்றது.

எதிர்பாராத விதமாக நாடகத்திற்கு 'ஹவுஸ் புல்'. நாடகமும் வெகு சிறப்பு. விழுந்த கைத்தட்டல்களுக்கும் அலை மோதிய வெடிச் சிரிப்புகளுக்கும் குறைவில்லை. அண்ணா ஜடா முடியுடன் மேடையில் தோன்றிய ஒவ்வொரு காட்சிக்கும் ஒரே ஆரவாரம். இந்த உச்சக் கட்டத்தில் நடக்காத ஒன்று நடந்து விட்டது. கழகத் தொண்டரொருவர் மேடையில் திரைக்குப் பின்னே யும் முன்னேயும் நடந்த போது, கால் தடுமாறி, மின்சார இணைப்பின் மீது இடறி விழ, மின்சார இணைப்பு துண்டிக்கப்பட்டு, மேடை மட்டும் சற்று நேரம் இருண்டு விட்டது. மைக்கும் பேசவில்லை. நல்ல உச்சகட்டம் வேறு. ரசிகர்களை விட கழக முன்னணியினருக்கு அந்தத் தொண்டர் மீது அடங்காக்கோபம். ஆளுக்கொருவர் வாய்க்கு வந்தபடி வசை பாடினர்.

தொண்டரோ நடுங்கிப் போனார். மறுபடியும் மின்சார இணைப்பு வந்துவிடவே அண்ணா விட்ட இடத்திலிருந்து வசனத்தைப் பேச ஆரம்பித்தார். ''சிவாஜி சத்ரபதியே! இருளுக்குப் பின் ஒளி வந்து விட்டது'' — என்று இணைத்துப் பேசியதும் கொட்டகையே அதிரும்படி கைத் தட்டல்.

நாடகம் முடிந்ததும் தனக்கே உரித்தான நமட்டுச் சிரிப்புடன், ''அந்தத் தொண்டரை ஏன் இப்படிக் கோபித்தீர்கள். அவர் இல்லையென்றால், என் மானம் கப்பல் ஏறியிருக்கும். என்னடா செய்வது என்று தவித்த நேரத்தில், இருட்டும் வந்தது. இதுதான் சமயம். நழுவ விடுவேனா? அவிழ்ந்து தொங்கிக்கொண்டிருந்த தாடியை இழுத்துப் பிடித்து முடிச்சுப் போட்டுக் கொண்டேன்.'' என்றாரே அண்ணா, கொஞ்சமும் கோபிக்காமல்.

திட்டு வாங்கிய தொண்டரின் முகத்திலேதான் எத்தனை கம்பீரம்! எத்தனை பெருமிதம்!! ஃ

விழியும் - மொழியும்

நம்முடைய மொழியை நாம் கண்போல் காத்து வருகிறோம். அந்தக் கண்ணில் சிறு துரும்பு பட்டாலும் எரிச்சல் காணத்தான் செய்யும். அதனால் உடல்கூட எரிச்சல் காணுவது போல் இருக்கும். அந்த நேரத்தில் யாரேனும் ஏதாவது கேட்டால் எரிந்து விழுவோம். நம் கண்கள் கோபத்தால் மேலும் சிவந்து விடும். இதுபட்டவர்களுக்குத் தெரியும்.

கண்ணுக்கு மையிடுவது போல பிற மொழிகளைப் பயன்படுத்த வேண்டும். மை அதிகமானால் கண்ணை எப்படி அரித்து விடுகிறதோ அதுபோல பிறமொழிகள் அதிகம் கலப்பதும் நம் மொழிக்கு ஆபத்தான நிலையை உண்டாக்கும்.

-அறிஞர் அண்ணா

வாழ்வாங்கு
வாழ்வதற்கு
வண்ணமிகு
சாதனங்கள்
சுலபத்
தவணைகளில்
வழங்குவோர்:
அருள் & கோ
45, ஜோன்ஸ் ரோடு, சைதாப்பேட்டை, சென்னை-15.
போன்: 441524
கிளை அலுவலகங்கள்:
70, திருச்சி ரோடு, சேலம்-1 போன்: 5033
60, ஜவகர் ரோடு, விழுப்புரம்.
சேலத்தில் கிராமபோன் இசைத்தட்டுகள் ஏர்கண்டிஷன் ஷோரூமில் கிடைக்கிறது.

அண்ணா வரவேற்ற ஆகஸ்ட் 15

ஆகஸ்ட் 15–ம் நாள் இந்திய வரலாற்றில் மட்டுமின்றி இன்பத் தமிழக வரலாற்றிலும் தனிச் சிறப்புப் பெற்ற நாள் என்றே சொல்ல வேண்டும். காரணம் பேரறிஞர் அண்ணா ஆகஸ்ட்–15 பற்றித் தமது 'திராவிட நாடு' வார இதழில் (10–8–1947ம் நாள் வெளியீட்டில்) எழுதிய பொன் தகட்டில் வைர எழுத்துக்களால் பொறிக்கத்தக்க கட்டுரையே ஆகும்.

'ஆகஸ்ட்–15' என்ற தலைப்பில் தாமே கையொப்பமிட்டு பேரறிஞர் அண்ணா அவர்கள் ஏழு பக்கங்கட்குச் சற்றே மேலாகத் 'திராவிட நாடு' இதழில் எழுதியுள்ள கட்டுரை 24 ஆண்டுகட்கு முன் 47 வயதில் பேரறிஞர் அண்ணா அவர்கட்கு இருந்த எழுத்தாற்றலையும், எண்ண ஆற்றலையும் உள்ளங்கை நெல்லிக் கனியாய் உலகுக்கு உணர்த்த வல்லதாகும். எல்லாவற்றிற்கும் மேலாக அக்கட்டுரையே பேரறிஞர் அண்ணாவின் அரசியல் வாழ்வுக்கு ஓர் அகமுக — உள்ளார்ந்த திருப்பம் என்பதும் ஊன்றிப் படிப்பார்க்கு எளிதில் விளங்கத்தக்க உண்மையாகும். நாம் அறிந்த வகையில் இன்று தி.மு.க. ஆளும் கட்சியாய் மாறி ஆட்சியில் அமர்ந்திருப்பதற்கும் — ஏன்? பெரியாரிடமிருந்து பிரிந்து தி. மு. க. தோன்றியதற்குமே ஒரு வகையில் தலையூற்றாக விளங்குவது பேரறிஞர் அண்ணாவின் 'ஆகஸ்ட்–15' கட்டுரையே எனலாம்.

1. ''இரு எதிரிகளில் ஒரு எதிரி ஒழிந்த நாள்'', 2. உலகம் முழுவதும் கவனிக்கும் சம்பவம்', 3. 'நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் அல்ல'', 4. ''ஒரு தவறு இன்னொன்றுக்குச் சமாதானமல்ல'' 5. மதிப்பை உயர்த்தும் நாள்'' 6. ''விழாக் கொண்டாடுவது தவறோ துரோகமோ அல்ல'' என்ற பக்கத் தலைப்புகளோடு அச்சாகியுள்ள அக்கட்டுரை திரும்பத் திரும்பப் படிக்கத்தக்கது. ஆராயத்தக்கது.

இச்சிறு ஆய்வுக் கட்டுரையில்–ஆகஸ்ட் பதினைந்து கட்டுரையிலிருந்து இடச்சுருக்கம் கருதி சில பகுதிகளையும், அவற்றால் விளங்கும் பேரறிஞரின் அறிவாற்றல், பண்பு நலன்கள் பலவற்றையும் பார்ப்போம்.

''ஆகஸ்டு பதினைந்தாம் தேதி இந்திய சுதந்திர தினம். புதிய இந்திய சர்க்காரின் அமைப்பு நாள்.

''ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பாகிஸ்தான் வெற்றி நாள். புதிய பாகிஸ்தான் சர்க்கார் அமைப்பு நாள்.

''ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பிரிட்டிஷ் ஆட்சி இந்தியாவிலும், பாகிஸ்தானிலும் ஒழியும் நாள்.

உலகிலே பேசப்படும் நாள்.

''வரலாற்றில் இந்நாள் இடம் பெறுகிறது.

''அந்நாளிலே இந்தத் துணைக் கண்டத்

திலே 200 ஆண்டுகட்கு மேலாகப் பறந்து கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியக் கொடி பாகிஸ்தான், இந்தியா ஆகிய இரு அரசு வட்டாரங்களிலிருந்தும் கீழே இறங்குவதுடன் இரு இடங்களிலும் சுதந்திரக் கொடிகள் பறக்க விடப்படுகின்றன.

''ஆகஸ்ட் பதினைந்தாம் தேதி பிரிட்டிஷ் ஆட்சி நீங்குவதால், அந்நாள் வெற்றி நாளாகக் கொண்டாடப்படுகிறது. இரு கட்சிகளால் மட்டுமல்ல—இரு சர்க்காராலும்.''

இப்படி ஆரம்பமாகிறது கட்டுரை. அரசியல் மாற்றத்தை அக்கண்கொண்டு காட்சிப்படுத்தும் ஆற்றல் அவருக்கு இருந்தமை விளங்கும்; அரசியல் விடுதலையைக் கொண்டாடுவது கட்சிகள் அல்ல — சர்க்கார்கள் என்ற வேறுபாட்டை அவர்கள் அனைவருக்கும் விளங்க வைக்கும் வீறுபாடும் தெளிவாகும்.

''புதிய சர்க்கார்கள், தத்தமது ஆட்சி வட்டாரங்களிலே, நல்லாட்சி நடத்தியாக வேண்டுமென்று வலியுறுத்த அதற்காகக் கிளர்ச்சி செய்ய, போராட யாருக்கும் உரிமை உண்டு.

''பிரிட்டிஷ் ஆட்சி அன்றைய தினம் நீங்குகிறது என்பது மக்களுக்குள்ள இந்த உரிமையை அதிகப்படுத்துகிறது''

இப்பகுதிதான் இன்றைய தி.மு.க. ஆட்சிக்கு அன்றைக்கே அண்ணு இட்ட ஆல வித்து.

''நாட்டு மக்கள் அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுவதும், மக்களின் பிறப்புரிமையுமாகிய சுய ராஜ்யத்துக்காக, தாங்கள் சரி என்று கொண்ட திட்டங்களின்படி நடந்து அதனுல் ஏற்பட்ட கஷ்ட நஷ்டங்களை, சிறைவாசத்தை, தீவாந்திர சிட்சையை, தூக்குமேடையைக் கூட மனமுவந்து ஏற்றுக் கொண்ட தியாகிகளுக்கு, தியாகத்தை கொண்ட கொள்கைக்காக கஷ்ட நஷ்டம் ஏற்க வேண்டும் என்ற கோட்பாட்டை மதிக்கும் திராவிடர் கழகத்தாராகிய நாம் வீர வணக்கம் செலுத்த வேண்டும்.''

பேரறிஞர் அண்ணுவின் அடி நெஞ்சில் அழுந்திக் கிடந்த நாட்டுப் பற்று இச்சொற்களில் இருள் கிழித்து வெளிவரும் உதயசூரியனைக் காட்சி அளிக்கிறது அல்லவா?

''நிர்வாகத் தலைவரின் அறிக்கை... அதிலே, ஆகஸ்ட்—15 துக்கநாள் என்று குறிக்கப்பட்டது. அதற்குப் பிறகு ஆகஸ்ட்—15—ல் கலந்து கொள்ளக் கூடாது என்று 'விடுதலை' அறிவித்தது.

''இந்தப் போக்கு விளக்கம் தருவதாகவோ, நமது எதிர் காலத்தைச் செம்மைப்படுத்தும் முறையாகவோ தோன்றவில்லை.

''நம்முடைய வீர இளைஞர்கள் மீது, இதுநாள் வரையிலே, சுமத்தப்பட்ட பழிச்சொல், நாம் பிரிட்டிஷாரின் அடிமைகள் என்பது.

''அந்தப் பிரிட்டிஷாரின் ஆட்சி முடியும்போது, நாம் துக்கம் கொண்டாடுவது, இந்தப் பழிச்சொல்லை, நாமாகவே நம்மீது சுமத்தும்படி, அவர்களை வற்புறுத்தி அழைப்பதாகும்.

''நமது வாழ்நாளில் நாம் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய ஆட்சியை ஏற்க விரும்பாதவர்கள்.

''அது ஒழிய வேண்டும் என்ற நோக்கமுடையவர்கள். காங்கிரசார் பழிசுமத்தியது போல நாம் பிரிட்டிஷாரின் அடிமைகளல்ல என்பதை விளக்க நமக்கு இருக்கும் ஒரு நாள், கடைசி நாள் ஆகஸ்ட்—15. நாம் ஏன் அச்சந்தர்ப்பத்தை இழந்து அழியாத பழிச்சொல்லைத் தேடிக்கொள்ள வேண்டும்?''

உள்ளத்தை உருக்கும் இச்சொற்கள் பேரறிஞரின் பழியஞ்சும் பெருந்தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. வயிற்று வாழ்வினும் வரலாற்று வாழ்வே வாழ்வு என்று அவர் மதித்த மாண்பை நிலை நாட்டும் நேர்மொழிகள்.

''ஆகஸ்டு 15ந் தேதி இரண்டு நூற்றுண்டுகளாக இந்தத் துணைக் கண்டத்தின் மீது இருந்து வந்த பழிச்சொல்லை இழிவை நீக்கும் நாள். அது திராவிடருக்கும்திருநாள்தான்—துக்கநாள்ஆகாது.

''கட்சிகளின் முக்கியஸ்தர்கள் கலந்து பேசியோ, நிர்வாகக் கமிட்டிகூடியோ இருந்தால் இந்த நிலை ஏற்பட்டிராது.

''தலைவரின் அறிக்கை, நிர்வாகத் தலைவரின் அறிக்கை, விடுதலையில் அறிக்கை என்ற முறையிலே திடீர் திடீரென வெளிவந்தன. எனவேதான் நான் எனது கருத்தை விளக்கச் சந்தர்ப்பம் ஏற்படவில்லை. அதை வெளியிட பத்திரிகையில் எழுதுவதுகூட அவசியமாகி விட்டது.''

ஆம். இச்சொற்களே திராவிட முன்னேற்றக் கழகத்தின் முதல் முழக்கம்!

''ஆகஸ்டு 15ந் தேதி பற்றி ஏற்கனவே பல அறிக்கைகள் வெளிவந்துவிட்டனவே—இப்போது வேறுவிதமாகக் கருத்தை வெளியிட்டால் என்ன பயன்? எப்படி ஏற்கனவே கொண்ட போக்கை

மாற்றிக் கொள்வது என்று கேட்கத் தோன்றும். நான் வெளியிடும் விளக்கம் சற்றுத் தாமதித்து வெளிவந்தது என்ற போதிலும் இவ்விதமான கருத்து, மத்திய திராவிடர் கழகம், கழகப் பத்திரிகை நிலையம், எல்லா ஊர்களிலுமுள்ள திராவிடர் கழகங்கள் ஆகிய இடங்கட்கு பொள்ளாச்சி திராவிடர் கழகத்தாரால் ஏற்கனவே அறிவிக்கப்பட்டது.

''பொள்ளாச்சியில், திராவிடர் கழகத்தாரை, சுதந்தர விழாவில் கலந்து கொள்ளும்படி அவ்வூர் காங்கிரசார் அழைத்தனர். அது போன்றே வேறு பல ஊர்களிலும் அழைப்புகள் கிடைத்தன. அழைப்புப் பெற்ற பொள்ளாச்சி திராவிடர் கழகம், 'ஆகஸ்டு பதினைந்தை நாம் துக்கநாள் என்று கொள்ளக்கூடாது. உண்மையிலேயே அந்நாள் நமக்கும் மகிழ்ச்சி நாள்தான் என்று தீர்மானம் நிறைவேற்றி எல்லாத் திராவிடர் கழகங்களுக்கும் அனுப்பி வைத்தது.

''பொள்ளாச்சி திராவிடர் கழகத்தார் ஏற்கனவே வெளியிட்டிருப்பதால், இப்போது நான் வெளியிடும் இந்தக் கருத்துக்கள் திடீரென கழகத்துக்கு வந்து சேருகின்றன என்று கூறமுடியாது.

''இவ்வளவு தூரம் ஆகஸ்டு 15 ந் தேதியைத் துக்கநாள் என்று அறிக்கைகள் மூலம் வெளியிட்டுவிட்டு, இன்று எப்படி அதனை மாற்றுவது என்று கேட்பதானால், இப்போது காலம்கடந்து விடவில்லை. இனியும் மாற்ற முடியும். என்பதை விளக்க விரும்புகிறேன்.

''சில ஆண்டுகளுக்கு முன்பு, கம்பராமாயணத்தைக் கொளுத்துவதற்கெனப் பெரியார் அறிக்கை வெளியிட்டு விசேஷ மாநாடு சேலத்தில் கூட்டப்பட்டது. நான் தலைமை வகித்தேன். காலை நிகழ்ச்சியிலேகூட கம்பராமாயணம் கொளுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியே சொற்பொழிவுகள் நடைபெற்றன. பிற்பகலிலே, சர் சண்முகம் தந்தி கொடுத்தார். கொளுத்த வேண்டாம் என்று. அப்படியே கொளுத்துவது அதே இடத்தில், அதே நேரத்தில் கைவிடப்பட்டது. அது சரியா தவறா என்பது அல்ல இப்போது பிரச்சினை. அந்தக் கடைசி நேரத்திலேயும் செய்ய வேண்டுமென்று கருதப்பட்ட காரியம், வேறு ஒருவரின் யோசனைப்படி கைவிடப்பட்டது.

''ஆகவே ஆகஸ்டு 15ந் தேதி பற்றி திராவிடர் கழகம் தன் கருத்தை இந்த நேரத்திலும் மாற்றிக் கொள்ள முடியும் மாற்றிக் கொள்ளலாம்—முறையுங் கூடத்தான்—அதற்கு முன் மாதிரியாகச் சேலம் சம்பவம் இருக்கிறது.

''ஆனால் ஒரே ஒரு வித்தியாசம். சேலத்திலே கம்பராமாயணத்தைக் கடைசி நேரத்தில் ஒரே தந்தியின் மூலம் கொளுத்த வேண்டாமென்று கூறியவர் ஒரு சர். நான் ஒரு சாமானியன். அவர் கட்சிக்காக ஓய்வு நேரத்திலும் உழைத்ததில்லை— நான்உழைத்து அலுத்தவன். அவர் இன்று இந்திய சர்க்காரிலே நிதி மந்திரி! நானோ, இதே அறிக்கையின் விளைவாகவேகூட உங்களில் பலராலேகூட, சந்தேகத்துக்கும் நிந்தனைக்கும் ஆளாகக் கூடியநிலையில் உள்ளவன். ஆனால் நான் கூறுவது உள்ளத்திலிருந்து வருபவை.''

மேற்கண்ட சொற்கள் பேரறிஞர் அண்ணாவுக்கே உரிய அசைக்க முடியாத வாதத் திறத்துக்கு மறுக்க முடியாத மற்றுமொரு சான்று. சிங்கத்தை அதன் குகையிலேயே சந்திக்கிறார் பேரறிஞர்!

இனிப் படிக்கப் படிக்க நம் மூச்சை அள்ளும்—ஆகஸ்டு பதினைந்து' கட்டுரையின் 'மணிமுடி'யான பகுதி:

''இவ்வளவு கூறும் நான், இதற்கு முன்பு கழகம் எடுத்துக் கொண்ட, எந்த முக்கியமான திட்டத்துக்கும் வேலை முறைக்கும் கட்டுப்படாமல் இருந்து வந்தவனல்ல

அபேட்சகரும்-வேட்பாளரும்

''தமிழர்களாகிய நாம் பிறமொழிகள் கலவாமல் எழுதுவது தமிழுக்குள்ள சிறப்பை உயர்த்திக் காட்டத்தான். பிற மொழிகள் கலப்பின்றி எழுதும் ஆற்றல் தமிழ் மொழிக்குத்தான் உண்டு. நம் இலக்கியங்களில் உள்ள சொற்களில் பலவற்றை இன்னமும் நாம் பயன்படுத்தாமல் இருக்கின்றோம். அவற்றை நாம் பயன்படுத்த வேண்டும். துவக்க காலத்தில் சிறிது சிரமமாக இருந்தாலும் போகப் போகச் சரியாகிவிடும்.

உதாரணமாக — 'அபேட்சகர்' என்று சொல்லுவதை 'வேட்பாளர்' என்று கூறுகிறோம். ஒரு சமயம் நண்பர்களிடம் நான் உரையாடும் போது 'அபேட்சகர் யார்?' என்று கேட்டேன். ''நான்தான் 'வேட்பாளராக நிற்கிறேன்'' என்று அந்த நண்பர் பதிலளித்தார். இதுபோல நல்ல தமிழ் வார்த்தைகளை மெல்ல மெல்லப் புகுத்த வேண்டும்.

- அறிஞர் அண்ணா

''கழகம் நெருக்கடியான கட்டத்லே இருந்த போதெல்லாம் விட்டுட்டு ஓடினவனல்ல. பட்டம் பதவிகளை வைத்துக் கொண்டு விட்டுவிட முடியாது என்று கூறினவனல்ல. தேர்தலுக்கு நிற்கக் கூடாது என்று கட்சி தீர்மானித்த பிறகு மீறித் தேர்தலுக்கு நின்றவனல்ல. சிறைபுக வேண்டிய திட்டம் வந்த போது, ஒளிந்து கொண்டவனுமல்ல. அடிக்கடி கட்சியால் பலவற்றைத் தேடிக் கொண்டவனுமல்ல. கட்சிக்குள்ளாகவே, சேலம் மாகாண மாநாட்டின் போது செல்வவான்களின் மயக்க மொழியில் வீழ்ந்தவனல்ல—இது வரை வழுக்கி விழுந்ததில்லை. திட்டங்களைக் கண்டித்ததோ — மாற்ற வேண்டுமென்று கூறியதோ — கட்டுக்கு அடங்க மறுத்ததோ இல்லை — ஆனால் இந்த ஆகஸ்டு 15—ந் தேதி பற்றிய பிரச்னை, உண்மையாகவே, என் போல் எண்ணற்றவர்கட்கு மனவேதனை தரக் கூடிய விதத்திலே, தவறான முறையிலே, திருப்பப்பட்டிருக்கிறது. ஆகவேதான் ஆகஸ்டு 15ந் தேதியை துக்க நாள் என்று அறிவித்து, அதற்காக அறிக்கைகள் வெளியிட்டு வருவது தவறு என்று தெரிவிக்கலானேன். ஆகஸ்டு 15ந் தேதி நாமும் கலந்து கொண்டாட வேண்டிய மகிழ்ச்சிதரும் நாள். உலகத்தின் முன்பு நம் மதிப்பை உயர்த்தும் நாள், என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன். நம்புவதுடன் ஆகஸ்டு 15—ந் தேதி விழாக் கொண்டாடுவது எந்த வகையிலும் தவறோ, துரோகமோ அல்ல என்று எண்ணுகிறேன்.

''இது கட்சிக் கட்டுப்பாட்டையும், தலைவரின் அறிக்கையையும் மீறுவதாகும் என்று கருதப்பட்டு, என் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்க முன் வருவதானாலும் என் வாழ்நாளில், பிரிட்டிஷ் ஆட்சி கூடாது என்ற கொள்கையைக் கொண்டவனே நான் என்பதை மக்களுக்குக் கூற எனக்கிருக்கும் ஒரே நாளான கடைசி நாளான, ஆகஸ்டு 15ந் தேதியின் முக்கியத்துவத்துக்காக வேண்டி கட்சியின் கடுமையான நடவடிக்கைக்கும் சம்மதிக்க வேண்டியவனாகிறேன்.

''தலைவரும், கட்சியும், என்போக்குத் தவறு என்று கருதி, என்னைக் கட்சியைவிட்டு நீக்கினாலும் நான், சமூக சீர்திருத்தம், பொருளாதார சமத்துவம், திராவிடத் தனி அரசு என்னும் அடிப்படைக் கொள்கைகளைக் கட்சிக்கு வெளியே இருந்தாகிலும் செய்து வருவேன் என்பதைக் கூறி, இந்த அறிக்கையை முடிக்கிறேன். வணக்கம்.

—சி.என். அண்ணாதுரை.''

ஆம். அறிஞர் அண்ணா ஓர் உயர்ந்த மனிதர் — உணர்வுலகத் தியாகி — மனசாட்சி மனிதர்; கடமை—கண்ணியம்—கட்டுப்பாடு முறையே அவர் உயிர்—உள்ளம்—உடல்!

சென்னைப் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. நெ. து. சுந்தரவடிவேலு அடிக்கடி சொல்லும் அரிய கருத்து ஒன்று உண்டு. 'ஒருவர் உயர்கிறார் என்றால் அடிப்படையில் அவரிடம் சில உண்மைகள் உயர்வுகள் இருக்க வேண்டும்' என்பது. ஆம். 'ஆயிரத்தில் ஒரு சொல். பேரறிஞரோ கோடியில் ஒருவர்.

தொகுப்பு: தி.வை, சீனிவாசன்!

வங்கமும் கழகமும்!

மொழி குறித்து அண்ணாவும் அவரது அமைச்சரவையும் காட்டி வருகிற உறுதிக்கு நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். சர்வாதிகாரியாக இல்லாமல் அன்பு அண்ணனாக இருக்கும் முதலமைச்சருக்கு ஆதரவாக அவர் பக்கம் நின்று அவர் காட்டும் வழியில் தமிழ் மொழியின் - புகழுக்கு தமிழ்ச் சமுதாயத்தின் புகழுக்கு உழைத்திடுவோம்.

தென்னாட்டில் மட்டுமே இந்தி எதிர்ப்பு உணர்ச்சி என்றுசொல்லி ஒடுக்கப் பார்ப்பார்கள். அது நடவாது. இந்தியாவில் வங்காளம் குஜராத் போன்ற மாநிலங்களும் இந்தியை எதிர்க்கின்றன.

வங்கத்தின் முன்னாள் அமைச்சரான ஜகாங்கிர் கபீர் அங்கே தி.மு. கழகத்தைப் போன்றே கட்சி அமைக்கப் போவதாகக் கூறியுள்ளார்கள். அது எளிதல்ல—கழகத்தைப் போல கட்சி ஏற்படுத்த பல்லாண்டு காலம் பாடுபட்டுக் கடுமையாக உழைத்தாக வேண்டும்.

—அண்ணா சிலை திறப்பு விழாவில் ஏ. ஆர். முதலியார்

மூறெச்சம்

அபசு ரங்களின் [சுயம்வர] அவையில
அவனோர் [ஆன்மயாழ் மீட்டி வந்தான்
தபசு செய்த கன்னிமை களுக்குத்
தாலித்] திலகப் பூவரம் தந்தான்

ஏறுமா றுன கொடிமரக காட்டின்
இளவேனி லாகி அலங்காரம் செய்தவன்
ஆறு களுக்கொரு குறிக்கோ ளாய்முகில்
ஆசை களுக்கொரு அடிப்படை ஆனவன்

காலத்தின் தாகங்கள் தணிக்க வருமொரு
கார்மழை மகளுக்கு வரவேற் பளிக்க
நீலத்தைப் பச்சையை வாங்கி வரைந்தொரு
நேச வானவில் வளைவு சமைத்தவன்

மின்னெத்த தன்சொற் குலாலச்சக் கரத்திலெம்
விதிகளைக் குழைத்துரு வாக்கி மகிழ்ந்தவன்
தன்னத்த மனத்துக் கரித்துகள் கொண்டெம்
தங்கவை கறையின் பற்களை விளக்கியோன்

உலகத்தைச் சூரியகாந்திப்பூ வாக்கிய
'உதயசூ ரிய'னின் ஊர்வலத் தலைவன்
புலம்பும்நீ லாம்பரி உதடுகள் தைத்துப்
புதியபூ பாளப் புரட்சிகள் செய்தவன்

வெறுங்கூ டாகக் கிடந்தஎம் முகத்தி
விலாசம் எழுதி முத்திரை இட்டபின்

கவிஞர் அப்துல் ரகுமான்

திறக்கப் படாததோர் அஞ்சல் பெட்டியுள்
திடுக்கிடத் தான்போய் விழுந்து மறைந்தவன்

பாம்பின் நச்சுப் பற்களிலும் சுவைப்
பாலைக் கறந்தகை ரேகைகள் ஆய்வோம்
வேம்பின் கிளையிலும் அருநெல்லி பறித்த
வித்தைக் காரனின் மைவேலை அறிவோம்

எங்கள் வாக்கிய முற்றெச்சத் திற்கோர்
இலக்கணக் குறிப்பை எழுதி வைப்போம்
கங்குல் வயல்களில் வெளிச்சங்கள் பாய்ச்சிக்
காய்ந்த ஓடையின் ஊற்றுக்கண் தேடுவோம்

பூவினுல் முள்ளையும் ஒளியினுல் இருட்டையும்
புனலினுல் கனலையும் அமுதத்தால் நஞ்சையும்
சாவினுல் வாழ்வையும் வென்றவன் வாகைக்குச்
சமாதான மையினுல் பரணிகள்' எழுதுவோம்

கண்ணீர் நெய்யில் எரியும் இந்தக்
கவலை ஞாபக தீபங்கள் ஏற்றுவோம்
எண்ணக் கடலின் பயணங் களுக்கெலாம்
இவைகளைக் கலங்கரை விளக்குகள் ஆக்குவோம்!

*

மரியாதை இல்லையென்றுல் தமிழகம் பொறுக்காது!

''தமிழ்ப் பண்பாடு, உலகத்தில் எல்லா மனிதர்களையும் சகோதரர்களாகவும், தோழர்களாகவும், ஏற்றுக் கொள்ளும். தன்னிடம் வருபவர்களை வாழ்த்தி வரவேற்கும். எந்த மொழி யையும் உரிய முறையில் மதிக்கும். அறிவுச் செல்வம் உலகின் எந்தக் கோடியில் இருந்தாலும் தேடிச் சென்று எடுத்து வரும். ஆனுல்... தமிழர்கள் தமக்கென்று உள்ளதை ஒருக் காலும் இழக்கச் சம்மதிக்க மாட்டார்கள்.

இங்கிலாந்திலிருந்தும் பிற நாடுகளிலிருந்தும் வருகிற நிபுணர்கள் தமிழ்மொழி அருமையான மொழி என்று கூறு கிற நேரத்தில் அந்த மொழிக்குச் சொந்தக்காரர் நாம் என்று நினைக்கும்போது அந்த மொழி மீது நமக்குப் பற்றுப் பாசம் ஏற் படாமலா இருக்கும்? அத்தகைய மொழிக்கு எந்தக் காலத்தி லாவது — எந்த நோக்குடனுவது—எப்படிப்பட்டவர்களிடமிருந் தாயினும் தனி மரியாதை கிடைக்கவில்லையென்றுல் அதைத் தமிழகம் பொறுத்துக் கொள்ளாது.

ஆழ்கடல் கொந்தளித்துக் கொண்டுதான் இருக்கிறது. பக்குவமாகக் கடக்க வேண்டுமானுல் நல்ல நாவாயின் — கப்ப லின் மூலம் கடக்கலாம். அதுபோல தமிழர்களை அணைத்துக் கொண்டு சென்ருல் அவர்களைவிடச் சிறந்தவர்கள் யாரும் இருக்க முடியாது.

- அறிஞர் அண்ணு

அண்ணாமலையில் அன்றொரு நாள்...

அமைச்சர் ராமச்சந்திரன்

முழுமையாகப் பொதுப்பணியில் ஈடுபட வேண்டுமென்பது நான் படித்து முடித்த உடனேயே ஏற்பட்ட ஆசை. ஆனால் அண்ணா அவர்கள்தான் ''பணி செய்து கொண்டே ஓய்வு நேரத்தில்முடிந்த அளவு செய்யலாம்'' என்று கூறி என் ஆசைக்குத் தடை விதித்து வந்தார்.

66ம் ஆண்டு திண்டிவனம் தங்கவேலு அவர்களின் மகள் திருமணம் அறிஞர் அண்ணா அவர்களின் தலைமையில் நடைபெற்றது. அப்போது அஸிஸ்டெண்ட் எஞ்சினீயராகப் பணியாற்றிக் கொண்டிருந்த நான் திருமண வீட்டில் அண்ணா அவர்களைச் சந்தித்து வேலையை ராஜினாமாச் செய்து விட்டதாகக் கூறினேன்— ''திடீரென ஏன் அப்படிச் செய்தாய்?'' என்று கேட்டார் அண்ணா.

''சுதந்தரமாகப் பொதுப்பணியில் ஈடுபட இயலவில்லை. ஆயிரம் கட்டுப்பாடு கண்காணிப்புகளுக்கிடையில் என் ஆர்வத்தைச் செயல்படுத்த வேண்டி உள்ளது அதனால்தான்'' என்று ஒருவித அச்சத்துடனேயே அண்ணா அவர்களிடம் கூறினேன்.

அண்ணா அவர்கள் சிறிது நேரம் யோசித்துவிட்டு முழுத் திருப்தியுடன் அதற்குச் சம்மதம் தெரிவித்தார்கள். அண்ணாவின் சம்மதம் பெற்ற மறுநாளே நான் உதவிப் பொறியாளர் வேலையை ராஜினாமாச் செய்தேன். அன்றைக்கு நான் வேலையை ராஜினாமா செய்யாமல் அனுமதி கேட்டிருந்தால் ஒப்புக் கொண்டிருக்க மாட்டார்கள் என்றே கருதுகிறேன்.

ஃஃஃ

நான் அண்ணா அவர்களுக்குச் சரியான முறையில் அறிமுகமானது 1956ல் தான். 57 தேர்தலுக்காக அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொறியியல் துறை மாணவர்கள் நிதி சேர்த்தளிக்கும் முயற்சியில் ஈடுபட்டோம். முதன் முதலாகத் தேர்தல் நிதி மாணவர்களின் சார்பாக அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் தான் அளிக்கப்பட்டது. ரூபாய்1001 நிதி அளித்தோம். அப்போது இப்போதைய எம். பி. சோமசுந்தரம் அவர்கள் என்னை அண்ணாவுக்கு அறிமுகம் செய்து வைத்தார்கள். ''ராமச்திரன் எங்க மாதிரி இல்லை — படிப்பில் நல்ல கவனம் செலுத்தக் கூடியவர்'' என்று அண்ணாவிடம் கூறினார். ''அப்படியா மகிழ்ச்சி'' என்றார் அண்ணா.

ஃஃஃ

62 தேர்தலின் போது நான் கட்சியில் உணர்வு கொண்டு இயங்கினேன் என்பதற்காக சென்னையில் பொறியாளராக இருந்த என்னைத் தமிழகத்தின் கோ

பகுதியான சுசீந்திரத்துக்கு மாற்றல்செய்து விட்டார்கள்.

அங்கு நாகர்கோயில் சு. பாலன் அவர்களுடன் தான் எப்போதும் இருப்பேன். பாலன் திருமணத்திற்கு அண்ணு அவர்களை அழைத்தால் இவ்வளவு தூரம் வருவாரா என்று தயங்கிக் கொண்டிருந்த நேரத்தில் நான்தான் நாகர்கோயிலிலிருந்து டிரங்கால் செய்து அண்ணு அவர்களிடம் பேசி திருமணத்திற்குச் சம்மதிக்கச் செய்தேன். திருமண வேலைகள் முழுவதையும் நானே பொறுப்பேற்றுக் கொண்டு நடத்தினேன்.

இதற்காக சுசீந்திரத்திலிருந்து என்னை மேற்குத் தொடர்ச்சி மலையின் ஒரு பகுதியில் அமைந்துள்ள கோதையாறு அணைக்கட்டுக்கு மாற்றினர்கள் — உணவுக்கும் தங்குவதற்கும் அங்கு மிகுந்த கஷ்டப்பட்டேன். தினசரி காலையில் விழித்துப் பார்த்தால் படுக்கை அடியில் ஏதாவது ஒரு பாம்பு சுருண்டு கொண்டு கிடக்கும். வெளியில் சென்றுல் காட்டு யானைகளின் தொல்லை பயங்கரமாக இருக்கும். குறிப்பாக அங்கு இருந்தவரை ''டார்ஜான் வாழ்க்கை''தான் நடத்திவந்தேன்.

ஃஃஃ

1967ல் நான் சட்டமன்ற உறுப்பினராக இருந்த போது, அண்ணு அவர்கள் என்னை மதிப்பீட்டுக் குழுத் தலைவராக நியமித்தார். மதிப்பீட்டுக் குழுத் தலைவராடீன பிறகு குந்தா, ஆளியாறு திட்டங்களை முடித்துக் கொண்டு வந்த போது, கலைஞர் அவர்கள் கோட்டையில் அவர் அறைக்கு என்னை அழைத்து என் செயல் முறைகளைப் பாராட்டினர்.

ஃஃஃ

67 தேர்தல் நேரத்தில் அண்ணு அவர்களுடன் நான் காஞ்சிக்குச் சென்று கொண்டிருந்த போது பஸ் தொழிலை நாட்டுடமையாக்குவது பற்றி அப்போதே விரிவாகப் பேசினர். அதே சமயம் இன்னெரு அருமையான சோஷலிசத் திட்டத்தையும் கூறினர். தொழிற்சாலைகளுக்கு அரசு வழங்கும் கடனை பங்குகளாக மாற்றினுல் அரசுக்கு— நடக்கும் தொழிலில் உரிமையும், அதன் மூலம் வருவாயும், கிடைக்கும் என்றுர்.

ஃஃஃ

65ல் நான் விருத்தாசலத்தில் உதவிப் பொறியாளராக இருந்த போது பொன்பரப்பி கிராமத்தில் நடைபெற்ற விழா ஒன்றிற்கு அண்ணுவை அழைத்தேன். அண்ணு அவர்கள் அவ்விழாவில் கலந்து கொண்டு விளக்கேற்றி வைத்தார். இதில் குறிப்பிடத்தக்க சம்பவம் என்ன என்றுல் — அரசு அதிகாரியான நான்—அப்போது எதிர்க் கட்சித் தலைவரான அண்ணுவை அழைத்து விழா நடத்தியது தான். அதைக்கூட அவ்விழாவில் பேசும் போது அண்ணு அவர்கள் ஜாடையாகக் குறிப்பிட்டார்கள்.

''நான் எதிர்க் கட்சியில் இருந்தாலும் ராமச்சந்திரன் போன்ற பொறியாளர்கள் இங்கு இருப்பதால் கேட்காமலே நல்ல காரியங்கள் நடக்கின்றன. ஆனுல் உடம்பு முழுவதும் ஒரு சீராகப் பருத்தால் தான் உடல் நல்ல நிலையில் இருக்கிறதெனக் கருத முடியும்—ஒரு கால் மட்டும் பருத்துப் பயனில்லை,'' என்று முழுமையாக ஆட்சியைக் கழகத்திடம் ஒப்படையுங்கள் இதைவிட இன்னும் பலன் கிடைக்கும் என்பதை மறைமுகமாக விளக்கினர்.

அண்ணுவை அழைத்து விழா நடத்தினேன் என்பதற்காக விழா முடிவடைந்த 24 மணி நேரத்தில் எனக்கு மாற்றல் உத்தரவு வந்தது. எழுத்துமூலமான ஆர்டர் அல்ல; அப்போதைய அமைச்சர் பூவராகன் தொலைபேசி மூலமாகவே அதைச் செய்து விட்டார்.

ஃஃஃ

சில கம்பெனிகளுக்கு அரசு வழங்கும்

தேவையற்ற சலுகைகளை நிறுத்த வேண்டுமென்பதில் அண்ணா கவனமாக இருந்தார் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு — தாரங்கதாரா கெமிக்கல் இண்டஸ்ட்ரிஸ் கம்பெனிக்கு அண்ணா போயிருந்த போது லாபப் பட்டியலைக் கேட்டுக் கொண்டே வந்தார். மின்சாரக் கட்டணச் சலுகை மூலம் 2 கோடி கிடைக்கும் என்று ஒருவர் சொல்ல, அதுவும் லாபமா? என்று ஒரு கேள்விக் குறி எழுப்பினர் அண்ணா.

ஃஃஃ

இந்திய அரசியல் தலைவர்களே பிரமித்துப் புகழும் வண்ணம் அண்ணா அவர்கள் ராஜதந்திரியாக விளங்கினர்கள். 67 தேர்தலின் போது முதலாளிகளின் ஏகபோக ஏஜெண்டாக விளங்கும் ராஜாஜியையும், அதற்கு நேர் விரோதக் கொள்கையுடையவராக வெளியில் காட்டிக்கொண்டிருக்கும் தோழர் பி. இராம மூர்த்தியையும் அணைத்து தேர்தல் உடன்பாட்டில் வெற்றி கண்டதும், இரு பார்ப்பன குலத் தலைவர்களையே தன் கட்சியை ஆதரிக்கும்படி செய்ததும் உலகில் காணமுடியாத ராஜதந்திரம் என்றே நான் கருதுகிறேன்.

ஃஃஃ

அண்ணா அவர்களின் சொல்லுக்கு அவரின் தம்பியர் கட்டுப்பட்டு நடந்தது போன்றே எதிர்க் கட்சியினரும் நடந்தனர் என்பதை 67ல் சட்டமன்றத்தில் சில நிகழ்ச்சிகள் மூலம் நான் கண்டேன்.

ஒரு சமயம் காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த ராமச்சந்திர துரை என்பவர் கழகத்தவர் மீது கடுமையான குற்றச்சாட்டுகளை வீசிக் கொண்டிருந்தார். அப்போது அண்ணா அவர்கள் அவையில் இல்லை. ஆளும் கட்சியைச் சார்ந்த உறுப்பினர்களுக்கும் அவருக்கும் வாக்குவாதம் கடுமையாயிற்று — இதையெல்லாம் தனது அலுவலக அறையிலிருந்து கேட்டுக் கொண்டிருந்த அண்ணா அவர்கள் சூடான நிலையைத் தணிக்க வேகமாக இறங்கி அவையில் நுழைந்தார்கள் — அப்போது ராமச்சந்திர துரை ஏதோ கடுமையான பிரச்சினையைச் சொல்ல முனைந்தார். அப்போது அண்ணா இருக்கையில் வந்து அமரக்கூட இல்லை — அவை வாயிலில் நுழைந்தபடியே ''துரை உட்கார்'' என்றார். அவ்வளவுதான் வேகமாகப் பேசிக் கொண்டிருந்த காங்கிரஸ் உறுப்பினர் அடுத்த வார்த்தை பேசாமல் மகுடியின் நாதம் கேட்ட பெட்டிப் பாம்பு போல் அமர்ந்துவிட்டார்.

ஃஃஃ

நாடகத்தில் நடிப்பதை வேலைப் பளுவின் காரணமாக விட்டிருந்த அண்ணா அவர்களை — 59ல் திரும்ப நடிக்கச் செய்த பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களுக்கு உண்டு.

அண்ணா அவர்கள் நடத்தி வந்த 'ஹோம்லண்ட்' ஆங்கில இதழை பொருளாதார நெருக்கடியால் அவர்கள் நிறுத்தி

வைத்த போது நானும் சோமசுந்தரம் அவர்களும் இன்னும் அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர்களும் 'ஹோம்லண்'டைத் திரும்ப நடத்த எவ்வளவு பணம் தேவைப்படும் என்று கேட்டோம். மூவாயிரம் அல்லது நாலாயிரம் இருந்தால் போதும் என்றார்கள்.

பல்கலைக் கழகத்திற்கு அண்ணாவை அழைத்து ''சந்திர மோகன்'' நாடகத்தில் நடிக்கச் செய்து ரூபாய் 10 ஆயிரம் நிதி கொடுத்தோம். அண்ணா அவர்கள் ஆச்சரியப்பட்டு எங்களைப் பாராட்டினர்கள்.

ஃஃஃ

அண்ணா பயின்ற பச்சையப்பன் கல்லூரி மீது அவருக்கு எப்போதும் தனி அன்பு — பச்சையப்பன் கல்லூரி மாணவர்கள் அழைக்கும் போதெல்லாம் அவர் செல்வார்.

ஒருமுறை சோமசுந்தரம் இதைக் குறிப்பிட்டு அண்ணாவிடம் கேட்டார். ''பணம் தருகிறோம் என்றால்தான் எங்கள் கல்லூரிக்கு (அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற்கு) வருகிறீர்கள்'' என்றார்.

அண்ணா இதயம் திறந்து சிரித்தபடி சொன்னர்: ''எனக்குத் தராமல் நீங்கள் வேறு யாருக்குத் தரப் போகிறீர்கள்? நான் உங்களிடம் கேட்காமல் வேறு யாரிடம் கேட்கப் போகிறேன் — உங்களுக்கு நான்— எனக்கு நீங்கள்'' என்று அண்ணா அவர்கள் அன்று கூறியதை இன்று நினைத்துப் பார்க்கிறேன் — என் மெய் சிலிர்க்கிறது— அவர் கண் துயிலும் திசை நோக்கி கரம் குவிகிறது.

ஒன்றா இரண்டா எதைச் சொல்ல...

இங்கிலாந்தில் நெ. 10, டௌனிங் தெருவிலுள்ள பிரதமர் இல்லத்திற்கும் அமெரிக்காவில் உள்ள வெள்ளைமாளிகைக்கும் உள்ளசிறப்புக்களைவிட ஆயிரக்கணக்கான சிறப்புக்களைக் கொண்டது தமிழகத் திருநகராம் சென்னையில் அறிஞர் அண்ணா வாழ்ந்த நெ. 9 அவினியூ ரோட்டிலுள்ள இல்லம்.

பூட்டப்படாத ஆலயத்தினுள் வாழும் தெய்வத்தைத் தரிசிப்பதற்காகச் செல்லும் பக்தர்களைப் போன்று அண்ணா வாழும் அந்த இல்லத்தை நோக்கி தினசரி ஆயிரக்கணக்கான மக்கள் ஒரு வித உணர்வோடும் உறவோடும் சென்றுவந்த காட்சி மெய்சிலிர்க்கச் செய்யக்கூடியதாகும்.

ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள், சமுதாயத்திலும், அரசியலிலும் நிலவி வந்த நாட்டாண்மை ஆதிக்கத்தை நாவலிமைப் பிரச்சாரத்தாலேயே உடைத்துச் சுக்குநூறாக்கி இமயம் போல் உயர்ந்து நின்றார் அண்ணா. அவர் நாற்பது ஆண்டுகள் இந்த நாட்டில் தாய்மை உணர்வோடு, ஒரு நல்ல தலைவனுக்குரிய ஜனநாயகப்பாங்கோடு உழைத்ததற்குரிய பலனை—பதவிச் சுகத்தின் மென்மையை அவர் ஓராண்டே அனுபவிக்க முடிந்தது. அப்படிச் சொல்வது கூடத் தவறு—67க்கு முன்னர் பதவி சுகமாகவும் — மென்மையாகவும் இருந்தது உண்மை—ஆனால் அண்ணா ஆட்சிக்கு வந்த பின்னர் இருண்டு கிடக்கும் ஏழை நடுத்தர மக்களின் வாழ்வில் ஒளி சேர்ப்பதற்காக அவர் முயற்சி எடுத்துக் கொண்ட போது முதல் அமைச்சர் பதவி அவருக்கு ஒரு சுமையாகவே அமைந்தது. கடைசி நேரத்தில் அவரே கூறியதுபோன்று அண்ணா ''சூழ்நிலையின் கைதியாக'' வாழ்ந்தார். ஆனால் தமிழகம் சுதந்திரத்தின் நியாயமான பயனை 20 ஆண்டுகளுக்குப் பிறகு அந்த புத்தனின் புகழ்மிக்க ஆட்சியில் தான் அனுபவிக்கத் தொடங்கினர்.

∴ அண்ணா முதல்வராக இருந்தபோது அண்ணிக்கு விதித்த கட்டுப்பாடு என்ன?

∴ கலைஞர் பற்றி அண்ணியாரிடம் அண்ணா என்ன கூறினார்?

∴ அமெரிக்காவிலிருந்தபோது அண்ணா என்ன பிரச்சினை பற்றிப் பேசினார்?

அண்ணாவைப் பற்றி **அண்ணியாரிடம்** கேட்டோம்—அவர் தரும் உணர்ச்சிமயமான செய்திகள்—படியுங்கள்:

முஸ்லிம்களுக்குஒருமெக்கா, கிறிஸ்தவர்களுக்கு ஒரு ஜெருசலம், இந்துக்களுக்கு காசி, கதிர்காமம், ஹரித் துவாரம் ஆயிரக் கணக்கான — கழக முன்னோடிகளுக்கும், தொண்டர்களுக்கும் மெக்கா, மதீனா, ஜெருசலம், ஹரித் துவாரம் எல்லாம் நம் இதயத்தில் வாழும் அண்ணனும் அந்தச் சித்தார்த்தன் வாழ்ந்த சிறிய இல்லம்தான்.

திருவிழா முடிந்த திருக்கோயிலின் தோற்றம் போல் அமைதி பின்னிக் கிடந்த அந்த இல்லத்தின் வாயிற் கதவைத் திறந்து மாடிப்படிகளைக் கடந்தபோது பழைய நினைவுகளின் பந்தாட்டத்தை என் உள்ளம் மின்னல்வேகத்தில் நடத்தித் தீர்த்தது.

''அண்ணி'' இப்படி இருமுறை அழைக்கிறேன்.

செழுமையற்ற சிரிப்பு முகத்தில் தவழ்ந்திட ''வாருங்கள்'' என கம்பிக் கதவின் தாழினைத் திறந்து விடுகிறார் அண்ணி.

பூரண அமைதி தவழும் அந்தப் பொற் கோவிலில் திரும்பிய பக்கமெல்லாம் அண்ணன் திருப்புகழ்பாடும் திரு உருவச் சித்திரங்கள். என் இதயத்தின் காம் குவிகிறது. மெய் சிலிர்க்கிறது. இமைகளின் ஓரத்தில் ஈரம் பனித்துளியெனப் படர்கிறது.

''அண்ணி அண்ணா அவர்களைப் படம் எடுக்க வேண்டும். அதற்கு நீங்கள் தான் துணை புரிய வேண்டும்'' இப்படி எத்தனைமுறை கேட்டிருக்கிறேன். இன்று அப்படிக் கேட்க முடியாத ஒரு சந்தர்ப்பத்தை — சதியை காலம் உருவாக்கி விட்டது. இன்று அவரே அல்லவா படமாகி நிற்கிறார்!

15 ஆண்டுகளுக்கு முன் கவிஞர் கண்ணதாசன் நடத்திய ''தென்றல்'' மலருக்காக அண்ணாவைக் கலர்ப் படம் எடுக்கச் சென்றிருக்கிறேன் — அப்போது அவர் முதலமைச்சர் அல்ல; — ஆனாலும் திருவிழாக்கூட்டம்தான்.

''அண்ணி ஒரு கலர்ச் சால்வை இருந்தால் கொடுங்கள், கலர்ப் படத்திற்கு நன்றாக இருக்கும்.'' மஞ்சள் பூப்போட்ட பச்சைக் கலர் சால்வை ஒன்றைக் கொண்டு வந்து அண்ணனின் தோளில் அணிவிக்கிறார் அண்ணி.

''என் உயரத்திற்குக்கூட நீ, எக்கித்தான் போடவேண்டும்'' என்று அண்ணி அண்ணனைவிட உயரம் கம்மி என்பதை நகைச்சுவையாகக் கூறுகிறார் அண்ணா. அருகில் இருந்த அண்ணாவின் நெருங்கிய குடும்ப நண்பர் ஒருவர் ''அண்ணி இனிமே ஒரு ஸ்டூலை எடுத்துப் போட்டுக்குங்க; உயரம் சரியாகிவிடும்'' என்கிறார். அண்ணாவும் மெல்லச் சிரிக்கிறார்.

நாங்கள் அண்ணாவின் கரத்தில் அவர் அன்புடன் வளர்த்துவரும் வண்ணக் கலாபத்தைக் கொடுத்து இரண்டு மூன்று படம் எடுத்துக் கொள்கிறோம் — பிறகு தொலைபேசியில் பேசுவது போன்று — எழுதுதல் போன்று படிப்பது போன்று இப்படி எத்தனையோ கோணங்களில் படங்கள் — ஆண்டுதோறும் ஏதேனும் ஒரு மலருக்காகப் படம் எடுக்கச் சென்றிருக்கிறேன்.

67ல் 'முரசொலி' அண்ணா மலருக்காக அண்ணா அவர்களைக் கலர்ப்படம் எடுத்தோம். அண்ணாவையும் அண்ணியையும் சேர்த்து வைத்து கடைசியாக எடுக்கப்பட்ட கலர்ப் படம் அதுதான்.

இப்படி அந்த இல்லத்திற்குச் சென்ற போதெல்லாம் அண்ணாவைப் படம் எடுக்

கவோ, அவரது கட்டுரைக்காகவோ அண்ணியின் துணை நாடிய நான் — இன்று அவரைப் பற்றிக் 'கூறுங்கள்' என்று அமர்ந்தேன்.

மடியில் அமர்ந்திருந்த பேரன் மலரின் தலையை வருடியபடியே சிறிது நேரம் மௌனமாக இருந்த அண்ணியார் அவர்கள்—

''அவரைப் பற்றிச் சொல்லுங்கள் என்று ஒரே வரியில் கேட்டு விட்டீர்கள். எவ்வளவோ சொல்லலாம். வாழ்நாள் முழுதும் பேசிக் கொண்டே இருக்கலாம். அப்படிப் பேசுவது எனக்கும் தெம்பாகக் கூட இருக்கும். ஆனால் எதைச் சொல்ல — ஒன்று இரண்டா?..'' பேரன் மலர் ஒரு ஒரு பாடப் புத்தகத்தைக் காட்டி — ஏதோ விளக்கம் கேட்க அதற்குப் பதில் கூறிவிட்டு — மீண்டும் தொடர்ந்தார்.

''நானும் வீட்டில் உள்ளவர்களும் அவருடன் நெருங்கிப் பேசிய பழகிய நேரத்தைவிட அவர் 'தம்பீ' என்று அன்புடன் அழைத்து வந்த கட்சித் தலைவர்கள் தொண்டர்கள் ஆகியவர்கள் தான் அவருடன் அதிகமாகப் பழகியிருக்கிறார்கள்— எனக்கு எவ்வளவு தெரிந்திருந்தாலும், அதைக் காட்டிலும் அதிகமாக அவர்களுக்குத் தெரியும். அவரும் எங்களிடம் பழகியதைக் காட்டிலும் அவர்களிடம் தான் அதிகப்பற்றோடும் பாசத்தோடும் பழகினார்.

''குடும்பத்தில் நாங்கள் யாரேனும் நோய் வாய்ப்பட்டால் அவர் அடைகின்ற கவலையைவிட கட்சியில் யாராவது துன்பத்திற்கு ஆளானால் அவர் துடிப்பும் வேதனையும் அதிகமாக இருக்கும். சுருக்கமாகச் சொன்னால் - ஏழெட்டுப்பேர் கொண்ட எங்கள் குடும்பத்தினருடன் அவர் இருந்த நேரத்தைவிட லட்சக்கணக்கில் உள்ள கழகக் குடும்பத்தாருடன் பழகிய நேரம்தான் அதிகம்.

''நான் குறிப்பாகச் சொல்ல விரும்புவது—அவர் முதலமைச்சராக இருந்த காலத்தில் எங்கள் குடும்பத்தாரிடம் அதிகமாகக் கட்டுப்பாட்டை வலியுறுத்திவந்தார்.

''என்னைப் பார்ப்பதற்கு அறிமுகமில்லாத குடும்பத்துப் பெண்களும் — மாற்றுக் கட்சியைச் சார்ந்த குடும்பத்துப் பெண்களும் வருவார்கள்— ஒருமுறை அவர் என்னிடம் கூறினார்: ''நான் முதலமைச்சராக இருக்கிறேன் என்பதற்காக உன்னைப் பார்க்கவும், உன்னிடம் பழகவும் வசதி உள்ள வீட்டுப் பெண்களும், காரியம் சாதித்துக் கொள்ளநினைப்பவர்களும் உன்னைத்தேடிவருவார்கள். அதைத் தடுக்கவோ மறுக்கவோ முடியாதுதான். ஆனால் அவர்களிடம் நீ ஜாக்கிரதையாகப் பழக வேண்டும். இந்தப் பதவி போய்விட்டால் அவர்கள் யாரும் வர மாட்டார்கள். ஏழை ஜனங்கள்தான் நமக்கு என்றும் துணை'' என்று எச்சரிக்கை செய்தார்.

ஒரு முறை கலைஞர் எங்கள் வீட்டிற்கு வந்திருந்த போது இதைச் சுட்டிக் காட்டி, ''பார்த்தாயா கருணாநிதி ராணி எல்லார் கூடவும் பழகுது அதற்கு எடை போடத் தெரியவில்லை,'' என்று கூறினார்.

அன்று அவர் சொன்னது, சரியாகி விட்டது. இன்றைக்கும் கழகத்தைச் சார்ந்தவர்களும் ஏழை மக்களும் தான் அன்று இருந்தது போலவே இன்றும் அன்புடன் பழகி வருகிறார்கள்.

ஃ ஃ ஃ

அவர் ஆட்சிக்கு வந்ததும் ஒரு நாள் இரவு எங்கள் அனைவரிடமும் பேசிக்கொண்டிருக்கும்போது சொன்னார்: ''இந்த நாட்டு ஏழை மக்கள் கழகத்தை நம்பி பெரிய பொறுப்பை ஒப்படைத்திருக்கிறார்கள். அவர்கள் நம்பிக்கையைக் காப்பாற்ற எப்படித்தொண்டாற்றுவது என்றுதான் சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். அவர்கள் வாழ்க்கை முன்னேற்றத்தில் தான் நானும் மற்றவர்களும் இத்தனை ஆண்டுகளாகப் பட்ட கஷ்டத்திற்குரிய பலன் இருக்கிறது என்று சிறு சொற்பொழிவே நடத்தினார்.

ஃ ஃ ஃ

பிறருடைய சிறு துன்பத்தைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாத அவருக்கு வெண்மணிக் கிராமத்தில் ஒரே சமயத்தில் நாற்பது பேருக்கு மேல் பெண்களும் குழந்தைகளும் தீயில் கருகி மாண்டதைக் கேள்விப்பட்டதும் அதிர்ச்சியடைந்து போனார். என்னிடம் அதைப் பற்றி பலமுறை கூறி தாரை தாரையாகக் கண்ணீர் வடித்தார். அந்தச் சம்பவம் நடைபெற்ற மூன்று நாட்கள் வரை அவர் தண்ணீர் கூடச் சாப்பிடவில்லை. அவர் உடல்நலம் கருதி அவரைச் சாப்பிட அழைத்தபோது நான் என் வாழ் நாளில் அவரிடம் கண்டிராத பெரும் கோபத்திற்கு ஆளானேன். அது மாதிரி அவர் வேறு எந்த நேரத்திலும் வேதனைப்பட்டதே இல்லை.

ஃ ஃ ஃ

யாருடைய மனமும் புண்படும் படியாக அவர் எப்போதும் நடந்து கொண்டதில்லை. தன்னை வருந்திக் கொள்ளுவாரே தவிர தன்னுடைய செயலால் பிறர் வருந்தக் கூடிய காரியத்தை ஒருபோதும் செய்ய மாட்டார். இதற்கு எடுத்துக் காட்டு — அவர் நோய் வாய்ப்பட்டு மருத்துவ மனையில் சேர்க்கப்பட்டிருந்த போது கலைஞர் — மாறன்— பரிமளம் ஆகியோர் வேலூர் மருத்துவ மனைக்குச் சென்று பார்க்கலாம் என்று கூறியதற்கு அவர் சம்மதிக்கவில்லை. அப்படிச் செய்தால் ''இப்போது பார்த்துக்கொண்

டிருக்கும் டாக்டரின் மனம் புண்படலாம்'' என்று கூறி பிடிவாதமாக அதைத் தடுத்து விட்டார்.

ஃ ஃ ஃ

யாரும் அவரைத் தேடி வீட்டுக்கு வரும்போது நான் உள்ளே இருந்தபடியே பதில் சொன்னால் அவருக்குக் கோபம் வந்துவிடும். — ''வெளியே வந்து பதில் சொல்ல வேண்டும். வந்தவர்கள் என்ன நினைத்துக் கொள்வார்கள்?'' என்று கடிந்து கொள்வார். எளிமையை மனதில் பதித்துக் கொள்ள வேண்டும் என்று அடிக்கடி கூறுவார்.

ஃ ஃ ஃ

கூட்டம், எழுத்து, பேச்சு நண்பர்கள் என்றுதான் எப்போதும் இருந்தாரே தவிர, எந்த நேரத்திலும் அவர் உடல் நலத்தை அவர் கவனித்துக் கொண்டதே இல்லை. சாப்பிடுவதற்கு பிறர் நினைவு படுத்தினால்தான் பசி எடுப்பதே அவருக்குத் தெரியும்— வேளைக்கு அவர் தூங்கியது மில்லை — உணவு அருந்தியது மில்லை. உஷ்ணம் அதிகமாகி கண்ணெல்லாம் எரிகிறது என்பார். இருமலால் அவதிப்படுவார் — அப்போது எண்ணெய் தேய்த்துக் குளியுங்கள் என்று ஆயிரம் முறை சொன்னால் ஒரு முறை குளிப்பார்.

ஃ ஃ ஃ

அவர் சாப்பிட அமரும்போது நண்பர்கள் யார் வந்தாலும் சரி அவர்களுக்கும் உணவு பரிமாறச்சொல்லுவார். இதனால் முன்னெச்சரிக்கையாக அவர் சாப்பிடுகிற நேரத்தில் யாரேனும் வந்து விட்டால் நாங்களே வந்திருப்பவர்களுக்கும் சேர்த்துச் சமையல் செய்து விடுவோம்.

கலைஞர் வந்து விட்டால்

முடிவு காணும் பொறுப்பை அண்ணாவிடம் கொடுப்பீர்!

தமிழ் வெறும் மொழிகளில் ஒன்றல்ல—செறிந்த இலக்கியத்தையும் வாழ்க்கை நெறிகளையும் தன்னுள் அடக்கிக் கொண்டுள்ள உயர் தனிச் செம்மொழி தமிழ். அதன்கலையும் நாகரீகமும் வாழ்க்கை நெறியும் உலகில் பல நாடுகளில் பரவியுள்ளன. இந்திக்கு அத்தகுதி உண்டா? அது எத்தனை நாடுகளில் பரவியுள்ளது?

இந்தியின் மீது தனிப்பற்றுக் கொண்ட தலைவராக ராஜேந்திர பிரசாத் இருந்ததால் அவரது ஒரு வாக்கினை அதிகமாகப் பெற்று இந்திக்கு வெற்றி தேடி விட்டதாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள்.

200 ஆண்டுகளே ஆயினும் மத்திய அரசினரால் 50 கோடி மக்களை ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசும்படியும், படிக்கும்படியும் செய்ய முடியுமா? அப்படி முடியும் என்று சொல்லுவது வடிகட்டிய முட்டாள்தனம். எனவே கோடி கோடியாகக் கொட்டி இந்தியினை வளர்த்திடத் துணியும் முன்னால் ஓராயிரம் முறை சிந்திக்குமாறு அவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

தேசியமொழி என்றும், இணைப்பு மொழியென்றும் பேசுகிறார்களே அரசியல் சட்டத்தில் எங்கேனும் ஒரு இடத்தில் இந்தச் சொற்றொடர்களைக் காட்ட முடியுமா?

உணர்ச்சிமயமான ஒருமைப்பாடு வேண்டுமாம்—மொழி விஷயத்தில் மத்திய சர்க்கார் கடைப்பிடிக்கும் போக்கு அத்தகைய ஒருமைப்பாட்டை உருவாக்கும் ஆற்றலுடையதா? உணர்ச்சிமயமான ஒருமைப்பாடு என்றால் அது எப்படி வரும்? எல்லோரும் கட்டிக் கொண்டு ஒப்பாரி வைப்பதா?

இளைஞர் சமுதாயத்தை நான் கேட்டுக் கொள்ளுவேன்— நீங்கள் இச்சிக்கலுக்குத் தீர்வு காணும் பொறுப்பினை அண்ணா அவர்களிடம் விட்டு விடுங்கள். உங்கள் நலனை அவர் பாதுகாப்பார்.

—அண்ணா சிலை திறப்பு விழாவில்
ஏ. ஆர். முதலியார்.

போதும் — ''ராணி யார் வந்திருக்கிறது என்று பார்; டிபன் கொடு'' என்பார். கலைஞருக்கு என்ன பிடிக்கும் என்பதையும் தெரிந்து வைத்துக் கூறுவார்.

ஃ ஃ ஃ

சட்ட மன்றம் நடைபெறுகின்ற நாட்களிலும், முக்கியப் பணிகள் உள்ள காலத்திலும் அவர் சாப்பிடுவதையே மறந்து விடுவார். அவர் உடல் நலம் மிகவும் பாதிக்கப்பட்டிருந்த காலத்தில் — இரவு முழுதும் ஃபைல் பார்த்து விட்டு ஐந்து மணிக்குப் படுத்து, ஏழு மணிக்கு எழுந்து பத்திரிகை படித்து குளித்து விட்டு சாப்பிடாமலே சென்று விடுவார். நேரம் கிடைக்கும் போது சாப்பிடட்டும் என்று கேழ்வரகுக் கஞ்சி, பழம், ஹார்லிக்ஸ் ஆகியவைகளை டிரைவரிடம் கொடுத்தனுப்புவோம். அது அப்படியே திரும்பி வரும். கேட்டால் 'நேரமில்லை' என்பார். மதியம் வந்து இரண்டு மணிக்கு மேல்தான் சாப்பிடுவார்.

ஃ ஃ ஃ

''அண்ணா நடித்த நாடகங்களை நீங்கள் பார்த்திருக்கிறீர்களா அண்ணி?'' என்று கேட்டபோது — ''அந்தக் காலத்தில் பார்த்திருக்கிறேன் — 'நீதி தேவன் மயக்கத்'தில் ராவணனாகவும் — 'சந்திர மோகன்' நாடகத்தில் காகப்பட்டராகவும் வருவார்.

நாடகம் முடிந்து வீட்டிற்கு வந்ததும் ''என் நடிப்பு எப்படி?'' என்று கேட்பார். ''அதுதான் எல்லோரும் கை தட்டிப்பாராட்டினார்களே!'' என்பேன். ''நான் ராவணன் வேஷம் போட்டுக் கொண்டு வரும் போது உனக்குப் பயமாக இல்லையா?'' என்பார். ''நான் ஏன் பயப்படுகிறேன் உங்களைப் பார்த்து ஏன் பயப்பட வேண்டும்?'' என்பேன். சிரித்துக் கொள்வார். ஒருமுறை அவருடைய மருமக்கள் இருவரும் ''இப்போது ஏதாவது நாடகத்தில் நடியுங்கள்; நாங்கள் பார்க்கிறோம்'' என்பார்கள். 'வேண்டாம்மா எனக்குநேரமும் இல்லை — நீங்கள் கேலி வேறு செய்வீர்கள்'' என்றார்.

ஃ ஃ ஃ

காஞ்சிபுரத்தில் அவர் 'திராவிட நாடு' பத்திரிகைக்காக இரவில் விடிய விடிய எழுதுவார். அவருக்காக நான் டீ தயாரித்துக் கொண்டிருக்கும்போது சில வேளைகளில் பக்கத்தில் வந்து அமர்ந்து கொண்டு ''நீ டீ போடுவதை பார்த்துப் பழகிக் கொள்கிறேன்'' என்பார். விடிந்ததும் வீட்டில் உள்ளவர்களிடம் இரவில் தானே டீ தயாரித்துச் சாப்பிட்டதாகச் சொல்லிச் சிரிப்பார்.

ஃ ஃ ஃ

குரங்கு, பெருச்சாளி, இடி, மின்னல் இவைகளுக்கு அவர் ரொம்பவும் பயப்படுவார். கிணற்றுத் தண்ணீரில் குளிப்பதும் — அகத்திக் கீரையை விரும்பிச் சாப்பிடுவதும்அவர் விரும்புவதில் முக்கியமானதாகும்.

—

யார் மீதாவது அவருக்குக் கோபம் என்றால் அவர்களுடன் பேச மாட்டார்— சாப்பிட மாட்டார். இரண்டு நாளில் கோபம் பறந்து விடும் அவ்வளவுதான்.

ஃ ஃ ஃ

அமெரிக்காவில் மருத்துவமனையில் இருந்தபோது கூட அவர் கட்சியைப் பற்றியும், அரசியல் நிலைமைகளைப் பற்றியும்தான் பேசிக் கொண்டிருந்தார். என்னிடம் குடும்ப நிலைகளைப் பற்றிப் பேசியது ரொம்பக் குறைவு.

ஃ ஃ ஃ

கலைஞரைப் பற்றிக் குறிப்பிடும்போது ''அவருக்கு எப்போதும் கட்சி நினைப்பு தான், நான் உழைப்பது போன்றே உழைக்கிறார்'' — என்பார். கலைஞர் ஒரு தடவை கார் விபத்தில் காயமுற்றதைக் கேள்விப்பட்ட போது, அவர் பதறிப்போனார். தன் குழந்தை விபத்தில் சிக்கிக்கொண்டது எனக் கேள்விப்பட்ட தாய் எப்படித் துடிப்பாளோ, அதை விடப் பன்மடங்கு வேதனையடைந்தார். அவரைப் பார்க்கப் புறப்படுகின்றவரை புலம்பிக் கொண்டே இருந்தார்—கலைஞர் குணமடைந்த பிறகு ''இனி தூக்க நேரத்தில் கார் பயணம் செய்வதை நிறுத்திக் கொள்'' என்று அடிக்கடி கூறுவார்.

ஃ ஃ ஃ

அவர் கடைசியாகக் கலந்து கொண்டது கலைவாணர் சிலை திறப்பு விழா நிகழ்ச்சி— அதற்குச் செல்வதற்குத் தயாராக இருந்தபோது அவர் வாந்தி எடுத்து மயங்கிய நிலையில் இருந்தார். கொஞ்சம் தெளிவு ஏற்பட்டதும்— சிலை திறப்பு விழாவுக்கு வேறு யாராகிலும் போகட்டும் — நீங்கள் ஓய்வெடுத்துக் கொள்ளுங்கள் என்று டாக்டர்கள் உட்பட அனைவரும் கூறினோம். அவர் கேட்கவில்லை. ''கலைவாணர் சிலை திறப்பு முக்கியநிகழ்ச்சி. தவிர்க்கக் கூடாது'' என்று கூறி தளர்ச்சியடைந்த நிலையிலும் சென்றார்.

அதற்குப் பிறகு அவர் பொது நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளவேயில்லை.'' என்றார் அண்ணி.

''வருகிறேன் அண்ணி'' என்று விடை பெற்றபோது ''வருகிறோம் அண்ணா''என்று விடைபெற்ற காலத்தை நினைத்து என் கண்கள் மீண்டும் அண்ணாவின் திருஉருவை நோக்கிப் பனித்தது. இரு கரம் கூப்பி அண்ணியிடமும் — இதயத்தால் அண்ணாவிடமும் விடை பெற்றுக் கொண்டு திரும்பினேன்.

பேட்டி: தினகரன்

★







உறவுக்கு அப்பால் ஒரு உறவு

அமைச்சர் ஓ.பி.ராமன்

1950-ல்தான் அறிஞர் அண்ணா அவர்களை நேரில் பார்க்கும் வாய்ப்புக்கிட்டியது. திண்டுக்கல் பொதுக் கூட்டத்தில் பேசுவதற்காக வந்திருந்தார்கள். அப்போது நான் உயர்நிலைப் பள்ளியில் படித்துக் கொண்டிருந்தேன். அண்ணா அவர்களின் சொற்பொழிவைக் கேட்பதற்காக மிக்க ஆவலுடன் சென்றேன். அன்று முதன் முதலாக அண்ணா அவர்களைக் காணக்கூடிய பேறும், அவர்களின் குற்றால அருவி போன்ற அடுக்குச் சொற்களைக் கேட்கும் வாய்ப்பும் முதன் முதலாகக் கிட்டியது.

ஃ

அடுத்து சம்பத் உண்ணாவிரதமிருந்த போதுதான் அண்ணா அவர்களுக்கு நான் அறிமுகமாகும் வாய்ப்பு ஏற்பட்டது.

அப்போது சட்டக் கல்லூரியில் படித்துக் கொண்டிருந்த எனக்கு சம்பத் அவர்களின் உண்ணாவிரதமும் — தினசரி விடுக்கப்பட்ட அறிக்கைகளும்என் மனதில் ஏதோஒரு கவலையை உருவாக்கிக் கொண்டிருந்தது. மாற்றுக் கட்சிக்காரர்களின் வாய்க்கு அவலாக அமைந்து விட்ட அப்பிரச்சினைக்கு உடனடியாகத் தீர்வு ஏற்படாதா என்று நான் ஒவ்வொரு நாளும் எதிர்பார்த்தேன்.

சம்பத்தின் பிடிவாதப் போக்கால் அண்ணா அவர்கள் மனவேதனை அடைகிறார்கள் என்பதைக் கேள்வியுற்ற சட்டக் கல்லூரி மாணவர்கள் அண்ணாவை சந்திக்கத் திட்டமிட்டனர். அதில் நானும் ஒருவன்.

அப்போது மைனர் மோசஸ், போன்ற மாணவர்கள் சம்பத்தின் போக்கைக் கண்டித்து தீவிரமான விவாதம் செய்வார்கள். அவர்கள் விவாதத்தை ஆதரிக்கும் அணியில் நான் இருப்பேன்.

முடிவாக ஒருநாள் அண்ணா அவர்களிடம் இதுசம்பந்தமாகப் பேசித் தீர்வு காணுவது என்று நானும் மைனர் மோசஸ், இப்போதைய எம்.எல்.ஏ., ஆலடி அருணா, இப்போதைய எம்.பி. தெய்வீகன், விசுவநாதன் ஆகியோரும் சுப்பிரமணியம், நல்ல பெருமாள் இன்னும் சில மாணவர்களும் அண்ணா அவர்களின் இல்லத்திற்குச் சென்று அவரிடம் எங்கள் கவலையையும், கருத்தையும் தெரிவித்தோம்.

‘‘பொதுமக்களில் சிலரும் எதிர்முகாமைச் சார்ந்த மாணவர்களில் ஓரிருவரும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு வதந்தி

நோயற்ற நீண்ட நல்வாழ்வுக்கு!

சித்தர் நவலோக கல்பம்

டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை

ஸ்ரீ இராஜ இராஜேஸ்வரி

சித்த வைத்தியசாலை (Regd)

307–308. திருவல்லிக்கேணி ஹைரோட், திருவல்லிக்கேணி, சென்னை–5.
(தொலைபேசி எண்: 84786)
கிளை வைத்தியசாலை: மாமண்டூர் வடபாதி பாலாற்றங்கரை சமீபம்
செங்கற்பட்டு ஜில்லா, (தொலைபேசி எண்: 240)

(தங்கம், வெள்ளி, தாமிரம் மற்றும் பல உலோகங்கள். அனேக அபூர்வ மூலிகைகள், மருந்துப் பொருள்களுடன் பலவருட ஆராய்ச்சியினால் உருவானது)

ஆஸ்துமா, மதுமேகம், (டையாபடீஸ்) டி. பி. குஷ்டம், வெண்குஷ்டம், யானைக்கால் மற்றும் நாள்பட்ட கொடிய வியாதிகளுக்கும் டாக்டர் சாது வீ. நாராயணசாமி பிள்ளை அவர்களே பிரதி ஞாயிறு, செவ்வாய், வியாழக் கிழமைகளில் சென்னையிலும் பிரதி திங்கள், புதன், வெள்ளி, சனிக் கிழமைகளில் கிளை வைத்திய சாலையிலும் நோயாளிகளை நேரில் கவனித்து மருந்துகொடுக்கிறார்.

Literoof

பேரறிஞர் அண்ணாவின் நினைவுக்கு எமது அஞ்சலி!

எரியாத வீடுகளுக்கு எரியாத கூரைச் சாதனங்களைத் தயாரிப்பது

லைட்ரூப்பிங்ஸ் லிமிடெட்.



இந்தியாவிலேயே முதன் முறையாக மாறுபட்ட நவீன கூரைச் சாதனங்களை வெளிநாட்டுத் தொடர்புடன்தயாரிப்பது எங்கள் நிறுவனம். லைட்ரூப் கூரைச் சாதனம் வசீகரமானது, நவீனமானது இலேசானது, எல்லா பருவக் காலங்களுக்கும் ஏற்றது. எளிதில் தீப் பிடிக்காதது, மேலும் மலிவானது.

குடிசை மக்களுக்கு, கோழிப் பண்ணைகளுக்கு, மாட்டுக் கொட்டகைகளுக்கு தொழில்பட்டறைகளுக்கு, ஏன்எல்லாவற்றிற்குமேசிறந்தது லைட்ரூப்

விலை— ஷீட் ஒன்றுக்கு ரூ. 4–50.

தயாரிப்பாளர்கள்— **லைட்ரூப்பிங்ஸ் லிமிடெட்,**
6, கஸ்தூரிரங்க ஐயங்கார் சாலை, சென்னை-18.

களைப்பரப்பிவிடுகிறார்கள். பத்திரிகைகளில்வருகின்ற செய்திகள் வருந்தத்தக்க நிலையை ஏற்படுத்துகின்றன. இதற்கெல்லாம் முடிவு காண நல்ல சூழ்நிலையை உருவாக்குங்கள் அண்ணா'' என்று நாங்கள் அனைவரும் வேண்டிக் கொண்டோம்.

எங்களைவிடப் பன்மடங்கு கவலையுற்றிருந்த அண்ணா அவர்கள் ''நான் அமைதி கண்டிட நல்லதொரு சூழ்நிலை ஏற்பட எப்போதும் தயாராக இருக்கிறேன். நீங்கள் சம்பத்தையும் பார்த்து சமரச முயற்சிக்கு வழி செய்யுங்கள்'' என்றார் .

அண்ணா அவர்கள் எங்களிடம் எத்தனை பரிவுடன் பேசினாரோ அதற்கு நேர்மாறான முறையில் சம்பத் நடந்து கொண்டார். அவர் பிரச்சினை பற்றியே எங்களிடம் பேச விரும்பவில்லை. ஒரு குட்டி சர்வாதிகாரியைப் போன்று வார்த்தைகளை உதிர்த்தார். ''உங்களிடம் நான் பேசத் தயாராக இல்லை. நீங்கள் யார் விவாதம் பண்ணுவதற்கு? என்னிடம் ஏதும் பேச வேண்டாம். மக்கள் மன்றத்தில் போய்ச் சொல்லுங்கள். போங்கள் என்று விரட்டியடிக்கும் பாணியில் கூறினார்.

எனக்கும் மற்றநண்பர்களுக்கும்சம்பத்மீது ஆத்திரம் ஏற்பட்டது. என்றாலும் அண்ணா அவர்களின் மனம் மேலும் புண்பட்டு விடக் கூடாதே என அஞ்சி அமைதியாகத் திரும்பினோம்.

ஃ

1966-ம் ஆண்டு தேர்தலுக்கு வேட்பாளர் பட்டியல் வெளியிடுவதற்கு முன்னால் — என் தொகுதியில் உள்ள ஒத்தகடை என்ற இடத்தில் இன்றைய மதுரை நகர மேயர் மதுரை மாவட்டச் செயலாளர் திரு. முத்து அவர்கள் பொதுக்கூட்டத்திற்கு ஏற்பாடு செய்து அண்ணா அவர்களை அழைத்து வந்திருந்தார்கள் திரு. முத்து அவர்களே முன்னின்று சிறப்பாக அக்கூட்டத்தை நடத்தித் தந்தார்கள்.

அந்தக் கூட்டத்தில் அண்ணா அவர்கள் பேசியது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைந்தது. எளிய குடும்பத்தைச் சார்ந்த நான்தான் வேட்பாளன் என்பதை மறைமுகமாகக் குறிப்பிட்டார்கள்.

இந்த நேரத்தில் அப்போது போலீஸ் அமைச்சராக இருந்த கக்கன் அவர்களின் கார் மதுரையிலிருந்து திருச்சி செல்வதற்காக அந்த வழியே வந்தது. வழியில் ஆயிரக்கணக்கான மக்கள்அமர்ந்து கூட்டம் கேட்டுக் கொண்டிருந்ததால் கார் செல்ல முடியவில்லை. கக்கன் கார் என்றதும் கூட்டத்தில் சிறுசலசலப்பு ஏற்பட்டது. போலீசார் வழி ஏற்படுத்தித் தந்த பிறகு கார் சென்றது.

ஒருவேளை கக்கன் கார் வந்து சலசலப்பு ஏற்படவில்லையென்றால் அக் கூட்டத்தில் என் பெயரை அறிவித்திருப்பார்களோ என்னவோ!

''சென்ற தடவை நான் விரித்த வலையில் சில ஓட்டைகள் இருந்ததால் பிடிக்க நினைத்த மீன்கள் தப்பி விட்டன. இந்த முறை வலை நன்றாகப் பின்னப்பட்டு உறுதியாக உள்ளது. எந்த மீனும் தப்பிவிட முடியாது'' என்று எச்சரிக்கை செய்து விட்டு — ''இந்தத் தொகுதியில் ஒரு இளைஞரை, சுறுசுறுப்பாகப் பணியாற்றக்

கூடியவரை, படித்தவரை, பண்பாளரை நிறுத்துவதற்கு முடிவு செய்துள்ளேன். கட்சிகளுக்கு அப்பாற்பட்ட நடுநிலையாளர்கள் நம்மை ஆதரிக்கிறார்கள். ஆகையால் கழகம் வெற்றி பெறுதல் உறுதி'' என்றுகூறியதும் வெற்றிக்கு அறிகுறியாக மக்கள் அப்போதே ஆரவாரத்துடன் கைதட்டி வரவேற்றார்கள்.

ஃ

தேர்தலில் கக்கனை எதிர்த்து நான் ஏராளமான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றதும் என்னையும் வேறு தொகுதிகளில் ஜெயித்த தோழர்களையும் திரு, முத்து அவர்கள் அண்ணாவிடம் அழைத்து வந்திருந்தார்கள். அண்ணா அவர்கள் அனைவரையும் மகிழ்ச்சியோடு வரவேற்றார். பிறகு அருகிலிருந்தவர்களிடம் என்னைப் பற்றிக் குறிப்பிட்டு''கெட்டிக்கார இளைஞன். அடக்கமானவன். கல்லூரியில் படிக்கும் போதே நான்கவனித்திருக்கிறேன்'' என்று பாராட்டினார். அந்தப் பாராட்டின் வாசகங்களை நான் கல்லூரியில் பெற்ற பட்டங்களைவிட வாழ்க்கையில் பெறுதற்கரிய பெரும் பட்டமாக அதனைக் கருதினேன். என்னைப் பொறுத்தவரை என் வாழ்க்கையில் அது மறக்க முடியாத நிகழ்ச்சியாகும்.

ஃ

சட்டமன்றத்தில் நான் பேசிய கன்னிப்

பேச்சிற்கு அண்ணா பாராட்டுத் தெரிவித்தார்கள். அப்போது, கலப்பு மணத்திற்குப் பரிசு அளிக்கும் திட்டத்தைப் பற்றிப் பேசினேன்.

''கலப்பு மணம் என்பது, செட்டியாரும், முதலியாரும் செய்து கொள்வதோ நாயுடுவும் நாடாரும் மாலை மாற்றிக் கொள்வதோ, ரெட்டியாரும் பிள்ளையும் இணைந்து கொள்வதோ கலப்பு மணம் ஆகாது. தாழ்த்தப்பட்ட குடும்பமும் — தீண்டப்படாதது என ஒதுக்கி வைக்கப்பட்ட குடும்பமும்— எல்லோருக்கும் மிக உயர்ந்த ஜாதி எனக் கருதிக் கொண்டிருக்கும் குடும்பமும் இணைவதுதான் கலப்புத் திருமணமாகும். அதற்குப் பரிசு வழங்குவதுதான் உற்சாகத்தை அளிக்கும்'' என்று கூறினேன். பின்னர் அண்ணா அவர்கள் அதைத் திட்டமாகவே கொண்டு வந்தார்கள். என் கருத்து அண்ணா அவர்களால் நிறைவேறியது கண்டு உள்ளம் பூரித்தேன்.

ஃ

அண்ணா ஆட்சிப் பொறுப்பேற்ற பின்னர் அடிக்கடி கூறுவார்கள், வசதியுள்ளோரிடம் பெற்று — வசதியற்றோர்க்கு உதவ வேண்டும் அப்போதுதான் நம் நாட்டில் உண்மையான சமுதாய சீர்திருத்தமும், பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்று. அண்ணா அவர்கள் கண்ட அந்தக் கனவைத்தான் கலைஞர்அவர்கள் ஜனநாயக முறையில் மெல்ல மெல்ல நிறைவேற்றி வருகிறார்கள்.

ஃ

67-ல் அண்ணா ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக் கொண்டவுடன் 67-க்கு முன்பு ஆட்சியிலிருந்த முக்கியமான பெரியவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றதே அவருடைய மிகப் பெரிய ராஜதந்திரத்துக்கும், மனிதாபிமானத்துக்கும் இலக்கணமாகும்.

ஆட்சிக்கு வந்த பின்னர் பகைவர்கள் நண்பர்கள் எனப் பார்க்காது விருப்புவெறுப்பின்றி அனைவரிடத்திலும் ஆலோசனை கேட்டதும் பகைமை கொண்டிருந்தவர்களையும் நண்பர்களாக்கி அவர்களே ஆட்சியைப் பாராட்டும் ஒரு புதிய சூழ்நிலையை ஏற்படுத்தினார் அண்ணா.

மக்கள் அதிகாரிகளைச் சந்திக்கவே இயலாது என்றும் சாமான்யர்களின் குறைகளும் குரல்களும் மேல் மட்டத்திற்குச் செல்லாது என்றும் இருந்த நிலையைமாற்றி அதிகாரிகளே மக்களை சந்தித்து அவர்களின் குறை கேட்டு நிவர்த்திசெய்யும் நிலையும் அண்ணா காலத்தில் பரிசீலிக்கப்பட்ட அற்புதத்திட்டங்களில் ஒன்றாகும்.

அந்த மனு நீதித் திட்டம் இன்று கலைஞர் ஆட்சியில் விரிவாக்கப்பட்டு மக்களின் தேவைகள் உடனுக்குடன் தீர்க்கப்படுகின்றன.

இவ்வாறு ஆயிரக்கணக்கில் அவருடைய சாதனையின் சரித்திரத்தை எழுதிக் காட்ட முடியும் — ஆனால் எழுதிக் காட்டி தெரிய வேண்டும் என்ற நிலையில் இன்று நாட்டு மக்கள் இல்லை.

எவ்வாறு கட்சியில் குடும்பப் பாச உணர்வை வளர்த்து வைத்தாரோ அதே போன்று ஆட்சிக்கு வந்த பின்னர் அன்பு தவழும்நடவடிக்கை மூலம்மக்கள்மனத்திலும் அத்தகைய பாச உணர்வினை ஏற்படுத்தி விட்டார் — அவர் மறைந்த போது உலகம் கண்ணீர் சிந்திய காட்சியும் — தமிழகமே சென்னை நகரில் திரண்டதும் — அதற்கு சாட்சியாகும்.

அந்தப் பாச உணர்வின் அடிப்படையில் தான் இன்று கழகமும் — கலைஞரும் — அவர் பின்னே நாமும் நடந்து கொண்டிருக்கிறோம்.

ஆம்! ஒவ்வொருவருக்கும் தனித் தனியே குடும்பங்கள் — உறவுகள் இருந்தாலும் — அந்த உறவுகளைத் தாண்டி ''அண்ணா'' என்ற அந்த மூன்றெழுத்திற்குள் ஒருஉணர்ச்சி மிகு உறவை ஏற்படுத்தியிருந்தார் — அந்த உறவின் சக்திதான் கலைஞர் தலைமையில் தமிழ்ச் சமுதாயத்தை ஓரணியில் திரட்டி வெற்றி குவித்து நமை வாழ வைத்துக்கொண்டிருக்கிறது எனத் திடமாக நம்புகிறேன்.

✻

'முரசொலி'க்கு அண்ணாவின் பாராட்டு!

தம்பிகள் கருணாநிதியும், மாறனும் கழகத் தொண்டாற்றுகிறவர்கள் மட்டுமல்ல; அந்தத் தொண்டிலே கலை மணத்தை இழைத்துக் குழைத்துத் தருகின்றனர்.

நமது கழகத் தோழர்களாலும் எழிலுள்ள மலர் வெளியிட இயலும். முயன்றால், என் பதனைத் தமிழகத்துக்கு எடுத்துக்காட்டிய பெருமை "முரசொலி"யைச் சாரும்.

-பேரறிஞர் அண்ணா

தமிழ் நாட்டின் குலதெய்வம்

—— அமைச்சர் கண்ணப்பன்

நான் 1954-ல் தான் அறிஞர் அண்ணா அவர்களைப் பொள்ளாச்சி பொதுக்கூட்டத்தில் பார்த்தேன். — நான் அண்ணா அவர்களை சந்தித்து, அறிமுகமாகி, அவர்களின் அன்பு சுரக்கும் இதயத்தில் இடம் பெற்று அவர்களை இழந்து தவிப்பது எல்லாம் இந்தப் பதினேழு ஆண்டுகால இடைவெளிக்குள் நடந்து முடிந்து விட்டது.

ஃ

61-ல் கோவையில் நடைபெற்ற சிறப்பு மாநாட்டில் உடுமலை நாராயணன் அண்ணா அவர்களுக்கு என்னை அறிமுகம் செய்து வைத்தார்கள். 62 தேர்தலை மனதில் வைத்துக் கொண்டு என்னைப் பற்றி நாராயணனிடம் ஆர்வத்துடன் விசாரித்தார் அண்ணா. 62 தேர்தலில் கழகத்தின் சார்பாக நிற்க எனக்கு அனுமதியும் தரப்பட்டது ஆனால் கடைசி நேரத்தில் எனக்குத் தேவையான வயதில்லை என எனது வேட்புமனு தள்ளுபடி செய்யப்பட்டது.

ஃ

''67 பொதுத் தேர்தலில் கோவை மாவட்டம் காங்கிரசின் கோட்டையாகவிளங்கும்'' என்று ஆங்கிலவார இதழான 'கரண்ட்' பத்திரிகைக்கு அளித்த ஒரு பேட்டியில் கூறியிருந்தார் சி. சுப்பிரமணியம்.

இதைப் படித்த அறிஞர் அண்ணா அவர்கள் பஞ்சாயத்துப் போர்டு வெற்றிகளை பார்க்கும் போது மக்கள் மனம் மாறி வருவதாகத் தெரிகிறது. ஆகையால் 67 தேர்தலில் சுப்பிரமணியத்தையும்—சுப்பிரமணியத்தின் கனவையும் தகர்த்தெறிய வேண்டுமெனக் கூறினார். அதை அவர் செய்தும் காட்டினார்.

ஃ

20 ஆண்டுகட்கு மேலாக தன்னை எதிர்ப்பார் யாருமில்லை என இறுமாப்போடு உலவி வந்த காங்கிரஸ் கட்சி இன்றைக்கு இரண்டாகப் பிளவு பட்டு அதில்ஒருஅணி விலாசம் தெரியாமல் உருக்குலைந்துகிடக்கிறதென்றால் அது அவர்களுக்குக் காலம் அளித்த தண்டனை என்றுதான் கருதுகிறேன்.

66-ல் அண்ணா அவர்கள் தேர்தல் பிரச்சாரத்திற்காகக் கோவை மாவட்டச் சுற்றுப்

பயணம் செய்த போது அவரைத் தாக்கி அழித்து விடக் காங்கிரசார் திட்டமிட்டுச் செய்திருந்த சதியை இன்றைக்கும் என்னால் மறக்க முடியவில்லை.

அண்ணா அவர்கள் உடுமலைப்பேட்டையில் ஒரு கூட்டத்தில் பேசி முடித்த பின்னர் 'தளி' என்ற கிராமத்திற்குப் போக வேண்டும்.

அண்ணன் உடுமலை நாராயணனும், இப்போதைய பொதுப்பணித்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்களும் — உடுமலையில் பேசிய பின்னர் அண்ணா அவர்களை தளிக்கு அழைத்து வருமாறு என்னிடம்கூறிவிட்டு அவர்கள் முன்கூட்டி 'தளி'க்குச் சென்று விட்டார்கள்.

'தளி' கிராமத்திற்குச் செல்லும் வழியில் காங்கிரஸ்காரரான மணி நாயுடு என்பவரின் மில்லுக்கு அருகில் ஒரு முப்பது நாற்பது ரௌடிகள் கம்பும் கழியும் வைத்துக்கொண்டு அண்ணாவின் காரைக் குறி வைத்துக் காத்துக் கொண்டிருக்கிறார்கள்.

உடுமலை நாராயணனும், சாதிக் பாட்சாவும் அவ் வழியாகச் சென்றபோது அவர்கள் காரைப் பலமாகத் தாக்கியிருக்கிறார்கள். இந்தச் செய்தி எனக்கு தெரியாதாகையால் நான் முன்கூட்டியே பேசியதும் மற்றத் தோழர்களிடம் அண்ணா அவர்களை அழைத்துக்கொண்டு தளி கிராமத்திற்கு வருமாறு கூறிவிட்டு நான் புறப்பட்டேன்.

மணி நாயுடு மில்லுக்கருகில் நின்று கொண்டிருந்த ரௌடிகள் அண்ணா அவர்களின் கார்தான் வருகிறதென எண்ணி கம்பு கழியோடு ரோட்டின் குறுக்கே வந்து நின்று கொண்டிருந்தார்கள். சிறிது தூரத்திலேயே இதனைக் கவனித்த நான் காரை வேகமாகச் செலுத்தும்படி டிரைவரிடம் கூறினேன்.

என் கார் அவர்களைத் தாண்டும்போது ரௌடிகள் 'படபட'வெனக் காரைத் தாக்கினார்கள். கார் அவர்களைக் கடந்தபோது கல் கொண்டு எறிந்தார்கள். காரின் முன் பகுதிக்குப் பலத்த சேதம் ஏற்பட்டது. நான் நேராகத் 'தளி'க்குச் செல்லாமல் — வழியில் வேறு ஒரு நண்பர் வீட்டிற்கு சென்று உடுமலைப்பேட்டைக்கு போன் மூலம் தகவல் கொடுப்பதற்காகச் சென்ற போது— அங்கிருந்த தோழர்கள் — இவ்வழியாகச் சற்றுமுன் போன கார் ஒன்றும் பலமாகத் தாக்கப்பட்ட நிலையில் சென்றதாகக் கூறினார்கள். உடன் இந் நிகழ்ச்சி பற்றி உடுமலை போலீசிற்குத் தகவல் தெரிவித்து விட்டு உடுமலையில் உள்ள வேறு ஒரு நண்பர் வீட்டிற்குப் போன் செய்து கூட்டம் முடிந்ததும் அண்ணாவை 'தளி'க்கு அழைத்து வர வேண்டாம் எனக்கூறிவிட்டு 'தளி'க்குச் சென்றேன். அங்கு உடுமலையும்— சாதிக்கும் வந்து சேரவில்லை என்றார்கள்.

நான் அங்கிருந்து வேறு வழியாக உடுமலை வந்து சேர்ந்தேன். அண்ணாஅவர்களிடம் நடந்த விவரங்களைக் கூறி நல்ல வேளையாக நீங்கள் வரவில்லை அண்ணா. உங்கள் கார் என்று கருதித் தான் நான் சென்ற காரை தாக்கிவிட்டார்கள் — நீங்கள் இப்போது 'தளி'க்குப் போக வேண்டாம் என்றேன்.

அண்ணா அவர்கள் ''உடுமலையும் சாதிக்கும் எங்கிருக்கிறார்கள், என்ன ஆனார்கள்? அவர்களை முதலில் கண்டு பிடியுங்கள்'' என்று மிகுந்த பரபரப்போடு கூறினார்கள். இவ்வளவு நடைபெற்றிருக்கிறது. நானும் போலீசில் புகார் செய்திருக்கிறேன்— இருந்தும் அப்போது போலீஸ் அந் நிகழ்ச்சியில் அக்கறை காட்டவில்லை.

பிறகு உடுமலையும் — சாதிக்கும் லேசான காயங்களுடன் வந்து சேர்ந்தார்கள்.

ஃ ஃ ஃ

அண்ணா அவர்களின் இதயம் எத்தகைய மென்மை வாய்ந்தது என்பதற்கு ஒரு நிகழ்ச்சி எடுத்துக் காட்டாக அமைந்தது.

ஒருமுறை பொள்ளாச்சியிலிருந்து அண்ணா, உடுமலை, நான் ஆகிய மூவரும் ஊட்டி கூட்டத்திற்காகச் சென்று கொண்டிருந்தோம். காரை அண்ணாவின் புதல்வர் இளங்கோவன் ஓட்டிக் கொண்டு வந்தார். அப்போது காரின் குறுக்கே ஒரு விவசாயி திடீரெனச் சென்றதால் — பிரேக் போட்ட வேகத்தில் விவசாயியின் மீது கார் மோதி விவசாயி கீழே விழுந்தார் — காயங்கள் ஏதுமில்லை — விழுந்த அதிர்ச்சியில் அவர் மயங்கியிருந்தார் — காலில் லேசான காயம் அவ்வளவுதான்.

விவசாயி விழுந்ததைப் பார்த்ததும் அண்ணா அவர்கள் பதறிப் போனார்கள். நாங்கள் விவசாயிக்கு ஒன்றுமில்லை; அவர் நன்றாகத்தான் இருக்கிறார் என்று கூறியது அண்ணா அவர்களுக்குத் திருப்திஅளிக்கவில்லை. அண்ணா அவர்களேஇறங்கிவந்துவிவசாயிக்கு மயக்கம் தெளிந்ததும் ஆறுதல் கூறினார். பின்னர் பாதுகாப்பாக அவரை வீட்டிற்கு அனுப்பிவிட்டுப் புறப்பட்டோம்.

அந்நிகழ்ச்சிக்குப் பிறகு ஊட்டி போய்ச் சேரும்வரை அண்ணா யாருடனும்பேசவில்லை — கவலையுடனேயே இருந்தார். பொதுக்கூட்டத்திலும் அவர்கள் சரியாகப் பேசவில்லை. அன்று இரவு உணவு அருந்தவும் இல்லை— அந்த விவசாயியைப் பற்றியே கவலைப் பட்டார்.

இரண்டு மாதம் கழித்து நான் சென்னை

வந்த போது என்னைப் பார்த்ததும் முதலில் அந்த விவசாயியைப் பற்றித்தான் கேட்டார்கள். ''காலில் காயம் பட்டு அவர் வேலை செய்ய இயலாதிருந்த காலத்தில் அவர் குடும்பத்திற்கு நாங்கள் உதவினோம்—



இப்போது நன்றாக இருக்கிறார்'' என்று கூறியதும் தான் அண்ணா அவர்கள் ஆறுதல் அடைந்தார்கள்.

ஃ

65-ல் பொள்ளாச்சி பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில் பொள்ளாச்சி மகாலிங்கம் போன்ற பெரும் சக்தி மிக்கவர்களையெல்லாம் எதிர்த்து நான் வெற்றி வாகை சூடியதை அண்ணா அவர்கள் மிகவும் பாராட்டினார்கள். ஈரோட்டில் பொதுக் கூட்டத்திற்கு பேசச் சென்றவர்கள் உடன் என்னையும் அழைத்துச் சென்று பொதுக் கூட்டத்தில் என் வெற்றி பற்றிச்சொன்னார்கள். ''நமது எதிர்கால வெற்றிக்குப் பொள்ளாச்சி வழிகாட்டுகிறது. இதோ இந்த இளைஞர் பஞ்சாயத்து யூனியன் தலைவர் தேர்தலில் மிகப் பெரும் பண பலத்தை வீழ்த்தி வெற்றி பெற்றுள்ளார்'' என்று என்னை மக்களிடம் அறிமுகப்படுத்தி வைத்தார்கள்.

ஃ ஃ ஃ

இவ்வளவு தூரம் என் மீது அன்பு வைத்திருந்த அண்ணா சில மிராசுதாரர்கள் செய்த சதியால் என்மீது கடுமையான கோபம் கொண்டு என்னைப் பார்க்கவே விரும்பாத சூழ்நிலை ஒருசமயம்ஏற்பட்டது.

67-ல் அண்ணா அவர்கள் முதல்வராக இருந்த போது — கோவையில் வேட்டைக்காரன்புதூர்பகுதியில் கழகஆட்சியை விரும்பாதசில மிராசுதார்கள்ஒன்றுகூடிக்கொண்டு விவசாயவருமானவரிகட்டாமல்இருந்தார்கள் எல்லா நியாயமான முயற்சிகளுக்குப் பிறகு நேரடியாக வரி வசூலிக்கச் சென்ற உத கலெக்டரை — மிராசுதார்கள் ஆணவத்தோடு திட்டி அவமானப்படுத்தியதுமன்றி ஒரு விவசாயியைத் தூண்டி விட்டு உதவி கலெக்டரை அடிக்கவும் செய்தார்கள். போலீசார் விவசாயியைக் கைது செய்தார்கள்.

நடைபெற்ற இந்த அக்கிரமத்தை மறைக்க விவசாயியின் மனைவியைக் கருவியாகப்பயன்படுத்திமிராசுதார்கள் அண்ணாவிடம் அனுப்பிவைத்திருக்கிறார்கள்.

விவசாயியின்மனைவி சென்னையில் அண்ணா அவர்களைச் சந்தித்து என் பெயரையும் இன்னும் சிலர் பெயரையும் கூறி ''கலெக்டர் வரி வசூலிக்க வந்த போது கழகத்துக்காரர்களின் தூண்டுதலால் என் கணவரைப் போலீசார் அடித்துத் தொல்லைப் படுத்துகிறார்கள். நீங்கதான் காப்பாற்ற வேண்டும்''என்று அண்ணாவின் காலில் விழுந்து கதறியிருக்கிறாள். அண்ணா இளகிய மனம் உடையவர் ஆதலால் — அதுகேட்டுக் கண்கலங்கி ஆறுதல்கூறி அந்த பெண்ணை அனுப்பி வைத்திருக்கிறார்கள். இந்தச் சம்பவம் எனக்குத் தெரியாது. வேறு ஒரு விஷயமாக மறுநாள் நான் அண்ணா அவர்களைப் பார்க்கச் சென்ற போது —

விவசாயிமனைவிகூறியதை மனதில் வைத்துக்கொண்டு ''என்ன நாம் ஆட்சியில்இருக்கிறோம் என்பதற்காக நம்மை ஆதரிக்காதவர்களை அதிகாரிகளைக் கொண்டு கொடுமைப்படுத்துகிறீர்களாமே? என்றார்.

நான் நடந்த நிகழ்ச்சியை தெளிவாகக் கூறியும் விவசாயிமனைவி வடித்த கண்ணீர் அவர்கண்முன்நின்றதால் மெத்தக்கோபமாக ''உன்னைநான் பார்க்க விரும்பவில்லை போ''



என்று கூறிவிட்டு காரில் ஏறிப் போய் விட்டார்கள்.

பிறகு ஒருவாரம் கழித்து சி.ஐ.டி. இலாகா மூலம் மிராசுதார்களின் திட்டமிட்ட செயலால் உதவி கலெக்டர் தாக்கப்

ஆம்பூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை லிட்;
வட புதுப்பட்டு அஞ்சல்,
வ. ஆ. மா.
போன்: 264 & 269 | ஆம்பூர்.
தந்தி: SUGAR |
இரயில் நிலையம் - ஆம்பூர்.

கால்நடை வளம் செழிக்கவும், பால் உற்பத்தி அதிகரிக்கவும், உபயோகியுங்கள்:

‘ஆம்பூர் மாட்டுத் தீவனம்’

ஃ வைட்டமின் சத்துக்கள் நிறைந்தது.
ஃ விஞ்ஞான முறையில் தயார் செய்யப்படுகிறது.

உங்கள் தேவைக்கு எழுதவும்.

சென்னையில் கிடைக்குமிடம்:

திரு. எ. கோபால் நாயுடு,
ஆம்பூர் மாட்டுத் தீவன விற்பனையாளர்.
17-18, என். எஸ். கார்டன் 4வது லேன்,
சென்னை-21.
போன்: 53113

பட்டதையும் — மிராசுதாரின் கைக்கூலி வந்து கண்ணீர் வடித்தது தவறான முறையீடு என்பதையும் உணர்ந்த அண்ணா அவர்கள் செய்தியறிந்த வினாடியே தொலைபேசி மூலம் என்னை அழைத்து அருகில் அமரச் செய்து, அன்றைக்கு நடைபெற்ற நிகழ்ச்சி பற்றிப் பேசாமல் பல்வேறு பிரச்சினைகள் பற்றிப் பேசி என்னை அனுப்பி வைத்தார்கள்.

அண்ணா அவர்கள் ஆட்சிக்கு வந்த பிறகு கட்சி வித்தியாசமின்றி எத்தனை நியாய உணர்ச்சியோடு நடந்து கொண்டார்கள் என்பதற்கும் — தவறாக நடந்து கொண்டோம் எனப்பட்டால் அவர்கள் உள்ளம் எவ்வாறு வருந்தும் — அதை எப்படிச் சமாதானப்படுத்துவார்கள்என்பதற்கும்நடைபெற்ற இந் நிகழ்ச்சி நல்ல உதாரணமாகும்.

ஃ ஃ ஃ

67ல் கோவை மாவட்டத்தில் 14 பேர் கழகத்தின் சார்பாக வெற்றி பெற்றது அண்ணா அவர்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளித்தது. ''நான்கைந்து பேரைத்தான் எதிர்பார்த்தேன் — பரவாயில்லையே சுப்பிரமணியத்தையும் தோற்கடித்து 14 வெற்றிக் கனிகளைத் தந்திருக்கிறீர்கள்'' என்று உடுமலை நாராயணனை பாராட்டினார்.

ஃ ஃ ஃ

அண்ணா அவர்களைக் கடைசியாக உயிரோடு பார்க்கும் வாய்ப்பு எனக்குக் கிட்டவில்லை.

அண்ணா அவர்கள் அடையாறு மருத்துவ மனையில் இருந்த போது — நானும் நண் மறைந்த உடுமலை நாராயணன் அவர்களும் கார் விபத்தில் பலத்த காயத்திற்கு உள்ளாகி ஆஸ்பத்திரியில் இருந்தோம் — அதனால் அடையாறு மருத்துவ மனைக்குப் பார்க்க வரமுடியவில்லை. அண்ணாமறைந்தார் எனக் கேள்விப்பட்டதும் டாக்டர்களுக்குத் தெரியாமல் ஓடோடி வந்து — தமிழ்நாட்டின் குல தெய்வம் தலைசாய்ந்து கிடப்பதை ராஜாஜி ஹாலில் கண்டேன். ''அண்ணா, அண்ணா'' எனக் கதறி புலம்பிக் கொண்டிருந்த லட்சக்கணக்கான மக்களுடன் நானும் கதறிக் கதறி அழைத்தேன்— 'தெய்வம் பேசாது' என்பது உண்மைதான்; அத்தனை தம்பியர் இதயம் திறந்து அழைத்தும் அண்ணா பேசவில்லையே.

நினைத்துப் பார்க்கிறேன்

நினைவை இழக்கிறேன்!

இராம அரங்கண்ணல்

அண்ணா அவர்கள் நிகழ்ச்சிகளுக்குத் தாமதமாக வருவார்கள் என்ற பெயருண்டு. அதற்குப் பெரும்பாலும் அவர்கள் காரணமாக இருக்கமாட்டார்கள். ஏதேனும் பொதுப் பணிச் சூழ்நிலை தடையாக இருக்குமே தவிர அவராகத் தாமதிக்க மாட்டார். கடமை உணர்ச்சியில் அண்ணா அவர்களுக்கு ஈடாக அண்ணாவைத் தான் கூற முடியும்.

பட்டுக்கோட்டை அருகே உள்ள சுப்பிரமணியபுரம் கிராமத்தில் கூட்டம். காஞ்சியிலிருந்து அண்ணாவும் நானும் காரில் சென்றோம். பட்டுக்கோட்டை போய்ச் சேரவே இரவு ஒன்பது மணியாகி விட்டது. சுப்பிரமணியபுரத்திற்குக் கார் செல்லாது; நடந்து தான் போக வேண்டுமெனக் கூறினர் தோழர்கள். அண்ணா வேட்டியை மடித்துக் கொண்டு வயல் வரப்புகளில் இறங்கி நடந்தார் - வயலில் ஒரு தண்ணீர்ப் பாம்பைக் கண்ட அண்ணா, மிகவும் பயந்து போய் விட்டார். பாதை வசதியற்ற அந்தக் கிராமத்திற்குப் போய்சேர்ந்து கூட்டத்தை முடித்துக்கொண்டு புறப்பட்ட போது இரவு மணி ஒண்ணரை.

பட்டுக்கோட்டைக்கு வந்து காரை எடுத்த போது, கார் ஸ்டார்ட் ஆகவில்லை. காரை ரிப்பேர் செய்கிற வரையில் அருகில் உள்ள டீக்கடைப் பெஞ்சியிலேயே படுத்து உறங்கினார் அண்ணா. ரிப்பேர் முடிந்து அதிகாலையில் காரை எடுத்துக்கொண்டு கொஞ்ச தூரம்வந்ததும் காரில் உள்ள ஒருகருவி தீப் பிடித்து எரியத் தொடங்கிவிட்டது; மறுநாள்காலை காஞ்சிபுரத்திற்கு அருகில் அண்ணா ஒரு திருமணத்தில் கலந்துகொள்ள வேண்டியிருந்த தாகையால்— அன்றே அங்கிருந்து புறப்பட வேண்டியதிருந்தது — அன்று மதியம் அறந்தாங்கி துரையரசன் இல்லத்தில் உணவருந்திவிட்டு அங்கேயேகாரை ரிப்பேர் செய்து எடுத்துக் கொண்டு புறப்பட்டோம்.

மதுராந்தகம் தாண்டியதும் கார் நின்று விட்டது. அப்போது இரவு பத்து மணியிருக்கும். காரை எவ்வளவோ ரிப்பேர் செய்தும் புறப்படுவதாக இல்லை — அண்ணா அவர்கள் காலை நடைபெற இருக்கும் திருமண நிகழ்ச்சிக்கு குறித்தகாலத்தில் செல்ல வேண்டுமே எனத் துடித்துக் கொண்டிருந்தார்கள். காரை அங்கேயேஓரிடத்தில் ரிப்பேருக்கு விட்டுவிட்டு லாரியில் செல்லுவோம் என்று முடிவெடுத்து அந்த வழியே காஞ்சிபுரம் விரையும் லாரி எல்லாம் நிறுத்தினோம்.

ஒரு மணி நேரத்திற்கு

மேலாக எந்த லாரியும் நிற்கவில்லை. 12 மணி சுமாருக்கு செங்கற்பட்டு செல்லும் ஒரு லாரி டிரைவர் கருணைவைத்து எங்களை ஏற்றிக் கொண்டு செங்கற்பட்டில் கொண்டு வந்து விட்டார்.

செங்கற்பட்டில் ஓரிடத்தில் தொலை பேசி மூலம் காஞ்சிக்குச் செய்தி கூறலாம் என்று சென்ற போது நள்ளிரவில் நாய்கள் குரைக்கவே டெலிபோன் செய்ய வேண்டாம் என்று கூறிவிட்டார். அண்ணாவுக்கு நாய் என்றால் பயம்.

இரவு ஒரு மணியிலிருந்து அதிகாலை வரை ரோட்டிலேயே அமர்ந்திருந்தோம். காலை,முதல் பஸ்ஸில் புறப்பட்டு ஒரு வழியாக திருமண நேரத்திற்கு முன்பாகவே காஞ்சிபுரம் வந்து சேர்ந்தோம். நாங்கள் கார் வசதியில்லாமல் நடையிலும் பஸ்ஸிலுமாக வந்த போது அண்ணாவின் வீட்டு வாசலில் அவரை அழைத்துச் செல்ல மூன்று நான்கு கார்கள் நின்றன.

ஃ

தி.மு. கழகம் ஆரம்பித்த நேரத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள் அண்ணா அவர்களுக்கு ஒரு அம்பாசிடர் கார் அனுப்பியிருந்தார்.

அண்ணா எழுதிய நல்லதம்பி வெளி வந்த பிறகு 'தம்பித்துரை' என்ற படத்திற்கும் அண்ணா அவர்களே உரையாடல் எழுதப் போவதாக விளம்பரம் செய்திருந்தார் கலைவாணர். ''இது பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூடக் கேட்கவில்லையே. எப்படி விளம்பரம் செய்தார்?'' என்று கேட்டு வர தோழர் சம்பத்தை அனுப்பி வைத்தார்.

மறுநாள் மாலை நான் வெளியே சென்று விட்டுத் திரும்பும் போது அண்ணா கவலை தோய்ந்த முகத்துடன் காணப்பட்டார்.

''கார் எங்கே அண்ணா காணோம்?'' என்றேன். ''அனுப்பி விட்டேன்'' என்று மட்டும் பதில் சொன்னார். நான் அண்ணியிடம் சென்று ''ஏன் அண்ணி காரை அனுப்பி வைத்தார்?'' என்றேன்.

''கலைவாணர் ஒங்க அண்ணனைத் திட்டி அனுப்பி விட்டாராம். அதனால் அவர் அனுப்பிய காரை அவருக்கே அனுப்பி விட்டாராம்'' என்றார்கள்.

இரவு உணவு அருந்தி விட்டுத் திண்ணையில் அமர்ந்திருந்த போது ''ஏன்அண்ணா காரை அனுப்பினீர்கள் — கலைவாணர் என்ன சொல்லி அனுப்பினார்?'' என்றேன்.

''படத்திற்கு அவர் எழுதுகிறார் என்று விளம்பரம் செய்ய அவரை ஏன் கேட்க வேண்டும்? அண்ணாத்துரை என்ன பெரிய மனுஷன் ஆகி விட்டாரா? நான் தானே அவரை எழுத்தாளர் ஆக்கினேன். இல்லையென்றால் அவர் எழுத்தை யார் படமாக எடுப்பார்கள்? என்றாராம். இவ்வளவு தூரம் பேசிய பிறகு கார் எதற்கு என்று அனுப்பி விட்டேன்'' என்று வேதனையுடன் கூறினார் அண்ணா.

மறுநாள் நான் கலைவாணரைச் சந்தித்து ஒரு படத்திற்கு அண்ணாவைக் கேட்காமலேயே விளம்பரம் செய்து விட்டு — அதற்கு விளக்கம் கேட்டு அனுப்பினால் அண்ணா மனம் புண்படும் வண்ணம் பதில் கூறி அனுப்பலாமா என்றேன். ''நான் அப்படிப் பேசவில்லையே? அண்ணாவின் பெயரை கேட்காமல் போட்டுக் கொள்ள என். எஸ். கிருஷ்ணனுக்கு உரிமை இல்லையா? என்றுதான் கேட்டேனே தவிர நீங்கள் கூறுவது போன்று கடுமையாக ஏதும் கூறவில்லையே'' என்றார் கலைவாணர்.

அண்ணா உங்கள்மீது கோபமாக இருக்கிறார். உடன் வந்து அவரைப் பாருங்கள் என்று கூறினேன். அண்ணா திருப்பி அனுப்பி வைத்த காரை எடுத்துக் கொண்டு வந்து ''என்ன என். எஸ். கிருஷ்ணன் மீது உங்களுக்குக் கோபமா? உங்கள் எழுத்தின் சக்தி எனக்குத் தெரியாதா? அவசரமாகவிளம்பரம் தர வேண்டிய நெருக்கடி ஏற்பட்டது. அண்ணாவிடம் சொல்லிக் கொள்ளுவோம் என்ற உரிமையில் தான் செய்தேன்'' என்றார்.

அண்ணா அவர்கள் கலைவாணரைத் தன்னுடனேயே உணவருந்தச் செய்து மகிழ்ச்சியுடன் அனுப்பி வைத்தார்.

விட்டுக் கொடுத்து நட்புறவைச் செழுமைப்படுத்திக் கொள்வதில் அண்ணாவுக்கு இணை அண்ணா அவர்களைத் தான்கூற வேண்டும்.

ஃ

நான் ஜப்பான் சென்ற போது அண்ணா அவர்கள் அமெரிக்கச் சுற்றுப் பயணத்தை முடித்துக் கொண்டு டோக்கியோவில் இருந்தார்கள். நான் மலேசியாவில் இருந்து அண்ணா அவர்களுக்குத் தந்தி கொடுத்தேன், நானும் அங்கேவருவதாகஅதே போல்,மறுநாள் டோக்கியோ போய்ச் சேர்ந்ததும் அண்ணா அவர்கள் எங்கு தங்கியிருக்கிறார்கள் என்ற முழு விவரத்தையும் அங்குள்ள 'இந்து' நிருபரிடம் கேட்டுக்கொண்டு— நான் தங்கியிருந்த ஒட்டலிலிருந்து அண்ணாவுக்குப்போன் செய்தேன். அண்ணாவின் தனிச் செயலாளர் சொக்கலிங்கம் பேசினார். ''அண்ணா வெளியே புறப்பட்டுக்கொண்டிருக்கிறார். உடனே டாக்சியில் புறப்பட்டு வாருங்கள்'' என்றார். நான் ஒரு டாக்சியை அமர்த்திக் கொண்டு சென்

றேன். என்னைப் பார்த்ததும் அண்ணாவுக்கு மகிழ்ச்சி ''எப்போது வந்தாய்? தொலைபேசியில் முன்கூட்டியே தெரிவித்திருக்கக் கூடாதா?'' என்றார்.

''தொலை பேசியில்தான் நீங்கள் இருக்கிறீர்களா எனக் கேட்டேன். நீங்கள் வெளியே புறப்பட்டுக் கொண்டிருப்பதாகக் கூறினார். அதனால் தான் வேகமாக டாக்சியில் வந்தேன்'' என்றேன்.

அண்ணா அவர்கள் ஒரு விவசாயப் பண்ணையைப் பார்ப்பதற்காகப் புறப்பட்டுக் கொண்டிருந்தார். என்னைப் பார்த்த மகிழ்ச்சியில் அந்த நிகழ்ச்சியை ரத்து செய்து விட்டு டோக்கியோவில் முக்கிய இடத்திற்கெல்லாம் என்னை அழைத்துச் சென்றார். வேண்டிய நண்பர் ஒருவரின் இல்லத்தில் விருந்துக்கு ஏற்பாடு செய்தார். என் தாயிடம் கூட நான் பெற்றிராத அத்தகைய அன் இனி நான் யாரிடம் பெறுவேன்?

ஃ

அண்ணா மறைவதற்கு சில தினங்களுக்கு முன் திடீரென என்வீட்டிற்குவந்தார். ''குழந்தைகள் எங்கே — பேபியை (என் மனைவி) கூப்பிடு. எல்லோரையும் காண வேண்டும் போல் தோன்றியது. வந்தேன்'' என்றார். அண்ணாவைக் கண்டதும் என் மனைவி, அவருக்கு என்ன உணவு பிடிக்குமோ அதை உடனே தயார் செய்து சாப்பிட அழைத்தாள் — ''நான் விரும்புவதை நீ சமைத்திருப்பாய். ஆனால் என்னால் ஏதும் சாப்பிடமுடியவில்லையே'' என்றார் அண்ணா. என் மனைவி கண்கலங்கினாள்.

ஃ

அண்ணா நோயால் அவதியுற்ற போது அதை அண்ணி அவர்களிடம் சொல்லாமல் தாங்கிக் கொண்டார். சொன்னால் அதிர்ச்சியடைந்து எல்லோரும் வருந்துவார்கள். என்பதால் கஞ்சி குடிக்க முடியாத நிலை வந்த போது கூட

தன் உடல் நன்றாக இருப்பதாகக் காட்டிக் கொள்ள கஷ்டத்தை வெளிக் காட்டிக் கொள்ளாமல் கஞ்சிஉணவைச் சுவைப்பார். பின் தனியே அமர்ந்து அதன் வேதனையை அனுபவித்திருக்கிறார்.

ஃ

சென்னையில் எனக்கு இரண்டாவது குழந்தை பிறந்து, என் மனைவி மருத்துவமனையில் இருந்த போது என் முதல் பெண்ணுக்கு மஞ்சள் காமாலை நோய் வந்தது. நான் மட்டும் அவளை எடுத்துச் சென்று பெரிய மருத்துவமனையில் அனுமதித்தேன். இதை யார் மூலமோ றிந்த அண்ணா அவர்கள் அண்ணியாரை மருத்துவ மனைக்கு அனுப்பி எனக்கு உதவியாக இருக்கும்படி கூறியுள்ளார். அதுமட்டுமல்ல — ''அவன் மிகவும் கூச்சப்பட்டவன். வாய் திறந்து தேவையை எந்த நேரத்திலும் கேட்க மாட்டான். அவனுக்குத் தேவையென்றால் கொடுப்பதற்காக பீரோவில் பணம் வைத்திருக்கிறேன்— கொடு'' என்றும் அண்ணியிடம் கூறியிருக்கிறார்.

அதுமட்டுமல்ல. பிறந்துள்ள என் இரண்டாவது பையனைப் பார்ப்பதற்காக மருத்துவ மனைசென்றஅண்ணா அவர்கள் — மூத்த பையன் உடல் நிலைபற்றியோ அவன் மருத்துவ மனையில் அனுமதித்திருப்பது பற்றியோ ஏதும் கூற வில்லை. கூறினால் தாய்மைப் பேறடைந்த உடல் துன்பங்களை தாங்காதுத் என்று ஏதும் கூறாது வந்தது மட்டுமல்ல — என்னிடமும் பையன் உடல்நிலை பற்றி பேபியிடம் கூறாதே என்றார்.

அண்ணா அரசியலில் மட்டும் எனக்குத் தலைவராக இல்லை —

ஒருபோதும் மாறமாட்டேன்

''நான் நெஞ்சில் உள்ளதைக் கூறுகிறேன். கள்ளங் கபடமில்லாமல் கூறுகிறேன். பேச்சுக்குக் கூறவில்லை. எந்தப் பலனையும் எதிர்பார்த்துக் கூறவில்லை. மற்ற கட்சியிலுள்ள எல்லோரையும் மதிக்கிறேன். மரியாதைக் குறைவான எண்ணம் எனக்கு ஒரு துளியும் கிடையாது.

''நான் எளிய ஏழைக் குடியில் பிறந்தவன். கல்லூரியில் நான் படிப்பேனா என்று ஜோஸ்யம் பார்க்க வேண்டிய நிலையில் இருந்தவன். அதையெல்லாம் மறந்து விட்டு இன்று வந்த பதவியினால் தலைகனத்துப் போய் 50 வருடமாக நான் பயின்ற பண்பாட்டை இழக்கச் சம்மதிக்கமாட்டேன்.

''பதவி இன்று வரலாம், நாளை போகலாம். ஆனால் பண்பாட்டைப் பெறுவது கடினம். பெறமுடியாத பண்பாட்டைப் பெற்று—அந்தப் பண்பாட்டை இழக்கும் பேதையாக ஒருபோதும் மாறமாட்டேன்.

-பேரறிஞர் அண்ணா

தந்தி: "TAICOBANK" P. B. No: 4503

போன்: 88414.

தமிழ்நாடு மாநில தொழிற் கூட்டுறவு வங்கி லிமிடெட்.,

தெ. IND594

3/144 அண்ணுசாலை சென்னை—6

தலைவர்: S. ராஜரத்தினம், எம்.ஏ., ஏ-ஐ.ஐ.பி.,

இவ்வங்கி பிக்சட் டெபாசிட்டுகளுக்கு கவர்ச்சிகரமான வட்டி விகிதங்களை வழங்குகிறது. ஓராண்டு மற்றும் அதற்கு மேல் கால வரையுள்ள பிக்சட் டெப்பாசிட்டுக்கும், வட்டிக்கும் தமிழ்நாடு அரசு நிபந்தனையின்றி உத்திரவாதமளித்துள்ளது.

தற்போதுள்ள வட்டி விகிதங்கள்

காலம்		வட்டி விகிதம் வருடம் ஒன்றிற்கு
ஓராண்டுமற்றும் அதற்கு மேல்	,,	$6\frac{1}{2}\%$
2 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	7%
3 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	$7\frac{1}{2}\%$
5 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	$7\frac{3}{4}\%$
7 ஆண்டு மற்றும் அதற்கு மேல்	,,	8%

கல்வி நிறுவனம், சமய மற்றும் அறக்கட்டளை நிறுவனங்களால் செலுத்தப்படும் டெப்பாசிட்டுகளுக்கு வட்டி விகிதங்களுக்கு மேல் $\frac{1}{2}$ %வழங்கப்படும்.

ஃ ரூ. 10,000– மற்றும் அதற்கு மேற்பட்ட துகைகளுக்கு மாதந்தோறும் வட்டி அளிக்கப்படும்.

ஃ ரூ. 100– குறைந்த டெப்பாசிட் அளவாக ஏற்றுக் கொள்ளப்படும்.

ஃ வருமான வரி, சொத்து வரிகளில் இருந்து விலக்கு அளிக்கப்படும்.

ஃ நாக்பூர், கல்கத்தா, டெல்லி, பம்பாய், ஆந்திரா, மைசூர், கேரளா, மற்றும் தமிழ்நாடு மாநிலத்தில் உள்ள இந்திய மாநில வங்கியில் (ஸ்டேட் பாங்கு) தனிக் கட்டணம் ஏதுமின்றி தொகைகளை செலுத்தலாம்.

Our fixed Deposits are trustee securities within the Meaning of section 20 of the Indian trusts ACT, 1882.

அரசாங்கத்தால் அதிகப்படியானவர்களுக்கு வேலை வாய்ப்புகளை பெருக்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு தொழில் சொஸைட்டிகளுக்கு இவ்வங்கி குறைந்த வட்டி விகிதத்தில் முதலீடு செய்யும்.

விவரங்களுக்கு தொடர்பு சொள்க—

ஏ. டீஜ. சீனிவாசன், எம்.ஏ., எச்.டி.சி.,

ஏஜண்ட்.

என் குடும்பத்திற்கும் மூத்த தலைவராக விளங்கினர்.

ஃ

அண்ணு அமைச்சராக இருந்த போது ஒரு நாள் தொலைபேசியில் என்னை அவர்கள் வீட்டிற்கு வரும்படி அழைத்தார் — சென்றேன். 'வயிறுவலிக்கிறது. வா, டாக்டர்வீட்டுக்குப்போய்வரலாம்' என்ருர். டாக்டர் வீட்டிற்குச் சென்று வந்த பிறகு முகம் வழித்துக் கொண்டு புதிய உடைகள் மாற்றிக் கொண்டு ''வா போகலாம்'' என்ருர். ''எங்கே அண்ணு'' என்றேன். கவர்னர் அழைத்திருக்கிருர். போவோம்'' என்ருர். கவர்னரும் அண்ணுவும் உரையாடி முடித்த பின்னர் கவர்னருக்கு என்னைத் தனியாக அறிமுகம் செய்து வைத்து ''விரைவில் என்னுடைய பார்லிமெண்டரி செக்ரடரியாக பொறுப்பேற்கப் போகிருர்'' என்ருர்.

கவர்னரிடம் விடை பெற்றுத் திரும்பிய போது ''எனக்கெதற்கு அந்தப் பதவியெல்லாம் — அந்தப் பதவியில் உட்கார்ந்து விட்டால் இப்படி எந்த நேரமும் உங்கள்கூடவே இருக்க முடியாது — என்னை இப்படியே இருக்க விட்டு விடுங்கள்'' என்றேன். வீட்டிற்கு வந்ததும் அண்ணியிடம் —

''கேட்டாயா, அரங்கண்ணல் சொல்வதை, அரசாங்கத்தில் எனக்குக் கீழே வேலை பார்க்க மாட்டானும் — சுதந்திரம் போய் விடுமாம் — இப்படித்தான் எதைச் சொன்னுலும் மறுத்து விடுகிருன்'' என்று கூறி விட்டுச் சிரித்தார்.

ஃ

கலைஞர் அவர்கள் கார் விபத்தில் சிக்கி படுகாயத்துடன் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது பெற்ற தந்தையைப் போல் எங்கெங்கே அடிபட்டிருக்கிறது — என்ன நிலைமை — எப்போது மயக்கம் தெளியும் என்று ஒவ்வொரு டாக்டரையும் தனித் தனியாக அழைத்துக் கேட்டார்— ''கண்ணுக்கு இங்கே ஸ்பெஷலிஸ்ட் — தொண்டைக்குப் பார்ப்பதில் இங்கு தை தேர்ந்தவர். அவர்களை அழைத்து கருணநிதிக்குச் சோதனை செய்யுங்கள்'' என்று தலைமை மருத்துவரிடம் கேட்டுக்கொண்டு அவர் அலைந்த காட்சி என் உடம்பைப் புல்லரிக்கச் செய்தது.

ஃ

அவர் தம்பிகள் அனைவருக்கும் அண்ணனுக இருந்தார்— ஆசானுக இருந்தார் — பாசத்தை வளர்த்தார். அதனுல்தான் அவர் மறைவைத் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அண்ணு அவர்கள் வீட்டில் நடைபெற்ற முதல் விழா என்னுடைய திருமண வரவேற்பு விழாதான். எனக்குத் திருமணம் விருத்தாசலத்தில் நடைபெற்றது.

என்னுடைய திருமண வரவேற்பு நிகழ்ச்சிக்காக — சிவகெங்கையில் இரண்டுநாட்கள் நடைபெற்ற மாநாட்டில் முதல் நாளே பேசி விட்டு வரவேற்புக்கு வந்துவிட்டார். வரவேற்பை ஒரு திருமணம் போலவே சிறப்பாக நடத்திஞர். என்னண்ணு மாநாட்டிற்கு இருக்காமல் வந்து விட்டீர்கள். யாரும் குறை சொல்ல மாட்டார்களாஎன்று கேட்டதற்கு — மாநாட்டை அங்கிருக்கும்என்னைப்போன்றவர்கள் கவனித்துக் கொள்வார்கள். அது உன் திருமணம் அல்ல'' என்ருர்.

ஃ

அண்ணுவுக்கு அபூர்வமாகக் கோபம் வரும் — அந்த நேரத்தில் கொஞ்சம் கடுமையாகச் சொல்லி விட்டால் நான் அதைக் கூடத் தாங்கிக் கொள்ள முடியாமல் அழுது விடுவேன் — அண்ணு என்னைச் சமாதானப் படுத்துவதற்காக ''ராணி, பெரிய பரிமளம்'' அழுகிருன் பார். என்பார். என்னை அவர் செல்லமாகப் பெரிய பரிமளம் என்றுதான் அழைப்பார்.

ஃ

நீண்ட நாள் பழக்கம்!

''திருமண வீட்டிற்குச் செல்லும் எந்த வாலிபனும் பெண் நன்ருக இருக்கிறது. மாப்பிள்ளை சரியில்லை என்றுதான் கூறுவான். அதுபோல ஒரு கட்சியிலுள்ளவர்களுக்கு மற்ற கட்சிகளைப் பார்க்கும்போது 'இதெல்லாம் ஒரு கட்சியா?' என்றுதான் நினைக்கத் தோன்றும்; இது நீண்ட நாள் பழக்கம். எப்படியாவது இதை மாற்றிக்கொள்ள வேண்டும்.''

-பேரறிஞர் அண்ணு

Telegram: "KOTHARI" Telephone: 24 & 44 Lalgudi
TELEX: 258 TR

WITH THE COMPLIMENTS OF:

KOTHARI SUGARS & CHEMICALS LIMITED

KATTUR RAILWAY STATION
LALGUDI P. O.
TIRUCHIRAPALLI DISTRICT
THMIL NADU.

Manufacturers of WHITE CRYSTAL SUGAR

HEAD OFF ICE
"Kothari Buildings"
20, Nungambakkam High Road,
P.B. N.o 3309,
MADRAS-34.

Telegram: "KOTHARI" Telephone: 812131 (8 lines)
Telex: 325 MS Trunk: 811421 (3 lines
)

Trichy Distilleries & Chemicals Ltd.

Post Box No.3327.

17-4, Nungambakkam High Road,

MADRAS-34.

Manufacturers of:

Industrial Alcohol and CO 2 Gas.

Factory at:

Senthannipuram, :-: Tiruchirapalli-4.

Tele: Phone: 810383 - MADRAS.
Graxs: 'FINESUGAR' -MADRAS.

With The Best Compliments

from

SATHYANARAYANA BROS. PRIVATE LIMITED

Engineers & Contractors

"Mandhara"

25 Edward Elliots Road, Mylapore

MADRAS-4.

Phone: 82172 (5 lines)
Telex: MS. 7111

Grams: SATHBROS.

CANARA BANK CAN HELP YOU TO BE SELF - EMPLOYED

Over the years, Canara Bank has built up a fine tradition of helping experienced and enterprising people who have a desire to be self-employed or those who wish to expand or improve their existing business.

We have schemes for Doctors, technically qualified engineers, artisans and other type of entrepreneurs who wish to set up some enterprise of their own.

For details, please call on our Branch nearest to you.

CANARA BANK

Head Office :: BANGALORE-2.

IN THE SERVICE OF THE PEOPLE.

our heartiest memories

of

Anna

on his 63rd birth day

From

Messers Arzo Watch Co.,

Direct Importers of Watches
Timepieces & Clocks.
Sales & Servic
201. Devaraja Mudali Street, MADRAS-3.

Grams:- Artificial Phone:- 34672.



A BORN TO INDIA
JAPAN Squre Rolld gold
Center Second Watch with most
Attractive Dials.

J. P. Builders and J. P. Chit Fund

22-1 Edward Elliots Road, MADRAS-4.

PHONE: 86738

Join J. P. Chit Funds, the symbol of safety, security and prosperity.

J. P. BUILDERS is a well known name for best constructions of ultramodern building and real estate and rental Agencies.

A Survey of Friendship



India and Germany—Partners in Progress

ISSUED BY THE CONSULATE GENERAL OF THE FEDERAL REPUBLIC OF GERMANY, MADRAS.

Regd. No. M. 7436 MURASOLI (Anna Malar 1971)
(Supplement to Murasoli Issue dt. 15--9--1971)

அற்புத அலுமினியம் உற்பத்தி உயர
தீவிர திட்டம் தீட்டி அதை ஆவன செய்ய ......

மதரூஸ் அலுமினியம் கம்பெனி இப்பொழுது ஈடுபட்டுள்ளது. தனது தற்போதைய ஆண்டொன்றுக்கு உற்பத்தித் திறன் 2500 டன்களாகும். இதை25000 டன்களென படிப்படியாக உயர்த்தஏற்பாடுசெய்துவருகிறது.

இத்தாலிநாட்டைச் சேர்ந்த மிகவும் பிரபல கம்பெனியான மாண்டிகாடினி எடிஸன் ஒத்துழைப்புடன் இயங்கி வரும் இந்த நிறுவனம் தனியார் துறையில் மாபெரும் ஸ்தாபனமாக தென்னகத்தே விளங்கி வருகிறது. மேலும் சீக்கிரமே தகடுகள் தயாரிக்கும் உருட்டாலை முதலியன ஸ்தாபிக்கவும் ஏற்பாடு செய்து வருகிறது. இக்கம்பெனி நமது நாட்டின் அந்நிய செலாவணியை பெருமளவு மிச்சப்படுத்துவதுடன் அதன் சீரமைப்புப் பணியிலும் பெரும் பங்கு கொண்டுள்ளது.

MALCO

மதரூஸ் அலுமினியம் கம்பெனி லிமிடெட்,

பதிவு காரியாலயம்: கோயமுத்தூர்.

தொழிற்சாலை: மேட்டூர் அணை.



அஞ்சுகம் பதிப்பகத்திற்காக முரசொலி அச்சகத்தில் ஆசிரியர் மாறனால் அச்சிடப்பட்டு
4–128 அண்ணாசாலை, சென்னை 6 லிருந்து வெளியிடப்படுகிறது.